


0367
006

முத்துக் கலைஞர்

சூளுரை

டாக்டர் கலைஞர்

மு. கருணாநிதி

அவர்களின் சொற்பொழிவுத் தொகுப்பு

கடலோசை பதிப்பகம்

சென்னை.

முதற்பதிப்பு—1975

[பதிப்புரிமை]

விலை ரூ. 2/-

பதிப்புரை

தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் வழிநின்று தமிழகம் காத்திடுந் தன்மை பிற மாநிலத்தாரும் பெரிதும் கண்டு வியப்பதாகும்.

இனிய தமிழகம் இருந்த நிலையென்ன; இன்றுள்ள சூழ்நிலையென்ன; எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் என்னென்ன? என்பவை குறித்துக் கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் சொல்லும் செயலும் ஒருங்கிணைந்து திகழ்பவர் என்பதனை யாராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாது.

பல்வேறு சந்தர்ப்பங்களில்—கழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில்—தமிழகச் சட்டமன்றத்தில்—நெல்லையில் நடந்த கழக மாநாட்டில்—சேலத்தில் நடந்த கழக மாநாட்டில்—அறந்தாங்கியில் நடந்த கழக மாநாட்டில்—நாகர்கோவிலில் நடந்த கழக மாநாட்டில் அரசின் நிலை—கழகத்தின் இலட்சியம் ஆகியன குறித்து ஆற்றிய நீண்ட உரைகளின் தொகுப்பே இந்நூல்,

எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்க்கச் சூளுரை போலமைந்த இந்தச் சொற்பொழிவுத் தொகுப்பு நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக அமையும் என்று பெரிதும் கருதியே இதனை மிகக் குறைந்த விலையில் வெளியிடுகிறோம். தமிழ் மக்கள் பயன் பெறுவர் என நம்புகின்றோம்.

கடலோசை பதிப்பகத்தார்.

சூளுரை

இலட்சோபலட்சமெனத் திரண்டிருக்கின்ற இந்த மாபெரும் மக்கள் வெள்ளித்திற்கிடையே நம்முடைய கழகத்தின் பொதுச் செயலாளர் நாவலர் அவர்களும்—பொருளாளர் பேராசிரியர் அவர்களும் இந்திய அரங்கில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகளைக் குறித்து மிக விளக்கமாக உரையாற்றியிருக்கிறார்கள்.

இங்கே நடைபெறுகின்ற இந்த மாபெரும் பொதுக் கூட்டம், தலைமையமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களைத் தாக்குவதற்காக அல்ல—இந்தியாவின் சனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக!

இந்த நோக்கத்தை மாற்றாரும்—மற்றவர்களும்—மத்தியில் உள்ளவர்களும் புரிந்து கொள்வார்களேயானால், தி. மு. கழகம், சனநாயகத்தின்பால் எவ்வளவு அன்பு கொண்டு—பற்றுக்கொண்டு திகழ்கிறது என்ற உண்மையைத் திட்டவட்டமாக உணருவார்கள் என்று நம்புகிறேன்.

பகை உணர்வு கொண்டோமா?

இந்திரா காந்தி அம்மையாரிடத்தில் கழகத்திற்குத் தனிப்பட்ட எந்தவிதமான பகை உணர்ச்சியும் கிடையாது; அவர், பழம்பெருந் தேசத் தலைவர் மோதிலால் நேரு அவர்களின் பேத்தி என்கின்ற பெருமையையும்—இந்தியாவின் சனநாயகக் காவலர் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களுடைய திருமகளார் என்கின்ற பெருமையையும்—உத்தமர் காந்தியார் மடியில் தவழ்ந்த குழந்தையாக இருந்த காலத்திலிருந்தே இந்திய மக்களுக்கு அறிமுக

மானவர் என்பதையும், இந்திய நாட்டிலே—தமிழ் நாட்டிலே—குறிப்பாகத் தி மு. கழகம் அறிந்து, அதற்காக நாம் அவரைப் புகழத்தான் செய்கிறோம்!

வெளிநாடுகளில் இந்திரா அம்மையாருக்கு அளிக்கப் பட்ட மரியாதை—மதிப்பு—வரவேற்பு ஆகியவைகள் எல்லாம் தி. மு. கழகத்திற்குப் பல நேரங்களில் மகிழ்ச்சி யைத் தந்த செய்திகளாக இருந்தன; வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் அவரை அழைத்து—அவருக்கு 'டாக்டர்' பட்டங்களை வழங்கியதை எல்லாம் நாம் மிக்க மகிழ்ச்சியோடு வரவேற்றிருக்கிறோம்.

இடையூறுக்கு ஏதேனும் வித்திட்டோமா?

ஆனால், இன்று ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை என்ன? இந்திரா காந்தியின் முற்போக்குத் திட்டங்களும்—தி. மு. கழகத்திற்கும் அல்லது கழக அரசுக்கும் ஏதாவது முரண் பாடான கருத்து உண்டா? 'இந்திரா காந்தி அவர்களின் முற்போக்கான திட்டங்களுக்குக் குறுக்கே நாங்கள் நிற்போம்' என்று என்றைக்காவது நாங்கள் சொன்னது உண்டா?

இந்திய நாட்டின் அரசியல் அரங்கில், 1969 ஆம் ஆண்டில் ஒரு மாபெரும் திருப்பம் ஏற்படவிருந்தது; 'ஏற்பட்டது' என்று கூடச் சொல்லலாம்; அந்த நேரத்தில், தி. மு. கழகத்தின் ஆதரவு இந்திரா காந்தியாருக்கு இல்லாமல் இருந்திருக்குமானால், நிலைமை எப்படியோ ஆகியிருக்கும்!

''குடியரசுத் தலைவராக வருவது யார்? தொழிலாளர் களுக்காகப் பாடுபட்ட வி. வி. கிரியா அல்லது ப. காங்கிரசுக் கட்சியின் வேட்பாளர் சஞ்சீவ ரெட்டியா'' என்கின்ற வினாக் குறி எழுந்த நேரத்தில், தி. மு. கழகம், இந்திரா காந்தியின் முற்போக்குத் திட்டங்களான மன்னர் மானிய ஒழிப்பு—வங்கிகளை தேசியமயமாக ஆக்கியது போன்ற திட்டங்களை வரவேற்கும் அடிப்படையில்—தன்னுடைய ஆதரவைத் தந்த

காரணத்தால்தான் குடியரசுத் தலைவராக வி. வி. கிரி அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்! இந்திரா அம்மையார், ஆட்சியிலே நீடிக்க முடிந்தது!

அதை ஒரு முறையாவது இந்திரா காந்தி அவர்கள் வெளிப்படையாகச் சொல்லி நன்றி தெரிவிக்காவிட்டாலும், குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட வி. வி. கிரி அவர்கள்—சேலத்திற்கு அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைக்க வந்தபோது, 'நான் இன்றைக்குக் குடியரசுத் தலைவராக வீற்றிருக்கிறேன் என்றால், அதற்கு இந்தியாவிலே இருக்கின்ற இரண்டு முதலமைச்சர்கள்தான் காரணம்; ஒருவர்—பஞ்சாபிலே இருக்கின்ற குர்னாம் சிங்; இன்னொருவர்—தமிழ்நாட்டிலே இருக்கின்ற கருணாநிதி' என்று குறிப்பிட்டார்.

இவைகளை எல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், 'முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு உறுதுணையாகவும், இந்தியா சிதறுண்டு போய்விடக்கூடாது என்ற அடிப்படையிலே இந்திரா காந்தியின் கரத்தை வலுப்படுத்தவும், 1969-ஆம் ஆண்டில் ஒரு மாபெரும் அரசியல் முடிவினைத் தி. மு. கழகம் எடுத்தது' என்பதைச் சுட்டிக் காட்டுவதற்குத்தான்!

நம் மீது பாய்பவர்கள் எண்ணிப் பார்க்கட்டும்!

அன்றைக்கு நாங்கள், 'இந்தியா சிதறுண்டு போனால்தான்—சுக்கல் சுக்கலாக ஆனால்தான்—'ஏக இந்தியா' என்கின்ற பேச்சுக்கு இடமில்லாமல் செய்யப்பட்டால்தான்—இந்திய அரசியல் வானத்திலே கருமேகங்கள் சூழ்ந்தால்தான் நமக்கு இலாபம்' என்று கருதியிருந்தால்—'கழக உறுப்பினர்களின் வாக்குகளை அளிக்கமாட்டோம்' என்று நாம் முடிவெடுத்திருந்தால்—இந்தியாவின் நிலைமை என்னவாகி இருக்கும்? இதனைத் தயவுசெய்து, கழகத்தின்மீது இந்த அவசரக் காலத்தில் அவசர அவசரமாகப் பாய்கிறார்களே—அவர்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டும்!

இலட்சியத்தை ஒத்திவைத்தோம்—எதற்காக?

தி. மு. கழகம், வெளிநாட்டுக்காரர்கள் இந்தியாவிலே—எந்த நேரத்தில் ஆக்கிரமிப்பைச் செய்த நேரத்திலும், தன்னுடைய கொள்கையை—இலட்சியத்தை ஒத்திவைத்து விட்டு, இந்தியா வெற்றி பெறுவதற்கான ஆக்கபூர்வமான காரியங்கள் பலவற்றைச் செய்ததை நாவலர் இங்கே குறிப்பிட்டார்.

ஆறு கோடி ரூபாய் பாதுகாப்பு நிதியாக—தமிழகத்தின் சார்பில் தந்தோம்; அந்த நேரத்தில்கூட, இங்கே இருக்கின்ற சிலர், 'இந்திரா காந்தியின் படத்தையும்—என் படத்தையும் ஒன்றுசேர்த்துச் சுவரொட்டி போடலாமா' என்று கேட்டார்கள்.

''பணத்தை வசூலித்து வழங்க வேண்டியவர் தமிழ் நாட்டின் முதலமைச்சர்; அதைப் பெற வேண்டியவர் இந்தியாவின் பிரதமர்; அதற்காக நடைபெறும் விழாவில் போடப்பட்ட சுவரொட்டியில் படங்களை வெளியிடலாமா'' என்கின்ற பிரச்சினைதான் பெரிதுபடுத்தப்பட்டதே அல்லாமல், 'இந்தியாவின் பாதுகாப்புக்காகத் தி. மு. கழகம் உறுதுணையாக இருக்கிறது' என்பதைப் பற்றி அவர்கள் கவலைப்படவில்லை!

அந்த நிலைமைதான் இன்றைக்கும் நீடித்துக் கொண்டிருப்பதை யாரும் மறந்துவிடக்கூடாது!

இன்றுள்ள சூழ்நிலை, 'இந்திரா காந்தி அம்மையார் தலைமையமைச்சராக நீடிப்பதா—இல்லையா' என்பதன்று; நமக்கிருக்கின்ற கவலையெல்லாம், இத்தியாவில் சனநாயகம் நீடிப்பதா—இல்லையா' என்பதுதான்; இதற்கு விடை காண வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்!

தமிழரின் குருதியில் சனநாயக நெறி

சனநாயக மரபுகள், இந்தியாவில் பல ஆண்டுக் காலமாகப் போற்றிப் பாதுகாத்துக் காப்பாற்றப் பட்டுவருகின்ற ஒரு முறையாகும். குறிப்பாகத்

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், ஆயிரம் ஆண்டுக் காலத்திற்கு முன்பே –சனநாயக மரபைத் தமிழன் உணர்ந்து —அதனைச் செயல்படுத்திக் காட்டினான்!

இன்றைக்குச் செங்கற்பட்டு மாவட்டத்தில் உத்திரமேரூர் என்ற ஊரில் காணப்படும் கி. பி. 919—921-ஆம் ஆண்டுகளில் செதுக்கப்பட்ட கல் வெட்டில், 'முதல் பராந்தகச் சோழன் காலத்தில்—கிராமப்புறங்களில் ஆட்சி நடத்த—அதற்குத் தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் குடவோலை முறை' என்கின்ற மக்களாட்சி சனநாயக முறை இருந்தது என்ற குறிப்பு காணப்படுகிறது!

அந்த முறையை ஆயிரம் ஆண்டுக்காலத்திற்கு முன்பே கடைபிடித்த நாடு—தமிழ்நாடு!

சனநாயக நெறி, தமிழன் இரத்தத்தில் ஆயிரம் ஆண்டுக்காலமாக ஊறிப்போய் இருந்தது!

அந்த நெறிக்கு ஆபத்து வருகின்ற நேரத்தில் தான்—தொன்று தொட்டு வழங்கப்பட்டு வருகின்ற சனநாயக மரபுக்கு ஊனம் வருகின்ற நேரத்தில் தான்—கழகம் கலங்குகிறது! திகைக்கிறது! 'என்ன வாகுமோ' என்று அஞ்சுகிறது!

அமைப்பு இல்லாதோரின் சனநாயகம்

கட்சி ரீதியாகப் பார்த்தாலும்—ஆட்சி ரீதியாகப் பார்த்தாலும்—சனநாயக மரபுகளைக் கட்டிக் காத்து வருகின்ற இயக்கம்—தி. மு. கழகம்!

இன்று நாட்டில் எத்தனையோ கட்சிகள் இருக்கின்றன; அந்தக் கட்சிகள் சிலவற்றிற்கு அமைப்பு முறைகள்கூடக் கிடையாது!

நூறு பேருக்குத் தந்தி கொடுத்து—'நீங்கள் எல்லாம் பொதுக் குழு உறுப்பினர்கள்; சென்னைக்கு வாருங்கள்"

என்று தந்தி கொடுத்து—அவர்கள் எல்லாம் சென்னைக்கு வந்ததும், 'நான் உங்களைப் பொதுக்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுத்தேன்; நீங்கள் என்னைத் தலைவனாகத் தேர்ந்தெடுங்கள்' என்பதுதான் அவர்களது சனநாயக முறையாக இருக்கிறது!

தி. மு. கழகத்திற்கு அத்தகைய சனநாயக முறை இருந்தால், இன்றைக்கு இந்திரா காந்தி அம்மையாரின் போக்கை நிபந்தனையில்லாமல் நிறைவேற்றுகின்ற 'கால் வருடி'களாகத்தான் தி. மு. கழகம் இருந்திருக்க முடியும்!

மரபுகளுக்கு இலக்கணம் வகுத்து தந்த அண்ணா வழி வந்தவர்கள் நாம்!

தி மு. கழகத்திற்கு சனநாயக மரபுகளை அண்ணா அவர்கள் எப்படிக் கற்றுக் கொடுத்தார் என்பதற்கு ஓர் உதாரணம் சொல்லலாம்.

அண்ணா அவர்கள் பொதுச் செயலாளராக இருந்த நேரத்தில், ஒரு பொதுக்குழுவின் ஒரே ஓர் உறுப்பினர், அண்ணா அவர்கள்மீது ஒரு சாதாரண குறையைச் சொன்னதும், அந்தப் பொதுக் குழுவுக்குத் தலைமை ஏற்றிருந்த அண்ணா அவர்கள் கீழே இறங்கி வந்து—கீழ் வரிசையில் அமர்ந்திருந்த நண்பர் ஏ. வி. பி. ஆசைத்தம்பியை அழைத்து, 'என்னைப் பற்றிய குற்றச்சாட்டு வந்திருக்கிறது; ஆகவே, நான் தலைவராக மீற்றிருந்து விசாரிக்கக்கூடாது; விசாரணை முடிகின்ற வரையில் நீ தலைவனாக உட்கார்ந்து—என்னைக் கேள்விகளைக் கேட்டு விசாரணை செய்; நான் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்கிறேன்' என்று சொன்னார்கள்;

இப்படிப்பட்ட சனநாயக முறையைக் கற்றுக் கொடுத்த தலைவன் வழியில் வந்தவர்கள் தி. மு. கழகத்தினர்!

இப்படிப் சிறிய பிரச்சினைகளில்கூட, 'சனநாயக மரபு தவறக்கூடாது' என்று கட்டிக் காத்தது கழகம்!

மர்மம் நிறைந்த விளக்கமே அது!

இந்தியத் துணைக்கண்டத்தில்—'உலகத்திலேயே மிகப் பெரிய சன நாயக நாடு' என்கின்ற பெரும் புகழைப் பெற்றிருக்கின்ற நாட்டில்—'சனநாயகத்திற்கு ஆபத்து வந்து விடுமோ' என்கின்ற அச்சத்திற்கு இன்று ஆளாகியிருக்கிறோம்!

இன்று அவர்கள், 'இப்படி ஒன்று நடக்கும்—ஆகவே, இப்படிச் செய்தோம்' என்று சொல்கிறார்கள்!

'இப்படி ஒன்று நடக்கும்—ஆகவே, இப்படிச் செய்கிறோம்' என்பதற்கான விளக்கம், மர்மம் நிறைந்ததாக இருக்கிறது; மண்டை ஓடுகளாகக் காட்சித் தருகிறது; அதைத் தவிர, வேறு விளக்கங்கள் எதுவும் நமக்குக் கிடைத்ததாகத் தெரியவில்லை!

நண்பர்களே! இன்று மாலை 3-மணிக்கு நான், வானொலி நாடகம் ஒன்றைக் கேட்டேன்; அந்த நாடகத்தில், சந்தனு என்னும் ஒரு பெண்—சந்தை ஒன்றில் விலைக் கூறி விற்கப்படுகிறாள்; மிக அழகான பெண்—அற்புதமான பேரழகி; ஒரு பெரிய செல்வச் சீமான், அந்தப் பெண்ணை விலைக்கு வாங்கித் தன்னுடைய ஊருக்கு அழைத்துச் செல்கின்றான்; ஊருக்குச் சென்றதும், நந்தவனத்தில் இருக்கின்ற மனைவியை அழைத்து, 'என்னுடைய ஆருயிர் மனைவியே—ஓர் அழகான அடிமையை விலைக்கு வாங்கி வந்திருக்கிறேன்' என்று சொல்கிறான்; தனக்கு ஒரு வேலைக்காரி கிடைத்த மகிழ்ச்சியில், 'அவளுடைய முகத் திரையை நீக்குங்கள்—பார்க்கலாம்' என்கிறாள் மனைவி! அதன்படி முகத்திரை நீக்கப்பட்டதும், அவள் பேரழகியாக இருப்பதைப் பார்க்கிறாள்; அந்தச் சீமான் தன் மனைவியிடம், 'இவளைப் பார்த்துக்கொள்; நான் சற்று வியாபார வேலைகளைப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்று கூறிவிட்டு, வெளியூர் போகிறான்; அவன் போனதும், அவன் மனைவி நினைக்கிறாள்—'இவர் இந்த அழகியை வேலைக்காக வாங்கி வரவில்லை; தன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொள்ளத்தான் அழைத்து வந்திருக்கிறார்; ஆகவே, அவர்

வருவதற்குள்ளாக இந்த அழகியை விகாரமாக ஆக்கிவிட வேண்டும்' என்று எண்ணி – முடி திருத்துபவனை அழைத்து வரச் சொல்லி – அவளுடைய கூந்தலைக் கோணல் மாணலாக வெட்டச் சொல்கிறாள்; முகத்தில் சூட்டுக் கோலால் கோடுகளைக் கிழித்து கோர ரூபமாக அவளை ஆக்குகிறாள்!

அதற்குக் காரணமாக அவள், 'என் கணவன் அவளைக் காதலித்து விடுவார்; ஆகவேதான் இதைச் செய்கிறேன்' என்று சொல்கிறாள்!

தேசத் துரோகத்திற்கு எது இலக்கணம்?

அதைப்போலத்தான், இன்றைக்கு, 'ஆபத்து எப்படியோ வந்துவிடும்' என்று சொல்லி – சனநாயகப் பேரழகியின் கூந்தல் வெட்டப்படுகின்ற காட்சியை இந்தியத் துணைக் கண்டத்தில் காண்கின்றோம்! சனநாயகப் பேரழகியின் முகத்தில் சூட்டுக் கோலால் பயங்கரமாக விகாரக் கோடுகள் போடப்படுவதை இந்தியத் துணைக்கண்டத்தில் நாம் காண்கிறோம்; 'இது தேவைதானா' என்று கேட்கிறோம்!

இப்படிக் கேட்பது, 'தேசத் துரோகம்' என்று பேசப்படுகிறது—இது தேசத் துரோகமா?

மற்ற மாநிலங்கள் எல்லாம், பாதுகாப்பு நிதிக்கு ஒரு கோடி—இரண்டு கோடி ரூபாய் என்ற அளவிற்கே கொடுத்த நேரத்தில், ஆறு கோடி ரூபாயை அள்ளி அள்ளி நாம் வழங்கினோமே—அது தேசத் துரோகமா?

அதற்குப் பெயர் தேசத் துரோகம் என்றால், அந்தத் தேசத் துரோகத்தை நாங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருக்கத் தயாராக இருக்கிறோம்; ஆனால் அது, தேசத் துரோகமல்ல?

விடுதலை வீரர்கள் கலங்குகின்றனரே!

இன்றைக்கு நாட்டில் ஏற்பட்டிருக்கின்ற நிலைமைகளைக் கண்டு இந்திய நாட்டின் விடுதலைக்காகப் பாடுபட்ட பெரிய தலைவர்கள்—தங்களுடைய வயதான காலத்தில்—'தங்

களுடைய பேரப் பிள்ளைகள் சுதந்தர இந்தியாவில் உலவு வார்கள்—எல்லாவிதமான உரிமைகளோடும் உலவுவார்கள்' என்று எண்ணிக் கொண்டிருந்த பழைய காலத்துத் தேசிய வாதிகள்—கண்கலங்கும் காட்சியைக் காண்கிறோம்! இந்தக் காட்சி இருக்கலாமா?

முன்னாள் அமைச்சர் ஒருவர்—மிகப் பெரிய அறிஞர்—அவர் எனக்கு எழுதிய கடிதம் ஒன்றில், 'பத்திரிகைச் சுதந்தரம் எல்லாம் பறிக்கபபட்டு விட்டதே' என்று எழுதியதை நேற்று இரவு படித்தேன்; என் கண்கள் கலங்கின!

இப்படி, இந்தியத் திருநாட்டில், தேசத் தலைவர்கள்—தேசியப் பாரம்பரியத்தில் வந்தவர்கள்—பல ஆண்டுக்காலம் தங்களைச் சிறை வாழ்விற்கு ஒப்படைத்துச் சுதந்தரம் பெறுவதற்காகப் பாடுபட்டவர்கள்—சிறைச்சாலைகளில் கஞ்சிக் கலயங்களை ஏந்தியவர்கள்—சித்திரவதைக்கு ஆளானவர்கள்—எல்லாம், 'கிடைத்த சுதந்தரம் என்னவாகுமோ என்கின்ற அச்சத்தால்—ஐயத்தால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்! தூக்கமில்லாமால் வாடுகிறார்கள்! கண்ணீர் மல்குகிறார்கள்—கதறுகிறார்கள்!

அவர்களுடைய கண்ணீரைத் துடைக்கத் தலைமை யமைச்சர் இந்திரா காந்தி அவர்கள் முன்வர வேண்டாமா என்று கேட்கத்தான்—நாட்டு மக்களுடைய உணர்வை அவருக்கு எடுத்துச் சொல்லத்தான்—இந்தக் கூட்டம் நடை பெறுகிறது.

எண்ணிப் பார்த்தால் எதனையும் தீர்க்கலாம்

எத்தனையோ பிரச்சினைகள், பேச்சுவார்த்தைகள் மூலம் முடித்திருக்கின்றன! சனநாயகத்தின் இலக்கணமே—பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்ப்பதுதான்!

1953-ஆம் ஆண்டில் சிறைச்சாலையில் தள்ளப்பட்ட ஷேக் அப்துல்லா, 21 ஆண்டுக்காலம் தீவிர அரசியலில் ஈடுபட முடியாமல் தடுக்கப்பட்டும்—பல மாநிலச் சிறைச்சாலைகளில் அலைக்கழிக்கப்பட்டும்—பிரச்சினை தீரவில்லை!

''ஷேக் அப்துல்லா பேசக்கூடாது—அவரைப் பற்றி எழுதக் கூடாது—அவர் தமது மாநிலத்தில் உலவக்கூடாது—அவருடைய குடும்பம்கூட வெளியே இருக்கக்கூடாது'' என்றெல்லாம் இருந்து, 22 ஆண்டுக்காலத்திற்குப் பிறகு இப்போது ஒரு நல்ல முடிவு ஏற்பட்டிருக்கிறது!

எந்த ஷேக் அப்துல்லாவை 22 ஆண்டுக்காலம் சிறையில் போட்டார்களோ—அந்த ஷேக் அப்துல்லா, இன்றைக்குக் காஷ்மீர் பிரதமராக இருந்து—இந்திரா காந்தியின் வாழ்த்துக்களைப் பெறுகிறார் என்றால், ''இது, சனநாயக முறையில் தீர்க்கப்பட்ட காரியமா அல்லது 22 ஆண்டுக்காலம் சிறையில் போட்டு வைத்தார்களே—அந்த அடக்குமுறை அடிப்படையில் தீர்க்கப்பட்ட காரியமா' என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அப்படி எண்ணிப் பார்த்தால், சனநாயகத்தின் மூலம் எத்தனையோ காரியங்களைத் தீர்க்க முடியும்' என்ற உண்மையை நாம் உணர முடியும்!

அதற்காகவா இந்த நடவடிக்கை?

இன்று, சிறையில் பூட்டப்பட்டிருப்பவர்கள் யார்? வன்முறையாளர்கள் சிறையில் அடைக்கப்படுவதைப் பற்றி நாம் கவலைப்படவில்லை; இராணுவத்தையோ—அதிகார வர்க்கத்தையோ வேறு பக்கம் திசை திருப்ப வேண்டுமென்று எண்ணுகிறவர்கள் மீது அரசு வழக்குப் போடுமானால், அதைப் பற்றியும் நாம் எதுவும் சொல்லப் போவதில்லை!

''தலைமையமைச்சர் இந்திரா காந்தி வீட்டு வாசலின்முன் பேரணி நடத்துவோம்'' என்று ஓர் அறிவிப்பு வந்தது; அப்படிச் சொன்னதற்கே இந்தியா முழுவதும் இந்த நிலை இப்போது என்றால், 'வீட்டிற்குள் நுழைந்து—செய்கின்ற காரியங்களுக்குச் சாட்சியம் இல்லாமல் ஆக்கிவிடுவோம்' என்று சொன்னார்களே—அவர்களுக்கு என்ன தண்டனை? (அளிக்கப்பட வேண்டிய தண்டனை பற்றி உங்கள் ஆரவாரக் குரல் எழுப்பினர்).

'அப்படி வழங்கக்கூடாது' என்று எண்ணுகின்ற அண்ணாவின் பரம்பரையில் வந்தவர்கள் நாம்; சனநாயக நெறியில் நம்பிக்கை கொண்டவர்கள் நாம்; 'மக்கள் தங்களுடைய வாக்குச் சீட்டின் மூலம் தருகின்ற தீர்ப்புக்கள் அதற்குப் பதிலாக அமையும் என்கின்ற நெறியில் நாம் நம்பிக்கை கொண்டிருப்பதால்தான், 'தலையை வெட்டுவோம்' என்றாலும்—வன்முறை வார்த்தைகளை வாரி இறைத்தாலும் நாம் அமைதியாகவே இருந்து வருகிறோம்!

வதந்திகள் பரவ வழிகோலாதா?

அலகாபாத் தீர்ப்பையொட்டி—அதைத் தொடர்ந்து உச்ச நீதிமன்றம் வழங்கிய சில நிபந்தனைகளையொட்டி—இந்தியாவின் சனநாயகத்தை உலகம் பார்த்து வேதனைப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுத்தப்படுகிறது என்பதைத்தான் கழகம் கவலையோடு உற்று நோக்குகிறது!

செய்திகள் இருட்டடிப்பு செய்யப்படுகின்றன; அதற்கு ஆங்கிலத்தில், 'சென்சார்' என்று பெயர்; 'சென்சார்' என்றால்—இதுவரையில் சினிமாவில்தான அதுபற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம்; அதுவும், 15,000 அடி படம் எடுத்துக் கொண்டு போய்க் கொடுத்தால் அதிலே 2000 அடியை வெட்டிவிட்டு—மீதியுள்ள படத்தை வெளியிடத் தருவார்கள்; அதுகூட இப்போது செய்வதில்லையே? ஆனால் இன்றைக்குள்ள பத்திரிகை 'சென்சார்', 'செய்திகளோடு போடாதே' என்கிறது!

அமெரிக்காவில் ஒரு 'ஜனாதிபதி' சொன்னதாக நினைவு; காலையில் எழுந்ததும், 'நியூயார்க் டைம்ஸ்' போன்ற பத்திரிகையைப் பார்த்தால்தான், நாட்டில்—உலகில் என்ன நடக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது—என்று சொன்னாராம்!

பத்திரிகையைப் பார்த்துத்தான் உலகத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது! பத்திரிகை, காலத்தின் கண்ணாடி—நாட்டின் பிரதிபலிப்பு!

நாட்டு மக்கள் உள்ளத்தின் எதிரொலி பத்திரிகை – அது எந்தக் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும் சரிதான்!

இன்று காலையில் கூட ஓர் எதிர்க் கட்சிப் பத்திரிகையில், 'ஒரு பாலம் கட்டப்படவே இல்லை' என்கின்ற செய்தி வந்தது; அதைப் பார்த்து விட்டு நான், பொதுப் பணித் துறை அமைச்சருடன் கலந்து பேசி, 'உடனடியாக நடவடிக்கை எடுங்கள்' என்று சொன்னேன்.

அது. எதிர்க் கட்சிப் பத்திரிகையாக இருந்தாலும், சுட்டிக் காட்ட வேண்டியவற்றைச் சுட்டிக் காட்டுகின்ற உரிமையை— தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில்—பெற்றிருப்பதால்தான், அது என்னுடைய கவனத்திற்கு வர முடிந்தது; இல்லையென்றால், நாட்டில் நடைபெறுகின்ற பல சம்பவங்கள் தெரியாமல் மூடி மறைக்கப்பட்டுவிடும்; மாறாக, வதந்திகள் பரவும்; வதந்திகள் பரவினால், அது, சென்சார் செய்யப்படுகின்ற செய்திகளைவிடப் பயங்கரமான விளைவுகளைத் தந்துவிடும்! பிறகு, உண்மையான செய்திகளைக்கூட மக்கள் நம்ப மறுப்பார்கள்!

வேடிக்கையாகச் சொல்வார்கள்—ஒருவன் வாந்தி எடுத்தான்; பக்கத்தில் இருந்தவன்—அடுத்த தெருக்காரனிடம், 'அவன் வாந்தி எடுத்தான்' என்று சொன்னான்; உடனே அவன் இன்னொரு தெருக்காரனிடம், 'அவன் கறுப்பாக வாந்தி எடுத்தான்' என்றான்; அதைக் கேட்ட அவன்—கொஞ்சம் கற்பனை கலந்து—வேறொரு தெருக்காரனிடம், 'அவன் காக்கைபோல் வாந்தி எடுத்தான்' என்றான்; இப்படிப் பரவி—கடைசியில் இன்னொருவன், 'அவன் காக்கை, காக்கையாக வாந்தி எடுத்தான்' என்று மற்றவனிடம் சொன்னான்!

அதைப்போல வதந்தி பரவத் தொடங்கிவிடுமானால், கால்கள் முளைத்து – இறக்கைகள் முளைத்துப் பறக்க ஆரம்பித்தால், உண்மையான செய்திகளும்கூடச் சாதாரணமாகி விடும்!

கழகம் விரும்பாத சட்டங்கள்

தலைமையமைச்சர், 'நான், பத்திரிகை உரிமைகளை உடனடியாகத் தர இயலாது' என்று கூறியிருக்கிறார்; 'எதற்காகப் பத்திரிகைகளுக்கு உரிமை அளிப்பது—என்னை எதிர்க்கவா' என்று கேட்டிருக்கிறார்!

பத்திரிகைகளுடைய 'சென்சாரை'ப் பற்றி வந்திருக்கின்ற தாக்கீதுகள், எல்லா மாநிலங்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன; தமிழ் நாட்டிற்கும் அனுப்பப்பட்டிருக்கிறது; அந்தத் தாக்கீதுகளில், மாநில அரசுகள், ஒன்றிரண்டைச் சேர்த்தும் நடைமுறைப்படுத்தலாம்.

ஆந்திர மாநிலத்தில் எதைச் சேர்த்திருக்கிறார்கள் தெரியுமா? 'பத்திரிகைகளில் தலைமையமைச்சரைப் பற்றியோ—தலைமையமைச்சரின் பேச்சுக்களைப் பற்றியோ தவறான விமர்சனம் எதுவும் வரக்கூடாது' என்று இருக்கிறது!

ஆனால் ஆந்திர மாநிலத்தில், 'தலைமையமைச்சரைப் பற்றி மாத்திரமல்ல—முதலமைச்சரைப் பற்றி வந்தாலும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று சேர்த்திருக்கிறார்கள்!

நாம் அவர்களுடைய தாக்கீதுகளை நடைமுறைப்படுத்துகின்ற நேரத்தில், நினைத்தால் சேர்த்திருக்கலாம்; ஆனால், நாம் சனநாயகவாதிகள்!

கருத்தைக் கருத்தால் சந்திப்போம்—
எழுத்தை எழுத்தால் சந்திப்போம்—
சொல்லைச் சொல்லால் சந்திப்போம்—

என்கின்ற தெம்பு இருக்கின்ற காரணத்தால் (பலத்த கைதட்டல்) சட்டப்படி நடவடிக்கை எடுக்கத் தகுந்த அவதூறான விஷயங்கள் வருமானால், 'அவைகளுக்கென்று ஏற்கனவே உள்ள சட்டங்கள் அவைகளைப் பார்த்துக் கொள்ளும்' என்று கருதுகிறோம்!

ஆகவே, 'முதலமைச்சரைப் பற்றி எழுதாதே—அவரைப் பற்றி எதுவும் சொல்லாதே' என்று சொல்லுகின்ற அளவுக்கு

எழுதுகோல்களை முறிக்கின்ற சட்டத்தை—நாக்குகளை அறுக்கின்ற சட்டத்தை—கழகம் விரும்பவில்லை!

ஆனால், இன்றைக்கு 'மத்தியிலிருந்து வருகின்ற தாக்கீதுகளைத் தமிழக அரசு நிறைவேற்ற வேண்டியதில்லை' என்று தி.மு.க. செயற்குழு எங்களுக்குக் கட்டளையிடவில்லை!

ஆகவே, எங்களுடைய மனச்சாட்சி இடம் தருகின்ற வரையில், அந்தத் தாக்கீதுகளை நாங்கள் நிறைவேற்றுவோம்!

மனச்சாட்சியையும் கடக்கின்ற நிலைமைகள் வருமேயானால், 'யோசிப்போம்' என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாதம் எழாது—நரம்புதான் அறும்!

புத்தர் ஒரு வாலிபனைச் சந்தித்தார்; அந்த வாலிபனிடத்தில் புத்தர் சொன்னார்—'ஏ, வாலிபனே! வீணையினுடைய நரம்பை மேலும் அதிகமாக முடுக்கினாலும் அல்லது மேலும் அதிகமாகத் தளர்த்தி விட்டாலும் நல்ல இசையைக் கேட்க முடியாது' என்று!

வீணையில் நரம்பை அதிகமாக முடுக்கினாலும் நல்லஇசையைக் கேட்க முடியாது; அதிகமாகத் தளர்த்திவிட்டாலும் நல்ல இசை கிளம்பாது; அது எந்தஅளவு முடுக்கப்பட்டிருக்க வேண்டுமோ அந்த அளவுக்கு இருந்தால்தான், நல்ல இசை கிளம்பும்!

அதிகமாக முடுக்கப்பட்டுவிட்டால்—சர்வாதிகாரம்!

அதிகமாகத் தளர்த்தப்பட்டுவிட்டால் — பழைய காலத்து மன்னர்களுடைய ஆட்சி!

இன்றைக்கும் நாம் விரும்புவது, சர்வாதிகாரத்திற்கும்—பழங்கால மன்னர் ஆட்சிக்கும் இடையிலே உள்ள சனநாயக ஆட்சி!

வீணை நரம்பில் இனிய நாதம்—இன்பநாதம்—எழிலிசை கிளம்ப வேண்டுமேயானால், நரம்பு எந்த அளவுக்கு முடுக்கப்படவேண்டுமோ அந்த அளவுக்கு முடுக்கப்படவேண்டும்!

'நான் இப்படித்தான் முடுக்குவேன்' என்று முடுக்கினால், நாதம் எழுவதற்குப் பதிலாக நரம்பே அறுந்துவிடும்!

சனநாயகத்தை நாம் மறந்துவிடக்கூடாது! சனநாயகத்தின் மேன்மையை—மாண்பை அனைத்துலகத்தின் தலைவர்கள், பேரறிஞர்கள் எந்த அளவுக்குச் சிறப்பித்துக் கூறியிருக்கிறார்கள் என்பதையெல்லாம் இங்கே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

வலது கம்யூனிஸ்டுகளின் சூழ்ச்சி!

ஓர் உண்மையை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; இந்திய நாட்டில் இருக்கின்ற (வலது) கம்யூனிஸ்டுகள், மத்திய அரசைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்; மத்திய அரசுக்கு உதவிகரமாக இருப்பதுபோல நடித்துக் கொண்டிருக்கிறார்கள்!

உண்மை என்னவென்றால், முதலில் மத்திய அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி—மத்திய அரசு திகைக்கின்ற நேரத்தில், 'நான் உதவுகிறேன்—உன் பக்கத்தில் இருக்கிறேன்—பயப்படாதே' என்று சொல்வது அவர்கள் திட்டமாக இருக்கிறது; இது, மெல்ல மெல்ல—அவர்களின் கொள்கையுடையவர்களே மத்திய அரசே அமர்த்தி—எதிர்காலத்தில் இந்தியாவைச் சர்வாதிகார நாடாக்கும் சூழ்ச்சியாகும்.

நிதானமுடன் செயலாற்ற வேண்டும்

வள்ளித் திருமணத்தில்—முருகன் விளையாடரை அழைத்து, 'யானை உருவத்தோடு வந்து வள்ளியைப் பயமுறுத்து என்பான்; யானையாக வந்து விளையாடர் வள்ளியைப் பயமுறுத்துவார்; அந்த நேரத்தில், கிழவனாக இருக்கின்ற முருகனே வள்ளி போய் அணைத்துக் கொள்வாள்; இது, திட்டமிட்டு செய்யப்பட்ட சதி நாடகம்!

அதைப் போலத்தான், இன்றைக்கு மத்திய அரசுக்கு—"மத்திய அரசு' என்கின்ற வள்ளிக்கு ஒரு பயத்தை உருவாகி—பயப்படுகின்ற நேரத்தில், 'நானிருக்கப் பயமேன்—என்னை வந்து அணைத்துக்கொள் என்று சொல்லுகின்ற முருகனைப்போல் (அவ்வளவு உயர்ந்த கடவுளர்களாக அவர்களை நான் உவமானம் கூறுவதற்காக பக்தர்கள் மன்னித்துக் கொள்ளவேண்டும்; சூழ்ச்சித் திட்டத்துக்காக மாத்திரம் அந்தக் கதையை உவமானத்திற்கு எடுத்துக் கொள்கிறேன்) சூழ்ச்சியின்பாற்பட்ட காரியம் இன்றைக்கு மத்தியிலே நடந்துகொண்டிருக்கிறது!

ஆபத்து வருவதைப்போல் ஆபத்தை உருவாக்கி—மத்தியிலே இருப்பவர்களைப் பயமுறுத்தி—'அந்த ஆபத்தைத் தீர்க்கக்கூடிய மாமருந்து தங்களிடம்தான் இருக்கிறது; தாங்கள்தான் பாதுகாக்க முடியும்' என்கின்ற சூழ்ச்சி வலையில் மத்தியில் இருக்கின்ற முக்கியமான தலைவர்களை யெல்லாம் விழச் செய்து—இந்தியாவை எங்கேயோ அழைத்துக்கொண்டு போகிறார்கள்; அதிலே இந்திய நாட்டு மக்கள், மிக நிதானமாகச் சிந்தித்துச் செயல்பட்டாகவேண்டும்!

தொடக்க விழாவாகவே இருந்துவிட்டால்.. ...

நம்முடைய செயற்குழுவின் தீர்மானத்தில், 'சர்வாதிகாரத்திற்கான தொடக்க விழாவை இந்திரா காந்தி அம்மையார் நடத்தி வைத்திருக்கிறார்' என்று குறிப்பிட்டிருக்கிறோம்.

நாம் நினைக்கிறோம்—'தொடக்க விழா, தொடக்க விழாவாகவே இருக்கட்டும்' என்று!

பக்தவத்சலம் ஆட்சிக் காலத்தில் எத்தனையோ கல் நாட்டு விழாக்கள் நடைபெற்று—கட்டிடங்களை கட்டப்படாமல் போனதைப்போல், தலைமையமைச்சர் இந்திரா காந்தி நடத்தியிருக்கின்ற தொடக்கவிழா, 'தொடக்க விழாவாகவே இருந்துவிடக்கூடாதா — சர்வாதிகாரக் கட்டிடம் எழும்பாமலே இருந்துவிடக்கூடாதா' என்று எண்ணுகிறோம்!

அதை, 'தொடக்க விழா' என்று குறிப்பிட்டோமே தவிர, 'சர்வாதிகாரம் வந்துவிட்டது' என்று சொல்ல வில்லை; 'சர்வாதிகாரம் நிலைபெற்றுவிட்டது' என்று சொல்ல வில்லை; 'சர்வாதிகாரத்தின்கீழ் இந்தியா வந்துவிட்டது' என்று குறிப்பிடவில்லை; 'சர்வாதிகாரத் தாண்டவம் நடை பெறுகிறது' என்று எடுத்துச் சொல்லவில்லை!

'தொடக்க விழா' என்று சொன்னேம்; தொடக்க விழா தொடக்க விழாவாகவே இருந்தால், தி.மு. கழகத்தைப் போல் மகிழ்ச்சியடைகின்றவர்கள் வேறு எவரும் இருக்க முடியாது!

எங்களைக் கண்டித்து ஆவது என்ன?

"20 அம்சப் பொருளாதாரத் திட்டங்களை அறிமுகப் படுத்தத்தான் இந்த ஏற்பாடு" என்று இந்திரா காந்தி அம்மையார் சொல்லி—அதை இங்கே இருக்கின்ற அவரு டைய கட்சிக்காரர்களெல்லாம் எதிரொலிக்கிறார்கள்!

20 அம்சத் திட்டத்தை வரவேற்கிறோம்; அதிலே 15 திட்டங்களை ஏற்கனவே தமிழகம் நிறைவேற்றிக் கொண் டிருக்கிறது; 'என்றாலும் மற்ற மாநிலங்களுக்கு அது பயன் படும்' என்கின்ற வகையில், 'அந்தத் திட்டங்களை வரவேற் கிறோம்' என்றுதான் நான் சொன்னேன்.

இன்றைக்குக் கூடிய இந்திரா காங்கிரசு செயற்குழுக் கூட்டத்தில், திரு. சுப்பிரமணியமும்—திரு. பக்தவத்சலமும் —அகில இந்தியக் காங்கிரசின் செயலாளர் திருமதி மரகதம் சந்திரசேகரும் தீர்மானம் போட்டு எங்களைக் கண்டிக் கிறார்கள்.

"இவைகளையெல்லாம் முடித்துவிட்டோம் என்று சொல் கிறார்கள்; அது எங்களைக் கேலிசெய்வதுபோல் இருக்கிறது" என்று வருத்தப்படுகிறார்கள்—கண்டிக்கிறார்கள்!

ஒரு பெண்ணைப் பார்த்து, 'ஆலமரத்தடிப் பிள்ளையாரை ஆறு முறை சுற்றிவந்தால் உனக்குக் கர்ப்பம் தரிக்கும்' என்று ஒருவன் சொன்னான்!

அந்தப் பெண், 'இப்போதே எனக்கு ஆறு மாதக் கர்ப்பம்' என்று சொல்கிறாள்!

உடனே, சொன்னவன்—அந்தப் பெண்ணைப் பார்த்து, 'ஆகா—என்னைக் கேலி செய்கிறாயா?' என்று கேட்பது? (சிரிப்பு) அவள் உண்மையிலேயே கர்ப்பம் ஆறு மாதம், அவள் எதற்காக ஆலமரத்தடிப் பிள்ளையாரைச் சுற்ற வேண்டும்?

நாங்கள் ஏற்கனவே 15 திட்டங்களை நிறைவேற்றி முடித்துவிட்டு, 'இன்னும் ஐந்து திட்டங்களை நிறைவேற்றப் பணம் கொடு' என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்!

இலட்சம் வீடுகள் அரிசனங்களுக்குக் கட்டுவது என்றால், ரூ. 40 கோடி தேவைப்படுகிறது; இந்த அக்டோபருக்குள் 30 000 வீடுகளைக் கட்டி முடிக்க ரூ 12 கோடி ஒதுக்கி—இது வரை ரூ. 6 கோடி செலவிட்டிருக்கிறோம்!

தமிழ்நாட்டில் இருக்கின்ற மீனவர்களுக்கு இந்த ஆண்டில் ஐயாயிரம் வீடுகள்—ரூ. 2 கோடி செலவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது!

''இருபது அம்சத் திட்டத்திலே இவைகள் எல்லாம் எங்கே'' என்று கேட்கக்கூடாதா? (கைதட்டல்)

''14 வங்கிகளை தேசியமயமாக்கியதையே சொல்லிக் கொண்டிருக்கிறீர்களே—அதற்குப் பிறகு தேசியமயமாக்கப் பட்ட தொழிற்சாலைகளின் பட்டியல் எங்கே—கேட்கக் கூடாதா? 'அதற்குப் பிறகு நாட்டுடைமைக் கொள்கை என்ன ஆயிற்று' என்று கேட்கக்கூடாதா?

தமிழ்நாட்டிலன்றி வேறு எங்கு இருக்கிறது?

தமிழ்நாட்டில் மாத்திரம்தான் அரிசனங்கள் இருக் கிறார்களா? இந்தியா முழுவதும் கோடிக்கணக்கான அரிசனங் கள் இல்லையா? அவர்களுக்கெல்லாம் நாங்கள் கட்டித்

தருவது போல நாலாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள அழுத்தமான வீடுகளைக் கட்டித் தரும் திட்டம், தமிழகத்தைத் தவிர வேறு எங்கேயாவது இருக்கிறதா? (கைதட்டல்)

சென்னையில் வானளாவக் கூடகோபுரங்களைப் போலிருக்கின்ற குடிசை மாற்றுத் திட்டம், இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலாவது இருக்கிறதா?

இதையெல்லாம் சொன்னால், இந்திரா காங்கிரசார் தீர்மானம் போடுகிறார்கள்—இது, ''தேசத் துரோகம்'' என்று!

'என்ன சொல்லிக் கண்டிக்கிறார்கள் தெரியுமா, தி. மு. கழகத்தை?—' இந்திரா காந்தியின் முற்போக்கு நடவடிக்கைகளுக்கு நேர் எதிரான நிலையை எடுத்துள்ள தி. மு. க. அரசு மிகவும் கண்டிக்கத்தக்கது' என்று!

முற்போக்கான திட்டங்களுக்கு நாம் எதிர்ப்பாக இருக்கிறோமாம்!

சொல்லுக்குச் சொந்தக்காரர் யார்?

தலைமையமைச்சர் அறிவித்த 20 அம்சத் திட்டம், 'நாட்டின் மொத்தத் தேவையையும் இன்னும் நிறைவேற்றவில்லை' என்ற பதைப்பை மனத்தில் கொண்டு அறிவிக்கப்பட்ட திட்டம்; இந்தத் திட்டத்தை மலிவுபடுத்தி—கொச்சைப்படுத்தும் விதத்தில், 'தமிழக அரசு இந்தத் திட்டத்தை ஏற்கனவே நிறைவேற்றி முடித்திருக்கிறது' என்று தி. மு. கழக அரசு அறிவித்திருப்பது, மிகக் கேவலமான ஓர் அரசியல் வக்கணையாகும் — இந்திரா காங்கிரசுக் கட்சித் தீர்மானத்தில் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள்!

இந்தச் சொல்லுக்கெல்லாம் சொந்தக்காரர் யாரென்று உங்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன்.

இந்திரா காங்கிரசின் முற்போக்குத் திட்டங்களை நாம் ஆதரித்து—அவரோடு அணி திரண்டிருந்த நேரத்தில், இந்திரா காந்தியை எதிர்த்து, எதிர் அணியில் நின்ற பேர்வழி இன்றைக்கு இந்தத் தீர்மானத்தை எழுதி, 'கழக அரசு, முற்போக்குத் திட்டங்களுக்கு எதிரிடையானது' என்று பேசுகின்ற சூழ்நிலை நாட்டில் ஏற்பட்டிருக்கிறது!

கொந்தளிப்புச் சூழ்நிலை அவசியமா?

முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்ற சனநாயக முறைகள் போதாவா? இந்த முறைகளெல்லாம் தேவை தானா?

இன்றைக்குச் சிறைச்சாலையில் இருக்கின்ற எந்தத் தலைவர் இந்தத் திட்டங்களை எதிர்க்கிறார்?

''தமிழ்நாட்டில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற திட்டங்கள், இந்தியாவிலுள்ள பிற மாநிலங்களில் நிறைவேற்றப்பட வேண்டும்'' என்கின்ற ஆசை, இந்திரா காந்தி அம்மையாருக்கு இருப்பது போல் எங்கள் அத்தனை பேருக்கும் இருக்கிறது!

இவைகளையெல்லாம் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலையிலே தான் நிறைவேற்ற வேண்டுமா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நிலைமை இருக்கப் போகிறது?

ஒரு வாரமா—ஒரு மாதமா—ஓராண்டுக் காலமா—அல்லது நீண்ட காலமா—புரியவில்லை?

எங்கள் நிலை என்னவோ—புரியவில்லை!

அதற்காக நாங்கள் திகைக்கவில்லை—வருத்தப்படவில்லை!

இன்றைக்கே ஒத்திகை பார்ப்பதைப் போலத்தான், நம் முடைய அமைச்சர்களெல்லாம், சாலையிலேயே காரை

நிறுத்தி விட்டு நடந்து வந்தார்கள்; நான்தான் சொன்னேன்—'எல்லாக் கார்களும் அங்கேயே நிறுத்தப் பட்டு, அமைச்சர்களெல்லாம் நடந்தே வரட்டும்—ஒத்திகை பார்க்கட்டும்' என்று!

ஆகவே, இது எங்களுக்குப் பழக்கமான காரியம்!

நம்பிக்கை வீண் போவதா?

என்ன நடக்கப் போகிறது இந்தியாவில்? நாங்கள் இன்னமும் நம்பிக் கொண்டிருக்கிறோம்—'இந்திரா காந்தி அம்மையார், சனநாயகத்தைக் காப்பாற்றுவார்கள்—சர்வாதிகாரத்தின் எல்லைக்குச் செல்லமாட்டார்கள்' என்று!

அந்த நம்பிக்கையோடு சொல்லுகிறேன்—இராஜாஜி இருந்தால்—'சனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும்' என்று பிரார்த்தனை செய்து கொள்ளச் சொல்லுவார்!

பெரியார் இருந்தால்—'இதை வைத்துப் புரட்சி நடத்துங்கள்' என்று சொல்லுவார்.

காயிதே மில்லத் இருந்தால்-'நெருக்கடி நிலை தேவை யில்லை' என்று சொல்லியிருப்பார்!

சூளுரை ஏற்போம்!

அண்ணா இருந்தால் என்ன சொல்லுவாரோ—அதைச் சொல்கிறேன்—இப்போது!

இந்தக் கடற்கரையில் ஒரு சூளுரையைத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

'எழுந்து நில்லுங்கள்'—(கடற்கரை வெண் மணற் பரப்பில் வெள்ளம் போல் திரண்டிருந்த மக்கள் எழுந்து நிற்கிறார்கள்—மேடையிலுள்ள தலைவர்களும் எழுந்து நிற்கின்றனர்!)

'நான் சொல்லுவதை அப்படியே சொல்லுங்கள்'—(கழகத் தலைவர் கலைஞர் சொன்ன சூளுரையை மக்கள் திரும்பச் சொல்லிச் சூளுரை ஏற்றனர்)

''எந்த நிலையிலும்—எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும்—இந்தியாவின் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல்—பாதுகாப்பதற்குத் தயங்க மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்!

தேசத் தலைவர்கள் விடுதலை—

பத்திரிகைகளின் நியாயமான உரிமைகள்—

இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டுமென்று—

இந்தியப் பிரதமர் அவர்களை—

தமிழ்நாட்டு மக்களின் இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்க—சனநாயகம்!'

(சென்னை கடற்கரைப் பேச்சு. 6-7-75)

வலிமை வழங்குக

அன்பார்ந்த மாநாட்டுத் தலைவர் அருமை நண்பர் கந்தப்பன் அவர்களே, மாநாட்டுத் திறப்பாளர் அருமை நண்பர் ஜார்ஜ் கோமகன் அவர்களே, கழகத்தின் பொதுச் செயலாளர் டாக்டர் நாவலர் அவர்களே, கழகத்தின் பொருளாளர் பேராசிரியர் அவர்களே, தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் பெரியவர் மணலி அவர்களே, அமைச்சர் பெருமக்களே, தலைமைக் கழகத்தின் செயலாளர்களே, அருமைத் தாய்மார்களே, பெரியோர்களே, கழகக் கண்மணிகளாம் என் அன்பு உடன்பிறப்புக்களே!

நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் ஐந்தாவது மாநாட்டில் வெள்ளமெனத் திரண்டிருக்கின்ற உங்கள் அனைவரையும் சந்திப்பதிலும், கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதிலும், நான் மிகுந்த மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன் என்றாலும், எனக்கு முன்னால் உரையாற்றிய நாவலர் அவர்கள் எடுத்துக்காட்டியதைப் போல எங்களோடு வந்து அமர்ந்து, மாநாட்டுப் பணிகளை மேடையில் இருந்த வாறு சுறுசுறுப்பாகக் கவனித்துக் கொண்டிருக்கிற எங்கள் அருமைத் தலைவர்களிலே ஒருவரான என். வி. என். அவர்கள் இல்லையே என்கிற ஏக்கத்தோடுதான் இந்த மாநாட்டு நிகழ்ச்சிகளிலே நேற்றும், இன்றும் நாங்கள் கலந்து கொண்டிருக்கிறோம்.

வேதனைகளுக்கு இடையிலேயும், பல்வேறு சோதனைகளுக்கு இடையிலேயும் கடமையைச் செய்ய வேண்டும் என்கிற அறிஞர் அண்ணா அவர்களுடைய பொன்மொழிக் கேற்ப நெல்லை மாவட்டத்தின் மாநாட்டை மாவட்டத்தின்

கழக நண்பர்கள் மிகுந்த எழுச்சியோடும், உத்வேகத் தோடும், உணர்ச்சி கொந்தளிக்கின்ற தன்மையிலும், விழாக் கோலம் காட்டுகின்ற வகையிலும் நடத்திக் காட்டியிருக் கிறார்கள்.

இந்த மாநாட்டை மிக வெற்றிகரமாக நடத்துவதற்குக் காரணமாக இருந்த நெல்லை மாவட்ட தி. மு. கழகத்தின் நிர்வாகிகளை, செயல் வீரர்களைத் தலைமைக் கழகத்தின் சார்பில் நான் பாராட்டுகிறேன்.

நன்றிப் பெருக்கோடு பாராட்டுகிறேன்

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் கதிரவன் அவர்களையும், செயலாளர்கள் அழகிய நம்பி, கிருஷ்ணன் ஆகியோரையும், பொருளாளர் ஏ. எல். சுப்பிரமணியம் அவர்களையும், துணைச் செயலாளர்கள் நம்பி கருப்பையா, ராமகிருஷ்ணன், கண்ணபிரான், அந்தோணிசாமி, தேவராசன் ஆகியோரையும், தொண்டர் படைத் தலைவர்கள் கோபாலசாமி, அய்யாசாமி, தம்பிதுரை, குமரன் பலவேசம், திருமதி மகாலட்சுமி ஆகியோரையும், விளம்பரக் குழு உறுப்பினர்களாகப் பணியாற்றிய சூரிய நாராயணன், மஸ்தான், எஸ். பி. முத்து ஆகியோரையும், அரங்கு நிர்வாகத்தைக் கவனித்த நண்பர் உசேன் அவர்களையும், இவர்களோடு ஒத்துழைத்த நண்பர்கள் அனைவரையும் நான் நன்றிப் பெருக்கோடு கழகத் தலைமை நிலையத்தின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிச்சப்படுத்திய திறமை!

நீங்கள் எல்லா மாநாட்டினுடைய வசூல் எவ்வளவு? மிச்சம் எவ்வளவு? என்பதை அண்ணா அவர்கள் இருந்த காலத்திலேயே நான் கழகத்தின் பொருளாளர் என்ற முறையில் என் வாயிலாகவே அறிய விழைவீர்கள். இன்றைக்குக் கழகத்தின் பொருளாளராக நம்முடைய பேராசிரியர் அவர்கள் இன்றைக்குப் பொறுப்பேற்றிருக்

கிறார்கள் என்றாலும், அவர்கள் நேற்றைய தினம், மிக முக்கியமான ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து பேசிய காரணத்தினால்—இந்த மாநாட்டுத் தொகை எவ்வளவு என்பதை அறிவிக்கின்ற அந்த வகையில் மாத்திரம் பொருளாளருடைய பொறுப்பை ஏற்றுக் கொண்டு—

இந்த மாநாட்டில் கட்டணங்கள் மூலமாகவும்—நன்கொடையின் மூலமாகவும் வசூலான மொத்தத் தொகை ரூ. 2,33,500 என்பதையும் (கைதட்டல்), செலவு ரூ. 95,000 என்பதையும், செலவு போக 1 38,500 ரூபாயை நம்முடைய நண்பர்கள் மிகச் சாதுர்யமாக மிச்சப்படுத்தியிருக்கிறார்கள் என்பதையும் பல்வேறு அல்லல்களுக்கு இடையேயும் இரண்டு மூன்று தட்வை இந்த மாநாடு ஒத்தி வைக்கப்பட்டும் கூட சோர்வடையாமல் அவர்கள் ஆற்றிய பணியை பம்பரமெனச் சுழன்று தொண்டாற்றிய பாங்கை—நானும், நாவலரும், பேராசிரியரும், தலைமைக் கழகத்தினரும்—ஏன் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் அத்தனை பேரும் நன்றிப் பெருக்கோடு இவ்வளவு சங்கடங்களுக்கிடையேயும் இவ்வளவு திறமையான மாநாட்டை நடத்திக் காட்டுகிறீர்களே என்பதற்காகப் பாராட்டித்தான் தீரவேண்டும்.

அந்த வகையில் வரவேற்புக் குழுத் தலைவர் கதிரவன், மற்றும் மாநாட்டு நிர்வாகிகள் அனைவரும் நம்முடைய வாழ்த்துதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்கள் என்பதை நான் மீண்டும் மீண்டும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக் கிறேன்.

இந்த மாநாட்டின் சிறப்புக்களிலே ஒன்றுக—பல நூறு சிறப்புக்களில் ஒரு சிறப்பா அல்லது பத்துச் சிறப்புக்களில் ஒரு சிறப்பா என்றெல்லாம் எத்தனைச் சிறப்புக்களிலே ஒரு சிறப்பு என்று கேட்கின்ற வகையிலே அல்லாமல், இதுவும் ஒரு சிறப்பு என்கின்ற வகையில் இனி வரவிருக்கின்ற பல சிறப்புக்களுக்கு வழிகாட்டத் தக்க சிறப்பு என்கின்ற வகை யில் நம்முடைய நண்பர் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெரியகுளம் மேத்தா அவர்கள் கழகத்தில் தன்னை மீண்டும்

இணைத்துக் கொண்டு இந்த மாநாட்டு மேடையில் உங்களிடம் மன்னிப்பைக் கேட்டுக் கொண்டார்.

'மறப்போம்; மன்னிப்போம்'

அறிஞர் அண்ணு அவர்கள் பல்லாயிரக்கணக்கான உருவங்களாக எதிரே அமர்ந்து ''மறப்போம், மன்னிப் போம்'' என்று சொல்வதைப்போல், நீங்கள் காலையிலே உங்களே அறியாமலேயே அத்தனே பேரும் அறிஞர் அண்ணு வாக மாறி ''மறப்போம், மன்னிப்போம்'' என்று கூறினீர் கள் என்ருல், அண்ணு அவர்கள் நம்முடைய ரத்தத்தோடு கலந்திருக்கிருர்கள்; நம்முடைய உணர்ச்சியோடு ஒன்றி விட்டார்கள் என்பதற்கு அதைவிட வேறு ஒரு எடுத்துக் காட்டு இருக்க முடியுமென்று நான் கருதவில்லே. (கைதட்டல்)

மேத்தா அவர்களே, நானும், நாவலரும், பொருளா ளரும், கழகத்தினுடைய தலைமையும், தி.மு.கழகமும் வரவேற்கிறேம்; சென்று வந்தாலே ஒரு சிறப்புத்தான் போலும்! மேத்தா அவர்கள் பேசுகிற நேரத்திலேயே அவர் பேச வருகிருர் என்று மாநாட்டினுடைய தலைவர் கந்தப்பன் அறிவித்த நேரத்திலேயே ''கொஞ்ச நாள் காணுமல் போய் காடுமேடுகளெல்லாம் அலைந்து மீண்டும் நம்மிடத்திலே வந்திருக்கிற மேத்தா பேசுவார்'' என்று சொன்னர்.

காடுமேடுகள் என்று கந்தப்பன் குறிப்பிட்டது வேறு ஏதோ உவமைக்காக என்று கருதுகிறேன்.

ஆனல், இன்றைக்கு கழகத்தின் பாதை தான் கரடுமுர டான பாதை; இன்றைக்குக் கழகம் பயணம் நடத்திச் செல்ல வேண்டிய பாதைதான் மிக எச்சரிக்கையாக நடக்க வேண்டிய பாதை.

இந்த நேரத்தில், அவர் கழகத்திற்குத் திரும்பி வந்திருக் கிருர் என்ருல், கொள்கை வெறிபிடித்தவர்கள் எங்கே சென்ருலும்—எந்தக் காரணத்திற்காகச் சென்ருலும்—அது

மனத்தாங்கலாக இருந்தாலும்—மாவட்டத்துப் பூசலாக இருந்தாலும்—உள்ளூர் தகராறுக இருந்தாலும்—எந்தக் காரணமாக இருந்தாலும்— கொள்கை எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்கு, மீண்டும் வருவார்கள் என்பதற்கு அடையாளம்தான் (கைதட்டல்) நண்பர் மேத்தா அவர்கள் இந்த மாநாட்டிலே உங்களை எல்லாம் சந்தித்த காட்சி.

நெல்லைச் சீமையிலே நாம் செய்த சாதனை

நெல்லைச் சீமையின் பெருமை பற்றி நேற்றும், இன்றும் பேசிய நண்பர்கள் எல்லாம் புகழ்ந்தார்கள். இந்த நெல்லைச் சீமை ஈன்றெடுத்த தியாகிகளைப் பற்றி எல்லாம்—விடுதலை வீரர்களைப் பற்றி எல்லாம்—சொன்னார்கள்.

''வானம் பொழியுது, பூமி விளையுது—மன்னவன் காணிக்கு கிஸ்தி ஏதுக்கடா'' என்று கேட்ட கட்டபொம்மன் இந்த நெல்லைச் சீமையிலே தான் பிறந்தான் என்று புகழ்ந்தார்கள்.

அதே நேரத்தில் கட்டபொம்மனைக் காட்டிக் கொடுத்த எட்டப்பனும் இந்த நெல்லைச் சீமையிலே தான் பிறந்தான் என்பதனை ஏனோ நெல்லை மாவட்டத்து நண்பர்கள் மறைத்து விட்டார்கள். (சிரிப்பு)

நல்லது ஒன்று தோன்றுகிற நேரத்தில் அதோடு சேர்ந்து சில நேரங்களில் பொல்லாததும் தோன்றும். அந்த வகையிலே தான் கட்டபொம்மன் பிறந்த இந்தச் சீமையில் எட்டப்பனும் பிறந்தான்; அவனைக் காட்டிக் கொடுத்தான்.

இந்தச் சீமையிலேதான் ''எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு'' என்பதை பலரும் பாடிக்காட்டினார்களே, அந்தப் பாட்டு வேந்தன் சுப்ரமணிய பாரதியும் தோன்றினான்.

இந்தச் சீமையிலேதான் செக்கிழுத்த சிதம்பரனார் தோன்றினார்.

இந்தச் சீமையிலேதான் வாஞ்சிநாதன் தோன்றினான்.

இந்தச் சீமையிலேதான் வெள்ளையரை எதிர்த்த புலித் தேவன் தோன்றினான்.

இந்தச் சீமையிலேதான் இஸ்லாமியக் கவிஞரான உமறுப் புலவரும் தோன்றினர்.

இப்படிப்பட்ட பெருமை மிக்க இந்தச் சீமையில் அந்த வீடுதேடி வீரர்களுக்கு, தியாகச் செம்மல்களுக்கு அறிவாளர் களுக்கு இந்த அரசின் சார்பில் என்னென்ன காரியங்களை, நினைவாலயங்களை எழுப்ப வேண்டுமோ அவைகளை எல்லாம் எழுப்பியிருக்கிறோம்.

கட்டபொம்மனுக்கு நினைவுச் சின்னம்! ஏற்கனவே கட்டபொம்மனுடைய கோட்டையைக் காணச் செல்ல வேண்டுமானால், பாஞ்சைப் பகுதியில் ஒரு பஞ்சப் பகுதி யாகக் காட்சி அளிக்கும் கலைநுகிவிட்ட கோட்டை தான் நம் கண்ணிலே படும்.

இன்றைக்குக் கட்டபொம்மனுக்குக் கோட்டை புதிய தாக எழுப்பியிருக்கிறோம்.

எட்டயபுரத்தில் பாரதியினுடைய வீட்டை அரசே வாங்கி, அதை பாரதி பிறந்த வீடு என்ற முறையில் நினைவுச் சின்னமாக ஆக்கியிருக்கிறோம்.

சிதம்பரனுருக்குத் தூத்துக்குடித் துறைமுகத்திற்கு அருகாமையில் சிலை—சென்னை மாநகரிலே சிலை—பல பகுதி களிலே சிதம்பரனார் நகர்கள்; சிதம்பரனார் இழுத்த செக்கை யாருமே கவனிக்காமல் அது எங்கே இருக்கிறது என்றும் தேடிபார்க்காத காலம் போய், கழக ஆட்சியில் அதைத் தேடிபார்த்து சிதம்பரனார் இழுத்த செக்கைக் கொண்டு வந்து சென்னை மாநகரத்திலே காட்சிப் பொருளாக இன்றைக்கு வைத்திருக்கிறோம்.

புலித்தேவனுக்கும் விரைவிலே சிலை ஒன்றை அமைக்க ஏற்பாடுகளை நாம் அரசின் சார்பில் செய்து வருகிறோம். (கைதட்டல்)

உமறுப் புலவருக்கும் ஒரு நினைவுச் சின்னத்தை எழுப்ப வேண்டும் என்கிற வேண்டுகோள் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

இவைகள் எல்லாம் தமிழக அரசின் சார்பிலே செய்யக் கூடிய காரியங்கள்—செய்து முடிக்கப்பட்ட காரியங்கள்.

ஆனால், வெள்ளை வெறியனைச் சுட்டுக் கொன்று அதே இடத்தில் தானும் சுட்டுக் கொண்டு மாய்ந்தானே வீர வாஞ்சிநாதன். அந்த வாஞ்சிநாதன் பெயரால், எந்த இடத்திலே அவன் போர்க்களம் புகுந்தானோ, இரத்தம் சிந்தினானோ; எந்த இடத்தில அவன் தன் கொள்கைக்காக தன் உயிரைப் பணயம் வைத்து வெள்ளையனை வீழ்த்தி விட்டுச் செத்தானோ அந்த, மணியாச்சி ரயில்வே ஸ்டேஷனை, ''வீரவாஞ்சி ஜங்ஷன் — மணியாச்சிக்கு இங்கே இறங்கவும்'' என்று மாற்றுங்கள் என்று ஓராண்டு காலமாக மத்திய சர்க்காரை நாம் கேட்டு வருகிறோம்.

தியாகிகளுக்குப் பெருமை தருகிறோம் என்று பேசுகின்ற மத்திய சர்க்கார் ''வீரவாஞ்சி உள்ளூர்த் தலைவன், அவன் பிரசித்திபெற்ற தலைவனல்ல'' ஆகவே 'லோகல் லீடர்ஸ்' என்கிற அளவில் வீரவாஞ்சியினுடைய பெயரை மணியாச்சி ஜங்ஷனுக்கு வைக்க முடியாது என்று மத்திய அரசு மறுத்து விட்ட காரணத்தினாலேதான் அந்தக் காரியம் நடைபெற வில்லை.

கொள்கைக்குத் துரோகம் செய்யாத 'கோழை!'

இந்த மாநாட்டில் இது ஒரு தீர்மானமாக உருப் பெறு விட்டாலும் நான் பேசுகின்ற பேச்சையே ஒரு தீர்மானமாக எடுத்துக் கொண்டு மத்திய சர்க்கார் மணியாச்சி ரயில்வே ஜங்ஷனை, மணியாச்சி என்று புரிகின்ற வகையிலும் — ''வீரவாஞ்சி ஜங்ஷன் — மணியாச்சிக்கு இங்கே இறங்கவும்'' என்கிற வகையில் மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்த மாநாட்டின் சார்பாக மத்திய அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். (கைதட்டல்)

நண்பர்களே, இன்றைய நிலை குறித்து நம்முடைய கழகத்தின் பொருளாளரும், மற்றும் முன்னணித் தலைவர் களும் விரிவாக இங்கே பேசியிருக்கிறார்கள்.

தலைமை உரை ஆற்றிய நண்பர் கந்தப்பன் அவர்களும் அவரை வழிமொழிந்த நாடாளுமன்ற உறுப்பினர் நண்பர் சிவசாமி அவர்களும், இன்று பிற்பகல் பேசிய இலட்சிய நடிகர் ராசேந்திரன் அவர்களும், ''கருணாநிதி ரொம்பப் பொறுமைசாலியாகிவிட்டார், அளவுகடந்த பொறுமைசாலி யாகி விட்டார்; இவ்வளவு பொறுமையாக இருக்கக்கூடாது'' என்றெல்லாம் சொன்னார்கள்.

''கருணாநிதி கோழையாகி விட்டான்'' என்பதைத் தான்— அப்படிச் சொன்னால் நான் எங்கே கோபித்துக் கொள்ளப் போகிறேனே என்று நாசூக்காகப் பொறுமையாகி விட்டேன் என்று சொல்லியிருக்கிறார்கள் போலும்!

நான் கோழையாகி விட்டேன் என்று சொன்னால் கூட அதற்காக நான் கவலைப்படத் தயாராக இல்லை.

கோழையாகலாம்; ஆனால் துரோகியாகி விடக்கூடாது. (கைதட்டல்)

''அப்படியானால் துரோகிகளெல்லாம் கோழைகள் அல்லவா?'' என்று கேட்கலாம்.

துரோகிகள் கோழைகளாக இருப்பார்கள்; ஆனால் கோழைகள் எல்லோருமே துரோகிகளாக இருக்க மாட்டார்கள்.

எந்த ஒரு இயக்கத்திலும் பலகீனமான மனிதர்கள் இருக்கத்தான் செய்வார்கள். வீரமாகச் சில காரியங்களைக் செய்ய அஞ்சுகின்றவர்களாக இருப்பார்கள்; முடியா விட்டால் பேசாமல் ஒதுங்கிக் கொள்வார்கள்.

ஆனால் அதை விட்டுவிட்டு நம்மால்தான் முடிய வில்லையே இந்தக் காரியம்; எதையாவது செய்து பார்ப் போமே என்று துரோகம் செய்யமாட்டார்கள்.

ஆக அந்த வகையில் ஏற்றுக் கொண்ட கொள்கைக்கு என்றைக்கும் துரோகம் செய்யாத ஒரு கோழை என்கிற வகையில் நீங்கள் என்னை எடுத்துக் கொள்வீர்களானால் அதை நான் வரவேற்கத் தயாராக இருக்கிறேன்.

எப்போது வருகிறது கோழைத்தனம்? எப்போது வருகிறது பயம்?

ஒரு பெண், காற்றடிக்கிற நேரத்தில் கையில் அகல் விளக்கை ஏந்தி வீதியிலே செல்லும்போது ஒரு மண்டபத்துக் குள்ளே ஒதுங்குகிறாள் என்றால் எதற்காக? அந்தக் காற்றடித்து தான் கீழே விழுந்துவிடுவோம் என்பதற்காகவா? அல்ல, அல்ல, கையிலே இருக்கிற அகல் விளக்கு அணைந்து விடும் என்பதற்காகத்தான் அந்த மங்கை மண்டபத்துக் குள்ளே ஒதுங்குகிறாள்.

அதைப்போலத்தான் என் கையிலே கொடுக்கப் பட்டிருக்கிற தி. மு. கழகம் என்கின்ற அகல் விளக்கு இன்றைக்கு வீசுகின்ற காற்றால் அணைந்துவிடக்கூடாதே என்பதற்காகத்தான் நான் மண்டபத்துக்குள்ளே ஒதுங்கு கிறேனே அல்லாமல் (பலத்த கைதட்டல்) வேறல்ல; அதை நீங்கள் 'ஆகா கருணாநிதி காற்றுக்குப் பயந்து விட்டான்; இவ்வளவு பெரிய நெடிய உருவம் கொண்ட நாவலர் நெடுஞ்செழியன் இந்தக் காற்றுக்குப் பயந்து விட்டார்; இந்தக் காற்றுக்குப் பயப்படலாமா? பொருளாளர் பேராசிரியர் இந்தக் காற்றுக்குப் பயப்படலாமா' என்று கேட்பீர்களானால் — எங்கள் கைகளில் ஒப்படைக்கப் பட்டிருக்கிற அகல் விளக்குத்தான் திராவிட முன்னேற்றக் கழகம்! அதை காப்பதற்காகத்தான் கொஞ்சம் மண்டபத் துக்குள்ளே ஒதுங்குகிறோமே அல்லாமல் வேறல்ல என்பதை கழக மாணிக்கங்களே, நீங்கள் உணர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (கைதட்டல்)

அண்ணா ஒப்படைத்த தீபம்

அந்த விளக்கு சாதாரணமான விளக்கா?

தந்தை பெரியார் ராமசாமி அவர்கள் வார்த்த எண்ணெயில்—

பேரறிஞர் அண்ணா அவர்கள் போட்ட திரியில்—

தமிழ்நாட்டு மக்கள் அத்தனை பேரும் சேர்ந்து கொளுத்திய தீபம்; அண்ணா நம்முடைய கையில் ஒப்படைத்த இந்த தீபம்!

1949ஆம் ஆண்டு தி.மு.கழகம் என்கிற இந்த திருவிளக்கை பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏற்றிவைத்தார்கள்.

1949 இல் முன்னேற்றக் கழகம் தோன்றியது.

நேற்றைய தினம் பேசிய நண்பர்கள் பல பேரும் குறிப்பிட்டது போல, பெரியவர் மணலி அவர்கள் சுட்டிக்காட்டியதுபோல, இந்தக் கழகத்தைத் தொடங்கியபோது இது வாழுமா? வளருமா? இதற்கு ஆயுள் அதிகமா? அற்பமா? என்றெல்லாம் ஆருடம் கணித்த அரசியல் அவசரக்காரர்கள் எல்லாம் தமிழ் நாட்டிலே இருந்தார்கள். வெளி மாநிலங்களிலிருந்தும் வியாக்கியானங்களைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆனால் எதிர்ப்புகள் — ஏசல்கள் — இழிமொழிகள் — ஏகடியங்கள்—தாக்குதல்கள் — தரக்குறைவான பேச்சுக்கள் இவைகள் அத்தனையையும் தாங்கிக்கொண்டு நம்மை எல்லாம் ஆளாக்கிய அண்ணா அவர்கள் கழகத்தைக் கட்டிக் காத்தார்கள்.

கழகத்தின் வரலாற்றில் எத்தனையோ சோதனையான கட்டங்களை எல்லாம் நாம் தாண்டித் தாண்டிப் பழக்கப் பட்டிருக்கிறோம்.

இன்றைக்கு இந்தியாவின் அரசியல் சூழ்நிலைகளைப்பற்றி நாட்டிலே பலபேரும் மௌனமாகப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவரை ஒருவர் பார்க்கிற நேரத்தில் விழிகளால் பேசுகிறார்கள்.

முகக்குறியால் தங்களுடைய எண்ணங்களை வெளிப் படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட மாநாடுகளில்—பொதுக் கூட்டங்களில் இன்றைக்கு நாட்டில் இருக்கிற நிலையை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு வசதிகளை நாம் பெற்றிருக் கிறோம்.

அந்த வாய்ப்பு வசதிகள் நாம் விரும்புகின்ற சூழ்நிலை யைக் கெடுத்துவிடாமல், நாம் எதிர்பார்க்கின்ற இயல்பான நிலை உருவாவதை சீரழித்து விடாமல் அமைந்திட வேண்டும் என்பதில் நாங்கள் எல்லாம் மிகுந்த அக்கறை கொண்டவர் களாக இருக்கிறோம்.

மோதிக் கொள்வது என்பது சாதாரணமான விஷயம். ஆனால் அதனால் ஏற்படுகின்ற பலன், விளைவு என்ன என்பது தான் மிக முக்கியமான விஷயம்.

மோதிக் கொள்வதில் ஒரு பத்து பேர் காயமடையலாம்; அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை; ஏனென்றால் அந்தப் பத்துப் பேரும் நாங்களாக இருக்கின்ற காரணத்தால்; வேறு சில கட்சிகளில் யாரோ பத்து பேர் காயமடையட்டும் என்று எண்ணுகிற தலைவர்கள் இருப்பார்கள்; ஆனால் முன் னேற்றக் கழகத்தைப் பொறுத்த வரையில் எந்தத் தியாகத் திற்கும் தயாராக இருக்க வேண்டும் என்று சொல்கிற நேரத்தில் நாங்கள் தயாராக இருந்துகொண்டுதான் மற்ற வர்களுக்கு அதைச் சொல்லுகிறோம்.

தி.மு. கழக போராட்ட முறை

மற்ற கட்சிகளில்—எல்லா கட்சிகளிலும் அல்ல— தொண்டர்களைப் போராட்டத்திற்கு அனுப்பி விட்டு தலைவர்கள் வேறு வேலையை கவனிப்பது வழக்கம்!

முன்னேற்றக் கழகத்தில் போராட்டம் என்றால் எதிர்க் கட்சியாக இருந்த அந்தக் காலத்திலிருந்து, தலைவர்கள் முன்னே—தொண்டர்கள் பின்னே என்கிற முறைதான் நம் முடைய போராட்ட முறையாகும்;

ஆகவே போராட்டங்களுக்கு பயந்து விட்டோம்; கிளர்ச்சிகளுக்கு அஞ்சிவிட்டோம் என்பதல்ல; நிலைமைகளை எண்ணிப் பார்க்க வேண்டும்.

இன்றைக்கு இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டமே கேள்விக்குறியாக மாறிவிட்டிருக்கிறது.

இந்தக் கேள்விக் குறியை எழுப்பி இருக்கிறவர் யார்?

இந்தியப் பேரரசின் சட்ட அமைச்சர் கோகலே அவர்கள்!

நானே, நாவலரோ, பேராசிரியரோ, சட்ட அமைச்சர் மாதவனே, கழகத்தின் முன்னணி வீரர்களோ, அந்தக் கேள்விக் குறியை எழுப்பி நீண்ட நாளாகிறது.

ஆனால் இன்றைக்குத்தான் அந்தக் கேள்விக்குறி விஸ்வரூபமெடுத்து டெல்லி மாநிலங்கள் அவையில், சட்ட அமைச்சர் கோகலே அவர்கள் ''அரசியல் சட்டமே மாற்றப் படவேண்டிய ஒன்று'' என்று கூறுகின்ற ஒரு நிலைமை ஏற் பட்டிருக்கிறது

எந்த நோக்கத்தில் அதைச் சொல்கிறார் என்பதல்ல!

ஒன்றை ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்; 'அரசியல் சட்டம் மாற்றப்படவேண்டிய ஒன்று' என்பதை ஒப்புக்கொண்டிருக் கிறார்கள்.

நேற்று மணலி அவர்கள் அழகாகக் குறிப்பிட்டார். 'அரசியல் சட்டத்தை மாற்றவேண்டுமென்று நாமெல்லாம் சொன்ன நேரத்தில், ஆகா அப்படிச் சொல்லலாமா, அது பாவமல்லவா?' என்றெல்லாம் கேட்டார்கள்.

ஆனால் இன்றைக்கு இந்திய அரசியல் சட்டத்தில் 41 திருத்தங்களைச் செய்துவிட்டு என்ன திருத்தினாலும் திருந் தாதுபோல் இருக்கிறது; ஆகவே ஒரேயடியாக இதைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு ஒரு புதிய அரசியல் சட்டத்தை எழுதத்தான் வேண்டும் போலிருக்கிறது என்கிற ஒரு சூசகமான அறிவிப்பை மத்திய சர்க்காருடைய சட்ட அமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

நான் அந்த அறிவிப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கு காரணமே—மத்திய சட்ட அமைச்சர் மத்தியிலிருந்து ஒன்றைப் பேசினால் அது மறுநாளோ, மறுவாரமோ அல்லது மறு திங்களோ நடப்பது வழக்கமாக இருக்கிறது — கடந்த சில நாட்களாக!

அவர், 'பிரதமரைத் தேர்தல் வழக்கில் இழுக்கலாமா, வேண்டாமா, என்பது பற்றி யோசித்துக் கொண்டிருக்கிறோம்' என்று நாடாளு மன்றத்தில் பேசினார்.

அப்படிப் பேசிய அடுத்த இரண்டாவது நாள், பிரதமரைத் தேர்தல் வழக்கிலே இழுக்கக்கூடாது என்கிற வகையிலே சட்டத் திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது.

அதற்கும் மேலாக, எந்த வழக்கிலும், அது குற்ற வழக்காலும் சிவில் வழக்காலும் பிரதமர் மீது யாரும் வழக்கு தொடுக்கக் கூடாது என்கிற திருத்தமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. இப்போது இந்த அரசியல் சட்டமே மாற்றப்பட வேண்டுமென்று சொல்கிறார் மத்திய சட்ட அமைச்சர்.

1952-ல் கழகம் சொன்னது என்ன?

1952-ம் ஆண்டு தி. மு. கழகம் இந்தக் கருத்தைத்தான் மதுரையில் நடைபெற்ற பொதுக்குழுவிலே வெளியிட்டது. அதுவும் எந்த வகையிலே வெளியிட்டதென்றால்— 17—11—1951 தேதியில் அந்தப் பொதுக்குழு நடைபெறுகிறது.

அந்தப் பொதுக் குழுவில் இந்தியாவின் அரசியல் சட்டத்தைப் பற்றிக் கருத்துக்கள் பரிமாறப்பட்டது. பேரறிஞர் அண்ணா அவர்கள் அதற்கான வியாக்யானங்களைத் தந்தார்கள்.

இந்த அரசியல் சட்டம் எத்தகையது? இது யாரால் தயாரிக்கப்பட்டது? என்பவைகளை எல்லாம் அண்ணா எடுத்துக் கூறினார். அந்த அரசியல் சட்டத்தை நாம்

ஏற்றுக் கொள்ளவில்லே. நம்முடைய அதிருப்தியைத் தெரி வித்திருக்கிறோம்.

'இது இந்தியாவிலுள்ள எல்லா மக்களுடைய குரலேயும் எதிரொலிக்கக் கூடிய அரசியல் சட்டமல்ல! யாரோ சில பேர்—அவர்கள் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டார் களென்றால்—1935 ம் ஆண்டு வெள்ளேக்காரனுடைய சட்டத் தின்படி சட்டசபையிலுள்ள மன்ற உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து இன்றைக்கு ராஜ்யசபைக்கு உறுப்பினர்களேத் தேர்ந்தெடுப்பது போல, அரசியல் நிர்ணசபைக்கு உறுப் பினர்களேத் தேர்ந்தெடுத்தார்கள்.

அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மொத்தம் 202 பேர். அவர்கள் அல்லாமல் இந்தியாவிலுள்ள 93 சுதேச சமஸ்தானங்கள் ஒவ்வொரு சமஸ்தானமும் ஆளுக்கொரு நபரை நியமித்து அவர்களேயும் அந்த அரசியல் நிர்ணய சபையில் இணேத்தார்கள்.

இவர்கள் யார் தெரியுமா? இந்தியாவிலுள்ள மக்களில் இருபது அல்லது இருபத்துநான்கு சதவிகித மேட்டுக்குடி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட மன்ற உறுப்பினர் களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

ஆகவே மொத்த இந்திய மக்களுடைய குரலல்ல; அவர்கள் ஒலிக்கின்ற குரல், என்ற காரணத்தினுல் அதை ஏற்பதற்கில்லே; அதைக் கண்டிப்பதற்கு அறிகுறியாக 1952-ம் ஆண்டு நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் தன்னுடைய வேட்பாளர்களே நிறுத்தாது, கழகம் போட்டியிடாது, அதற்கு மாருகக்கழகம் சிலரை ஆதரிக்கும்; கழகத்தினுடைய கொள்கை அமைந்த ஒப்பந் தத்தில் கையெழுத்து இடுகின்றவர்களேக் கழகம் ஆதரிக் குமே தவிர இந்திய அரசியல் சட்டத்தில் எங்களுக்கு இருக் கிற அதிருப்தியைத் தெரிவிப்பதற்காக—மனநிறைவு இன்மை யைத் தெரிவிப்பதற்காக நாங்கள் இந்தத் தேர்தலில் கலந்து கொள்வதில்லே என்று 1952 ம் ஆண்டுத் தேர்தலேப் புறக்

கணிப்பது என்று 17—11—1951-ல் மதுரைப் பொதுக் குழுவில் தீர்மானமாக நாம் நிறைவேற்றினோம்.

அரசியல் சட்டமென்ன? வெள்ளைக்காரன் 1935-ம் ஆண்டு நிறைவேற்றிய சட்டத்தைத்தான் ஏறத்தாழ 75 சத விகிதம் அப்படியே பின்பற்றி அரசியல் சட்டம் என்கின்ற பெயரால் உருவாக்கி இந்திய மக்களை அது கட்டுப்படுத்தும் என்று அறிவித்தார்கள்.

1935—ம் ஆண்டு அரசியல் சட்டத்திலேகூட—வெள்ளைக் காரனுடைய சட்டத்திலேகூட ''கூட்டாட்சி முறை அரசு'' (பெடரல் கவர்ன்மெண்ட்) என்பது ஒப்புக் கொள்ளப் பட்டிருந்தது.

ஆனால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் ''கூட் டாட்சி'' அதாவது 'பெடரல்' என்ற வார்த்தை அறவே நீக்கப்பட்டது.

இந்த அரசியல் அமைப்புச் சட்டத்தில் அந்த வார்த்தைக் குப்பதிலாக 'பெடரல்' என்ற வார்த்தைக்குப் பதிலாக, ''இந்தியா மாநிலங்களின் ஒன்றியமாக இருக்கும்'' அதா வது ''யூனியன் ஆப் ஸ்டேட்ஸ்'' என்கிற வகையில்தான் வார்த்தை அதிலே நுழைக்கப்பட்டது.

அந்த நேரத்தில் அரசியல் நிர்ணயசபையில் இரண்டு பேர் அதற்குத் திருத்தம் கொடுத்தார்கள்.

ஒருவடைய பெயர், பேராசிரியர் கே. டி. ஷா. அவர் கொடுத்த திருத்தம், ''யூனியன்'' என்று சொன்னால் ''ஓர் உறுப்பு அரசு'' என்றுகிவிடும். வர வர 'யூனிட்டரி கவர்ன் மெண்ட்' என்ற அளவில் ஓர் உறுப்பு அரசாக மாறிவிடும். ஆகவே இதை 'பெடரல் யூனியன்' என்கிற அளவுக்கு யூனியன் என்ற சொல்லுக்கு முன்னால் 'பெடரல்' என்ற சொல்லைச் சேர்த்துக் கொள்ளுங்கள் என்ற ஒரு திருத்தத்தை கே. டி. ஷா. அளித்தார்.

அந்தத் திருத்தம் அரசியல் நிர்ணய சபையில் நிராகரிக் கப்பட்டது; நிறைவேறவில்லை.

அதற்குப் பிறகு இன்னொரு திருத்தத்தை அன்றைய சென்னை மாநில முஸ்லீம் லீக் உறுப்பினர், மெகபூப் அலி பெய்க் சாகிப் பகதூர் என்பவர் கொடுத்தார்.

அந்தத் திருத்தத்தில் 'யூனியன் என்ற வார்த்தையே இருக்கக்கூடாது. 'கூட்டாட்சி' என்ற வார்த்தைதான் இருக்கவேண்டும். பெடரேஷன் என்ற வார்த்தை தான் அதிலே அமைக்கப்பட வேண்டும்' என்ற அந்தத் திருத்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார்.

அந்தத் திருத்தத் தீர்மானத்தில் அவர் பேசும்போது என்ன குறிப்பிட்டார் தெரியுமா? அதையும் எண்ணிப் பாருங்கள்!

"If you mean that the Government must be a federal government and not a unitary government and if you want to prevent in future any power seeking party to convert it into a unitary form of government and become Fascist and totalitarian, then it us up to us now to use the correct word, which is 'Federation'. Therefore, Sir, I move that the word 'Federation' may be substituted for the word 'Union'.

அதாவது நமது அரசு ஒரு கூட்டாட்சி அரசாகத்தான் இருக்க வேண்டுமென்றும், ஓர் உறுப்பு அரசு அன்று என்றும், நீங்கள் கருதினால் வருங்காலத்தில் எந்தவொரு பதவி மோகக் கட்சியும் இதை ஓர் உறுப்பு அரசாகவும், பாசிச—சர்வாதி கார அரசாகவும் மாற்றுவதை நீங்கள் தடுக்க விரும்பினால்; அந்தச் சொல்லை மாற்றிக் 'கூட்டாட்சி என்கிற சரியான சொல்லைப் பயன்படுத்துவது இப்போது நம் கையிலே இருக்கிறது. அதனால் 'யூனியன்' என்கிற வார்த்தைக்குப் பதில் 'கூட்டாட்சி' என்கிற வார்த்தையைச் சேர்க்குமாறு நான் முன்மொழிகிறேன் என்று அவர் தெரிவித்தார். இந்தத் திருத்தமும் நிராகரிக்கப்பட்டது.

இப்படிப்பட்ட தவறான அரசியல் சட்டத்தின் மீது நமக்கு அதிருப்தி ஏற்பட்டது. அதைத் தெரிவிக்கும்

விதத்தில்தான் நாம் 1952-இல் சட்டசபையை நிராகரித்தோம். பிறகு 1957 தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்வதா, இல்லையா என்பதை அறிய திருச்சி மாநில மாநாட்டில் அண்ணா அவர்கள் தமிழ் மக்களுக்கு ஒரு வேண்டுகோள் வைத்தார்.

மக்கள் தந்த தீர்ப்பு!

மாநாட்டிற்கு வருகிறவர்கள், நாங்கள் தேர்தலில் நிற்கலாமா, வேண்டாமா? என்று தீர்ப்புக் கூறுங்கள் என்று கேட்டார். தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபட வேண்டும் என்ற கருத்தை மாநாட்டுக்கு வந்த மக்கள் தீர்ப்பாக வழங்கினார்கள். அதற்குப் பிறகு கழகம் தேர்தலில் ஈடுபட்டது. அண்ணா அவர்கள் தலைமையில் பதினைந்து பேர் வெற்றி பெற்றோம்.

நண்பர்களே, அந்த நேரத்தில்தான் 1957—58இல் தி. மு. கழகம் எதிர்க்கட்சிக் குழு என்ற பெயரால் அண்ணா தலைமையில் நாங்கள் எல்லாம் சட்டசபையில் அமர்ந்திருந்த அந்த நேரத்தில்தான் கேரளத்தில் ஈ.எம் எஸ். நம்பூதிரிபாத் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி உதயமாயிற்று. அப்போது கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றாக இருந்த நேரம். இன்றைக்கு அது மூன்றாக இருக்கிறது

இடதுசாரி என்றும், வலதுசாரி என்றும், தமிழ் நாடு கம்யூனிஸ்ட் கட்சி என்றும் இன்றைக்குப் பிரிந்திருக்கிறது. அன்றைக்கு அப்படியல்ல; ஒன்றாக இருந்த நேரம்; அந்த நேரத்தில் நமது மணலி உட்பட இன்றைக்கு மணலி ஒரு தலைவரா என்று பேசிக் கொண்டிருக்கிற அவருடைய தியாகத்தை உணராத, கம்யூனிசத்திற்குப் பொருள் விளங்காத சில பேர் இருக்கிறார்களே, அவர்கள் உட்பட எல்லோரும் ஒன்றாக இருந்த நேரம் அது.

அந்த நேரத்தில் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி உருவாயிற்று. ஆட்சி நடைபெற்றது.

அப்போது அண்ணு அவர்கள் தமிழக சட்டசபையில் பேசும்போது. ''நாங்களும் ஒரு காலத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வருவோம்'' என்று தெரிவித்தார்கள்.

அப்போது ஆளும் கட்சியிலே இருந்த ஒருவர் ''நீங்கள் ஆள வருவதா? அத்தைக்கு மீசை முளைத்தால் அல்லவா சித்தப்பா?'' என்று கேட்டார்.

அண்ணு உடனே ''அத்தைக்கு மீசை முளைப்பது ஆச்சரியமல்ல; பக்கத்திலே இருக்கிற கேரளாவில் முளைத் திருக்கிறது, போய்ப் பாருங்கள்'' என்று வேடிக்கையாகச் சொன்னார்.

கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி, எதிர்க் கட்சி ஆட்சி உருவாகியிருப்பதை அண்ணு சட்ட மன்றத்திலே அமைச்சர்களுக்குத் தருகின்ற பதிலிலே எடுத்து விளக்கினர்.

அந்த ஆட்சியின் கதி என்னவாயிற்று? அரசியல் சட்டம் என்கிற வாளின் முனை எவ்வளவு கூர்மையானது என்பதை முதன் முதலாக இந்தியத் துணைக் கண்டத்தில் கேரள அரசு தான்—கேரள மாநிலம்தான் புரிந்து கொண்டது.

கேரளத்தில் நம்பூதிரிபாத் அவர்களின் ஆட்சியைக் கவிழ்க்க மன்னத்துப் பத்மநாபன் என்கிற ஒரு சனாதனத் தலைவர் தலைமையில் ஒரு பெரிய கிளர்ச்சி; பத்திரிகையிலே போட்டார்கள், பெரிய கிளர்ச்சி என்று நமக்குத் தெரியாது எவ்வளவு பெரிய கிளர்ச்சி என்று.

அப்படிப்பட்ட கிளர்ச்சியில் அங்கேயுள்ள தலைமைச் செயலகத்தில் கட்டப்பட்டிருந்த கொடியையே மாற்றி, அதையே எரித்தார்கள். பெரிய ஊர்வலம் நடத்தினர்கள். கேரளம் அமளிக் காடாக இருக்கிறது என்ற செய்தி கேள்விப் பட்டதும், இன்றைய இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி, அன்றைக்கு காங்கிரஸ்கட்சியின் சார்பில் கேரளத்திற்கு நிலைமையைத் தெரிந்து கொள்ளச் சென்றார்கள். அப்போது பிரதமராக பண்டித நேரு இருந்தார்.

கேரள மக்கள் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியை வேண்டாமென்று சொல்கிறார்கள்; ஆகவே அதை உடனடியாகக் கவிழ்த்து கவர்னர் ஆட்சி. குடியரசுத் தலைவர் ஆட்சி அமையவேண்டும் என்ற மன்னத்துப் பத்மனுபனின் கருத்தை அன்றைய மத்திய அரசு ஏற்றுக் கொண்டு ஈ. எம். எஸ். மந்திரி சபை கலைக்கப்பட்டு அங்கே கவர்னர் ஆட்சி உருவாயிற்று.

அண்மையில் நம்முடைய பிரதமர் இந்திராகாந்தி அம்மையார் அவர்கள் அவசரச் சட்டம் பிரகடனம் செய்வதற்கு ஒரு காரணத்தைச் சொன்னார்கள்.

''ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசைக் குறுக்கு வழியில் கவிழ்க்க முனையக் கூடாது'' என்பது தான் அந்தக் கருத்தாகும்.

அன்றைக்கு கேரளத்திலே மன்னத்துப் பத்மனுபன் தலைமையில் நடைபெற்ற கிளர்ச்சியைக் காரணமாகக் காட்டி, கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி கவிழ்க்கப்பட்டதை எதிர்த்து கண்டனக் குரல் எழுப்பிய ஒரேயொரு கட்சி தி.மு. கழகம்; ஒரேயொரு தலைவர் எங்களை ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்கள். அதை மறந்து விட முடியாது.

ஆசை காட்டி மோசம் செய்வதைப் போல...

இப்படிக் கவிழ்த்தது நியாயமல்ல; இது ஜனநாயக முறையல்ல என்று நாங்கள் அப்போதே சொன்னோம். அரசியல் சட்டத்தில் குடியரசுத் தலைவர் எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்கிற ஒரு பிரிவை வைத்துக் கொண்டு இங்கே நாவலர் படித்துக் காட்டினாரே, அவ்வளவு உரிமைகள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டு, நான் இவ்வளவும் தருவேன்! மிட்டாய் கொடுப்பேன்; ஜிலேபி தருவேன்; எல்லாம் தருவேன்; ஆனால் இஷ்டப்பட்டால் தான் தருவேன். என்பதைப் போல், இவ்வளவையும் காட்டி ஆசை காட்டி மோசம் செய்வதைப் போல், அரசியல் சட்டத்தில் கடைசியாகக் குடியரசு தலைவர் பார்த்து, ஒரு மாநில

அரசைக் கவிழ்க்கலாம்; அவர் சொல்லுகின்ற காரணம் போதும் என்று அரசியல் சட்டத்திலே தீட்டப்பட்டிருக்கிற கூர்வாள் ஈ. எம். எஸ். நம்பூதிரிபாத் அவர்களுடைய முதுகிலே குத்தி, அன்றைக்கு அந்த அரசு கவிழ்ந்த போது அதை நாம் கண்டித்தோம்.

அன்றைக்கு நாம் எந்தக் குரலை எழுப்பிக், கேரள அரசு கவிழ்க்கப்பட்டது நியாயமல்ல என்று சொன்னோமோ, அதே குரலைத் தான் 1973ஆம் ஆண்டு பீகாரில் ஜெயப் பிரகாஷ் நாராயண் பீகார் அரசு கவிழ்க்கப்பட வேண்டு மென்று மக்களை எல்லாம் ஓர் அணியிலே திரட்டிய போது, இந்திரா காந்தி அம்மையார் சொன்னார்கள்; ஜனநாயகத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட பீகார் அரசைக் குறுக்கு வழியில் கவிழ்க்க வேண்டும் என்று ஜெயப்பிரகாஷ் விரும்புவதை நான் ஏற்றுக்கொள்ள முடியாது என்று சொன்னார்கள். அந்தக் கருத்தைப் பொறுத்தவரையில் நாம் இந்திராகாந்தியோடு ஒத்துப் போகிறோம்; நாம் ஆளும் கட்சியாக இருப்பதால் அதைச் சொல்லவில்லை. வேறு எதனால்?

நாம் எதிர்க்கட்சியாக இருந்த நேரத்திலேயே கேரள அரசு கவிழ்க்கப்பட்டதைத் தவறு என்று கண்டித்தவர்கள்; இன்னும் சொல்லப் போனால், பீகாரில் ஜெயப்பிரகாஷ் அவர்கள் அந்த அரசைக் கவிழ்க்க இயக்கம் ஆரம்பித்த போது, நான் பெங்களூரில் தங்கியிருந்தேன். வேறு எதற் காகவோ அல்ல; (சிரிப்பு) கழகக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்றிருந்தேன்; ஒரு நாள் தான்; (சிரிப்பு)

கழகம் விரும்பாத செய்கை!

அந்த ஒருநாளில் என்னை நிருபர்கள் சந்தித்த போது, ''ஜெயப்பிரகாஷ் நடத்தும் இயக்கத்தைப் பற்றி உங்கள் கருத்து என்ன'' என்று கேட்டார்கள்.

அதற்கு நான் ''மக்கள் பெரும்பான்மையாக வாக் களித்து ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை

மாற்ற ஐந்தாண்டு காலம் அவகாசம் இருக்கிறது; அதற்குப் பிறகு தான் மக்கள் தங்கள், வாக்குச் சீட்டால் அந்த அரசை மாற்ற வேண்டுமே அல்லாமல், இடையில் குறுக்கு வழியில் கிளர்ச்சிகள் வாயிலாக அப்படிப்பட்ட முயற்சி நடைபெறுவதனை தி.மு. கழகம் விரும்பாது.

நான் ஏதோ ஆளுங் கட்சியில் இருக்கிற காரணத்தால், இப்படிச் சொல்வதாகப் பத்திரிகை நிருபர்களே நீங்கள் கருதாதீர்கள்: எதிர்க்கட்சியாக இருந்த காலத்திலிருந்து தி.மு. கழகத்தின் கொள்கை அதுதான்'' என்று சொன்னேன்.

அதைத்தான் இப்போதும் சொல்கிறோம்.

ஆளுங்கட்சியாக வந்தபிறகும் தி.மு. கழகம் எத்தகைய எதிர்ப்புகளை எல்லாம் சந்தித்திருக்கிறது? நாவலர் இங்கே அடுக்கடுக்காகச் சொன்னாரே, இந்த ஆட்சி எப்படிப்பட்ட தொடர்ந்த எதிர்ப்புக்களை எல்லாம் சந்தித்திருக்கிறது?

எதிர்க் கட்சியின் சின்னத்தனமும் அண்ணாவின் பெரிய உள்ளமும்

அறிஞர் அண்ணா அவர்கள் உடல் நலமில்லாமல், அவர் உயிர் பிழைப்பாரா, திரும்ப நமக்குக் கிடைப்பாரா? என்கிற கவலையோடு கண்ணீர் மல்கிக் கொண்டிருந்த வேளையில் சென்னையில் காங்கிரசார் ஒரு ஊர்வலத்தை நடத்தி அண்ணா அவர்களின சிலைக்கு அருகாமையிலே முக்காடு போட்ட ஊர்வலத்தை நடத்தி கையிலே கறுப்புத் துணிகளைக் கொண்டு வந்து அண்ணாவின் சிலையைச் சுற்றிப் போட்டு விட்டு, அதைத் தொடர்ந்து சில பத்திரிகை அலுவலகங்களை எல்லாம் அமளி துமளியாக்கி, உடைத்து நொறுக்கி இவ்வளவும் செய்தார்கள்.

அண்ணா அவர்கள் அதைப்பற்றிச் சட்டசபையில் பேசும் போது,''நான் மறைந்துவிட்ட பிறகு எதிர்க் கட்சிக்காரர்கள் எப்படித் துக்கம் கொண்டாடுவார்கள் என்று தெரியாமல்

இதுவரை விழித்துக் கொண்டிருந்தேன். நான் இருக்கும் போதே அவர்கள் எனக்காகத் துக்கம் கொண்டாடிக் காட்டி விட்டார்கள்; அவர்களுக்கு நன்றி'' என்று அந்தப் பெரிய உள்ளம் சொன்ன காட்சியை இன்றைக்கு எண்ணினாலும் நெஞ்சம் விம்முகிறது.

அப்படிப்பட்ட எதிர்ப்புகள்! இழிதகையான எதிர்ப்பு கள்! உள்ளத்தை வேதனைப் படுத்தக்கூடிய, ஈட்டியால் தைக்கக் கூடிய எதிர்ப்புகள்! இவைகளை எல்லாம் இந்த ஆட்சி சந்தித்திருக்கிறது.

அது மாத்திரமல்ல மின்கட்டணம், கர்னாடகத்தில் 17 காசு! ஆந்திராவில் 16 காசு ஒரு யூனிட்டுக்கு மின் கட்டண மாகும்! ஒரிசாவில் 20 காசுக்கு மேல்; இந்தியாவில் பல்வேறு மாநிலங்களில் 16, 17, 20, 22 காசு என்று மின்கட்டணம்;

பம்பு செட்டுக்காக மின்கட்டணம் யூனிட் ஒன்றுக்கும் இந்த வகையில் மற்ற மாநிலங்களில் எல்லாம் வசூலிக்கப் பட்டு வந்தது. மத்திய அரசு எங்களுக்குக் கடிதம் எழுதும் நேரத்தில் எல்லாம், விவசாய முனையிலே வரியைப் போடுங்கள்; ஏன் பம்புசெட்டுகளுக்குக் குறைந்த கட்டணம் வசூலிக்கிறீர்கள்? மின் வாரியத்தில் நட்டம் என்று சொல் கிறீர்கள்; அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று எழுதிக் கொண்டேயிருக்கிறார்கள்.

ஆகவே, அதையெல்லாம் எண்ணித்தான் இங்கும் ஓரிரு காசுகள்தான் உயர்த்தினோம்; அதற்குப் பெரிய கிளர்ச்சி! அந்தக் கிளர்ச்சியிலே யார் யார் கலந்துகொண்டார்கள்?

இந்திரா காங்கிரஸ்; விவசாயிகள் என்ற பெயரால் மிட்டாக்கள், மிராசுகள், பழையகோட்டை மன்றுடியார் கள், அவர்களோடு கம்யூனிஸ்டுக் கட்சியின் தோழர்கள், எல்லாம் சேர்ந்து பொதுவுடைமைப் பூங்காக்களிலே உலவு கிறவர்களும், பூர்ஷ்வாக்களுடைய மாளிகைகளிலே உலவு கின்றவர்களும், ஒன்றுசேர்ந்து தி.மு. கழக ஆட்சிக்கு ஒரு எதிர்ப்பைக் காட்ட, அந்த மின்கட்டண உயர்வுக்காக, எப்படிப்பட்ட போராட்டத்தை நடத்தினார்கள் தெரியுமா?

பேருந்து வண்டிகள் எங்கும் ஓட முடியாமல், குறுக்கே மரங்களைப் போட்டுத் தடுத்தார்கள்; அப்படித் தடுக்கப் பட்ட நேரத்தில், அந்த மரங்களை அகற்றச் சென்ற போலீஸார் மீது தாக்குதல்கள்; இதன் காரணமாகத் துப்பாக்கிப் பிரயோகம்; வருந்தத்தக்க சில சாவுகள்! இன்றைக்கும் அதற்காக என் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாங்கிக் கொண்டோம்!

அதற்கு முன்பு, கோவைப் பெருநகரத்திலே கிட்டத் தட்ட மூவாயிரம் கட்டை வண்டிகள் கொண்டுவரப்பட்டு, இரவோடு இரவாக, எல்லாம் சாலைகளில் அவிழ்த்துப் போட்டுவிட்டு, சந்துபொந்துகளிலேகூட மக்கள் நடமாட முடியாமல், மருத்துவமனைக்குக் கடுமையான நோயாளிகள், அவசரக் கேசுகள்கூடச் செல்ல முடியாமல், மூன்று நாள் அவதிப்பட்டார்கள்.

போலீசார் துப்பாக்கியை நீட்டினார்களா? தடியடிப் பிரயோகத்தில் ஈடுபட்டார்களா? போலீசார் அந்த வண்டிக் காரர்களை—விவசாயிகளைச் சந்தித்தார்கள்; பேச்சுவார்த்தை நடத்தினர்கள்; அதற்குப் பிறகு, மூன்று நாட்கள் கழித்து மூவாயிரம் கட்டை வண்டிகள் கோவை நகரத்திலே இருந்து அகற்றப்பட்டன.

அவ்வளவு பெரிய போராட்டத்தை நடத்தினர்கள்; அதையும் நாம் தாங்கிக் கொண்டோம்.

அந்தப் போராட்டம் நடைபெற்ற நேரத்தில், நிருபர் கள் பிரதமர் இந்திரா அம்மையாரைப் பார்த்து, ''போராட்டத்தைப்பற்றி உங்கள் கருத்தென்ன'' என்று கேட்டார்கள். இந்திரா காந்தி அம்மையார் என்ன சொன்னார் தெரியுமா? ''இந்த மின்கட்டண உயர்வுக் கொள்கையில் எங்களுக்கு எந்தவிதமான மாறுபாடும் கிடையாது; ஆனால் இதிலே அரசு அணுகிய முறை பாராட்டத் தக்கதாக இல்லை'' என்றுதான் சொன்னார்கள்.

1972-ல் நடந்த ரகளைகள்

1972இல் நம்மை விட்டு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் பிரிய நேர்ந்தது அல்லது தள்ளி வைக்கப்பட நேர்ந்தது; அல்லது தி.மு. கழகத்திற்கு நல்ல காலம் பிறந்தது. (கைதட்டல்)

அந்த 1972இல் அவர் கழகத்திலிருந்து தள்ளிவைக்கப் பட்டதும் என்னென்ன நடைபெற்றது? நம்முடைய அமைச் சர்கள் எங்கேயாவது சென்று பேச முடிந்ததா? அவ்வளவு கல்லடிகள்; நம்முடைய பேருந்துகள் பல கொளுத்தப் பட்டன; வேழவேந்தன் அவர்களுடைய கார் திருத்தணிக் கூட்டத்திற்குச் சென்ற நேரத்தில் இருந்த இடம் தெரியா மல் கொளுத்தப்பட்டு, பொடிப் பொடியாகச் செய்யப் பட்டது.

அமைச்சர் மன்னை நாராயணசாமி அவர்கள் ராமனுத புரம் பொதுக்கூட்டத்தில் பேசிய நேரத்தில் தலையில் கல்லால் அடிக்கப்பட்டு ரத்தம் கொட்டியது.

இப்படி அமைச்சர்கள் கூட்டங்களில் ரகளை; முத லமைச்சர் பேசிய கூட்டங்களிலேயே அடிதடி; இந்த அள வுக்கு ரகளைகள் 1972 இறுதியில் நடைபெற்றன.

அப்படிப்பட்ட நேரத்தில், இப்படி ஒரு ஆட்சியைக் கவிழ்க்க இப்படிப்பட்ட காரியங்கள் நடைபெறலாமா? என்று கேட்கவேண்டிய இடத்திலே, கேட்கவேண்டிய உரிமை படைத்த பிரதமர் இந்திரா காந்தியவர்கள் கேட் டிருப்பார்களேயானால் நாங்கள் எவ்வளவோ மகிழ்ச்சி யடைந்திருப்போம்.

ஆனால், நண்பர்களே, அதற்குப் பதிலாக இந்தக் கல வரங்களைத் தூண்டிவிட மத்திய அமைச்சர்கள் மோகன் குமாரமங்கலமும், நம்மால் கிருஷ்ணகிரி தேர்தலில் வெற்றி பெற்று, பதவி பெற்ற, 'நன்றிக்கோர் இலக்கணம்' (சிரிப்பு) சி. சுப்பிரமணியம் அவர்களும் என்ன பாடுபடுத்தினார்கள்?

இந்தக் கிளர்ச்சியைத் தூண்டிவிட, இந்தக் கிளர்ச்சிக்குச் சாதாரண எண்ணெய் ஊற்றினால் போதாதென்று பெட்ரோலை ஊற்ற டெல்லியிலிருந்து அடிக்கடி பறந்து வந்தார்கள். கிளர்ச்சித் தீயைக் கொழுந்து விட்டெரியச் செய்தார்கள்.

மத்திய சர்க்காருடைய பிரதமரை நான் சொல்லவில்லை; அவர்களுக்கு எவ்வளவோ வேலைகள்; எத்தனையோ வெளி நாட்டு, உள்நாட்டுப் பிரச்னைகள்; தகராறுகள்.

ஜெகஜீவன்ராமா? சவானா? நீட்சித்தா? மற்றும் மத்தியிலே இருக்கிற அமைச்சர்கள் எல்லாம் பண்பாளர்கள்; அவர்களிலே இரண்டு பேர் நம்மால் அனுப்பப்பட்டவர்கள்; "எனக்கு இடம் வேண்டும்" என்று கால்கடுக்க நின்று இடத்தை நம்மால் பெற்றுக் கொண்டவர்கள், நமக்கு நன்றிக் காட்டும் வகையிலே டெல்லியிலேயிருந்து இங்கே நடைபெற்ற கிளர்ச்சிக்கு தூபம் போட்டுக் கொண்டிருந்தார்கள்.

நாம் பொறுமையைக் கடைப்பிடித்தோம்.

மகஜர்களைக் கொண்டு போய் கொடுத்தார்கள்; மதுரையிலே வந்திறங்கிய பிரதமரிடம் மகஜரைக் கொடுக்க சென்னையிலே இருந்து நடிகர் ரயிலிலே புறப்பட்டு, மதுரை வந்து சேர ஒன்றரை நாள் பிடித்ததாம்; அந்த அளவிற்கு ரயிலை நிறுத்தினார்களாம்; அது அராஜகம் அல்லவா? அமளி அல்லவா? இது சகஜநிலையா? இது இயல்பான நிலையா?

கழக ஆட்சி நடைபெறுகிற காட்சி

இவ்வளவும் நடந்தது; இவ்வளவும் நடந்து, தி. மு. க. அரசு நிலைத்திருக்கிறதென்றால்—என்னைக் குற்றம் சாட்டினார்களே, கந்தப்பனும், சிவசாமியும், இலட்சிய நடிகர் ராசேந்திரனும்—அந்தப் பொறுமையை நாங்கள் கடைப் பிடித்த காரணத்தினாலேதான் "இன்றைக்குக் கவிழ்ந்து விடும்; நாளை நான்கு மணிக்கு கவிழ்ந்துவிடும்; அதற்கு

மறுநாள் கவிழ்ந்துவிடும்; மந்திரி பதவி யார் யாருக்குத் தேவையோ அவர்கள் எல்லாம் ஓடி வாருங்கள்; 'சீனியாரிட்டி' போனால் வராது; ஆகவே உடனே ஓடி வாருங்கள், என்றெல்லாம் அழைத்து, சபலத்திற்கு ஆளான வர்கள் சில பேரைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இன்னும் மூணே மாதம், மகஜரைக் கொண்டு போய் கொடுத்திருக் கிறேம்; பிரதமர் இன்னும் படிக்கவில்லே; குடியரசுத் தலைவர் இன்னும் படிக்கவில்லே; பரிசீலனே முடியவில்லே; முடிந்த வுடனே பார், கருணாநிதி வேலூர் சிறைச்சாலேயிலே; நெஞ்செழியன் நெல்லேச சிறைச்சாலேயிலே; அன்பழகன் சென்னேச் சிறைச்சாலேயிலே; என்று எங்களுக்குச் சிறைச் சாலேகள் எல்லாம் கணக்கிட்டு, அவர்களுக்கு என்னென்ன மந்திரி என்று, ''நீ சுகாதார மந்திரி; நீ முதல் மந்திரி! இல்லேயில்லே! நான் முதல் மந்திரி; நீ துணே மந்திரி'' என்றெல்லாம் மந்திரிகள் லிஸ்ட் எல்லாம் தயாரிக்கப்பட்டு, இன்னும் சிலருக்கு ''நீ இந்த கூட்டுறவு வங்கியின் தலேவர்; நீ இந்த நிலவள வங்கியின் தலேவர்'' என்றெல்லாம், அந்தப் பதவிகளும் அளிக்கப்பட்டு, கண்விழித்துப் பார்த்தால் தி. மு. கழக ஆட்சியே நடைபெற்றுக் கொண்டிருக்கிற காட்சி! (கைதட்டல்)

பொறுமையின் அணிகலன்களாக.....

ஆகவேதான், இன்றைக்கு தி. மு. கழகத்திலே இருக்கிற நாங்கள், இந்த அரசுப் பொறுப்பிலே இருக்கிற நாங்கள், கட்சியை நடத்தும் பொறுப்பிலே இருக்கிற நாங்கள், பொறுமையைக் கடைப்பிடித்த காரணத்தினுலே தான், பொறுமையின் அணிகலன்களாக விளங்குகின்ற காரணத் தினுலேதான் இந்த வெற்றியை நாம் பெற்றிருக்க முடிகிறது.

பதவியைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்பதற் காக அல்ல; இந்தப் பதவியை ஒரு வாய்ப்பாகப் பயன் படுத்திக் கொண்டு, தமிழ்நாட்டு மக்களுக்கு பணியாற்றத் தான் நாம் இந்தப் பொறுப்பிலே இருக்கிறேமேயல்லாமல் வேறல்ல.

சிம்மாசனத்திலே இருப்பதும், சிறைச்சாலையிலே இருப்பதும் ஒன்றுபோல் நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய காரியங்கள்தான்;

'தண்டவாளத்திலே தலை வைத்துப் படு என்று சொன்னலும், அமைச்சர் பதவிகளை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சொன்னலும் இரண்டையும் சமநிலையிலே கருதக் கூடியவர்கள்தான் என்னுடைய தம்பிமார்கள்'' என்று அண்ணு சொன்னரே, அந்த உண்மையான தம்பிமார் களுடைய படை வரிசைதான் இங்கே அமர்ந்திருக்கிறது.

ஆனல் இந்தக் கழகத்திற்கு சில முக்கியமான பொறுப் புக்கள் சில முக்கியமான கடமைகள் இருக்கின்றன.

சிறு துரும்பும் பல்குத்த உதவும்

நேற்று மணலி அவர்கள் இங்கே சொன்னரே, ''இந்தியா விற்கே வழிகாட்டத்தக்க காரியங்கள் இந்தக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது'' என்று சொன்னரே, அதை நான் ஒத்துக் கொள்கிறேன்.

நாங்கள் எல்லாம் பெரிய மனிதர்கள், எங்களால் தான் இந்தக் காரியங்களைச் செய்ய முடியும் என்ற ஆணவத்தால் அல்ல;

'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்கிற வகையில், நாங்கள் சிறு துரும்புகளாக இருந்தாலும், பல் குத்தவாவது உதவ மாட்டோமா?

பல் குத்துவது என்ன பெரிய காரியம் என்று எண்ணுதீர்கள்;

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், பேராசிரியரை அழைப்பற்றிப் பேசச் சொன்னல், பல்லிலே ஏற்படுகின்ற அழுக்கின் மூலம் வயிற்றுக்குள் எத்தனை வியாதிகள் உருவா கின்றன; அந்த வியாதிகள் எப்படி அங்கங்களிலே பரவு கின்றன? எப்படிச் சுவாசப் பையைத் தாக்குகிறது? எப்படிக் கடைசியிலே இதயத்தைப் பிடித்து நிறுத்துகிறது? என்பதை எல்லாம் விளக்கமாகச் சொல்வார்.

ஆகவே பல் குத்துவது என்ன அவசியம் என்று கேட்டு விடாதீர்கள். பல்லிலே இருக்கிற அழுக்குப் போனால்தான் பல்லிலே சிக்கியிருக்கிற தும்பு தூசி போனால்தான், உடல் ஆரோக்கியமாக இருக்கும்; அதைப் போல இன்றைக்கு ஜனநாயகத்திலே ஏற்பட்டிருக்கிற அழுக்குக் கழுவப் பட்டால்தான் இன்றைக்குப் பல் இடுக்கிலே குத்தப்பட்டிருக் கிற அந்தத் தும்பு தூசி அகற்றப்பட்டால்தான் பல், வாய் சுத்தமாகும். ஆரோக்கியத்தோடு ஜனநாயகம் உலவும். (பலத்த கை தட்டல்)

அந்தப் பல்குத்தும் துரும்பாக தி. மு. கழகம் இருக் கிறது அந்த அளவில்தான் நாங்கள் இந்தக் கூடமையைச் செய்கிறோம்.

கலங்கரை விளக்காக தி. மு. கழகம்

மணலி அவர்கள் நீங்கள் அகில இந்தியாவிற்கும் வழி காட்டவேண்டுமென்று சொன்னார். மேலும் அவர், ''நீங்கள் மாநில அளவிலே இருந்தால் போதாது,'' என் றெல்லாம் சொன்னார்.

பேராசிரியர் பேசும்போது, 'இந்த மாநில மக்களுக்கு தேசிய உணர்வோடு—தமிழ்மொழி உணர்வோடு பாடுபடு கின்ற இயக்கம் தி. மு. கழகம்'' என்று சுட்டிக் காட்டினார்.

அதைத்தான் நான் மணலி அவர்களுக்கும் சொல் கிறேன்.

தி மு. கழகம் ஏதோ ஆகாயத்திலே தொங்குகின்ற நிலவாக இருந்து அகில இந்தியாவுக்கும் வெளிச்சம் தர வேண்டும் என்று விரும்பவில்லை.

ஆனால் இந்தியாவினுடைய தென்கோடியில் ஒரு தீப ஸ்தம்பமாக இருந்து—இந்தியாவில் கரை காண முடியாமல் தவிக்கின்ற கப்பல்களுக்கு ஒளி காட்டுகின்ற கலங்கரை விளக்காகத் தி. மு. கழகம் இருக்க விரும்புகிறது.

அது இங்கேதான் இருக்கும்! தமிழர் வாழ்வுக்குப் பயன்படும்.

இந்தியாவிலே இருக்கிற தேசிய இனங்களில் புகழ் வாய்ந்த தேசிய இனம்—நல்ல மரபு கொண்ட தேசிய இனம் மகிமை வாய்ந்த சரித்திரங்களைக் கொண்ட தேசிய இனம் இந்தத் தமிழ் இனம்.

இந்தத் தமிழ் இனத்தின் தூதுவனுப்—பிரதிநிதியாய்—ஊழியனுய்—வீட்டிற்கு விளக்காய்—நாட்டுக்குத் தொண்டனுய்—இன்றைக்குத் தி. மு. கழகம் விளங்கிக் கொண்டிருக்கிறது.

அந்தக் கடமையைச் செய்கிற நேரத்தில்தான் இன்று நாட்டிலே எழுந்துள்ள பிரச்சினைகளை நாம் அலசிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

•

பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் ஜூன் 26—ம் தேதி அவசர நிலைப் பிரகடனத்தை அறிமுகப்படுத்தினர்கள்.

அதற்குப் பிறகு 27—6—75-ல், வானெலியிலே அம்மையார் அவர்கள் பேசும்போது, "சட்ட பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் செயல்பட அனுமதிக்கப்படவில்லை; சட்டபூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபைகளையே செயல்படாமல் செய்வதற்காக அங்கத்தினர்களை ராஜினமா செய்யும்படி நிர்ப்பந்திக்க பலாத்காரம் உபயோகிக்கப் பட்டது; கிளர்ச்சிகள் சூழ்நிலையைப் பாதித்து வன்முறைச் சம்பவங்களுக்கு வழிகோலியுள்ளன" என்று எடுத்துச் சொன்னர்கள்.

இதிலே துளியும் தி.மு.க.விற்கு அபிப்ராய பேதம் கிடையாது.

நான் ஏற்கனவே சொன்னேன். 'தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களைப் போய் ராஜினமா செய் என்று வற்புறுத்துவது தவறு என்பதை இன்றைக்கு 1975-ல் சொல்கின்ற இந்திரா காந்தி அம்மையார் 1971-லே சொல்லியிருந்தால்—எம். ஜி. ராமச்சந்திரன் தமிழகத்திலே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களுடைய வீடுகளுக்கெல்லாம் ஊர்வலமாகச் சென்று ராஜினமாச் செய் என்று மனுகொடுக்கச்

சொன்னீரே; அப்போது அதைத் தவறு என்று இந்திரா காந்தி சொல்லியிருந்தால், அந்தத் தவறு இந்தியாவிலே மற்ற மாநிலங்களிலே தொடர்ந்து நடைபெற்றிருக்குமா?

நான் ஏன் இந்திரா காந்தி அதைச் செய்யவில்லை என்று கேட்கவில்லை.

அன்றைக்கே அது கண்டிக்கப்பட்டிருந்தால், மற்ற மாநிலங்கள் அதைப் பின்பற்றி இருக்காது என்பதற்காகத் தான் சொல்கிறேன்.

இன்னொன்றும் பிரதமர் சொல்லியிருக்கிறார். ''கூடிய விரைவில் இந்தப் பிரகடனத்தைக் கைவிட்டு விடும் வகையில் உள்நாட்டு நிலைமைகள் துரிதமாக அபிவிருத்தி அடையும் என்று நம்புகிறேன்'' என்றும் சொல்லியிருக்கிறார்.

27—6—75-ல் அம்மையார் அவர்கள் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். இந்தக் கருத்தை அடிப்படையாக அமைத்துத்தான், நேற்றுப் பேராசிரியர் அன்பழகன் அவர்கள் ஒரு தீர்மானத்தை முன்மொழிந்து, அதை டாக்டர் நாவலர் அவர்கள் வழி மொழிந்திருக்கிறார்கள்.

அந்தத் தீர்மானத்தின் அடிப்படையே அம்மையாருடைய பேச்சிலே அடங்கியிருக்கிறது.

தீர்மானத்தின் பொருள் என்ன?

கூடிய விரைவில் இந்தப் பிரகடனத்தைக் கை விட்டு விடும் வகையில் உள்நாட்டு நிலைமைகள் துரிதமாக அபிவிருத்தி அடையும் என்று நம்புகிறேன் என்று சொல்லியிருக்கிறார்.

அதை அடையச் செய்வதற்கு எங்களையும் ஒரு துணையாக ஏற்றுக் கொள்ளுங்கள்; நாங்களும் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்ற வகையிலேதான் நேற்றைய தீர்மானம் பொருள் கூறுகிறதே அல்லாமல், வேறல்ல.

அவர்கள், 10—7—75-ல் பேசிய பேச்சில் அம்மையார் குறிப்பிடுகிறார். அது 'இந்துப் பத்திரிகை'யில் தலைப்புக் கட்டி வருகிறது.

opposition has Derailed Democracy: Mrs. Gandhi என்ற தலைப்பிலே அம்மையார் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

Democracy, she said, meant not only a certain duty on the part of the ruling party to give certain freedom to the Opposition but it also enjoined responsibility on the Opposition parties to go "according to the rules of democracy and that is not to obstruct governmental functioning and not to obstruct working of the nation."

"அரசாங்கத்தின் வேலைகளைச் ஸ்தம்பிக்கச் செய்வதோ, அல்லது தேசீயக்காரியங்களைத் தடுத்து நிறுத்துவதோ ஜனநாயகம் ஆகாது" என்கிறார். ஆமாம், அதை ஒத்துக் கொள்கிறோம்.

கடைசியாகச் சொல்கிறார்.

The manner in which this movement went on was quite extraordinary.

இந்த 'Extraordinary' என்ற வார்த்தை தான் நேற்றைய பேராசிரியருடைய தீர்மானத்திலே இடம் பெற்று அதைத் தான் நாவலர் அவர்கள் வழி மொழிந்தார்.

அந்த நிலையை மாற்றி, இயல்பான நிலை உருவாவதற்கு தமிழகத்தின் முதலமைச்சர் என்ற முறையில் ஒரு அதிகாரப் பொறுப்பிலே இருக்கிறவன் என்ற காரணத்தினால் அந்த முயற்சியை மேற்கொண்டு, நாட்டிலே இருக்கிற தலைவர்களை எல்லாம் சந்தித்து (வெளியே இருக்கிற தலைவர்களைத் தான்; பிரதமர் அனுமதித்தால் உள்ளே இருக்கிற தலைவர்களையும் சந்தித்து) பிறகு பிரதமரையும் சந்தித்து, ஒரு சுமுகமான சூழ்நிலைக்கு அம்மையார் அவர்கள் நல்ல முடிவெடுக்க உதவிட வேண்டும் என்பதுதான் எங்களுடைய எண்ணமே தவிர வேறல்ல.

நேற்று பேராசிரியர், "கருணாநிதியை நாங்கள் தூதாக அனுப்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.

நான் உங்களுக்குச் சொல்வேன், இது கிருஷ்ணன் தூது அல்ல:

கிருஷ்ணன் தூது என்றால், கிருஷ்ணன் வெளிப் பார்வைக்குத் தூதனுகச் சென்றாலும், உள்ளூர பாண்டவர் பக்கம்தான் இருந்தான். ஆகவே தான் நான் கிருஷ்ணன் தூதாகச் செல்லவில்லை.

பாண்டவர்களுக்கு வக்காலத்து வாங்குவதை உள்ளத்திலே வைத்துக் கொண்டு, எப்படியும் போர் நடைபெற வேண்டும்; அந்தப் போரில் பாரதத்தில் உள்ள பலபேரும் செத்திட வேண்டும்; அதற்காகத்தான் கிருஷ்ணவதாரமே நடைபெற்றது என்ற தத்துவதத்தை உள்ளடக்கிக் கிருஷ்ண பரமாத்மா பாரதப் போர் முடிந்த பிறகு சொல்கிறான்:

"உலகத்திலே ஜீவராசிகள் அதிகமாக ஜனித்து விட்டார்கள்; அவர்களை எல்லாம் ஒழிப்பதற்காகத்தான் இந்த அவதாரமே மேற்கொண்டேன்" என்று கிருஷ்ணனே சொல்கிறான்;

கிருஷ்ணன் தூது, "ஐந்து நாடு கொடு; அல்லது ஐந்து நகரமாவது கொடு; அல்லது ஐந்து வீதியாவது கொடு; அல்லது ஐந்து வீடாவது கொடு" என்று கேட்ட தூது.

கிருஷ்ணன் தூது, துவாரகையிலிருந்து—வடக்கே சென்ற தூது, ஆனால் இது தெற்கேயிருந்து வடக்கு நோக்கிச் செல்லும் தூது.

'உருவுகண்டு எள்ளாமை வேண்டும்'

கோவூர் கிழார் என்ற சங்க காலப் புலவர் நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற இரண்டு சோழர்களுக்கும் நண்பர்; ஒரு நாள் நெடுங்கிள்ளியின் பால், நலங்கிள்ளியின் அவைக்களப் புலவர் இளந்தத்தன் என்பான் வருகிறான்.

நெடுங்கிள்ளி "இவன் புலவன் அல்ல, நலங்கிள்ளியால் அனுப்பி வைக்கப்பட்ட ஒற்றன்" என்று சந்தேகப் படுகிறான்.

உடனே கோவூர்கிழார் தலையிட்டு, ''அல்ல, அல்ல நெடுங்கிள்ளி; அவசரப்படாதே; இவன் புலவன்தான்; நலங்கிள்ளியின் கொலு மண்டபத்தில் பணியாற்றுகின்ற புலவன்தான் இந்த இளந்தத்தன்' என்று சொல்லி அவனைக் காப்பாற்றுகின்றான்.

அடுத்த கட்டம்—உறையூரில் இருந்த சோழன் நெடுங்கிள்ளி மீது சோழன் நலங்கிள்ளி போர் தொடுக்கிறான். அந்தப் போரில் கோவூர் கிழார் பங்கு என்ன தெரியுமா?

கிருஷ்ணனைப் போலச் சென்று அதைக் கொடு, இதைக் கொடு என்று கேட்கவில்லை.

இரண்டு மன்னர்களுக்கிடையே நின்று பாடுகிறார். என்ன பாடுகிறார்?

''நின்ன கண்ணியும் மார்மிடைந் தன்றே
நின்னெடு பொருவோன் கண்ணியும் மார்மிடைந் தன்றே''

அதாவது, ''சோழனே, நெடுங்கிள்ளியே, நீ அணிந்திருப்பதும் ஆத்திதான்; நலங்கிள்ளியும் ஆத்திதான் சூடியிருக்கிறான்; இருவருமே சோழ வம்சத்தைச் சேர்ந்தவர்கள்;

''ஒருவீர் தோற்பினும் தோற்ப துங்குடியே''

இரண்டு பேரில் யார் தோற்றாலும், சோழர் குடிதான் தோற்றது என்றுதான் சரித்திரத்தில் வரும்.

''இருவீர் வேறல் இயற்கையு மன்றே''

இருவரும் வெற்றி பெறுவது என்பது இயற்கையேயல்ல; அதனால்,

''குடிபொருளன்று நுஞ்செய்தி''

ஆகவே உங்களுடைய செயல் குடிப்பெருமைக்கு ஏற்ற தல்ல என்று பாடுகிறார்.

நீ சூடியிருப்பதும் ஆத்திதான்; அவன் சூடியிருப்பதும் ஆத்திதான்; என்று கோவூர்கிழார் சொன்னார்.

அதைப்போல, இன்றைக்கு இந்திரா அம்மையார் அவர்கள் கட்டியிருப்பதும் கதர்தான்; ஜெயப் பிரகாசும்,

மொரார்ஜி தேசாயும் கட்டியிருப்பதும் கதர்தான்; (பலத்த கைதட்டல்)

ஆகவே, நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்கும் இடையில் நின்ற கோவூர் கிழாரைப் போல—அவ்வளவு திறமை வாய்ந்த புலவன் நான் அல்ல என்றாலும் அந்த இடத்தில் நின்று கோவூர்கிழார் செய்த வேலையைத் தனிப்பட்ட கருணாநிதி அல்ல; தி. மு. கழகத்தால் ஆணையிடப்பட்ட ஒரு ஊழியன்—ஒரு தொண்டன் என்கிற முறையில்;

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு அச்சாணி அன்னூர் உடைத்து"

என்பதைப் போல—

நீங்கள் பெரிய திருவாரூர் தேராக—திருவல்லிப்புத்தூர் தேராக இருக்கலாம்; அந்தத் தேருக்கு உதவுகின்ற அச்சாணியாக அந்தத் தேர் ஓட தி. மு. கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்று தான் சொல்கிறோமே அல்லாமல், நாங்கள் இல்லாவிட்டால் தேர் ஓடுமா என்று கேட்கவில்லை. கோபுரத்தைப் பொம்மைதான் தாங்குகிறது என்றமுறையில் பேசும் கோமாளித்தனமான பேச்சுக்கு நாங்கள் சொந்தக் காரர்களுமல்ல! ஜனநாயகத்துக்கு நாங்கள் செய்ய வேண்டிய கடமையைச் செய்ய வருகிறோம். எங்களைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள் என்றுதான் கேட்கிறோம்.

எதிர்த்தவர்களாயிற்றே, இவர்களை நம்பலாமா என்று எண்ணுதீர்கள்.

எதிர்த்தவர்களை நம்பலாம்; ஆனால் ஆதரிக்கின்ற சிலர் எதற்காக ஆதரிக்கிறார்கள் என்று பார்த்துப் பிறகு அவர்களின் ஆதரவை நம்ப வேண்டும்.

'வருமான வரி பாக்கி'கள் ஆதரிப்பது ஏன்?

எதற்காக செயற்குழுவைக் கூடக் கூட்டாமல் ஆதரிக்கிறார்கள்? வருமான வரி பாக்கி! [சிரிப்பு] அன்னியச் செலாவணி!! [சிரிப்பு] அதற்காக ஆதரிக்கிறார்கள். அந்தச் சுயநலத்திற்காகத்தான் ஆதரிக்கிறார்கள்.

இந்த நிலை எழுந்தால் ரஷ்யாவைப் போல இதையும் ஆக்கிவிடலாம் என்று சிலபேர் எண்ணிக்கொண்டு அந்தச் சுயநலத்தோடு ஆதரிக்கிறார்கள்.

ஒரே கட்சி ஆட்சியைக் கொண்டு வந்துவிடலாமென்று அந்த எண்ணத்தோடு சிலபேர் ஆதரிக்கிறார்கள்.

நாம் குரல் கொடுத்தோம்! அந்தக் கொள்கையிலிருந்து இன்றைக்கும் நாம் பின்வாங்கவில்லை. இவைகளை மறு பரிசீலனை செய்யுங்கள் என்று சொல்கிறோம். அது தவறல்ல.

இந்தத் தீர்மானத்தை நாம் நிறைவேற்றியிருப்பதால், நேற்று ரஷ்யாவிலிருந்து உடல்நலம் பெற்றுத் திரும்பிய ஒருவர், (அவர் பல்லாண்டுகள் வாழ்க) பேராசிரியர் கொண்டு வந்த தீர்மானத்தை விமர்சித்து இன்று சென்னையில் சில பத்திரிகைகளுக்கு அறிக்கை கொடுத்திருக் கிறாராம். அந்தச் செய்தியைக் கேட்டுவிட்டுத்தான் இந்த மாநாட்டிற்கு வந்தேன்.

''தி. மு. கழகத்தார் இரட்டை வேடம் போடுகிறார்கள்; (அப்படி வேடம் போடுகிறவரோடு பல நாளாகப் பழக்க மல்லவா அவருக்கு) செயற் குழு போட்ட தீர்மானத்தைத் தி. மு. கழகம் வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும்; பிறகு இந்தத் தீர்மானத்தைப் பற்றி யோசிக்கலாம்'' என்று கூறியிருக்கிறார்.

அம்மன் இன்னும் வரம் கொடுக்கவில்லை; பூசாரி என்ன குறுக்கே? (பலத்த கைதட்டல்-சிரிப்பு) நீர் யார்? உம்மைத் தெரியாதா? நான் கேட்கிறேன்.

''நடந்தவைகள் நடந்தவைகளாக இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும்'' என்றுதான் தி. மு. கழக அரசு பிரச்சினைகளை அணுகி வந்திருக்கிறது.

ஆர்வமே தவிர, ஆணவமல்ல!

நான் இந்திராகாந்தி அவர்களைக் கேட்டுக்கொள்வேன்.

இந்தத் தீர்மானத்தை நாங்கள் போட்டு விட்ட காரணத்தினுலேயே, உங்களுடைய முற்போக்குத் திட்டங்களுக்கு நாங்கள் எதிரிகள் அல்ல;

இருபது அம்சத் திட்டங்களை அறிவித்தீர்கள்; அதில் பதினேநது திட்டங்களை நாங்கள் நிறைவேற்றினேம் என்று சொல்வது ஆர்வத்தால் சொல்லப்பட்டதே தவிர, ஆணவத்தால் சொல்லப்பட்டதல்ல.

1971-இல் கிரி தேர்தலில் உங்களை நாங்கள் ஆதரித்ததற்குக் காணமே—கசப்பு வளர்ந்த பிறகும் கூட, பக்ருதீன் அலி அவர்களை ஆதரிக்கக் காரணமே—நீங்கள் முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றுவீர்கள் என்ற எண்ணத்தினுல் தான்.

ஆகவே நீங்கள் நிறைவேற்றப் பல தடைகள் இருந்தாலும்—நாங்கள் நிறைவேற்ற இங்கே தடைக் கற்கள் உண்டு என்ருலும், தடந்தோள் உண்டு என்ற பாரதிதாசனின் பாட்டைப் பாடியவாறு எங்கள் தடந்தோளால் தடைக் கற்களை இடறிவிட்டு முற்போக்குத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறேம்.

மேலும் திட்டங்களை நிறைவேற்ற பணம் தாருங்கள் என்றுதான் கேட்கிறேமேயல்லாமல், நாங்கள் எவ்வளவு செய்திருக்கிறேம், பார்த்தாயா என்ற அகம்பாவத்தில் சொல்லவில்லை,

ஆகவே,

"நகுதற் பொருட்டன்று நட்டல்; மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு"

உண்மையான நண்பன் அப்படித்தான் இருப்பான்.

எது செய்தாலும், "ஆகா, உன்னைப் போல உண்டா? ஆகா, நீங்கள் செய்தது தான் சரி, இன்னும் ஒரு படி மேலே போங்கள், அப்படிச் செய்யுங்கள், இப்படிச் செய்யுங்கள்"

என்கின்ற சகுனிவேலை செய்கிறவன் பக்கத்திலே இருந்தால், அதற்கும் வள்ளுவர் பாடினார்:

"பழுதெண்ணும் மந்திரியின் பக்கத்துச் செல்வோர்
எழுபது கோடி உறும்"

பழுதே எண்ணிக் கொண்டிருக்கும் மந்திரி பக்கத்திலே இருந்தால் அவனை விட பகைவர்கள் பலகோடி பேர் இருந்தாலும் பரவாயில்லை என்கிறார்.

சொல்கிறாரே, சுப்ரமணியம், அங்கே உட்கார்ந்து கொண்டு! "தமிழ்நாட்டில் அவசர நிலை இல்லை" என்று.

இதைவிட பல கோடி பகைவர்கள் மேல் அல்லவா அம்மையாரே உங்களுக்கு! (கைதட்டல்)

இங்கே அவசர நிலை இல்லை என்று சொல்கிறார்: ஏன் இல்லை? அவசர நிலை இங்கே இல்லாமலா பல காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன? பம்பாயிலே இருக்கிற கள்ளக்கடத்தல்காரர்களை பிடிப்பதற்கு அவசர நிலைமையை பிரதமர் பயன்படுத்துகிறார் என்றால், அந்தக் கள்ளக்கடத்தல் காரர்கள் நீதிமன்றத்திற்குச் செல்வதைத் தடுப்பதற்கு சட்டத்திலே வகையிருக்கிறது என்றால் அந்த வகையிலே அதைப் பாராட்டுகிறோம்.

அதைத் தமிழகத்திலே செய்கிறோம். நாங்கள் பாதகங்களையும் சாதகங்களாக ஆக்கிக் கொள்ளக்கூடியவர்கள்; அதேநேரத்தில் பழிவாங்குகின்ற கெடு நினைப்பு இல்லாதவர்கள்;

பலபேர், அவரைப் பிடித்து மிசாவிலே போடு. இவரைப் பிடித்து மிசாவிலே போடு என்றெல்லாம் சொன்னார்கள். அதற்காக நாம் ஆட்சிப் பொறுப்பை ஏற்கவில்லை.

சமுதாய விரோதிகள் யாராக இருந்தாலும்...

சமுதாய விரோதிகள் யாராக இருந்தாலும், அவர்கள் எந்தக் கட்சிக்காரராக இருந்தாலும், தி. மு. கழகத்திலே

உள்ளவர்களாக இருந்தாலும் அண்ணனுக இருந்தாலும், தம்பியாக இருந்தாலும் யாராக இருந்தாலும் அவர்களை நாங்கள் தண்டிப்போம். அதுதான் தி. மு. கழக அரசின் கொள்கையாக இருந்து வருகிறது.

இந்த நிலைமையில் தான் இன்றைக்கு உண்மையான நட்பை எடுத்துச் சொல்லுகின்ற வகையில்—உணர்த்துகின்ற வகையில், இன்றைக்கு சிறையிலே கிடக்கின்ற தலைவர்களை விடுவித்திட ஒரு வழி காண முடியாதா? இன்றைக்கு அளிக்கப்பட்ட சுதந்தரத்தை மீண்டும் வழங்கிட ஒருவழி காண முடியாதா? என்கிற ஏக்கப் பெருமூச்சின் மொத்த உருவமாகத்தான் பேராசிரியரும், நாவலரும் தீர்மானத்தை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் இருக்கிறார்கள்.

என்னை வாழ்த்துங்கள்;
உங்கள் வலிமையை வழங்குங்கள்!

இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு எனக்கு உங்களுடைய வாழ்த்துக்களை வழங்குங்கள்; உங்களுடைய பலத்தைத் தாருங்கள்; உங்களுடைய வலிமையை வழங்குங்கள் என்று கேட்டு 'அண்ணா வாழ்க' என்று கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

(நெல்லை மாநாட்டு உரை. 10-8-75)

தியாகத்திற்குத் தயாராவோம்

சேலத்தில் நடைபெறுகின்ற சீரும் சிறப்பும் மிகுந்த இந்த மாநாட்டில், நேற்றும் இன்றும், மிகுந்த எழுச்சியோடும்—உணர்ச்சிப் பெருக்கோடும் இலட்சக்கணக்கில் கூடியிருந்து இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திக் கொடுத்திருக்கிறீர்கள்!

எனக்கு முன்னால் இங்கே பேசிய இலட்சிய நடிகர் இராசேந்திரன் குறிப்பிட்டதைப்போல், 'இது உள்ளபடியே மாவட்ட மாநாடுதானா அல்லது மாநில மாநாட்டுக்கான ஒத்திகை பார்க்கப் படுகிறதா' என்று எண்ணத்தக்க அளவிற்கு இந்த மாநாட்டை, சேலம் மாவட்டத்தின் செயல் வீரர்கள் நடத்திக் காட்டியிருக்கிறார்கள்!

எங்கும் எழிற்கோலம்

நேற்றும் இன்றும், சேலம் நகரத்தைப் பார்த்தவர்கள் மட்டுமல்ல—கடந்த ஒரு வார காலமாகவே சேலம் நகரின் விழாக் கோலத்தைக் காண்பதற்காக—ஆங்காங்கே அமைக்கப்பட்டிருக்கின்ற வளைவுகளை — அதிலே எழுதப்பட்டிருக்கின்ற எழுத்துக்களை—போடப்பட்டிருக்கின்ற மின் விளக்குகளை—பந்தல் போடப்பட்டிருக்கின்ற பாங்கினை—கோட்டைகள் எழுப்பப்பட்டிருக்கின்ற அழகினை எல்லாம் கண்டு களிக்க இந்த மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்தும் ஆடவரும்—பெண்டிரும் ஆயிரமாயிரமாக வந்தார்கள் என்ற செய்திகளைக் கேள்விப்பட்டேன்.

இந்த மாநாடு, காந்தியார் பெயரால் அமைந்திருக்கின்ற விளையாட்டு மைதானத்தில் மாத்திரம்தான் நடை

பெறுகிறது என்று இல்லாமல், இன்றைக்குச் சேலம் நகரத்திலும்—சேலம் நகரத்தைச் சுற்றி ஐந்து மைல் தொலைவிலேயும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாநாடு என்று சொன்னால் அது மிகையாது. (கைதட்டல்)

அந்த அளவிற்குச் சேலத்தில் எந்தப் பகுதியில் நுழைந்தாலும், 'மாநாட்டின் முகப்பே இதுதானே' என்று எண்ணத்தக்க அளவிற்கு எழுச்சிமயமான வரவேற்புகளும்—கழகக் கொடிகளின் தோரணங்களும்—கழக எண்ணங்களை எடுத்துக் காட்டுகின்ற பதாகைகளும்—வானத்தை அண்ணாந்து பார்த்தால், வானமே தெரியாத அளவிற்குக் கழகக் கொடிகளின் மயமாக இருக்கின்ற காட்சிகளும் இருந்திடக் காண்கிறோம்!

சேலத்திற்கும் — எனக்கும் — மழைக்கும் நிரம்பத் தொடர்பு உண்டு என்பதைப் பல நேரங்களில் கண்டிருக்கிறேன்; நேற்றும் இன்றும் தலைவர்கள் எல்லாம் பேசி—இந்த மாநாட்டின் இறுதி நிகழ்ச்சியாக நான் உரையாற்ற வேண்டிய இந்தக் கட்டத்தில் பொழிந்த மழையின் காரணமாக, உங்களில் பாதி பேர் உட்கார்ந்து கொண்டும்—பாதி பேர் நின்றுகொண்டும் இருக்கிறீர்கள்!

நின்று கொண்டிருக்கின்ற ஆடவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்—'ஈரத்திலும் வீரத்தோடு உட்கார்ந்து கொண்டிருக்கின்ற பெண்களைப்போல் ஆண்களும் உட்கார்ந்து—மாநாட்டினைக் கவனிக்க வேண்டுமென்று!

செயல் வீரர்களுக்குப் பாராட்டு

காலிலே ஈரமும்—நெஞ்சிலே வீரமும் இருக்கின்ற சூழ்நிலையில்தான் இந்த மாநாட்டிலே நீங்கள் எல்லாம் கலந்து கொண்டிருக்கிறீர்கள்.

'இவ்வளவு அழகான—ஆர்வம் ததும்புகின்ற எழுச்சிக்கு அணைபோட முடியுமா' என்று எண்ணத்தக்க அளவிற்கு இந்த மாநாட்டை நடத்திக் காட்டியிருக்கின்ற அருமை

நண்பர்—வரவேற்புக் குழுத் தலைவர் ஆறுமுகம் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

மாநாட்டின் செயலாளர்களாகப் பணிபுரிந்த அமைச்சர் இராசாராம்—கந்தப்பன்—அன்புக்கரசு — ப. தா. முத்து — பழனிவேலன்—டாக்டர் நைனமலை—ஆறுமுகம் ஆகியோர் களையும், மாநாட்டின் நிதிக்குழுத் தலைவர் திரு. சுந்தரம் அவர்களையும், மாநாட்டுப் பொருளாளர் நடேசன் அவர் களையும் மாநாட்டுத் தொண்டர் படைத் தலைவர் வெங்கடாசலம் அவர்களையும், துணைத் தலைவர்கள் தமிழழகன் — கே.வி. இராமஞதன் ஆகியோரையும், தொண்டர் 'படைத் தலைவி கமலம் மாணிக்கம் அம்மாள் அவர்களையும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இம் மாநாட்டுப் பந்தலுக்கு வைக்கப்பட்டிருக்கின்ற பெயர்—சேலத்துப் பெரியவர் ஜி. பி. சோமசுந்தரம் அவர் களுடைய பெயராகும்; தள்ளாத வயதிலும், தன்னுடைய உள்ளத்திலே ஏற்றுக்கொண்ட கொள்கைக்காக அயராது பாடுபட்ட உத்தமர் ஜி.பி. சோமசுந்தரம்; அவருடைய முதிர்ந்த அனுபவமும்—கொள்கை ஆர்வமும்—என்றென்றும் குன்றுத இலட்சியப் பற்றும், நம்முடைய நெஞ்சில் எல்லாம் நிலைத்திருக்க வேண்டியவைகளாகும்!

அதைப்போலவேதான், இந்த மாநாட்டு அரங்கத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்ற பெயர், என்னரும் நண்பர்—எதிர்க் கட்சிக்காரர்களுக்கெல்லாம் இடியென—புயலென—சுழலும் வாளெனச் சொற்பொழிவு நிகழ்த்தக்கூடிய சிற்றுளி சுப்பிர மணியம் அவர்களுடைய பெயராகும்.

"தி.மு. கழகம், வயதானவர்களாக இருந்தாலும் — இளைஞர்களாக இருந்தாலும், இந்தக் கழகத்திற்காகப் பாடு பட்ட தியாகிகளை மறக்காது — நன்றியோடு நினைக்கும்" என்பதற்கு அடையாளம்தான், இந்த இரண்டு பெயர்களை யும் தாங்கி இந்தப் பந்தல் காட்சி அளிப்பது!

இரும்பு நெஞ்சத்திற்கு சேலம் எடுத்துக்காட்டு

சேலம் நெசவுத் தொழிலுக்குப் பெயர் பெற்ற இடம்; நெசவுத் தொழில், உலகத்தின் சனநாயகத்தைக் கோடிட்டுக் காட்டுகின்ற தொழில்: நெடுக்கிலும் குறுக்கிலும் நூல் போனால்தான் வேட்டியோ—சேலையோ உருவாகும்.

அதைப்போல, ஆளுங் கட்சியும் — எதிர்க் கட்சியும் இருந்தால்தான் உலகத்தில், சனநாயகம் என்ற இலக்கணமே இருக்கும். அந்தச் சனநாயக இலக்கணத்திற்குப் பொருள் கூறுவதைப்போல, குறுக்கும் நெடுக்குமாக நூலைப் பின்னி வேட்டியாகவும்—சேலையாகவும், மானத்தை மறைக்கும் துணிகளாகவும் தருகின்ற நெசவாளர்கள் வாழ்கின்ற ஊர்தான் சேலம்!

சேலத்தின் இன்னொரு சிறப்பு—சேலத்து மாங்கனியாகும்; மாங்கனி—சேலம் மாவட்டத்திலே இருக்கின்ற தோழர்களுடைய இனிய இயல்புக்கு அடையாளம்!

சேர்வராயன் மலையில் பதுங்கிக் கிடக்கின்ற இரும்புக் கனி, சேலம் தோழர்களுடைய இரும்பு நெஞ்சத்திற்கு அடையாளம்!

மூழுமைக்கு முன்னேடி

மாங்கனியும், இரும்புக் கனியும் கொண்டிருக்கின்ற இந்த மாவட்டத்திலேதான் — நண்பர்களே — பொய்மான் கரடும் இருக்கிறது!

பொய்மான்கரடை நான் மட்டுமல்ல—நீங்கள் அனைவரும் பார்த்திருப்பீர்கள்; அதனைக் கொஞ்சம் தொலைவிலே இருந்து ஒரே ஒரு கோணத்தில் பார்த்தால்தான் மானைத் தெரியும். அருகே போய்ப் பார்த்தால் வெறும் பாறையாகத்தான் தெரியும்!

அதைப் போலத்தான், சேலம் மாவட்டத் தி.மு.கழகத் தோழர்களிடம், 'வேற்றுமை' என்கின்ற பொய்மான் இருக்கிறது என்று யாராவது சொல்வார்களானால், அவர்கள் தொலைவிலிருந்து ஒரு கோணத்தில் பார்த்து 'வேற்றுமை' என்று சொல்கிறார்கள் என்றுதான் பொருள்!

அருகே சென்று பார்க்கும்போது பொய்மான் மறைந்து விடுவதைப்போல, 'தி.மு.கழகத் தோழர்களிடத்தில் எந்த வேற்றுமையும் கிடையாது என்ற சூழ்நிலையை இந்த மாநாடு முழுமையாகக் காட்டுகிறது' என்று நான் சொல்லமாட்டேன்—'முழுமையாக்குவதற்கு ஒரு முன்னேடியாக அமைகிறது' என்றுதான் சொல்வேன்

வரவு—செலவு—மிச்சம்

இந்த மாநாட்டின் மூலமாக வசூலான மொத்தத் தொகை—நன்கொடை, நுழைவுக் கட்டணம் ஆகியவைகளின் மூலம் ரூ. 4,10,638; செலவு கிட்டத்தட்ட இரண்டு இலட்சம் ரூபாய் போக—மிச்சம் ரூ. 2,10,638 என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவேற்புக் குழுத் தலைவர் ஆறுமுகம் அவர்கள் வரவேற்புரையாற்றுகையில், தான் ஒரு கனவு கண்டதாகவும்—அந்தக் கனவில் நான் வந்ததாகவும்—அப்போது என்னிடம் ஆயிரம் ரூபாய் மாநாட்டிற்கு நிதியாகத் தர வேண்டுமென்று அவர் கேட்டதாகவும்—ஆனால் உண்மையில் நான் நூறு ரூபாய்தான் நேரில் தந்ததாகவும்—ஆகவே, கனவில் ஆயிரம் தந்துவிட்டு—அதற்குப் பிறகு நேரடியாக நான் கொடுத்த நூறு ரூபாய் போக மிச்சமுள்ள 900 ரூபாயைத் தரவேண்டுமென்றும் கேட்டார்.

அவருக்குச் சொல்ல விரும்புகிறேன்—'மீண்டும் ஒரு கனவு காணுங்கள்; அதிலே வந்து அந்த 900 ரூபாயைத் தருகிறேன்' என்று! (பலத்த கைதட்டல்) கனவு கண்டது ஆறுமுகத்தின் குற்றமே தவிர, என் குற்றமல்ல!

நான் கூட நேற்றையத்தினம் இரவு ஒரு கனவு கண்டேன்; அந்தக் கனவில், மாநாட்டின் மிச்சமாக மூன்று இலட்சம் ரூபாயை ஆறுமுகம் என்னிடம் அளித்தார்; ஆனால் உண்மையில் இரண்டு இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறார்கள்; ஆகவே, மீதமுள்ள ஓர் இலட்சம் ரூபாயைத் தர வேண்டுமென்றும், அதிலே நான் தரவேண்டிய 900 ரூபாயைக் கழித்துக் கொண்டு தரவேண்டுமென்றும் ஆறுமுகம் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன் (பலத்த சிரிப்புடன்).

அவசரக்காரர்கள் காணும் கனவின் நிலை!

ஆறுமுகம் கண்ட கனவு—அன்பின் காரணமாகக் கண்ட கனவு! ஆனால், நண்பர்களே - நாட்டில் இன்றைக்குப் பல பேர், ஆறுமுகம் கண்ட கனவைப் போல் அல்ல-சில அவசரக்கார அரசியல்வாதிகள், வேறு என்னென்னவோ கனவுகளைக் கண்டு கொண்டிருக்கிறார்கள்!

கழக அரசு கவிழ்ந்து விட்டதைப் போலவும்—உடனடியாக கவர்னர் ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டு விட்டதைப் போலவும்-உடனடியாக அவர்களில் சிலரை அழைத்து, 'நீ முதலமைச்சர்; நீங்கள் எல்லாம் இன்னின்ன துறைக்கு அமைச்சர்கள்' என்று அறிவித்ததைப் போலவும் கனவு கண்டு கொண்டிருக்கிறார்கள்: 'இந்தக் கனவு பலிக்கும்' என்றும் அவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்!

''சீப்பை எடுத்து ஒளித்து வைத்து விட்டதைப்போல் கனவு கண்டேன்; ஆகவே, கல்யாணம் நடக்காது'' என்று எண்ணிய பைத்தியக்காரிக்கும்—இந்த அரசியல் கனவு கண்டு கொண்டிருப்பவர்களுக்கும் என்ன வேறுபாடு என்று தெரியவில்லை.

கனவு காண என்ன காரணம்—அவர்கள், தங்களுடைய புகார்க் காண்டத்தை முடித்துவிட்டார்கள்; சிலபதிகாரக் காண்டம் பற்றி நான் சொல்லவில்லை; என்னைப்பற்றி—என்னுடைய தலைமையில் இருக்கின்ற அமைச்சர்கள் பற்றி—

கழகத்திலே இருக்கின்ற தானைத் தளபதிகளைப் பற்றி—புகார் எழுதிக் கொண்டு போய் கவர்னரிடம் கொடுத்தார்கள்; கவர்னர், 'விலாசம் தெரியாமல் வந்து விட்டீர்கள்; நீங்கள் செல்ல வேண்டிய இடம் ராஷ்டிரபதி பவன்—ராஜ்பவன் அல்ல' என்று சுட்டிக் காட்டி, அதற்குப் பிறகு குடியரசுத் தலைவரிடம் கொண்டு போய் புகாரைக் கொடுத்து—அது பிரதமருக்கு அனுப்பப்பட்டது.

எந்த மாநிலத்திலாவது முதலமைச்சர் மீதோ மற்ற அமைச்சர்கள் மீதோ புகார்கள் கூறப்பட்டால், 'அதைப் பற்றி என்ன முடிவு வருமோ' என்று அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்!

ஆனால் தி.மு.கழகம், கொடுக்கப்பட்ட புகார்களுக்கும் ஒரு புத்தகம் போட்டு—அந்தப் புகார்களுக்கு நாம் அளித்த பதிலையும் ஒரு புத்தகமாகப் போட்டு, சட்டசபையில் பகிரங்கமாய் வைத்தது!

ஆகவேதான், புகார்க் காண்டம் முடிந்தும் கழக அரசு வீழாத காரணத்தால், 'நெருக்கடி நிலை காண்டத்திலாவது இதைக் கவிழ்த்துவிடலாமா' என்கின்ற ஆவலோடு சிலர் இருக்கிறார்கள்!

கழகச் செயற்குழுவின் தீர்மானம் கூறுவது என்ன?

நெருக்கடி நிலை நேரத்தில் கழகம் உருவாக்கிய செயற்குழுத் தீர்மானத்தைக் கண்டித்து, 'மத்திய அரசு உடனடியாகத் தி.மு.க. அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்கின்ற மகஜர்களைக் குடியரசுத் தலைவரிடத்தில்—பிரதமரிடத்தில்—டெல்லியிலிருந்து சென்னைக்கு வருகின்ற அமைச்சர்களிடத்தில்—கொண்டுபோய்க் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்!

செயற்குழுத் தீர்மானம் என்ன?—

இன்றைக்குச் சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருக்கின்ற, கள்ளக்கடத்தல் காரர்களை—கடத்தல்

போர்வழிகளே — பாதுக்கல்காரர்களே — வன்முறையாளர்களே மதவாதிகளே—வகுப்பு வெறியர்களே—மண்டையோட்டுச் சாமியார்களே விடுதலே செய்ய வேண்டுமென்று சொல்லவில்லே. பழம் பெரும் தேசத் தலேவர்களே—அவர்கள் எங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்லர்; கழகத்திடம் ஒட்டோ உறவோ கொள்ளாதவர்கள்—'அவர்களே விடுவிக்க வேண்டும்' என்ற கோரிக்கை;

அதைப் போலவே, 'நெருக்கடி நிலேயை மறு பரிசீலனே செய்திட வேண்டும்' என்ற கோரிக்கை,

பத்திரிகைகளுக்கு நியாயமான உரிமைகளே வழங்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கை;

இந்தக் கோரிக்கைகளே நிறைவேற்றக் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்று—போராட்டம் நடத்த வேண்டுமென்று நாம் சொல்லவில்லே; வேறு என்ன சொன்னேம்?—'இந்தக் கோரிக்கைகள் வெற்றி பெறத் தமிழ்நாடு, தன்னுடைய பண்பாட்டிற்கேற்ப — காந்தீய நெறியில் — அண்ணுவின் வழியில்—சட்டம், ஒழுங்கு, அமைதி ஆகியவைகளுக்கு ஊனம் வராத அளவில் இந்தப் பிரச்னேயை அணுகி, இதற்கு ஒரு நல்ல தீர்வைக் காண வேண்டும்' என்பதுதான், சென்னேயில் நடைபெற்ற கழகச் செயற்குழுவின் தீர்மானமாகும்.

அந்தத் தீர்மானத்தை நான் நிருபர்களிடம் விளக்கிய போது, 'அப்படியானுல், நெருக்கடி நிலே அடிப்படையில் மத்திய அரசு அனுப்பும் தாக்கீதுகளே மாநில தி. மு. க. அரசு நிறைவேற்றுமா—நிறைவேற்றுதா?' என்று என்னிடம் கேட்டார்கள்.

அதற்கு நான், 'மத்திய அரசின் தாக்கீதுகளே நிறைவேற்ற வேண்டாமென்று மாநில அரசைச் செயற்குழு கேட்டுக்கொள்ளவில்லே. அப்படிப்பட்ட முடிவு எதுவும் எடுக்கப்படவில்லே' என்றுதான் சொன்னேன்.

தமிழ்நாட்டில் இல்லையா?

''சமூக விரோதிகளை—பொருளாதாரக் குற்றவாளிகளை—கள்ளக் கடத்தல்காரர்களை—வரி ஏய்ப்பவர்களை—அந்நியச் செலாவணி மோசடிக்காரர்களைத் தடுத்து நிறுத்தவும், அவர்களைச் சிறையில் போட்டுப் பூட்டவும், அவர்களுடைய தொழில்களை ஸ்தம்பிக்கச் செய்யவும் இந்த நெருக்கடி நிலை பயன்படவில்லையா?'' என்று கேட்கிறார்கள்.

நான் அதை மறுக்கவில்லை; பயன்படுகிறது; அதே நேரத்தில், நம்முடைய அரசாங்கத்தின் சார்பில் நெருக்கடி நிலைக்கான நடவடிக்கைகளை—முறைகளை எல்லாம் கடைப் பிடித்து வருகிறோம்!

அவசரச் சட்டம்—நெருக்கடி நிலை பிறப்பிக்கப்பட்டது! ஆனால் பேராசிரியர் குறிப்பிட்டதைப் போல்—டெல்லியிலிருந்து இங்கு வருகின்ற அமைச்சர்கள் எல்லாம், 'தமிழ் நாட்டில் அவசர நிலை இல்லை' என்கின்ற ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார்கள்!

இதோ—புள்ளி விவரங்கள்

மத்தியிலே உள்ளவர்களுக்கு ஒரு புள்ளி விவரம் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்; அவசரச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்ட நாள் 25—6—75; அது முதல், 4—8—75 வரையில் உள்ள புள்ளி விவரங்களைத் தர விரும்புகிறேன்; அதாவது, ஏறத்தாழ நாற்பது நாட்களில் நெருக்கடி நிலைமைக்குப் பிறகு-விலைவாசிகளைக் குறைக்க - கள்ளக் கடத்தல்களைத் தடுக்க—பதுக்கலைத் தடுத்து நிறுத்த—இந்த அரசின் உணவுத் துறையும் போலீசுத் துறையும் எடுத்துள்ள நடவடிக்கைகளை மட்டும் தெரிவிக்க விரும்புகிறேன்.

> பதுக்கலைத் தடுக்கும் பொருட்டும், கடத்தலை நிறுத்தும் பொருட்டும் உணவுத் துறையும்—போலீசுத் துறையும் எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக ஏற்பட்டிருக்கின்ற மொத்த வழக்குகள் 565;

அதில், இன்றியமையாப் பொருள்கள் சட்டத்தின் கீழ் பதுக்கலுக்காக 116 வழக்குகளாகும்; இதன் தொடர்பாகக் கைது செய்யப்பட்டவர்கள் 99 பேர்களாகும்.

கடத்தல் சம்பந்தமாக 176 வழக்குகள்—இதில் கைது செய்யப்பட்ட கடத்தல்காரர்கள் 145 பேர்களாகும்.

பாதுகாப்புச் சட்ட விதியின் கீழ் (டி. ஐ. ஆர்.) விலைப் பட்டியல் போடாத காரணத்தால் தொடரப்பட்ட வழக்குகள் 273; அதிலே கைது செய்யப்பட்டவர்களின் தொகை 15.

கலப்படம் செய்த குற்றங்களுக்காக 'மிசா'வில் கைதானவர்கள் ஆறு பேர்!

ஆக மொத்த வழக்குகள் 565—கைதானவர்களின் தொகை 265.

நண்பர்களே—தாய்மார்களே! இந்த நாற்பது நாட்களில் மட்டும்—தலைமையமைச்சர் இந்திரா காந்தி நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்திய பிறகு—பறிமுதல் செய்யப்பட்ட உணவுப் பொருள்களின் மதிப்பு ரூ. 11 60,992 இந்த வழக்குகளில் பறிமுதலான வாகனங்கள், லாரிகள் 24; வேன் 1; கார் 1; வண்டிகள் 49; சைக்கிள் 10!

நெருக்கடி நிலைக்கு முன்பு—இதைத் தவிர ஏராளமான வழக்குகளில் இப்படிப்பட்ட காரியங்களுக்காக மேலும் பலர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்!

இவைகள் மட்டுமன்றிக் கள்ளச் சாராய வியாபாரம் செய்வதைத் தடுக்க—மதுவிலக்கு வெற்றி பெற—கள்ளச் சாராய வியாபாரிகள்—எங்கள் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் தயவு தாட்சண்யம் பார்க்காமல்—இதுவரையில் 160 பேர்களுக்கு மேல் 'மிசா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்!

'போசா' என்கின்ற சட்டத்தின்கீழ்—அ ந் நி ய ச் செலாவணி மோசடியில் ஈடுபட்டவர்கள் 125 பேருக்கு மேல் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்!

திருட்டுப் பொருள்களை விலைக்கு வாங்கி அதை வியாபாரம் செய்யும் பெரிய சமூக விரோதிகள் 16 பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்!

இதைவிட வேறு சான்று வேண்டுமா?

இந்த நடவடிக்கைகளால், தமிழ் நாட்டில் விலைவாசி குறைந்திருக்கிறதா இல்லையா என்பதை, நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அண்மையில் தமிழகத்திற்கு வந்த மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியம் அவர்களும்—சுக்லா அவர்களும், 'இந்தியா விலே எல்லா இடங்களிலும் விலைவாசி குறைந்திருக்கிறது; ஆனால் தமிழ் நாட்டிலேதான் விலைவாசி குறையவில்லை' என்று சொல்லியிருக்கிறார்கள்!

இன்றைக்கு மொத்த விலைக் குறியீட்டு எண் (காம்போசிட் இண்டக்ஸ்)—அதாவது, மொத்த விலைவாசிக்கான குறியீட்டு எண்—அடிப்படையில்தான் அரசாங்க ஊழியர்களுக்கு அகவிலைப் படி தருவது வழக்கமாகும்.

அப்படிப்பட்ட மொத்த விலைக் குறியீட்டு எண், இன்றைக்கு எந்த அளவிற்கு மாறியிருக்கிறது என்பதை நான் சொல்வதானால், மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியம் அல்லது சுக்லா அல்லது மத்தியிலே உள்ளவர்கள் அதனைப் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

1973-சூன் மாதத்திலும், சூலை மாதத்திலும் தமிழ் நாட்டில் இந்தக் குறியீட்டு எண் 7·9 சதவிகிதமாக உயர்ந்திருந்தது; 1974-இல் சூன், சூலை மாதங்களில் நான்கு சதவிகிதம் இந்தக் குறியீட்டு எண் உயர்ந்திருந்தது! ஆனால் இப்போது—1975-இல், 1973, 1974 ஆகிய ஆண்டுகளில் முறையே 7·9 சத

விகிதமாகவும், 4 சதவிகிதமாகவும் உயர்ந்ததற்கு மாறாக—2·4 சதவிகிதமாக இந்தக் குறியீட்டு எண் குறைந்திருக்கிறது!

இந்த மொத்தக் குறியீட்டு எண் விவரத்தை விட—இதிலே ஏற்பட்டிருக்கின்ற மாறுதலைவிட—விலைவாசி குறைந்திருக்கிறது என்பதற்கு நான் வேறு எந்த அத்தாட்சியைக் காட்ட வேண்டுமென்று அமைச்சர்கள் சுப்பிரமணியமோ, சுக்லாவோ விரும்புகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை!

சுப்பிரமணியம் அவர்கள் சொன்னதாக ஒரு செய்தி பத்திரிகையில் வந்தது:—

"Appearing in a Delhi Television Interview, the Union Finance Minister C. Subramaniam said, that in Tamil Nadu, 'The prices were going up, perhaps, because the emergency does note exist there."

"தமிழ்நாட்டில்தான் விலைவாசி குறையவில்லை; ஒரு வேளை அதற்குக் காரணம், அங்கே அவசரநிலை இல்லை போலும்" என்று சொன்னார்!

அவரே அடுத்த வாக்கியத்தில்,

"But it would take about six weeks for the downward trend to be reflected at the retail level."

என்று சொல்லியிருக்கிறார்!

அவர் இதைச் சொன்னது எப்போது தெரியுமா? ஆகஸ்டு 7-ம் நாளான்று டெல்லி டெலிவிஷன் பேட்டியில்!

"தமிழ்நாட்டில் விலை குறையவில்லை; ஒருவேளை அங்கே அவசர நிலை இல்லை போலும்" என்று சொல்லிவிட்டு, 'மொத்த விலை குறைந்திருந்தாலும், அது சில்லறை விலைக்கு வந்து சேர ஆறு வாரங்கள் ஆகும்' என்று அடுத்த வாக்கியத்தைக் கூறுகிறார்!

அவர் சொன்னது, ஆகஸ்டு 6-ஆம் தேதி; ஆக, அவர் குறித்திருக்கின்ற நாள் கணக்கின்படி, செப்டம்பர் மாதம்

21-ஆம் தேதி வரை நாம் காத்திருக்க வேண்டும்; அதற்குப் பிறகுதான், அவருடைய கணக்குப்படி விலைவாசிகள் குறையும்!

ஆனால் நண்பர்களே! நம்முடைய உணவு இலாகாவின் மூலமும்—புள்ளி விவரத்துறை அதிகாரிகள் மூலமும், மத்திய அரசு இன்று சொல்லி வருகிறதே—'விலைவாசி குறைந்து விட்டது' என்று—அந்த விலைவாசியின் ஏற்றத்தாழ்வு மாநிலத்திற்கு மாநிலம் எப்படி இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள சில விவரங்களைத் தயாரிக்கச் சொன்னேன்; கிடைத்த விவரங்களை மட்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்; தவறு இருந்தால் திருத்திக்கொள்கிறேன்:—

		குவிண்டால் ஒன்றுக்கு விலை	
அரிசி:—		ஜூலை	ஆகஸ்டு
சென்னை	...	346·67	346·67
கல்கத்தா	...	350·00	360·00
சோளம்:—			
சென்னை	...	180·00	160·00
விஜயவாடா	...	120·00	135·00
டெல்லி	...	155·00	160·00
பம்பாய்	...	175·00	180·00
கருநாடகம்	...	150·00	150·00
குஜராத்	...	135·00	155·00
கல்லெண்ணெய்:—		ஜூன்	ஆகஸ்டு
சென்னை	...	865·31	831·25
டெல்லி	...	900·00	875·00
பம்பாய்	...	810·00	820·00
கடலை எண்ணெய்:—		ஜூலை	ஆகஸ்டு
பம்பாய்	...	720·00	790·00
கல்கத்தா	...	760·00	770·00
சென்னை	...	750·00	745·00

குவிண்டால் ஒன்றுக்கு விலை

		ஜூன்	ஜூலை	ஆகஸ்டு
கடலைப் பருப்பு:—	...			
சென்னை	...	240·00	235·00	235 00
பம்பாய்	...	235·00	225·00	240·00
துவரம் பருப்பு:—				
சென்னை	...	266·67	261·11	261·11
பாசிப் பயறு:—				
சென்னை	...	240·00	230·00	230·00
டெல்லி	...	263·00	230·00	255·00
பம்பாய்	...	260 00	225·00	240·00
கடுகு:—				
சென்னை	...	250·00	210·00	210·00
		(நாற்பது ரூபாய் குறைவு)		
டெல்லி	...	240·00	250·00	235·00
		(15 ரூபாய்தான் குறைவு)		
மிளகாய்:—				
சென்னை	...		1250 00	1250·00
டெல்லி	...		1400 00	1250 00
மஞ்சள்:—				
சென்னை	...	350·00	340·00	335·00
டெல்லி	...	425·00	460·00	450·00
பம்பாய்	...	505·00	375·00	375·00
தனியா (கொத்தமல்லி):—				
சென்னை	...		390 00	390·00
டெல்லி	...		600 00	550·00
பம்பாய்	...		450 00	450·00
சர்க்கரை:—				
சென்னை	...			448·00
டெல்லி	...			500·00
பம்பாய்	...			476·00

ஒரு வேளை, அதிகாரிகள் எனக்குக் கொடுத்த கணக்கு தவறாக இருக்குமேயானால், அமைச்சர்கள் சுப்பிரமணியமோ

அல்லது சுக்லாவோ தமிழ் நாட்டில் வந்து—'தமிழ் நாட்டில் அவசர நிலையே இல்லையே; இங்கே விலைவாசி குறையவே இல்லையே' என்று கூறுகிறார்களே—அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்—'தயவு செய்து, இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களின் விலைப் பட்டியலையும் போட்டுக் காட்டுங்கள்; தமிழ் நாட்டில் இன்னின்ன பொருள்களுக்கு விலைவாசி குறையவில்லை என்கின்ற விவரங்களைக் கொடுங்கள்' என்று!

இதுதானே அவர்கள் 'அணுகுமுறை?'

ஒரு நாட்டில் அல்லது இந்தியாவைப் போன்ற ஒரு பெரிய உபகண்டத்தில்—நெருக்கடி நிலை உருவாகியிருக்கும் நேரத்தில் இங்கு என்ன செய்ய வேண்டும்—எப்படி அதை அணுக வேண்டும்?

அந்நியன் படையெடுத்தால் உடனே நெருக்கடி நிலையைப் பிரகடனம் செய்கிறோம்; அந்த நேரத்தில் என்ன செய்கிறார்கள்? எல்லாக் கட்சிகளையும் அழைத்து—எல்லாக் கட்சிகளையும் அரவணைத்துக் கொண்டு—எல்லாக் கட்சிகளுக்கும் விவரங்களைச் சொல்லி, 'எல்லோரும் ஒன்றாக இருந்து அந்நியனை எதிர்ப்போம்—இந்தியாவைக் காப்போம்—இந்தியா முழுமையும் ஒன்று சேரவேண்டும்' என்று சொல்கிறார்கள்.

ஆனால் இன்றைக்குக் கொள்கையிலே வேறுபட்டாலும்—'அவசர' நிலை இல்லாமல் இந்தக் காரியங்களைச் செய்யக் கூடாதா' என்று கேட்பவர்களாக நாங்கள் இருந்தாலும்—தமிழக அரசைப் பொறுத்த வரையில்—மத்திய அரசோடு நிர்வாகத் துறையில் மோதிக்கொள்ள விரும்பாத ஒரு கட்சியின் ஆட்சிதான் நடைபெறுகிறது!

இந்த நேரத்தில், அமைச்சர்கள் சுப்பிரமணியமும்—சுக்லாவும், மத்தியிலே இருக்கின்ற அமைச்சர்களும் என்ன செய்ய வேண்டும்? 'இன்னின்ன காரியங்களை நீங்கள் இப்படி இப்படிச் செய்ய வேண்டும்' என்று அறிவுரை கூறுகின்ற

அந்த இடத்தில் இருக்க வேண்டுமேயல்லாமல், அறிவுரையா கூறுவது?

'ஐயோ—இன்னும் இருக்கிறார்களே—இன்னும் கருணாநிதி முதலமைச்சராக இருக்கிறாரே—இவர்கள் என் றைக்குக் கீழே இறங்குவது' என்கின்ற ஆத்திரத்தில்தான் இப்படியெல்லாம் பேசுகிறார்கள்!

நடவடிக்கை எடுக்கத் தயங்கியதா கழக அரசு?

உணவுத் துறையில் மாத்திரமல்ல—விலைவாசியைக் கட்டுப்படுத்துவதில் மாத்திரமல்ல—வேறு எந்த நடவடிக்கை எடுக்க இந்த அரசு தவறியது?

நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி பேசுகின்ற நேரத்தில், 'ஆணையிடுங்கள்; உங்கள் கட்டளைக்காகக் காத்திருக்கிறோம்; நீங்கள் சொல்கின்ற வார்த்தைதான் கடைசி வார்த்தை' என்றெல்லாம் சொல்லிவிட்டு, 'இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசுடன் விவாதித்து, இந்தியாவில் ஒரு நல்ல—சுமுகமான சூழ்நிலையை உருவாக்க வேண்டும்' என்று கூறினார்கள்.

அந்த நம்பிக்கை ஏற்பட வேண்டும் என்பதற் காகத்தான்—அந்த நம்பிக்கை நாசப்படக் கூடாது என்பதற்காகத்தான—இந்த அரசைப் பொறுத்த வரையில் மோதுதல்களுக்குக் கிஞ்சித்தும் இட மில்லாமல் நடவடிக்கை எடுக்கிறோம்!

எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள்கூடச் சிலர், பிரிவினை பற்றி எழுதினார்கள்—அவர்கள் கைது செய்யப்படவில்லையா?

'பிரிவினை பற்றி எழுதிய கழக ஏடுகளில் ஒன்று எனக் கருதப்பட்ட 'நீட்டோலை' தடுக்கப் படவில்லையா?

'சபதம்' என்கின்ற நம்முடைய கழக ஏடு பறிமுதல் செய்யப்பட்டிருக்கிறதா, இல்லையா?

நம்முடைய மாநில அரசால்—நம்முடைய கழகத் தினசரியான 'முரசொலி' பத்திரிகைகூட, ஒரு நாள்

பறிமுதல் செய்யச் சொல்லப்பட்டது என்ரூல், தயவு தாட்சண்யம் இல்லாமல்—பாரபட்சமில்லாமல் நடவடிக்கை எடுக்கின்ற அரசாகத் தமிழ்நாடு அரசு இருந்து கொண்டிருக்கிறது என்று தானே பொருள்?

நலம் காக்கும் மருந்து நாம் தர முயல்கிறோம்

இன்றைக்கு நிலைமை என்ன? 'சனநாயகத்தைக் காப்பாற்ற—கொடுமைகளை வீழ்த்த—பொருளாதாரக் குற்றவாளிகளையும், சமூக விரோதிகளையும் வீழ்த்தத்தான், இந்த நெருக்கடிநிலை பிரகடனம்' என்று சொல்கிறார்கள்!

சேலம் மாவட்டத்தில் இருக்கின்ற உங்களுக்குக் கொல்லி மலையைத் தெரியும்; நாமக்கல்லுக்கு அருகே இருக்கிறது; அந்தக் கொல்லி மலையை ஒரு காலத்தில் பரிபாலித்தவன் வல்வில்ஓரி என்பவன் ஆகும்; கடையெழு வள்ளல்களில் அவனும் ஒருவன்; அந்த ஓரியினுடைய பரிசை வேண்டி, வன்பரணர் என்ற புலவர் வருகிறார்! வருகின்ற நேரத்தில், அந்த ஓரியைப் பற்றி ஒரு பாடல் இயற்றிக் கொண்டு வருகிறார்; அந்தப் பாடலின் பொருள் என்ன தெரியுமா?—

> ''வல்வில்ஓரி மன்னு--உன்னுடைய கையிலே இருக்கின்ற அம்பு, யானையை வீழ்த்தத்தக்க அம்பு, அத்தகைய அம்பால் நீ ஒரு புலியை எய்தாய்; அந்த அம்பு புலியின்மீது பட்டு அதனுடைய உயிரைக் குடித்து—பிறகு புலியை விட்டுக் கிளம்பி அங்கே ஓடிக் கொண்டிருந்த மான் மீது பட்டு—அதன் உடலை ஊடுருவி—அங்கே திரிந்து கொண்டிருந்த பன்றியின் உடலிலே பட்டு அந்தப் பன்றியையும் கொன்றுவிட்டு—கடைசியாக அந்த அம்பு ஒரு புற்றிலே படுத்திருந்த உடும்பின் உடலிலே தைத்தது'' என்று அந்த அம்பின் பெருமையைச் சொல்கிறார்.

அதற்கு ஒரு கவிதையைப் பாடுகிறார்; அதாவது,

"வேழம் வீழ்த்த
விழுததொடைப் பகழி
பேழ் வாயுழுவையைப்
பெருமபிறி துறீஇப்
புழற்றலைப் புகர்க்கலையுருட்டி
யுரற்றலைக்
கேழற் பன்றி வீழ வயல
தாழற் புற்றத்
துடும்பிற் செற்றும்"

என்று குறிப்பிடுகிறார்.

அதாவது, யானையை வீழ்த்தத் தக்க அம்பு, 'புலியைக் கொன்று—மானைக் கொன்று—பிறகு பன்றியைக் கொன்று—உடும்பின் உடலிலே தைத்தது' என்றால், 'அந்த வல்வில் ஓரியின் அம்பு எப்படிப் பட்டது' என்று அவர் அந்தப் பாடலில் குறிப்பிடுகிறார்.

கொல்லப்பட வேண்டியது புலி; ஆனால் அத்துடன் மானும் கொல்லப்பட்டது என்கின்ற போதுதான் நமக்கு வருத்தம் ஏற்படுகிறது.

அதே வல்வில்ஓரியின் கதையைக் கொஞ்சம் திருத்தி—இந்தியத் துணைக் கண்டத்தின் அரசியலுக்கு இழுத்து வருவீர்களானால் யானையை வீழ்த்தக் கூடிய 'நெருக்கடி நிலை' என்கின்ற அந்தப் பலமான அம்பு. வன்முறையாளர்கள்—கடத்தல்காரர்கள் — கறுப்புப் பணக்காரர்கள் — அந்நியச் செலாவணிப் பேர்வழிகள்—வரி ஏய்ப்போர்—சமூக விரோதிகள்—இவர்கள் எல்லாம் புலிகள் (கைதட்டல்) — அந்தப் புலிகளின் மீது பாய வேண்டிய அம்பு பாய்ந்தது—நாங்கள் மகிழ்கிறோம்!

ஆனால் எங்களுக்கு இருக்கின்ற வருத்தமெல்லாம், புலியைக் கொன்றதோடு நிற்காமல், 'மக்களின் நியாயமான

உரிமை' என்கின்ற மான் மீதும் அந்த அம்பு தைத்து விடுமோ' என்பதுதான்! (பலத்த கைதட்டல்).

ஆகவேதான், அந்த மானைக் காப்பாற்றத் துடியாய்த் துடிக்கிறோம்; அந்த மான்மீது பட்ட அம்பைப் பிடுங்கி யெடுத்து—'மானை எப்படியும் காப்பாற்ற வேண்டும்' என்று மருந்து தடவுகிறோம்!

தமிழ்நாடு, சித்த வைத்தியத்திற்குப் பெயர் போன நாடு; கொல்லிமலையிலிருந்தும்—ஏற்காடு மலையிலிருந்தும்—உதகை மலையிலிருந்தும்—கொடைக்கானல் மலையிலிருந்தும்—குற்றால மலையிலிருந்தும் தயாரிக்கப்பட்ட மூலிகைகளால் செய்யப்பட்ட மருந்து அது; அந்த மருந்தை உருட்டித் திரட்டி—மாத்திரையாக ஆக்கி எங்களிடம் கொடுத் திருப்பவர், எங்களை எல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா அவர்களாவார்!

அந்த மருந்தைக் கொண்டு வருகிறோம்; யானையை வீழ்த்தத்தக்க பலம் வாய்ந்த 'நெருக்கடி' என்ற அம்பை நீங்கள் புலிமீது செலுத்தினீர்கள்—நாங்கள் மகிழ்ந்தோம்; 'மான் மீது பட்டுவிட்டது—அந்த மானைக் காப்பாற்று வோம்'' என்று சொல்கிறோம்; மானைக் காப்பாற்ற—மானிலும் மென்மையான குணம் படைத்த மாதரசாக இருக்கின்ற இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், 'மாட்டேன் எனச சொல்லமாட்டார்கள் என்ற நம்பிக்கை யோடுதான், சொல்கிறோம்.

இயல்பான சூழ்நிலை - இதுவே நம் இலட்சியம்

நெல்லை மாநாட்டில் பேராசிரியர் முன்மொழிந்து—தாவலர் வழிமொழிந்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியது குறித்து அனைவரும் குறிப்பிட்டார்கள்; அந்தத் தீர்மானத் தைப் பற்றி இந்திய அரங்கில் இரண்டு கருத்துக்கள் கூறப் படுகின்றன.

''செயற்குழு நிறைவேற்றிய தீர்மானத்திலிருந்து பின் வாங்கிவிட்டார்கள்'' என்பது ஒரு கருத்து!

''அருமையான தீர்மானம்; நல்லெண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகுகிறோம்'' என்பது இன்னொரு கருத்து!

இந்த விமர்சனங்களைப் பற்றி ஆராய்ச்சி செய்ய நான் விரும்பவில்லை; அதற்காக, 'மக்களின் குரலை மதிக்கவில்லை' என்று பொருள் அல்ல!

நமக்குள்ள இலட்சியம், 'எப்படியாவது இயல்பான சூழ்நிலை இந்தியாவில் ஏற்பட வேண்டும்' என்பதுதான்!

விசித்திர மனிதரின் விந்தையான வாதம்

கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கல்யாணசுந்தரம்—(போனால் போகிறது; அவருடைய பெயரையே சொல்கிறேன்)—நெல்லை மாநாட்டில் பெயரைக் குறிப்பிடாமல், 'கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்' என்றுதான் சொன்னேன்; ஆனால் பத்திரிகைக்காரர்கள் எல்லாம் மிகுந்த ஆர்வத்தோடு, அவருடைய பெயரையே போட்டுவிட்டார்கள்; அவர் என்ன சொல்கிறார் என்றால், 'நெல்லை மாநாட்டில் தீர்மானத்தைப் போட்ட பிறகு, நீங்கள் உங்கள் செயற்குழுத் தீர்மானத்தை வாபஸ் வாங்குகள்' என்று!

> சொல்வது—கல்யாணசுந்தரம்! மகாபாரதத்துச் சகுனியைப் போல, இன்றைக்கு அரசியல் வட்டாரத்தில் சேர்ந்திருக்கின்ற வலது கம்யூனிஸ்டுக் கட்சித் தமிழ் நாட்டுத் தலைவர், 'அந்தத் தீர்மானம் வேறு—இந்தத் தீர்மானம் வேறு' என்கிறார்!
>
> சென்னையில் கொண்டை முடித்தால், நெல்லையில் பூ வைக்கக் கூடாதா? சென்னையில் போடப்பட்ட செயற்குழுத் தீர்மானம், ஒரு மங்கை முடித்த அழகான கொண்டைக்கு சமானம் (கைதட்டல்); நெல்லையில் போடப்பட்ட தீர்மானம்தான் பூவிற்குச் சமானம் (பலத்த கைதட்டல்).

ஆனல் கல்யாணசுந்தரம், 'பூ எப்போது வைத் தாயோ, கொண்டையை அவிழ்த்துவிடு' என்கிறார்.

வேட்டி கட்டி—அதற்குப் பிறகு சட்டை போடு கிறோம்; வேட்டி கட்டியதுதான் சென்னைத் தீர் மானம்; அதற்குத் தொடர்ச்சியாக சட்டை போடு வதுதான் நெல்லை மாநாட்டுத் தீர்மானம் (கைதட்டல்).

ஆனல், கல்யாணசுந்தரம், 'சட்டை போட்ட பிறகு வேட்டி எதற்காக—அவிழ்த்துவிடு' என் கிறார் (பலத்த கைதட்டல்).

இந்த விசித்திரமான மனிதர்களுக்கு உள்ள கவலை எல்லாம், 'எப்படியாவது கழகத்தை, மத்திய அரசின் பார்வையில் ஒரு மூலையில் தள்ளி இந்த அரசைக் கவிழ்க்க வேண்டும்' என்பதுதான்!

ஆனல், நம்முடைய தீர்மானங்களுக்குப் பிறகு—அதிலும் குறிப்பாக நெல்லை மாவட்ட மாநாட்டுத் தீர்மானத் திற்குப் பிறகு—இந்திரா காந்தி அம்மையார் அவர்களுடைய அறிக்கைகள் நமக்கு நம்பிக்கையூட்டுவதாக இருக்கின்றன!

நானே—நாவலரோ—பேராசிரியரோ—மற்ற தலைவர் களோ, 'பார் பார்; நெல்லையில் நாங்கள் போட்ட தீர்மா னத்திற்கு உடனே இந்திரா காந்தி அம்மையார் பதில் அளித் திருக்கிறார்—எங்கள் தீர்மானத்தை மதித்திருக்கிறார்' என்று ஆணவத்தோடு மார் தட்டிக்கொள்ள விரும்பவில்லை!

ஆனல், 'இந்தத் தீர்மானத்திற்குத்தான் இந்தப் பதில்' என்று சொல்லாவிட்டாலும், எங்களுடைய எண்ணத்திற் கேற்ப—வேண்டுகோளுக்கேற்ப, இந்திரா காந்தி அம்மை யார் அவர்களுடைய சமீபகால அறிக்கைகளானலும்—ஆகஸ்டு 15-ஆம் நாள் விடுதலை நாள் விழா உரையானலும்-அமைந்திருக்கின்றன!

ஆகஸ்டு 13-ஆம் தேதி, 'சோஷலிச இந்தியா' என்கின்ற பத்திரிகைக்கு இந்திரா காந்தி அம்மையார் ஒரு பேட்டி

யளித்திருக்கிறார்; அந்தப் பேட்டியில், கிட்டதட்ட ஆறு அம்சங்கள் நம்மைக் கவரக்கூடிய அம்சங்களாகும்.

முதல் அம்சம்—'இந்தியாவில் ஒரே கட்சி ஆட்சி ஏற்படுத்தும் உத்தேசமில்லை' என்று சொல்லியிருக்கிறார்; இது, வரவேற்கத்தக்க ஒன்றாகும்!

இரண்டாவதாகப் பிரதமர்—'பலவிதமான பழக்கவழக்கமுள்ள மக்கள் வாழ்கின்ற நாட்டில், தங்களுக்கு இஷ்டமான கட்சியைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மக்களுக்கு வேண்டும்' என்கிறார்; இதைத்தான் தி. மு. கழகம் சொல்கிறது!

மூன்றாவதாகப் பிரதமர்—'நாட்டைக் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்ளவும், நாட்டிற்கு ஏற்படும் சவால்களைச் சமாளிக்கவும், தேவையான அதிகாரம் மத்திய அரசுக்கு வேண்டும்' என்கிறார்; இதுதான் தி. மு. க.-வின் மாநில சுயாட்சித் தத்துவம்!

நாட்டைக் கட்டுக் கோப்பாக வைத்துக் கொள்ளவும்—நாட்டிற்கு ஏற்படும் சவால்களைச் சமாளிக்கவும் தேவையான அதிகாரம் மத்திய அரசுக்கு வேண்டும்: அம்மையார், 'எல்லா அதிகாரமும் மத்திய அரசுக்கு வேண்டும்' என்று சொல்லவில்லை; 'நாட்டிற்கு ஏற்படும் சவாலைச் சமாளிக்க—நாட்டைக் கட்டுப்படுத்தத் தேவையான அதிகாரம்தான் மத்திய அரசுக்கு வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்!

நான்காவதாக—'ராஜ்யங்கள், தத்தம் பிராந்தியத்தின் மீதுள்ள அபிமானத்தை வெளிப்படுத்தப் போதுமான வாய்ப்புக்களை அளித்தாலே, இந்தியா போன்ற ஒரு பெரிய நாடு, வலிமையாகவும்—ஐக்கியமாகவும் இருக்க முடியும்' என்று பிரதமர் சொல்லியிருக்கிறார்; இதுவும் தி. மு. க. எடுத்துச் சொல்லி வருகின்ற கருத்துத்தான்!

இந்தியாவிலே பல தேசிய இனங்கள்—பல மொழி பேசுகிற மக்கள்; அந்தத் தேசிய இனங்களுக்கு—பல மொழி பேசும் மக்களுக்குப் பல்வேறு கலை—கலாச்சாரம்—பண்பாடுகள் இருக்கின்றன!

இவைகளை எல்லாம் மனதில் வைத்து இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் சொல்லியிருக்கிறார்.

ஐந்தாவதாகப் பிரதமர்—'இது போன்ற பல்வேறு கருத்துக்களை, சம்பிரதாயங்கள் மூலம் சாத்தியமாக்குவதா அல்லது சட்ட மாறுதல்கள் மூலமா என்பதை விரிவாகப் பரிசீலிக்கலாம்' என்று கூறியிருக்கிறார்.

பிரதமரின் இந்தக் கருத்தின் அடிப்படையில்தான் மத்திய சட்ட அமைச்சர் திரு. கோகலே அவர்கள், 'அரசியல் சட்டத்தையே அடியோடு மாற்ற வேண்டும்' என்று கூறியிருக்கிறார்; 'அதற்குப் புதிய அரசியல் நிர்ணய சபையைக் கூட்டுவதா அல்லது இருக்கிற பாராளுமன்றத்தையே அரசியல் நிர்ணய சபையாக ஆக்கிக் கொள்வதா' என்று யோசித்துக் கொண்டிருப்பதாக கோகலே கூறியிருக்கிறார்; அதைத்தான் அம்மையார் எதிரொலித்திருக்கிறார்!

கடைசியாக இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், 'இப்போதுகூட, நாட்டில் உள்ள எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் வாய்ப்பூட்டு போடவில்லை' என்று சொல்லியிருக்கிறார்.

பாதிக்கப்பட்ட உணர்ச்சிகளுக்குப் பரிகாரம் தேவை!

அடுத்து, மேற்கு ஜெர்மன் நாட்டுப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியில், 'அரசியல் நிலையும்—எதிர்க் கட்சிகளின் உணர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தல் நடத்துவது சாத்தியமல்ல' என்றும் சொல்லியிருக்கிறார்.

நான், 'தேர்தலை நடத்த வேண்டுமா—வேண்டாமா' என்ற விவாதத்தில் இறங்கத் தயாராக இல்லை!

நான் சுட்டிக்காட்ட விரும்புவது, 'அரசியல் நிலையும்—எதிர்க் கட்சிகளின் உணர்ச்சியும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில்' என்ற இந்த வாசகத்தை—இந்தச் சொற்றொடரை இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் பயன்படுத்துவதைக் காண்

பதின் மூலம், நெல்லை மாநாட்டுத் தீர்மானத்தில் நாம் சுட்டிக்காட்டிய வார்த்தைகள் பொருத்தமுடையவை என்றே கருதுகிறோம்.

> நெல்லை மாவட்ட மாநாட்டுத் தீர்மானத்தின் வாசகம் என்ன?—'இந்தியாவிலே இன்றைக்கு ஓர் இயல்பற்ற சூழ்நிலை இருக்கிறது. எனவே, இயல்பான சூழ்நிலை ஏற்பட வேண்டும்; சில உணர்ச்சிகள் பாதிக்கப் பட்டிருக்கின்றன—அந்த உணர்ச்சிகள் பாதுகாக்கப் பட்டாக வேண்டும்' என்ற விளக்கத்தைத்தான் நெல்லை மாநாட்டில் நாம் வைத்தோம்; இது பிரதமர் கூறியுள்ள கருத்துக்கு முரண்பாடல்ல!

நினைப்பும் நிலையும்

'ஒரே கட்சி ஆட்சி இல்லை' என்று இந்திரா காந்தி சொல்கின்ற நேரத்தில் நான் எண்ணிக் கொண்டேன்.

பரிதாபகரமாகத் திடீரென்று முஜ்புர் ரகுமானும்—அவருடைய குடும்பத்தில் சிலரும் படுகொலைக்கு ஆளாகி, முஜ்புர் ரகுமானுடைய உடல் அவருடைய சொந்தக் கிராமத்தில் மரியாதையோடு புதைக்கப்பட்டது என்ற செய்தியைப் பத்திரிக்கையில் பார்த்தோம்.

அவருடைய மனைவி கொல்லப்பட்டார்களா இல்லையா என்று தெரியவில்லை; அவருடைய மைத்துனர்கள் இரண்டு பேர் கொல்லப்பட்டிருக்கிறார்கள்; அதுபற்றி இந்திய அரசு அதிகாரி ஒருவர், 'அதிர்ச்சியடைந்தோம்—ஒரு பெரிய மகாவீரரை இழந்ததற்காக வருந்துகிறோம்' என்று ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்திருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் வந்திருக்கின்றன!

அங்கே என்ன நடந்தது என்பதை, 'முரசொலி'யில் அல்ல—சமுக ஆதரவுப் பத்திரிகையில் அல்ல—தொடர்ந்து தி. மு. கழகத்தை எதிர்த்துக் கொண்டிருக்கின்ற ஆனந்த

காங்கிரசு ஆதரவு பத்திரிகை ஒன்றில் இன்றைக்கு விளக்க மாக வெளியிட்டிருக்கிறார்கள்; அதாவது,

''வங்க தேசப் புது அரசியல் சட்டத்திலும் பார்லி மெண்டு இருந்தது; ஆனால், அந்தப் பார்லிமெண்டு, சன நாயக முறை பார்லிமெண்டைக் காட்டிலும் பல வழிகளி லும் மாறுபட்டது. மந்திரிகளை ஜனாதிபதி ரகுமானே நியமித் தார். குடிமக்களின் அடிப்படை உரிமைகளைக் காக்கும் பொறுப்பு சுப்ரீம் கோர்ட்டிலிருந்து எடுக்கப்பட்டு—பார்லி மெண்ட் நியமித்திருந்த டிரிப்யூனலிடம் மாற்றப்பட்டது; நாட்டிலிருந்த இதர அரசியல் கட்சிகள் யாவும் தடை செய்யப்பட்டன; வங்க தேச 'குருஷிக் சிரமிக்' அவாமி லீக், நாட்டின் அரசியல் கட்சியாக அங்கீகரிக்கப்பட்டது; எல்லாத் தினசரிப் பத்திரிகைகளும் தடை செய்யப்பட்டன; ஆங்கிலத் தில் வெளிவந்து கொண்டிருந்த 'வங்க தேச அப்சர்வ'ரும், வங்க மொழியில் வெளி வந்து கொண்டிருந்த 'தைனிக் பங்களா' என்று இரு பத்திரிகைகள் மட்டுமே வெளியிட அனுமதிக்கப்பட்டன; அவ்விரு பத்திரிகைகளுமே அரசின் கருவியாக மாற்றப்பட்டன.''

''ஒரே கட்சி ஆட்சி' பங்களா தேஷில் ஏற்பட்டது; ஆனால் இங்கே ஏற்பட்டிருக்கின்ற நெருக்கடி நிலை, அதற்கு மூற்றிலும் மாறுபாடானது.

அங்கே—'ஒரே கட்சி ஆட்சி' என்று முஜ்புர் ரகுமான் சொன்னார்; இங்கே—இந்திரா காந்தி அம்மையார் அவர்கள், 'நான் ஒரு கட்சி ஆட்சியை விரும்பவில்லை; இங்கே எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப்பு உண்டு; எதிர்க் கட்சிகளும் இயங்க லாம்' என்று சொல்கிறார்.

கொள்கையில் தெளிவு

நண்பர்களே! நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி பேசும் போது, 'நீங்கள் அறிவுரை கூறுங்கள்; நாங்கள் ஏற்று நடக் கிறோம்' என்று சொன்னார்; ஆனால் நண்பர்களே—நான்

கூறுமலேயே கழகத்தின் கருத்தைத் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடிய சக்தி கழகத் தோழர்களுக்கெல்லாம் உண்டு.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு வரை கழகத் தோழர்கள் எல்லாம், நான் தகுதியுள்ளவனே இல்லையோ—என்னை அழைக்கும் நேரத்தில், 'தமிழ் நாட்டு முஜ்புர் ரகுமான்' என்று அழைத்தார்கள்; ஏன் தெரியுமா? 1968-ஆம் ஆண்டில் முஜ்புர் ரகுமான் பாகிஸ்தானைப் பார்த்து-ஆறு அம்சத் திட்டம் தயாரித்து—அதிலே ஒன்றாக, 'எனக்கு மாநில சுயாட்சி கொடு' என்று கேட்டார்; அதைப்போல இங்கே தி.மு. கழகம் மாநில சுயாட்சி கேட்கிறது; அதனுடைய தலைவர் கருணாநிதி; ஆகவே, இவரைத் தமிழ் நாட்டு முஜ்புர் ரகுமான் என்று அழைப்போம் என்று அழைத்தார்கள்!

ஆனால், கடந்த ஆறேழு மாதங்களுக்கு முன்பு முஜ்புர் ரகுமான், 'பங்களா தேஷில் ஒரே கட்சி ஆட்சிதான்; ஜன நாயகம் கிடையாது' என்று பத்திரிகைகளில் அறிவித்த பிறகு, இயல்பாகவே நம்முடைய தோழர்கள், என்னை, 'தமிழ்நாட்டு முஜ்புர் ரகுமான்' என்று அழைப்பதை விட்டு விட்டார்கள்!

இதிலிருந்து, 'கழகத்தின் சாதாரணத் தொண்டரும், கொள்கையில் தெளிவுள்ளவராக இருக்கிறார்' என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

பங்களா தேஷில் எல்லாப் பத்திரிகைகளுக்கும் தடை; இந்தியாவில் அப்படி அல்ல—தணிக்கை முறைதான் இங்கே இருக்கிறது!

பத்திரிகைகள் பற்றிக் கூட நம்முடைய செயற்குழுத் தீர்மானத்தில், 'பத்திரிகைகளுக்கு எல்லா உரிமைகளும் வேண்டும்' என்று நாம் சொல்லவில்லை; 'நியாயமான உரிமை கள் தரப்பட வேண்டும்' என்றுதான் சொல்லியிருக்கிறோம்!

இதில் நமக்குக் கருத்து மாறுபாடில்லை

திடீரென்று, 'கருணாநிதி வீட்டில் ஐம்பது இலட்சம் ரூபாய் சோதனையில் பிடிபட்டது' என்று முதலமைச்சரைப் பற்றி ஆதாரமின்றி எழுதுவதாக இருந்தால்—அல்லது, 'பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் வீட்டில் ஒரு கோடி ரூபாய் கைப்பற்றப்பட்டது' என்று ஆதாரமின்றி எழுதுவார்களானால், இவைகள் எல்லாம் பத்திரிகா தர்மங்கள் அல்ல; பத்திரிகைகள் கேட்கின்ற நியாயமான உரிமைகள் அல்ல; அப்படிச் செய்தி வெளியிடும் பத்திரிகைகள் எல்லாம், 'மஞ்சள் பத்திரிகை' என்ற கூட்டத்தைச் சேர்ந்தவை; அவைகளின் மீது எடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றி நாங்கள் எந்த விதமான கருத்து மாறுபாடும் கொண்டவர்கள் அல்லர்!

அந்த நம்பிக்கையில்தான், இன்றைக்கு இந்தியாவில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் மூலம்—இருதரப்பாரிடத்திலே கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம்-இடையில் ஏற்பட்டிருக்கின்ற இந்த இயல்புக்கு விரோதமான சூழ் நிலையை — அசாதாரணமான சூழ்நிலையை மாற்றியமைக்கலாம் என்கின்ற ஆசை எங்களுக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது!

அதே நேரத்தில், 'எதிர்க் கட்சிகள் எல்லாவற்றிற்கும் வாய்ப்பூட்டு போடவில்லை' என்று இந்திரா காந்தியார் சொல்லியிருக்கிறார்.

எந்தெந்தக் கட்சிகளுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டிருக்கிறது? —நக்சலைட், ஆனந்த மார்க், ஆர். எஸ். எஸ்., ஜமாத் இஸ்லாமியா போன்ற இயக்கங்களுக்கு வாய்ப்பூட்டு போடப்பட்டிருக்கிறது; தி மு.கழகத்திற்கு வாய்ப்பூட்டு போடப்படவில்லை; ஆகவே, கழகம் தன்னுடைய கொள்கையை எடுத்துச் சொல்லலாம்.

கழகத்தின் கொள்கை என்ன? மாநில சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி; கழகச்தின் இந்த இலட்சியத்திற்கு நாம் வடிவம் அமைத்திருக்கிறோம்!

சட்டத்தைத் திருத்துகையில் கோரிக்கையைக் கவனியுங்கள்

அரசியல் சட்டத்தைத் திருத்தப் போவதாகச் சொல்கிறார்கள்; அப்படி திருத்தப்படுகின்ற நேரத்தில் அல்லது மாற்றியமைக்கப்படுகின்ற நேரத்தில், இந்திரா காந்தி அம்மையார் அவர்களே—சட்ட அமைச்சர் கோகலே அவர்களே—இந்தியாவின் தலைமைப் பீடத்தில் இருக்கின்ற தலைவர்களே—1946-இல் நேரு, காந்தியடிகள், அபுல் கலாம் ஆசாத் ஆகிய அத்தனைப் பேரும் கூடிப் பேசி, 'இந்தியா சுதந்திரம் பெற்ற பிறகு மாநிலங்களுக்கெல்லாம் முழுமையான சுயாட்சி தர வேண்டும்' என்று சொன்னார்களே—அதை இப்போதாவது நினைத்துப் பார்த்து, 'நீங்கள் அடியோடு மாற்றவிருக்கின்ற அரசியல் சட்டத்தில், மத்தியிலே தேவையான அதிகாரங்களே—இந்தியாவைப் பலப்படுத்தும் அதிகாரங்களே—வெளிநாட்டான் சுரண்டாமல், ஆக்கிரமிக்காமல் பாதுகாக்கின்ற தேவையான அதிகாரங்களே தைத்துக் கொண்டு மற்ற அதிகாரங்களே எல்லாம் மாநிலங்களுக்குப் பரவலாக்கும் அளவிற்கு அரசியல் சட்டத்தை மாற்றுங்கள்' என்ற கோரிக்கையை இந்த மாநாட்டின் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

அரசு கவிழ்ப்பு இயக்கத்திற்கு நமது ஆதரவு இல்லை

நாங்கள் அரசு கவிழ்ப்பு இயக்கத்தை ஆதரிப்பவர்கள் அல்லர்; சொல்லப்போனால், ஜெ. பி. அவர்களின் இயக்கத்தின் அந்தக் குழுவில், நம்முடைய நண்பர்கள் செழியன்

அவர்களும்—மாரிசாமி அவர்களும் இடம் பெற்றிருந்தார்கள்; அந்தக் குழுவின் சார்பாக, 'பீகார் அரசை, மத்திய அரசு கலைக்க வேண்டும்' என்று தீர்மானம் போட்டார்கள்.

அதற்கு நம்முடைய உறுப்பினர்கள், 'ஒரு மாநில அரசைக் கலைக்கும் அதிகாரத்தை மத்திய அரசுக்குத் தருவதை நாங்கள் விரும்பமாட்டோம்' என்று சொன்னார்கள்!

அலகாபாத் தீர்மானத்திற்குப் பிறகு, 'இந்திராகாந்தி இராஜினமா செய்ய வேண்டும்' என்று ஜெ. பி. குழுவினர் தீர்மானத்தைக் கொண்டு வந்த நேரத்தில்கூட—அதற்காகக் கிளர்ச்சி நடத்த வேண்டுமென்று முடிவெடுத்த போது, அந்தக் கமிட்டியில் இருந்த எங்கள் கட்சியின் உறுப்பினர்கள், செழியன் போன்றவர்கள், 'கிளர்ச்சிக்கு நாங்கள் இணங்குவதாக இருந்தால், எங்களுடைய கட்சியைக் கேட்டு விட்டுத் தான் சொல்ல வேண்டும்' என்று சொல்லிவிட்டுத் தமிழ் நாட்டிற்கு வந்தார்களே தவிர, அந்தக் கிளர்ச்சிக்கு ஆதரவாகக் கையெழுத்துப் போடவில்லை!

இவ்வளவு நல்ல எண்ணத்தின் அடிப்படையில்தான் இன்றைக்கு இந்தப் பிரச்சினையை தி.மு. கழகம் அணுகுகிறது?

எதிர்க்கட்சி ஆட்சியால் ஏற்படும் சிறப்பு!

பிரதமர்—'தமிழ் நாட்டில்—குஜராத்தில்—கோவாவில் எதிர்க்கட்சிகள் ஆட்சி இல்லையா' என்று கேட்கிறார். இப்படிச் சொல்வதற்காகவாவது நாங்கள் பயன்படுகிறோமா—இல்லையா? (கைதட்டல்).

''உலகத்தில் இந்தியா, சனநாயக நாடுதான்; எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் வாய்ப்பளித்திருக்கிறோம்; தமிழகத்தில் கழக ஆட்சி—குஜராத்தில் ஜனதா கூட்டணி ஆட்சி—கோவாவில் சுயேச்சை ஆட்சி நடைபெறுகிறது'' என்று கூறுகிறார்கள்.

இட்டிலிக்குச் சட்டினியைப் போல குஜராத்தும்—சாம்பாரைப் போலத் தமிழ்நாடும்—மிளகாய்ப் பொடியைப் போல கோவாவும் இருக்கின்ற காரணத்தால்தான், 'பார், பார்; வெறும் இட்லி அல்ல; இது, சனநாயக இட்லி; இதோ பார் தமிழ்நாடு—இதோ பார் குஜராத்' என்று காட்டிக் கொண்டிருக்கிறார்கள்!

'எதிர்க் கட்சிகளுக்கு வாய்ப்பு அளிப்பேன்' என்று பிரதமர் சொல்லிக் கொண்டிருக்கிறார்; 'எதிர்க் கட்சிகளைப் பாதிக்கப்படக் கூடிய உணர்ச்சிகளைப் பற்றிக் கவலைப் படுவேன்' என்றும் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இடையிலுள்ள பூசாரிகள் இருக்கிறார்களே — அந்தப் பூசாரிகள், 'பிரதமரிடத்தில் நல்ல பெயர் வாங்கலாம்' என்று எண்ணிக் கொண்டு, ஏதேதோ செய்கிறார்கள்!

நினைவு அலைகள்!

நான், என்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன் பற்றி இங்கே இலட்சிய நடிகர் குறிப்பிட்டார்.

அவர் வள்ளல்தன்மை வாய்ந்தவர்; கொடுப்பதாகச் சொல்லி நிச்சயமாகக் கொடுப்பவர்; அவருடைய மணமகள் படத்திற்கு நான் வசனம் எழுதிக் கொண்டிருந்தேன்; அப்போது என்னுடன் கலைவாணர் கம்பெனியைச் சேர்ந்த செல்லமுத்து இருப்பார்; நானும் — அவரும் ஒரு நாள் கலைவாணருடைய இல்லத்திற்குச் சென்றிருந்தோம்; பிறகு அங்கிருந்து புறப்படுகின்ற நேரத்தில் என்னுடைய காருக்குப் பெட்ரோல் இல்லை; அதைத் தெரிந்துகொண்ட செல்லமுத்து அங்கேயிருந்த கணக்கப் பிள்ளையிடம் போய், 'கருணாநிதியின் காருக்குப் பெட்ரோல் இல்லை; ஒரு காலன் பெட்ரோல் போட ஒரு கூப்பன் கொடுங்கள்' என்று கேட்டிருக்கிறார்.

அந்தக் கணக்குப் பிள்ளை—(அவருடைய பெயரைச் சொல்ல விரும்பவில்லை)—பெட்ரோல் கூப்பனைக் கொடுத்து

விட்டு, 'செல்லமுத்து, கலிவாணர் என்.எஸ். கிருஷ்ணன் வீட்டுப் பணம் சும்மா தெருவில் கிடக்கவில்லே; கருணாநிதி பணம் வாங்கிக்கொண்டுதானே எழுதுகிறார்' என்று சொல்ல, உடனே செல்லமுத்து, 'நீங்கள் சொல்வது உண்மைதான்; நான் இந்தப் பணத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்; கருணாநிதியிடம் இப்போது பணம் இல்லாத காரணத்தினால் தான் கேட்டேன்' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டார்.

மறுநாள், சிட்டாடல் ஸ்டுடியோவில் ஒரு படத்தில் நடித்துக்கொண்டிருந்த கலிவாணரிடம் அந்தக் கணக்கப் பிள்ளை—அவரிடம் சபாஷ் பெறவேண்டும் என்று கருதி—நடந்ததைச் சொல்லியிருக்கிறார்.

உடனே கலிவாணர், 'என்னடா சொன்னாய் ராஸ்கோல் (இது கலிவாணர் வாயில் அடிக்கடி வரக்கூடிய வார்த்தையாகும்); இப்படித்தான், என்னோடு பழகுகிறவர்களையெல்லாம் விரோதமாக்குகிறாயா—அண்ணாவிடம்கூட முன்பொரு முறை இப்படிச் செய்தாய்; இன்று கருணாநிதியிடம் செய்திருக்கிறாய்; ஒரு காலன் பெட்ரோலால் என்னுடைய காசெல்லாம் கரியாகிவிடுகிறதா?' என்று கேட்டுவிட்டு சூட்டிங்கை நிறுத்திவிட்டிருக்கிறார்.

சூட்டிங்கில் போடப்பட்ட அதே ஆடையோடு நேராக என் வீட்டிற்கு வந்திருக்கிறார்; அப்போது நான் வீட்டில் இல்லை; என் தாயார்தான் இருந்திருக்கிறார்; சூட்டிங் ஆடையுடன் வந்த என்.எஸ். கிருஷ்ணன் அவர்களைப் பார்த்த என் தாயார் திகைத்துப் போயிருக்கிறார்!

என்.எஸ்.கே. என்னுடைய தாயாரிடம், ஆயிரம் பெட்ரோல் கூப்பன்களை—கிட்டத்தட்ட ஓராண்டுக் காலத்திற்கு என்னுடைய காருக்குத் தேவையான பெட்ரோல் கூப்பன்களைக் கொடுத்துவிட்டு, 'தம்பி வந்தால் கொடுத்துவிடுங்கள்; என்னுடைய கணக்கப்பிள்ளை ஒரு காலன் பெட்ரோலுக்கு ஏதோ சொன்னானும்; இந்தக் கூப்பன்கள் முடியும்

வரை பெட்ரோல் போட்டுக் கொள்ளட்டும் என்று சொல்லியிருக்கிறார்!

'கணக்கப் பிள்ளைகள்' போக்கினால்...

இதைப் போலத்தான் நான் நம்புகிறேன்—கலைவாணர் இடத்தில் இந்தியாவின் பிரதமர் இருப்பதாக! கணக்கப் பிள்ளை இடத்தில், சுப்பிரமணியமும்—சுக்லாவும் இருப்பதாக! (கைதட்டல்).

இவர்கள் போய் அங்கே பிரதமரிடம், 'இப்படிக் கருணாநிதி செய்கிறான்' என்று சொல்லுகின்ற நேரத்தில்—கலைவாணர் இடத்தில் இருந்து அந்த அம்மையார்—'ஏன், உங்களுக்கு வேறு வேலை கிடையாதா? இன்றைக்கு இந்தியாவிலேயே முற்போக்கான திட்டங்களை—நாம் சொல்வதற்கு முன்பே—நிறைவேற்றுகின்ற மாநிலம் தமிழ்நாடு ஆயிற்றே; குடியரசுத் தலைவர் தேர்தல் சமயத்தில் நமது முற்போக்குத் திட்டங்களை ஆதரித்துத்தானே கிரிக்கு தி.மு.க. வாக்களித்தது?' என்று கேட்கவேண்டும்.

''கச்சப்புணர்ச்சி ஏற்பட்ட பிறகும்கூட, பக்ருதீன் அலி அகமது போட்டியிட்டபோது, தி.மு.க.-வினர் ஆதரவைத் 'தாராளமாகத் தருகிறோம்' என்று வாக்களித்து—அதை நிறைவேற்றினார்களே-அதையெல்லாம் மறந்துவிடலாமா?'' என்று பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள்—கலைவாணர் இடத்திலே இருந்து—கேட்கவேண்டும்.

இந்தக் கணக்கப் பிள்ளைகளின் செயல் அம்மையாருக்கு நல்லதல்ல!

இவர்களுக்கு என்ன தகுதி உண்டு?

''எப்படியாவது தமிழக அரசைக் கவிழ்க்க வேண்டும், அதற்கு இந்திரா காந்தி துணைபுரிய வேண்டும்'' என்று

சொல்கின்றவர்கள் யார்? நண்பர் எம்.ஜி.ஆர்., கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்கள்!

இந்திரா காந்தி என்ன சொல்லி நெருக்கடி நிலையைக் கொண்டு வந்திருக்கிறார்? — 'என்னுடைய வீட்டு வாயிலில் மொரார்ஜி தேசாய் படையெடுப்பாராம்; வீட்டிற்குள் நுழைவாராம்; அதைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமா? ஆகவேதான் நெருக்கடி நிலை' என்று அறிவித்திருக்கிறார்.

இன்றைக்கு இந்திரா காந்தியிடம் போய், 'கருணாநிதி ஆட்சியைக் கலைத்துவிடு' என்று சொல்ல என்ன யோக்கியதை இருக்கிறது? 'கோபாலபுரத்திற்குச் செல்வேன்; என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது; போலீசு இருக்காது; சாட்சி சொல்ல ஆள் இருக்காது' என்று சொன்னாரே அந்த உத்தமர் எம்.ஜி.ஆர். — இன்றைக்கு இந்திரா காந்தியிடம் போய், 'கருணாநிதி ஆட்சியைக் கலைத்துவிடு' என்கிறார்!

ஆர் எஸ். மங்கலத்தில் பேசிய கே.டி.கே. தங்கமணி என்ன சொன்னார்? 'கருணாநிதி, இட்லரைப்போல் தாமே தற்கொலை செய்துகொண்டு சாகவேண்டும்; இல்லாவிட்டால், முசோலினியைப்போல் மக்கள் அவரை அடித்துக் கொல்லவேண்டும்' என்று பேசினாரே—அவர் பேசியது நீதி மன்றத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறதே—அப்படித் தங்கமணி பேசலாம்; இப்படிப் பேசிய தங்கமணிதான், 'கருணாநிதி ஆட்சியைக் கலைத்திடுக' என்றால், இவர்களுக்கு என்ன தகுதி—நாட்டுப் பற்று இருக்கிறது என்று கேட்க விரும்புகிறேன்.

அவர்களுக்குள்ள கவலையெல்லாம், தி.மு. கழகம், உண்மையான கம்யூனிஸ்டுக் கட்சியாக இருக்கிறதே; முற்போக்குக் கட்சியாக இருக்கிறதே; தமிழ்நாட்டு மக்களுடைய

உள்ளத்தைக் கொள்ளை கொண்டிருக்கிறதே; தமிழ் மரபு காக்க—தமிழர் மேன்மை காக்க—தமிழின் பெருமை காக்க —தமிழ்ச் சமுதாயத்தின் எழுச்சியை உலகெங்கும் பரப்ப இந்தக் கழகம் இருக்கிறதே; இதை அழித்தால்தான் நமக்கு இடம் உண்டு' என்று கருதுகிறார்கள்!

கழகம் என்பது கருஞ்நிதியோடோ—நாவலரோடோ— பேராசிரியரோடோ முடிவதல்ல; முன்னேற்றக் கழகம் இன்றைக்கு எங்களிடத்தில் மட்டும் இல்லை: எங்கள் எதிரே அமர்ந்திருக்கின்ற உங்களிடத்திலேதான் இருக்கிறது; ஆகவே, அதை அழிக்க யாராலும் முடியாது: அதை அழிக்க எவராலும்இயலாது; அப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமானால் — நம்முடைய நல்லெண்ணத்தைப் புரிந்து கொள்ளாமல் செயல் படுவார்களானால், அவர்களுக்குச் சொல்லிக் கொள்வேன்—'நாங்கள் நல்ல எண்ணத்தோடுதான் இந்தக் காரியத்தைச் செய்கிறோம்' என்று!

வள்ளுவர், 'தூது' என்கின்ற அதிகாரத்தில், 'இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது' என்று பாடியிருக்கிறார்.

அதாவது, 'தனக்கு அழிவே வந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல், தன்னுடைய அரசனுக்கு உறுதியாகச் செயல்படுவதுதான் தூது' என்றார் வள்ளுவர்.

இன்றைக்கு முடியாட்சி இல்லை — குடியாட்சிதான்; ஆகவே, 'அரசர்' என்ற சொல்லுக்குப் பதிலாக, 'அரசுக்கு' என்று பொருள் கொள்ளலாம்; 'மத்திய அரசு' என்றும் வைத்துக் கொள்ளலாம்.

> எவ்வளவு சோதனைகள் எதிர்ப்பட்டாலும் கவலைப்படாமல், இந்திய நாட்டின் சனநாயகத் தைக் காப்பாற்ற நாம் முயற்சி எடுக்கத்தான் போகிறோம்! (பலத்த கைதட்டல்)

அந்த முயற்சி வெற்றிபெற நீங்கள் வாழ்த்த வேண்டுகிறேன்.

அது வெற்றி பெறுமல் வேறு ஏதாவது நடக்கு மானால்—நாம், சிம்மாசனத்திற்கும் — சிறைச் சாலைக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள்தான்; ஆகவே, சேலம் மாவட்ட மாநாட்டில் கூடியிருக் கின்ற சிங்கம் நிகர் தமிழர்களே! சேரன் செங்குட்டு வனின் மரபினரே! பாண்டியன் நெடுஞ்செழியனின் பரம்பரையே! கரிகாலன் வழித் தோன்றல்களே! தவிர்க்க முடியாத நிலை ஏற்பட்டால், எந்தத் தியா கத்திற்கும் நீங்கள் தயாராக இருக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

(சேலம் மாநாட்டு உரை 17—8—75)

என்றும் அழியா நிலை

இன்றைய தினம் புதுக் கோட்டை மாவட்டத் தினுடைய முதல் மாநாட்டை அறந்தாங்கியிலே மிகச் சீரோடும் சிறப்போடும் நடத்தி நம்முடைய கழகக் காவலர்கள் நேற்றும் இன்றும் பல்வேறு கருத்துக்களை இந்த மாநாட்டிலே எடுத்துரைத்த. மாநாடு நிறைவு பெறும் கட்டத்தில் உங்களிடையே இருக்கின்ற அரிய வாய்ப்பை நான் பெற்று இருக்கிறேன்.

அறந்தாங்கி, அழகு தாங்கி, ஆர்வம் தாங்கி, அறிஞர் அண்ணாவினுடைய கொள்கைகளைத் தாங்கி என்றென்றும் வீறுநடைபோடும் என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குவது கண்டு நாங்களெல்லாம் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மாநாட்டை எங்கே நடத்துவது என்கின்ற கேள்வி எழுந்தபோது, அறந்தாங்கியிலே நடத்தலாம் என்ற கருத்தை நானும், நாவலரும், பேராசிரியரும் எடுத்துச் சொன்னோம். புதுக்கோட்டையில் உள்ள நண்பர்கள் எல்லாம் புதுக்கோட்டைதான் இந்த மாவட்டத்தினுடைய தலைநகரம். ஆகவே அங்கேதான் இந்த மாநாட்டை நடத்தவேண்டுமென்று வற்புறுத்தினார்கள்.

புதுக்கோட்டை உருவான நேரத்தில் ஒரு விழாவும், அதற்கு முன்பு அங்கே ஒரு பொதுக்குழு நிகழ்ச்சியும் அதற்குப் பிறகு அந்த மாவட்டத்தினுடைய செயல்வீரர் கூட்டமும் இப்படி மூன்று பெரிய நிகழ்ச்சிகள் அந்த நகரத்தில் நடைபெற்றதன் காரணத்தால் கொஞ்சம் கிராமத்திற்குப் பக்கமும் கருணை காட்டுங்கள் என்று கேட்டுக்

கொண்டு அவர்களும் மனமிசைந்தார்கள். அதனால் இந்த மாநாட்டை மிகச் சீரோடும் சிறப்போடும் நடத்திக் காட்டியிருக்கின்றார்கள். எங்களுக்கு எல்லாம் கொஞ்சம் அச்சம் தான். அறந்தாங்கியிலே நடத்தச் சொல்லியிருக்கிறோம். அது நீண்ட நாட்காலமாக வறண்ட பகுதி என்று அறிவிக்கப் பட்ட பகுதியாயிற்றே, மழை காலமாயிற்றே, கூட்டம் வருமா, மாநாடு சிறப்படையுமா என்ற சந்தேகங்கள் எல்லாம் எங்களுடைய நெஞ்சங்களைத் தாக்கிக் கொண்டு தான் இருந்தன. ஆனால் நாங்கள் எண்ணிய எண்ணங்கள் அனைத்தும் தோல்வியடையத்தக்க விதத்தில், புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய கழக மாவீரர்கள், செயல்திறன் படைத்த கழகத்தினுடைய நம்முடைய அன்பு உடன் பிறப்புக்கள் அறந்தாங்கியில் நடத்திய இந்த மாநாடு, மற்ற மாநாடுகளையெல்லாம் வெற்றிக் கொள்ளத்தக்கது என்கின்ற வகையிலே நடத்திக் காட்டியிருக்கின்றார்கள்.

மற்ற மாநாடுகளை நடத்திய நண்பர்கள் எல்லாம் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்கள் வருத்தப்படக் கூடாது. மற்ற மாநாடுகளை வெற்றிக் கொண்டது என்று சொல்வதற்குக் காரணமே இந்த மாநாட்டை கன்னியாகுமரியில் நடைபெறுகிற மாநாடு வெற்றி காணவேண்டும் என்று அவர்களை ஊக்கப்படுத்துவதற்காகவும் குமரியிலே நடக்க விருக்கிற மாநாட்டை கோவையில் நடைபெற இருக்கின்ற நம்முடைய மாநில மாநாடு வென்றிட வேண்டுமென்றும் கோவை மாவாட்ட நண்பர்களைத் தூண்டி விடுவதற்காகவும் தான் இதைச் சொன்னேனேயல்லாமல் வேறல்ல.

அறந்தாங்கியை இரவு நேரத்திலே நேற்றும் இன்றும் யாராவது காண்பவர்களேயானால் வானத்தை அண்ணாந்து பார்க்கவேண்டுமா, அல்லது நின்ற நிலையிலேயே பார்த்தால் போதுமா என்று எண்ணிடத் தோன்றும். வானத்திலே இருக்கிற விண்மீன்கள் எல்லாம் அறந்தாங்கி வீதியிலே உதிர்ந்து விளக்கொளியை இன்றைக்கு உமிழ்ந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லத்தக்க வண்ணம் கூடகோபுரங்கள்

என்ன, எழில் நீலே மாடங்கள் என்ன, மாட மாளிகைகள் என்ன, மகுதிகள் என்ன, இந்துக்களின் ஆலயங்கள் என்ன, கிருத்துவ சர்ச்சுகள் என்ன இப்படி இன்னேரன்ன அருங்கலைக் காட்சிகளேயெல்லாம் அறந்தாங்கியிலே வீதிதோறும் உருவாக்கியிருக்கிறார்கள்.

புதுக்கோட்டை திருச்சியிலே கொஞ்சத்தையும் தஞ்சை யிலே கொஞ்சத்தையும் இணைத்து உருவமான மாவட்ட மாகும். அந்த காரணத்தினல்தான் திருச்சிக்காரர்களும், காலேயில் பேசிய நம்முடைய தஞ்சை மாவட்டத்தினுடைய முன்னுள் மாவட்டச் செயலாளர் இன்னுள் அமைச்சர் நண்பர் மன்னே அவர்களும், 'என்ன இருந்தாலும் அறந் தாங்கி தஞ்சையைச் சேர்ந்ததல்லவா?' என்று பேசினர்கள். எனக்கு ஏற்படுகிற எண்ணம் எல்லாம் திருச்சியைச் சேர்ந்த காரணத்தாலோ தஞ்சையிலிருந்து பிரிந்த காரணத்தாலோ எழில் கொஞ்சும் மாநாட்டை புதுக்கோட்டை மாவட்டத்தில் நடத்துகிறார்கள் என்றுதான் நான் சொல்வேன். அறந் தாங்கியை புதுக்கோட்டை மாவட்டத்தோடு இணைக்கும் நேரத்தில் அறந்தாங்கி பகுதி நண்பர்கள் எல்லாம், 'எங்களேத் தஞ்சாவூரிலிருந்து பிரிக்காதீர்கள், நாங்கள் நீண்ட நாட்களாக தஞ்சையோடு சேர்ந்து வாழ்ந்து விட்டோம்' என்று எல்லாம் சொன்னர்கள். நான் அவர்களேப் பார்த்துக் கேட்கிறேன் தஞ்சையோடு இணைந் திருந்த இந்தக் காலம் வரையில், ஒரு மாநாடு நடத்த தஞ்சை உங்களுக்கு உரிமை கொடுத்ததா? (பலத்த சிரிப்பு) என் பேச்சைக் கேட்ட காரணத்தால் அல்லவா இன்றைக்கு புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய முதல் மாநாட்டை அறந்தாங்கியில் நடத்தும் இந்த வாய்ப்பினேப் பெற்றிருக் கிறீர்கள் என்பதுதான். வாழ்த்தைப் பெற்றீர்கள். நாங்கள் எல்லாம் வாயார, மனமார வாழ்த்துகிற குறள் மொழியைப் பெற்றீர்கள். தமிழகத்திலே இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்களும் வேறுபல அரசியல் இயக்கங்களேச் சேர்ந்தவர்களும் போற்றுகின்ற பாராட்டு

கின்ற பாங்கினை பெற்றீர்கள். அந்த அளவுக்கு கிராமப் புறங்களிலே இருக்கிற ஆடவரும் பெண்டிரும் உழவர்களும் தொழிலாளர் பெருமக்களும் கூட்டம் கூட்டமாக சாரி சாரியாக அணி அணியாக இந்த மாநாட்டுக்கு வந்திருக்கிற காட்சியினை நாங்கள் காணுகிறோம். எதிரே உட்கார்ந் திருக்கிற முகங்களை பார்த்தால் தஞ்சையிலே பழகிய முகங்கள் இருக்கிறதா, மாயூரத்திலே பழகிய முகங்கள் அதிகம் இருக்கிறதா அவர்கள் எல்லாம் இந்த மாநாட்டுக்கு வரவில்லையா என்றுல் அவர்கள் வந்திருக்கிறார்கள். வசதியாக ஒலிபெருக்கியின் அருகாமையில் உட்கார்ந்து மாநாட்டுப் பேச்சுக்களைக்கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். எதிரே பார்க்கிறேன். சிற்றூர்களிலிருந்தும், பேரூர்களிலிருந்தும் குக்கிராமங்களிலிருந்தும் பட்டி தொட்டிகளிலிருந்தும் பேருந்து மூலமாகவும், லாரிகள் மூலமாகவும், மாட்டு வண்டி கள் கட்டை வண்டிகள் மூலமாகவும் இந்த மாநாட்டுக்கு வந்திருக்கின்ற கிராமப்புறத்து தாய்மார்கள், என்னுடைய அருமைச் சகோதரிகள், பெரியோர்களை, வாலிப நண்பர்களை, சகோதரர்களையெல்லாம் நாங்கள் இந்த மாநாட்டிலே கண்டு களிக்கிறோம். இப்படிப்பட்ட அருமையான மாநாட்டை மிகச் சிறப்பாக நடத்திடப் பணிபுரிந்த கழக மாவீரர்களுக்கெல்லாம் நினைவு படுத்திக் கொள்வதும் நன்றி கூறுவதும் தலைமைக் கழகத்தினுடைய கடமையாகும். அந்தக் கடமையினை நான் முதலிலே நிறைவேற்ற விரும்பு கிறேன்.

மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் பெரியண்ணன் அவர்கட்கும், செயல் திறம் படைத்த செயலாளர்கள் இரசான், எம். எஸ். அப்துல் மஜீத் ஆகியோருக்கும் துணைச் செயலாளர்கள் ராமய்யன், ராமனுதன், தமிழ்ச்செல்வன், மு. சீனிவாசன் ஆகியோருக்கும் பொருளாளர் நண்பர் சிதம்பரம் அவர்களுக்கும், நிதிக்குழு உறுப்பினர்கள் கே. வி. சுப்பையா, காடுவெட்டியார் தியாகராசன், தாடாளுமன்ற உறுப்பினர் வீரய்யா தங்கராசு

ஆகியோருக்கும், துரைமாணிக்கம் டாக்டர் ராமசுப்பையா ஆகியோருக்கும் அலுவலகக் குழுவில் அரும்பணி ஆற்றிய துரையரசன், ராமனுதன், மாரிமுத்து விளம்பரக் குழுத் தலைவர் முத்துக் கலிங்கன் அவர்களுக்கும் உணவுக் குழுத் தலைவர் சுந்தரராசன் மற்றும் உறுப்பினர்களுக்கும், தொண்டர் படைத்தலைவர்கள் ஏ. ஆவுடையப்பன் அவர் கட்கும், தொண்டர் படைத்தலைவி செல்வி தமிழரசிக்கும் மற்றும் பல்வேறு குழுவினருக்கும் தலைமைக் கழகத்தின் சார்பிலும் என் சார்பிலும் பொதுச் செயலாளர், பொருளாளர் சார்பிலும், அனைவருடைய சார்பிலும் நன்றிகளை உங்களுடைய முன்னே குவித்திட நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

அடுத்த கட்டம் மாநாட்டினுடைய வசூல் கட்டம். இதை நீங்கள் ஆவலோடு எதிர்பார்ப்பது வழக்கம்தான். நீங்கள் எதிர்பார்ப்பதைவிட அண்மையிலே மாநாட்டை நடத்தி முடித்திருக்கிற நெல்லை மாவட்டச் செயலாளரும், சேலம் மாவட்டச் செயலாளரும் மற்றவர்களும் மிக ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

இம் மாநாட்டுக்கான நன்கொடைகள் மூலமாக தொகை வசூலிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வசூலிக்கப் பட்டதற்காக ரூபாய் 100 என்றும் ரூ 50 என்றும் நுழைவுச் சீட்டுகள் அளிக்கப்பட்டு, அவர்கள் அந்த நுழைவுச் சீட்டுக்கு 5 பேர், 10 என்று அழைத்து வந்திருக்கிறார்கள். இதுபோல் நன்கொடையாக வசூல் ஆன தொகை ரூ. 2,63,000.

மாநாட்டில் நேற்றும், இன்றும் நுழைவுக் கட்டணம் செலுத்தி உள்ளே வந்திருக்கின்றவர்கள்—இங்கே வீற்றிருக் கின்றவர்கள் மூலமாக வசூலான நுழைவுக் கட்டண வசூல் ரூ. 60,636. ஆக மொத்தம் வசூல் மூன்று இலட்சத்து இருபத்து மூவாயிரத்து ஆறு நூற்று முப்பத்தியாறு.

இதிலே மாநாட்டிற்கான செலவு ரூபாய் இரண்டு இலட்சத்து எட்டாயிரத்து ஆறுநூற்று முப்பத்தியாறு ரூபாய்.

போக மிச்சத்தொகை ரூபாய் ஒரு இலட்சத்துப் பதினைந்தாயிரம் என்று அறிவிப்பதிலே மகிழ்ச்சி அடைகிறேன்.

இதற்கிடையில் இந்த மாவட்டத்தினுடைய சார்பிலும் வேறு பல நண்பர்கள் சார்பிலும் பேரறிஞர் அண்ணா அவர்களின் குடும்ப நிதிக்காக ரூ 15 ஆயிரம் தந்த அந்தச் செயலுக்கும் நான் தலைமைக் கழகத்தின் சார்பில் என்னுடைய பாராட்டுக்களை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாநாடு எப்படிப்பட்ட சூழ்நிலையில் இங்கே கூடுகிறது, கூடியிருக்கிறது என்பதைப் பற்றி நேற்றும் இன்றும் பேசியவர்கள் மிகத் தெளிவாக குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த மாநாட்டை புதுகோட்டை மாவட்டத்தில் நடத்துகிறோம் என்றால், ஏதோ நம்முடைய கழகத்தினுடைய கொள்கைகளை வளர்ச்சி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு, அந்தக் காரியத்திற்காகவே புதுக்கோட்டை மாவட்டத்தினுடைய மக்களைச் சந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்த மாநாடு நடத்தப்படவில்லை. நேற்று பேசிய நண்பர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். நம்முடைய மாநாட்டுத் தலைவர் காதர்சாவும் மாநாட்டிலே பல்வேறு நிகழ்ச்சிகளிலே பங்குகொண்டவர்கள் எல்லோரும் எடுத்துச் சொன்னார்கள். தமிழ் நாட்டில் பயங்கரமான வறட்சி ஏற்பட்டு அப்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட முக்கியமான மாவட்டங்களில் ஒன்றாக இந்த புதுகோட்டை மாவட்டம் விளங்கிற்று என்பதை நான் புதிதாக சொல்லவேண்டிய அவசியமில்லை. அப்படிப்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட நேரத்தில் இந்த மாவட்டத்துக்கு தமிழக அரசு எந்தெந்த வகையில் தன்னுடைய கடமையை செய்திருக்கிறது என்று ஒரு முறை எண்ணிப் பார்த்தால் இந்த மாநாட்டை இங்கே கூட்டி இலட்சக் கணக்கான மக்களை சந்தித்து உங்களையெல்லாம் காண்கின்ற

நேரத்தில் இயல்பான கம்பீரத்தோடு, இவ்வளவு காரியங்களைச் செய்திருக்கிறோம்.

உங்களை வறட்சியால் வாடவிடவில்லை. குடிதண்ணீர் பற்றாக்குறையால் குமுற விடவில்லை. பசியால் பட்டினியால் யாரையும் சாகவிடவில்லை. உங்களுடைய வேலை வாய்ப்புக்கள் குறைந்த நேரத்தில் மேலும் குறைக்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்காமல் பயங்கரமான உணவுப் பற்றாக்குறை எந்த நேரத்திலும் அதை சமாளிக்கலாம் என்ற திட்டங்களைத் தீட்டி, குடிநீர்ப் பற்றாக்குறையைப் போக்குவதற்கு பல்வேறு செயல்களை செய்து அவைகளையெல்லாம் நிறைவேற்றி விட்டுத்தான் இந்த மாநாட்டை புதுக்கோட்டை மாவட்டத்தில் அறந்தாங்கியில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். குடிதண்ணீர் வசதிக்கு மாத்திரம் வறட்சிக் காலத்தில் 350 குழாய்க் கிணறுகளை தோண்டியிருக்கிறோம். 750 புதிய கிணறுகளை ஆழப்படுத்திய வகையிலும் புதிய கிணறுகளை உருவாக்கிய வகையிலும் 96 இலட்சம் ரூபாய் இந்த மாவட்டத்துக்காக செலவிடப் பட்டிருக்கிறது. சிறு பாசனத்திற்காக 1916 குளங்கள் தூர் எடுக்கப்பட்டு ஆழப்படுத்துவதற்காக 88 இலட்சம் ரூபாய் இந்த மாவட்டத்திற்கு மட்டும் செலவழிக்கப்பட்டிருக்கிறது. பெரும் பாசனத்திற்காக இந்த மாவட்டத்தில் உள்ள கண்மாய்களின் கரைகளை உயர்த்திய வகையில் 585 கண்மாய்களுக்கு இந்த மாவட்டத்திற்கு மட்டும் 56 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது. 1079 இணைப்புச் சாலைகள் போடப்பட்ட இந்த மாவட்டத்திற்கு மாத்திரம் 32 இலட்சம் ரூபாய் செலவழிக்கப்பட்டிருக்கிறது.

இவைகள் அன்னியில் தனிநாடு கண்மாய்களுக்கு 10½ இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 1975 பிப்ரவரி முதல் அக்டோபர் வரை இந்த ஒரே மாவட்டத்திற்கு மட்டும் வறட்சிப் பணிகளுக்காக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு செலவிட்ட தொகை ரூ. 2,80,00,000 என்பதை நான் மிகப் பெருமை

யோடு உங்களுக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். அது மாத்திரமல்ல, ரூ. 41,71,000 இந்த வறட்சி காலத்தில் நிலவரி வஜா செய்யப்பட்டிருக்கிறது. 53,66,000 ரூபாய் விவசாயிகளுக்கான கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. காலியில் மன்னே குறிப்பிட்டதைப்போல அறந்தாங்கியிலே 1000 அடி வரையில் தோண்டி தானே இயங்கும் ஆர்ட்டிசான் கிணறு, சுமார் 1 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்து குடிதண்ணீர் வசதி செய்து தரப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள மொத்த கிராமங்கள் 768. அந்த 768 கிராமங்களில் 661 கிராமங்களில் வறட்சிநிவாரணப் பணிகள் நடந்து மக்கள் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்து தங்களைத் தொட்ட துன்பம் குறைந்துவிட்டது, தங்களுக்கு வந்த வேதனை தீர்க்கப்பட்டுவிட்டது என்றும் தங்களைச் சூழ்ந்திருந்த வாட்டம் போக்கப்பட்டுவிட்டது என்ற மனநிம்மதியை பெற்ற பிறகுதான் இந்த மாநாட்டை நாங்கள் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மாநாடு நடைபெறுகிற நேரம் தமிழகத்து அரசியல் அரங்கத்தில் எப்படிப்பட்ட சூழ்நிலைகள் உலவிக் கொண்டிருக்கிறது என்பதை நேற்றும் இன்றும் பேசிய நண்பர்கள் எல்லாம் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழக அரசியலில் நாம் அனைவரும் வருத்தத்தக்க சோகத்தில் ஆழத்தக்க சம்பவமான இந்தியாவின் பெருந் தலைவர்களில் ஒருவரான அன்புக்குரிய காமராசர் அவர்கள் அக்டோபர் 2ந்தேதி மறைந்தார்கள். அவருடைய மறைவுக்கு தமிழக அரசு தன்னுடைய கடமையை செய்து முடித்தது. தமிழன் என்கிற இன உணர்வோடு என்றென்றும் தொண்டாற்றி வருகிற இந்த அரசு, காமராசருடைய மறைவுக்குப் பிறகு கலங்கித் தவித்து நின்றவர்களுக்கு அரசின் சார்பிலும் நமது கழகத்தின் சார்பிலும் நம்முடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்ததோடு மாத்திரமல்லாமல். அவருடைய பெயர் விளங்குத்தக்க அளவுக்கு நினைவுச்

சின்னங்கள், அந்த நினைவுச் சின்னம் இருந்தால்தான் எதிர் காலத்தில் எந்த மக்களுக்காக அவர் பாடுபட்டாரோ, அந்த எண்ண மக்களுக்காக பாடுபடும் வழித் தோன்றல்கள் உருவாக முடியும் என்கின்ற எண்ண உணர்வோடு, காந்தி மண்டபம் அருகில் நினைவுச் சின்னம், அவரது இல்லத்தை அரசாங்கம் தேசியச் சொத்தாக்கி தேசிய சின்னமாக ஆக்குகிற முயற்சியையும், சென்னைக் கடற்கரைச் சாலைக்கு 'காமராசர் சாலை' என்கின்ற அறிவிப்பும் இவைகளையொட்டி, இந்திய அரசு வெளியிடுகிற அஞ்சல் தலைகளில் ஒன்று காமராசரின் அஞ்சல் தலையாக இருந்திட வேண்டுமென்று வேண்டுகோளும் தி மு. க. அரசால், தி. மு. கழகத்தால் பிரகடனப் படுத்தப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள்.

காமராசர் மறைந்து அதிக நாள் ஆகிவிடவில்லை. அவருடைய அஸ்தி சில நதிகளில் கரைக்கப்பட்டுவிட்டன. இன்னும் சில நதிகளில் கரைக்கப்படும் என்று அதற்கான நாட்களும் குறிக்கப்பட்டுள்ளன. அதற்கிடையில் தமிழக அரசியலில் குளத்தில் மீன் பிடிக்கச் சில பேர் வலையோடு வந்திருக்கிறார்கள். ஆனால் வலை கிழிந்த வலையா, குளத்திலே வீசத் தகுந்த வலையா, அல்லது வலையைக் கொண்டு வந்திருப்பவர்கள் கரையில் உட்கார்ந்து கொண்டு மீன்கள் எல்லாம் வந்து இந்த வலையில் விழுங்கள் என்று சொல்கின்ற அளவுக்கு சோம்பேறிகளா? அவைகளைப் பற்றியெல்லாம் நமக்குப் பிரச்சினையில்லை. ஆனால் நோக்கம் இந்தக் குளத்தில் இருக்கிற மீனை எடுத்துக் கொண்டு போய் இன்னொரு சொந்தக் குளத்தினிலே விடவேண்டுமென்பது நோக்கம்.

ஆனால் இங்கேயிருக்கிற இன்னொரு கட்சி, நடிகர் கட்சி, எங்கே இந்த மீன்களைப் பிடித்துக் கொண்டுபோய் அந்தப்புறத்திலே விட்டு விட்டால் அந்தப் புறத்திலே மீன்கள் அதிகமாகி, பிறகு நமக்குப் பிழைப்பிற்கு வழியில்லாமல் போய்விடும் என்று எண்ணிய காரணத்தினால், இந்தக் குளத்தில் இருக்கிற மீன்களை நாமே பிடித்து குழம்பு வைத்துச் சாப்பிடலாம் என்று எண்ணியிருந்தோம்.

அவர்கள் உயிரோடு பிடித்துக் கொண்டுபோய் இன்னொரு குளத்திலே விடுவதாக வந்திருக்கிறார்களே என்று அங்கலாய்க்கிறார்கள். நேற்றும் இன்றும் சென்னைப் பத்திரிகைகளில் நடிகர் கட்சிக்காரர்கள் எங்கே இரண்டு காங்கிரசும் இணைந்து விடப்போகிறதோ என்பதற்காக அங்கலாய்க்கிற செய்திகள் எனக்கு வந்துகொண்டுதான் இருக்கின்றன. குளத்தில் யார் மீன் பிடிக்கிறார்களோ, அல்லது பிடித்த மீனை குழம்பு வைத்துச் சாப்பிடுகிறார்களோ, அல்லது வேறு ஒரு குளத்தில் விட்டு, எல்லா மீன்களும் ஒரே குளத்தில் இருக்க வேண்டுமென்று விரும்புகிறார்களோ, அதைப்பற்றி நமக்குக் கவலை இல்லை. ஆனால் நாம் முதலில் காமராசருக்கு அனுதாபம் தெரிவித்தோம்.

அறந்தாங்கியில் கூடியிருக்கிறோம்? எதற்காக? நம் முடைய வயலுக்கு நாம் வளர்த்த பயிரைக் காப்பாற்றுவதற்காக வந்திருக்கிறோம். சிலர் மீன் நாடி வலை தேடி, குளம் தேடிப் போய் இருக்கிறார்கள். நமக்கு அந்தக் கவலை கிடையாது. நாம் நம்முடைய வயலுக்கு வந்திருக்கிறோம். நாம் இட்டபயிர், நாம் விளைவித்த வேளாண்மை எப்படி இருக்கிறது? இன்னும் வளம் பெற என்னென்ன வழி செய்யலாம் என்பதற்காக நாம் இன்றைக்கு அறந்தாங்கியில் ஒரு உழவனைப்போல் தன்னுடைய விளைந்த நிலத்தைக் காண்பதற்கு வந்திருப்பதைப் போல அறந்தாங்கியில் தி. மு. கழகம் கூடியிருக்கிறது. வள்ளுவர் சொன்னார்—''ஏரினும் நன்றும் எருவிடுதல், நட்டபின் நீரினும் நன்றதன் காப்பு'' என்று.

ஏர்பிடித்து உழுவதைவிட, மிகவும் நல்லது எருவிடுதல். அப்படி எருவிட்ட பிறகு, களையெடுத்த பிறகு தண்ணீர் பாய்ச்சி, அந்த நிலத்தில் ஆடுகள், மாடுகள் மேயாமல் அந்தப் பயிரை காப்பது. இவை எல்லாவற்றையும் விட மேலானது என்று வள்ளுவர் சொன்னார். அதைப்போலத் தான் இந்த ஆயிரங்காலத்துப் பயிரை அண்ணா என்கின்ற உழவர் உழுது பயிரிட்டிட இந்தப் பயிரைப் பாதுகாக்கின்ற

—காப்பாற்றுகின்ற பணியை அறந்தாங்கியில் தி. மு. கழகம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறது. எங்கே குட்டை குழப்புகிறது என்ற கவலை நமக்கு இல்லை. எந்தக் குளத்தில் எந்த மீன் கிடைக்கும் என்ற அக்கறையில்லை. அந்த மீனை இன்னொரு குளத்திலே விடலாமா, அல்லது பானையிலே போட்டு சட்டியிலே போட்டு, வேகவைத்துச் சாப்பிடலாமா என்கின்ற அந்தக் கவலையும் நமக்குக் கிடையாது.

தி. மு. கழகம் தமிழ்ச் சமுதாயத்தின் விடிவிளக்கு, தமிழ்ச்சமுதாயத்தினுடைய வழிகாட்டி, தமிழ்ச் சமுதாயத்தினுடைய பாதுகாவலன், தமிழ்ச் சமுதாயத்தினுடைய அரண். இந்தக் கழகத்தைக் கட்டிக் காப்பாற்ற மேலும் வலுவூட்ட கழகப் பணிகளைத் தொடர, நம்முடைய பயணத்தை மேற்கொள்ள சபதம் ஏற்கத்தான் இங்கே அறந்தாங்கியில் தி. மு. க. கழக மாநாட்டில் நாம் கூடியிருக்கிறோம்.

இந்தக் கட்சி ஏதோ நேற்றுப் பெய்த மழையில் இன்று காலையில் உற்பத்தியாகிவிட்ட காளான் அல்ல. இந்தக் கட்சிக்கு நீண்டதோர் நெடிய பாரம்பரியம் உண்டு. நேற்றைக்குப் பெரியார் படத்தையும் பேரறிஞர் அண்ணா படத்தையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தையும் திறந்து வைத்தோம். நீண்ட காலமாகத் தமிழ்ச் சமுதாய மக்களுக்காக, தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்களுக்காக, பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக, ஒரு வகுப்பாரின் ஆக்கத்திலிருந்து அவர்களைக் காப்பாற்ற—மேட்டுக்குடி மக்களுடைய பிடியிலிருந்து அவர்களை விடுவிக்க, ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைக்க ஒரு பெரும் புரட்சி, தமிழகத்திலே உருவாகி 40, 50 ஆண்டு காலத்துக்கு மேலாகிறது. அந்தப் புரட்சி அத்தியாயத்தின் அரசியல் சந்ததிதான் நாம். அதனுடைய வழித்தோன்றல்கள்தான் நாங்கள். ஆகவேதான் இந்தக் கழகத்தைக் கட்டிக் காக்கும் பெரும் பொறுப்பை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய மறைவுக்குப் பிறகு, அனைவரும் ஒற்றுமையாக இருந்து கட்டுப்பாட்டோடு,

ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து இடையில் யாராவது நுழைந்து கலகம் விளைவித்தாலும் அவைகளை அலட்சியப் படுத்தி நாம் அனைவரும் ஒரே ரத்தம், ஒரே குடும்பம், ஒரே சகோதரர்கள், அண்ணு சொன்னது போல் ஒரு தாய் வயிற் றிலே பிறப்பதற்கு அந்த தாயின் மணி வயிறு தாங்காது என்பதால், பலதாய் வயிற்றில் பிறந்த அண்ணன் தம்பிகள் என்கிற குடும்ப உணர்வோடு இந்தக்கழகத்தை நாம் கட்டிக் காத்து வருகிறோம். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு 15—16 லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் உண்டு. தி.மு. கழகத்திற்கு 20 ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் உண்டு ஏறத்தாழ. தி.மு.க. கிளைகள் அனைத்தும் கூடி அதனுடைய பிரதிநிதிகளும் செயலாளர்களும் ஒன்றியக் கழகத்தை அமைக்கிறார்கள். அந்த ஒன்றியக் கழகத்தின் பிரதிநிதிகளும் செயலாளர்களும் இணைந்து மாவட்டக் கழகத்தை உருவாக்குகிறார்கள். மாவட்டக் கழகத்தின் செயலாளர்களும் பொதுக்குழு உறுப்பினர்களும் பொதுச் செயலாளரையும் கழகத் தலைவரையும் பொருளாளரையும் மற்ற நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்கிறார்கள். இப்படிக் கிளையிலிருந்து தலைமை வரையில் அமைப்பு நிதியாக செயல் படுகிற கழகம்தான் தி. மு. கழகமாகும். தி மு. க. கழகத்தை இன்றைக்கு அழித்துவிடலாம், எட்டப்பனைப் போல் காட்டிக் கொடுத்து இருந்த இடம் தெரியாமல் ஆக்கி விடலாம் என்று கனவு கண்டுகொண்டு புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் புதிய கட்சியை உருவாக்கி, மூன்றுண்டுகளுக்குப் பிறகு நேற்று அதற்கு ஒரு சட்ட திட்டத்தையும் வெளியிட்டு நான் தூக்கி எறியப்பட்டேன் என்றெல்லாம் மீண்டும் மக்களிடத்திலே புலம்பத் தொடங்கி யிருக்கிறார். மீண்டும் அவர் அந்தப் பல்லவி பாடுவதற்கு என்ன காரணம் என்று எனக்குப் புரியவில்லை. அவர் கழகத்தி லிருந்து தூக்கியெறியப்பட்டாரா, அல்லது அவர் கட்டுப்பாடு மீறினார் என்பதற்காக விளக்கம் கேட்கப்பட்டாரா? பகிரங்க மாகச் சில விஷயங்களைக் கேட்டேன். ஆகவே தூக்கி எறியப் பட்டேன் என்று பேசுகிறார். அவர் தூக்கியெறியப்பட்டிருக்க

லாம். அல்லது விளக்கம் கேட்கப்பட்டிருக்கலாம். அல்லது கட்சியிலிருந்து தள்ளிவைக்கப்பட்டிருக்கலாம். கட்சியின் சட்ட திட்டம் அதைத்தான் சொல்கிறது.

நேற்றையதினம் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்களே சட்ட திட்டம், அந்த சட்ட திட்டத்தையும் நாம் ஏற்கனவே அண்ணா காலத்தில் உருவாக்கிய சட்ட திட்டத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சில உண்மைகள் புலனுகும். என் கையில் இருப்பது நம்முடைய கழகத்தின் சட்டதிட்டப் புத்தகம். இது 1962-ஆம் ஆண்டு வாத்தலையில் நடைபெற்ற கழகப் பொதுக்குழு கூட்டத்தில் என். வி. என். அவர்கள் அமைப்பாளராகவும், மறைந்த ஏ. கோவிந்தசாமி, பேராசிரியர் அன்பழகன், நண்பர் ப. உ. ச. நண்பர் தில்லை வில்லாளன், ராம. அரங்கண்ணல், நண்பர் நீலநாராயணன் ஆகியவர்கள் எல்லாம் உறுப்பினர்களாக இருந்து அமைத்த சட்டதிட்டம். அண்ணு அவர்கள் பொதுச் செயலாளராக இருந்த போது உருவாக்கப்பட்ட சட்ட திட்டம்.

இந்தச் சட்டத்தில் 27-ம் பக்கத்தில் விதி-31 ஒழுங்கு நடவடிக்கை என்கின்ற ஒரு தலைப்பு பிரிவு 1·ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது.

'கழகத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் அமைப்பு களும் அமைப்புகளில் உள்ள அலுவலாளர்களும் கழகத்தின் கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்கு நடவடிக்கை முறைகளுக்கும் உட்பட்டவர்களாவார்கள்.' இது நம்முடைய கழகத்தி னுடைய சட்டதிட்டப் புத்தகத்தில் இருக்கிறது. 31வது விதி, 1வது பிரிவு நேற்று அவர்கள் வெளியிட்டிருப்பது இதோ என் கையில் அதுவும் இருக்கிறது. ''கழகத்தில் உள்ள எல்லா உறுப்பினர்களும் அமைப்புக்களும், அமைப்புக் களில் உள்ள அலுவலாளர்களும், கழகத்தின் கட்டுப்பாட் டிற்கு ஒழுங்கு நடவடிக்கை முறைகளுக்கும் உட்பட்டவரா வார்கள்'' இதே தான் அது.

பிரிவு 2ல் என்ன சொல்கிறது பார்ப்போம். நம்முடைய சட்டத்தில்—''கழகத்தின் கொள்கை—கு றி க் கோ ளுக்கு

முரணான வகையில் செயல்படுதல்—கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில் நடத்தல், கழகத்தின் சட்ட திட்டங்களுக்கும், மேலுள்ள அமைப்புக்களுக்கும் கீழ்படியாதிருத்தல், கழகத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து, மாறுபட்டுக் காரியமாற்றுதல், கழகத்தின் ஒழுங்கு முறை குலையும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்றவைகளுக்காகத் தனிப்பட்ட உறுப்பினர் மீதோ, அமைப்பின் மீதோ, அலுவலாளர் மீதோ ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்'' என்றிருக்கிறது. அவர்களுடைய சட்டதிட்டத்தைப் பார்த்தால், ''கழகத்தின் கொள்கை—குறிக்கோள்களுக்கு முரணான வகையில் எழுத்துக்கு எழுத்து அப்படியே ஈயடித்தான் காப்பி என்பார்களே அதுபோல செயல்படுதல்—கழகத்தின் கண்ணியத்திற்கு மாசு ஏற்படும் வகையில் நடத்தல், கழகத்தின் சட்டதிட்டங்களுக்கும், மேலுள்ள அமைப்புகளுக்கும் கீழ்படியாதிருத்தல்—கழகத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து, மாறுபட்டு காரியமாற்றுதல்—கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொள்ளுதல் போன்றவைகளுக்காகத் தனிப்பட்ட உறுப்பினர் மீதோ அமைப்பின் மீதோ அலுவலாளர் மீதோ ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படலாம்'' என்று இருக்கிறது.

அடுத்து நம்முடைய சட்ட திட்டம். 'கண்டிப்பதும், எச்சரிப்பதும் குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளிவைப்பதும், வெளியேற்றுவதும், ஒழுங்கு நடவடிக்கை முறைகளாகும். அவர்களுடைய சட்டதிட்டத்தில் 'கண்டிப்பதும், எச்சரிப்பதும், குறிப்பிட்ட காலத்திற்குத் தள்ளிவைப்பது கழகத்திலிருந்து நீக்குவதும் ஒழுங்கு நடவடிக்கை முறைகளாகும்.''

இரண்டு சட்டதிட்டத்தையும் நான் படித்தேன். ஒழுங்கு நடவடிக்கை குறித்து இரண்டிலும் என்ன குற்றம் செய்தால் அவர்களைத் தள்ளிவைக்கலாம் அல்லது விலக்கலாம் என்றிருக்கிறது.

ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொள்ளுதல் கழகத்தின் கட்டுப்பாட்டை மீறுதல் ஆகியவைகளுக்காக

ஒழுங்கு நடவடிக்கை எடுக்கலாம் என்பது எம். ஜி. ராமச் சந்திரன் அவர்களைப் பொதுச் செயலாளராகக் கொண்டிருக் கின்ற கட்சிக்குப் பொறுந்துமானால், அந்த எம். ஜி. ராமச் சந்திரனை வளர்த்த தி. மு. கழகத்திற்கு அந்தச் சட்ட திட்டம் பொருந்தாதா?

பொதுக்குழுவிலே கேட்க வேண்டியதை பொதுக் கூட்டத்திலே கேட்டார். பொருளாளர் காட்டவேண்டிய கணக்கை பொதுச் செயலாளரிடத்திலும் தலைவரிடத்திலும் கேட்டார். யார் மீதோ உள்ள கோபத்தை கட்சியின் மீது காட்டினார். கட்சியிலே இருக்கிற பதினெட்டாயிரம் கிளைக் கழகத்தினுடைய செயலாளர்களும் கணக்குக் காட்ட வேண்டுமென்று சொன்னார். எங்கே? செயற்குழுவிலா, பொதுக்குழுவிலா, பொதுச் செயலாளரைச் சந்தித்தா? அல்லது கழகத் தலைவரான என்னைச் சந்தித்தா? அல்லது தணிக்கைக்குழு உறுப்பினர்களை சந்தித்தா? இல்லை. பொது மக்களைச் சந்தித்துச் சொன்னார். பகிரங்கமாக கழகத்தைப் பற்றி குற்றஞ்சாட்டினார்.

இன்றைக்கு ஒழுங்கு நடவடிக்கை யார்மீது எடுக்கலாம். என்ன குற்றத்திற்காக எடுக்கலாம் என்று திரு. எம். ஜி. ராமச்சந்திரன் தன் கட்சிக்கு சட்டதிட்டம் போட்டிருக் கிறாரோ, அதே சட்ட திட்டம்தான் அன்றைக்கு திரு. எம். ஜி. ராமச்சந்திரன்மீது நடவடிக்கை எடுக்கக் காரணமாக இருந்தது என்பதை மாத்திரம் தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல, அதுகூட அவர் அப்போது விலக்கப்படவில்லை. தள்ளிவைத்து விளக்கம் தான் கேட்கப்பட்டது.

அவர்களுடைய சட்டதிட்டத்தில் இன்னொரு விஷேதம். நம்முடைய கழகத்திலே பொதுச் செயலாளரைத் தேர்ந் தெடுப்பது என்றால் கிளைக்கழகங்களில் இருந்து ஒன்றியக் கழகங்கள்வரை அமைப்புகள் உருவாகி, பொதுக்குழு உறுப் பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு — அந்தப் பொதுக்குழு உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து கழகத் தலைவரை—பொதுச்

செயலாளரை—பொருளாளரைத் தேர்ந்தெடுக்கிறோம். இது எங்களுக்குள்ள முறை. அவர்களுடைய கட்சியில் எப்படி தெரியுமா? அவைத்தலைவரை—துணை அவைத் தலைவரை இன்னும் யார் யாரையோ பொதுக்குழு தேர்ந்தெடுக்கும். ஆனால் பொதுச் செயலாளரை மாத்திரம் அவர்களுடைய கட்சியில் இருக்கிற பதினேழு லட்சம் உறுப்பினர்களும் தேர்ந்தெடுப்பார்களாம். எப்படி? ஊருக்கு ஊர் பெட்டி வைக்கப்படும்? போட்டியிடுபவர்களின் பெயர்கள், எழுதப் படும், பதினேழு லட்சம் உறுப்பினர்கள் வாக்களிப்பார்கள்? ஓட்டுக்கள் எண்ணப்படும்? யார் எண்ணுவார்கள்? என்ப தெல்லாம் வேறு விவகாரம். அவர்களுடைய சட்ட திட்டத்தில் நான் நுழைய விரும்பவில்லை. அது தேவையும் இல்லை. ஆனால் ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொருளாளரோ அல்லது அவைத் தலைவரோ, துணை அவைத் தலைவரோ தவறு செய்தால், பொதுக்குழு கூடி நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து அவர்களை விலக்கலாம். எம்.ஜி.ஆர். தானே பொதுச் செயலாளராக காலாகாலத்துக்கும் இருக்கலாம் என்று எண்ணிக்கொண்டு பதினேழு லட்சம் பேரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை யார் கொண்டு வருவது? எப்படி அவர் தவறு செய்தால், நீக்குவது? ஆக நம்மைச் சர்வாதிகாரி என்றவர் இன்றைக்கு தன்னை சர்வாதிகாரியாக ஆக்கிக்கொள்ள, தி.மு.க-வை அழிக்க, மக்களிடத்தில் தவறான பிரச்சாரங்களை செய்து கொண்டிருக்கிற காட்சியை நாம் காண்கிறோம்.

நாம் ஒரு நீண்டகால பயணத்தை நடத்திக்கொண்டிருக் கிறோம். தி.மு.க-வை காட்டிக் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு அவர்கள் தவறான அரசியல் செய்துகொண்டிருக்கிற காட்சியை நாம் கண்டு களித்துக் கொண்டிருக்கிறோம். என்னதான் சட்டதிட்டங்கள் வகுத்தாலும் என்னதான் கொள்கைகள் வகுத்தாலும் அண்ணாவின் படத்தை அவர் களுடைய கொடியில் போட்டாலும் அது அமைப்பில்லாத

கட்சி. நீண்டநாள் நடக்காத கட்சி. அருமை சகோதரர் மதியழகன் எடுத்துக் காட்டியதைப்போல் ரசிகர்களால் நடத்தப்படுகின்ற கட்சி. கவர்ச்சிக் கட்சி. நாம் ஒரு நீண்டகால பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். அண்மையில் இங்கிலாந்திலிருந்து ஒருவர் என்னை வந்து சந்தித்தார். நீண்டநேரம் பேசியவுடன் கேட்டார். உங்களிடையே இருந்து பிரிந்த எம்.ஜி.ஆர். இடைத்தேர்தல்களில் வெற்றிபெற்று இருக்கிறார்களாமே, வரும் தேர்தலில் என்ன ஆகும்? என்று கேட்டார். நான் சொன்னேன். எங்களுடைய இயக்கம் வெறும் தேர்தலுக்காக மாத்திரம் நடைபெறுகின்ற இயக்கம் அல்ல. நாங்கள் அடுத்த தலைமுறையைப்பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். தமிழ்ச் சமுதாயத்தின் மானம், இலக்கியம், காப்பியம், பண்பாடு இவைகள் அத்தனையும் காப்பாற்றிக் கொள்ளத்தக்க அளவுக்கு அண்ணாவின் வழியில் நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே எங்கள் லட்சியம் வேறு, அவர்கள் லட்சியம் வேறு, நாங்கள் நீண்டகால பயணத்தை மேற்கொண்டிருக்கிறோம். சொல்லவேண்டுமானால், எங்களுக்கு வயது ஆக ஆக எங்களுடைய கட்சிக்கு பெருமை சேரும். அந்தக் கட்சியிலே உள்ள தலைவருக்கு வயது ஆக ஆக இருக்கிற செல்வாக்கு மங்கும். இது ஒன்றுதான் நான் உங்களுக்கு சுருக்கமாகச் சொல்லக்கூடிய வேறுபாடு என்று அவரிடத்திலே சொன்னேன்.

அதற்காக நமக்குக் கவர்ச்சியே தேவையில்லை என்று நான் சொல்லமாட்டேன். இன்று அறந்தாங்கியில் நம்முடைய நண்பர்கள் மிகக் கவர்ச்சிகரமாக அலங்காரங்களைச் செய்திருக்கிறார்கள். அதற்காக தி. மு. கழகம் தன் கொள்கைகள் சாதாரணமானவைகள் அல்ல. தி.மு. கழகத்தின் கொள்கைகள் எது என்று கேட்டால், அறந்தாங்கியில் போடப்பட்டிருக்கிற எழில் மாட எலெக்ட்ரிக் விளக்கா? அல்ல, அல்ல. மேடையிலே இருப்பவர்களும், நீங்களும் தமிழ்ச் சமுதாயமும்தான் கழகமே தவிர இங்கே பளிச் சிட்டுக் கொண்டிருக்கிற அலங்கார விளக்குகள் அல்ல கழகம்.

கவர்ச்சி தேவைதான், ஆனால் கவர்ச்சியே கொள்கை அல்ல. அதுதான் இன்று கழகம் மக்களிடையே எடுத்துச்

சொல்லிவருகிற கருத்தாகும். அவர்கள் திண்டுக்கல்லில் வெற்றி பெறவில்லையா, கோவையில் வெற்றி பெற வில்லையா, புதுவையில் வெற்றி பெறவில்லையா என்று கேட்க லாம். நான உங்களுக்குச் சொல்லவேன்; பட்டம் விடுகின்ற நேரத்தில் அதை விடுகின்ற நூல் நம்முடைய கையிலே இருக்கும். (நாம் பட்டம் என்று சொல்லுகிறோம், சென்னை யிலே காற்றாடி என்று சொல்வார்கள்) பட்டம் எவ்வளவு தூரம் பறக்கவேண்டும் என்று பார்த்து பறக்கவிடுவதும் காற்றடிக்கின்ற திசையில் பறக்கவிடவேண்டும் என்பதெல் லாம் பட்டம் விடத் தெரிந்த நிபுணனுக்கு கை வந்த கலை. பட்டத்தை அறுக்கக்கூட சிலர் முற்படுவார்கள். இன்னொரு பட்டத்தை விடுகின்ற நூலால் இந்தப் பட்டத்தை அறுக்கக் கூட துணிவார்கள். அந்த நேரத்தில் வீம்புக்காக நாம் நமது நூலை விட்டால், பட்டம் ஒருவேளை அறுந்து போகும். பட்டத்தின் உயரம் குறைந்தாலும், பரவாயில்லை என்று கொஞ்சம் நூலைத் தளர்த்துவது வழக்கம். அப்படித் தளர்த்தப்பட்டதுதான் திண்டுக்கல்—கோவை—பாண்டிச் சேரிய தவிர, நாம் இஷ்டப்படி நிபுணத்தன்மை நம்முடைய கையிலே இருக்கின்றது. நாம் இஷ்டப்படி பட்டத்தைப் பறக்கவிட்டுக் கொள்ளலாம். முன்னேற்றக் கழகத்திற்கு அந்தச் சக்தி உண்டு.

ஆனால், பட்டத்தைவிட உயரத்தில் ஒன்று பறக்கிறதே, அது என்ன? காய்ந்து போன சருகு. வேகமாக அடித்த காற்றில் அது ஆகாயத்தில் பறந்து கொண்டிருக்கிறது. அதைப் பிடித்து இழுக்க நூல் கிடையாது. கயிறும் கிடையாது. காற்று வேகமாக அடிக்கிறவரையில் பறக்கும். காற்றின் வேகம் நின்றால் அந்த சருகு போய் விழுகின்ற இடம் சமுத்திரமோ சாக்கடையோ சந்தோ பொந்தோ தெரியாது. (பலத்த கைதட்டல்)

ஆகவே உயரப் பறக்கிறதே என்பதற்காக சருகு பட்டமாகி விடாது. தி. மு. கழகம் அரசியல் பாரம்பரியம் உள்ள ஒரு பெரிய சமுதாய இயக்கம். பெரியாரால் பேரறிஞர் அண்ணாவால் கட்டிக் காக்கப்பட்ட இயக்கம். இந்த இயக்கத்தின் செயற்குழு இன்று காலையில் 'அழியா நிலை' என்ற ஊரில் நடைபெற்றது. இதில் உள்ள பெயர் பொருத்தத்தைப் பாருங்கள். நம்முடைய செயற்குழு கூடிய

இடமே அழியாநிலே. தி. மு. கழகத்திற்கு என்றென்றும் அழியா நிலே. அதற்கு அடையாளமாகத்தான் இன்று காலேயிலே செயற்குழு அந்த ஊரில் நடைபெற்றது.

அந்தச் செயற்குழுவில் நாம் நிறைவேற்றிய தீர்மானங்களே முன் மொழிந்த நாவலரும், தீர்மானங்களே வழிமொழிந்தவர்களும் எடுத்துக் காட்டினர்கள். காலேயில் பேசியவர்கள் எடுத்துக் காட்டியதைப் போல, நமது நாடாளுமன்ற கட்சித் தலேவர் நண்பர் செழியன் அவர்கள் இன்றைக்கு இந்தியாவில் அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிற பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிற 100 நாட்கள் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிற படம் என்று விளம்பரப்படுத்தப்படும் பட்டுக் கொண்டிருக்கிற நெருக்கடி நிலேமையைப் பற்றி மிக விளக்கமாக எடுத்துப் பேசினர்கள். 100 நாட்கள் 100 சாதனேகள் என்றெல்லாம் விளம்பரம் செய்து வருகிறார்கள். சாதனேகள் எல்லாம், 100 என்ன, ஆயிரம் என்ன, பத்தாயிரம் என்ன, லட்சம், கோடி என்ன. எவ்வளவு சாதனேகள் புரிந்தாலும், இந்தியத் துணேக் கண்டத்தில் இருக்கிற கோடானு கோடி மக்களுக்கு அவர்களுடைய முகத்திலே மகிழ்ச்சி பொங்க, கண்ணிலே புத்தொளி ஏற்பட இன்னும் நீண்ட காலம் ஆகும் என்பதை நாம் புரிந்து தான் வந்திருக்கிறோம். அந்தப் பெருமகிழ்ச்சியால் நாம் சாதனேகளே செய்ய வேண்டாம் என்று சொல்லவில்லே. அவசரச்சட்டம் தி. மு. கழகத்தாலே ஏற்கனவே சென்னேயில் விமசரிக்கப்பட்டு இருக்கிறது செயற்குழுவில். அதற்குப் பிறகு நெல்லேயிலே அதுபற்றி பேசப்பட்டிருக்கிறது. தீர்மானம் போடப்பட்டிருக்கிறது. சேலத்தில் அதுபற்றி விளக்கப்பட்டிருக்கிறது. பத்திரிகைத் தணிக்கை என்ற பெயரால் நம்முடைய மாநில சுயாட்சி என்ற கொள்கை தடைவிதிக்கப்பட்டிருக்கிறது. அதையும் நாம் எடுத்துக் காட்டியிருக்கிறோம். ஒரு வேளே அந்த தீர்மானம் கூட பத்திரிகைகளில் வராமால் போகலாம். நான் எதிர்பார்க்கிறேன், வராது, தீர்மானம் ஒன்றும் பயங்கரமானது அல்ல. நம்முடைய உரிமைக் குரல், எங்களுடைய கழகத்தின்

கொள்கை, மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி, அண்ணாவின் கொள்கையை வடித்தெடுத்து, அதற்த உருவம் கொடுத்து திருச்சி மாநாட்டில் 'அண்ணா வழியில் அயராது உழைப்போம், ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம், இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம், வன்முறை தவிர்த்து வறுமையை வெல்லுவோம், மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி' என்ற ஐம்பெரும் முழக்கங்களை அண்ணன் வகுத்த அந்த அருமையான கொள்கையை நாம் எழிலோடும் எழுச்சி வடிவம் கொடுத்து முழக்கினோம். அதுவே கழகச் சட்டதிட்டப் புத்தகத்தில் ஏறியிருக்கிறது. அந்தக் கொள்கைகளைத்தான் 1967லும் சரி, 1971லும் சரி நாங்கள் தேர்தல் பிரகடனமாக தமிழக மக்களின் முன்னால் வைத்து உள்ளோம். ஆனால் அந்தக் கொள்கை நம்முடைய கழகச் சட்ட திட்டத்தில் ஏறியிருக்கிற கொள்கை, இன்றைக்குத் தமிழ்நாட்டில் நம்முடைய கழக ஏடுகளில், கழகச் சார்புடைய ஏடுகளில் வெளிவரக் கூடாது என்று தடுக்கப்படுகிறதென்றால், அது தவறு, அதைக் கண்டிக்கிறோம் திருத்திக் கொள்ளுங்கள் உடனடியாக உங்கள் நிலையை, மாற்றிக் கொள்ளுங்கள் என்றுதான் காலையில் செயற்குழு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. ஒன்று அந்தத் தீர்மானத்தை வெளியிடத் தடை விதிக்கவேண்டும். அல்லது அவர்களுக்கு அந்தத் தீர்மானம் போய்ச்சேரும். நாளைக்கே, தமிழ்நாட்டில் இருக்கிற தணிக்கை அதிகாரிக்கு மத்திய அரசு ஒரு தாக்கீதை அனுப்பி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தலையாய கொள்கை மாநில சுயாட்சி. அதை அவர்கள் கேட்க, சொல்ல அரசியல் சட்டத்தில் இடமிருக்கிறது. ஆகவே தடுக்கக்கூடாது என்ற ஒரு தாக்கீதை இங்கே இருக்கிற தணிக்கை அதிகாரிக்கு மத்திய அரசு அனுப்பும் என்று நான் நம்புகிறேன். ஒன்று அப்படி அனுப்பவேண்டும் இல்லாவிட்டால் தி. மு. க. தலைவருக்கு அல்லது பொதுச் செயலாளருக்கு, மாநில 'சுயாட்சி என்ற வார்த்தை தடை செய்யப் பட்டிருக்கிறது, அதை நீங்கள் சொல்லக்கூடாது என்று தடையுத்தரவையாவது அவர்கள்

பிறப்பித்தாகவேண்டும். முதலில் உள்ளதைச் சொன்னால் நாங்கள் மகிழ்ச்சியடைவோம். இரண்டாவதைச் சொன்னால் தாக்கீது வந்தால் அடுத்த செயற்குழுவும் பொதுக் குழுவும் கூடும். அடுத்தக் கட்டம் என்ன தி. மு. க. வுக்கு என்று யோசிக்கும். ஆகவே மாநில சுயாட்சிக் கொள்கை தி. மு. க. வின் கொள்கை. நாங்கள் பிரிவினையைக் கைவிட்ட பிறகு அரசியல் சட்டத்திற்குட்பட்டு இந்தியாவின் ஒருமைப் பாட்டுக்கு ஊறு ஏற்படாத வகையில், இந்தியாவின் பாது காப்புக்கு குந்தகம் ஏற்படாத வகையில் மாநிலங்கள் சுயாட்சி தன்மையோடு விளங்க வேண்டுமென்ற கோரிக் கையை சமுகத்தின் சார்பில் எடுத்து வைத்திருக்கிறோம். ஆயிரக்கணக்கான சாதனைகளை தி. மு. க. அரசின் சார்பில் செய்து முடித்திருக்கிறோம். 20 அம்சத் திட்டம்—சொல் கிறார்கள். அப்படிச் சொல்கிற காங்கிரஸ்காரர்களை, யாராவது பார்த்து நம்முடைய தோழர்கள் மேடையில் சந்தித்து, தனியாக 20 அம்சத் திட்டம் என்கிறார்களே, அந்த 20 அம்சத் திட்டம் எங்கே ஐந்தாறு சொல்லுங்கள் பார்ப் போம் என்று கேட்டுப் பாருங்கள். அவர்களுக்கே தெரியுமா என்றால் தெரியாது. 20 அம்சத் திட்டம்—என்ன ஐயா, 20 பாயிண்ட் புரோகிராம், ஆங்கிலத்தில் நன்றாக மொழி பெயர்ப்பு செய்திருக்கிறார்கள். அதை என்ன என்று சொல்கிற தன்மை எந்த அளவுக்கு தெளிவு தமிழ்நாட்டிலே இருக்கிற இந்திரா காங்கிரஸ்காரர்களுக்கு இருக்கிறதா என்றால் இல்லை. 20 அம்சத் திட்டத்தில் பல திட்டங்களை நாம் ஏற்கனவே தொடங்கி படிப்படியாக நிறைவேற்றிக் கொண்டு வந்திருக்கிறோம். அதையும் இங்கே தீர்மானமாக வடித் தெடுத்து இந்த மாநாடு ஒப்புதலையும் சேர்த்திருக்கிறார்கள். இடையில் இருக்கிற சில கட்சிக்காரர்கள் தமிழக அரசு 20 அம்சத் திட்டத்தை நிறைவேற்ற மனு கொடுக்கப் போகிறோம் என்றும் போராடப் போகிறோம் என்றெல்லாம் அறிக்கை விட்டிருக்கிறதாக நான் பத்திரிகைகளில் செய்தி பார்த்தேன். 20 அம்சத் திட்டத்தில் எதை இந்த அரசு நிறை வேற்றவில்லை! நான் அதை விரிவாக எடுத்துச் சொல்ல விரும்பவில்லை. 20 அம்சத் திட்டத்தில் அத்தியாவசியப்

பண்டங்கள் விலை குறைக்க தொடர்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இது இந்திரா காந்தி அவர்களின் அறிவிப்பு. வறட்சி காலத்திலும் நாம் இந்த நடவடிக்கை எடுத்தோமா இல்லையா, எண்ணிப் பார்க்கவேண்டும். வேளாண்மை நில உச்சவரம்பு சட்டங்களை செயல்படுத்தி 30 ஸ்டாண்டர்டு ஏக்கராவை 10 ஸ்டாண்டர்டு ஏக்கராவாக 72லேயே ஆக்கினோமா இல்லையா? எண்ணிப்பார்க்கவேண்டும். அப்படி எடுக்கப்பட்ட உபரி நிலத்தை நிலமில்லாதவர்களுக்குத் தர வேண்டும். தந்தோமா இல்லையா? 35 ஆயிரம் பேருக்கு அந்த நிலங்களை எல்லாம் வழங்கியிருக்கிறோம். அப்படி ஏழை விவசாயத் தொழிலாளர்களுக்கு குடி மனை சட்டம் கொண்டு வந்தோம். 20 அம்சத் திட்டத்தில் ஒன்று இது. அவர்கள் சொல்வதற்கு முன்பே 1,57,000 விவசாயத் தொழிலாளர்களுக்கு குடியிருப்புச் சட்டத்தின் மூலம் குடியிருப்பு மனைகளை இன்றைக்கு அரசின் சார்பில் இனாமாக வழங்கியிருக்கிறோம். வீட்டுமனைகள் 5 லட்சம் அரிசனங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது மாத்திரமல்ல, 30 ஆயிரம் வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. அப்படி அடித்தளத்து மக்களுக்காக செய்யவேண்டிய காரியங்கள் என்னென்ன பிரதமரால் குறிக்கப்பட்டதோ அவ்வளவையும் நாங்கள் செய்யாவிட்டாலும் பெரும்பான்மையானவைகளை நாம் நிறைவேற்றிவிட்டோம்.

பெரும்பான்மையானவையை நாம் நிறைவேற்றத் தொடங்கி மத்திய அரசிடத்தில் இன்றைக்கு பண உதவியைக் கேட்டு வருகிறோம். அதைத்தான் இந்த மாநாடு தீர்மானமாகவும் செயற்குழுத் தீர்மானமாகவும் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இன்னும் நிறைவேற்றி இன்னும் சாதனைகள் புரிய தி.மு.க. கோருவதுதான் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும். மாநிலங்களுக்கு சுயாட்சி வேண்டும். மத்தியிலே கூட்டாட்சி வேண்டுமென்று நம்முடைய கொள்கை முழக்கமாகும். 1935ஆம் ஆண்டு வெள்ளைக்காரன் காலத்திலிருந்து

பிரிட்டிஷ் ஆக்ட் அதுதான் அரசியல் சட்டமாக உருவெடுத்தது. 1938ம் ஆண்டில் மத்திய அரசின் அதிகாரங்கள் 59 ஆக இருந்தது. அது மாற்றப்பட்டு இந்திய அரசியல் சட்டமாக உருவாக்கப்பட்டு இன்றைக்கு மத்திய அரசு அதிகாரங்கள் 97 ஆக உயர்ந்தது. 1935ல் மாநில அரசு அதிகாரங்கள் 54. அது மாற்றப்பட்டு 66 ஆகத்தான் உயர்ந்தது. 1935ல் பொதுப்பட்டியலில் 36 அதிகாரங்கள், இப்போது 47 அதிகாரங்கள் கொண்டதாக மாறியிருக்கிறது. அப்போது பொதுப்பட்டியலில் 99 சதவீதம் மத்திய அரசு தலைமையில் உள்ள அதிகாரங்கள்தான், (கன்கரண்ட் லிஸ்ட்) இப்படிப்பட்ட சூழ்நிலையில் அதிகாரங்கள் எல்லாம் மேலே உட்கார்ந்து கொண்டு மாநிலங்கள் அடிமைகளாக, மாநிலங்கள் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களாக உரிமையற்ற இடங்களாக ஆகிக் கொண்டு இன்றைக்குப் பேசுகிறார்கள். இருக்கிற அதிகாரங்களை அரசியல் சட்டத்தின் மூலமாக எடுத்துக்கொண்டு ஒவ்வொரு மாநிலமும் செய்கிற சாதனைகளையெல்லாம் மத்திய அரசுதான் செய்தது என்று தோற்றம் அளிக்கக்கூடிய வகையில் இன்று அரசியல் சட்டத்தை நாங்கள் திருத்தப் போகிறோம் என்று சட்ட அமைச்சரே பேசுகிறார். அப்படிப் பேசுகிற நேரத்தில் நமக்கு நம்பிக்கை பிறக்கிறது. அரசியல் சட்டத்தை திருத்த நீங்கள் முன் வருவீர்களேயானால், மாநிலங்களுக்கு அதிக உரிமைகளை கொடுக்கிற அளவுக்கு, அதிக அதிகாரங்களை பெறுகிற அளவுக்கு மக்களோடு அதிகத் தொடர்புடைய மாநிலங்கள் மேலும் வலிமையாக முழுமையாகச் செயல்பட அதிகார உரிமைகளை வழங்குங்கள், அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள் என்று கேட்கிறோம்.

எங்களுடைய மாநில சுயாட்சிக் கொள்கையை மனதில் வைத்துக் கொண்டு அரசியல் சட்டத்தைத் திருத்துங்கள் அதைத் திருத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அதற்கு மாறாக இருக்கிற அதிகாரங்களைப் பறித்துக்கொள்ளக் கூடிய அளவுக்கு இருக்கிற அதிகாரத்தையும் மத்தியில் கொண்டு போய் குவித்துக்கொள்ளக்கூடிய அளவிற்கு நீங்கள் அரசியல் சட்டத்தைத் திருத்தினால் ஜனநாயகம் மேலும் படுகொலை

செய்யப்பட்டுவிடும். இந்தியாவில் இல்லாமல் போய்விடும். யாருக்கும் தெரியாமலேயே ஒரு சர்வாதிகார ஆட்சி வந்து விடும். இந்திரா காந்தியம்மையார் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் வேறு யார் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அதிகாரங்கள் அத்தனையும் டெல்லியில் குவிக்கப்பட்டால் சர்வாதிகார ஆட்சியை இந்தியா சந்தித்தாகவேண்டிய சங்கடமான கட்டம் வரும்.

ஆகவேதான், அரசியல் சட்டத்தைத் திருத்தும் நேரம் இன்றைக்கு வந்திருக்கிறது என்று கருதினால் இதுதான் நல்ல நேரம். தி மு. கழகத்தின் கோரிக்கையை பரிசீலிக்கக்கூடிய நேரம். ஆய்ந்து பார்க்கக்கூடிய நேரம். அதுபற்றி கலந்து பேசக்கூடிய நேரம். விவாதிக்கக்கூடிய நேரம்—விவாதித்து நல்ல முடிவு எடுக்கக்கூடிய நேரம். மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி இதை திராவிட முன்னேற்றக் கழகம் மாத்திரமல்ல காங்கிரஸ் கட்சியே ஒரு நேரத்தில் சொன்னது. அருமைத் தலைவர் பண்டித ஜவஹார்லால் நேரு அவர்களே ஒப்புக்கொண்டது. அபுல்கலாம் ஆசாத் ஏற்றுக் கொண்டது. காந்தியடிகள் ஒப்புக் கொண்டது. சுயாட்சி கேட்க வேண்டும் என்று சில கோரிக்கையை இன்றைக்கு மறுக்கிற இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தன்னுடைய தேர்தல் பிரகடனத்திலே ஒப்புக்கொண்டது. 1943ல் அந்தக் கட்சியினர் செயற் குழுவும் பொதுக்குழுவும் நிறைவேற்றிய தீர்மானம் "பிரிந்து போகும் உரிமைகளோடு கூடிய மாநில சுயாட்சி இந்தியாவுக்கு அளிக்க வேண்டும். இந்தியாவில் உள்ள மாநிலங்களுக்கு அளிக்க வேண்டும்." என்று 43லே கம்யூனிஸ்ட் கட்சி தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது. அதைத்தான் நிறைவேற்றுகிறோம். அதைத்தான் கேட்கிறோம். அதைத் தான் வலியுறுத்துகிறோம். அந்த மாநில சுயாட்சிக்கு இன்றைக்கு தி மு க. ஒளிவிளக்கு ஏற்றுகிறது. மேலும் அதிகாரங்களை அங்கே கொண்டுபோய் குவிக்கிற சூழ்நிலை இல்லாத அளவுக்கு அவசர சட்டத்தை எவ்வளவு விரைவில் இந்திரா காங்கிரஸ் திரும்பப் பெற வேண்டுமென்ற எங்கள் கோரிக்கையையும் இந்த மாநாட்டில் எடுத்து வைக்கின்றேன்.

நாம் அவசர சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்பதை வேகமாகவும் கண்டிப்பாகவும் வலியுறுத்தாதிருக்கக் காரணம் நெல்லை மாநாட்டில் நம்முடைய பேராசிரியர் முன் மொழிந்து பொதுச் செயலாளர் அவர்கள் வழிமொழிந்த தீர்மானத்தில் என்னை ஒரு நடுநிலையாளனாக தூதுவனாக இந்திய அரசியல் உருவாக்கக்கூடியவனாக நியமித்திருக் கிறார்கள் உங்கள் சார்பில். ஆகவேதான் நடுநிலை தவறாமல் நான் இந்திரா காந்தி அம்மையாரைக் கேட்டுக் கொள் கிறேன்.

காமராசர் மறைவிற்கு பிரதமர் வந்திருந்தார். கண்ணீர் வடித்தார் என்றும் காங்கிரஸ் தொண்டர்களே என் பின்னால் வாருங்கள் என்று அழைத்தார் என்ற செய்தி களோடு இன்னொன்றையும் சேர்த்திருந்தால் மகிழ்ச்சியடைந் திருப்பேன். காமராசர் மிகுந்த கவலையோடு இருந்தார். ஏறத்தாழ 90 நாட்களுக்கு மேல் துக்கம் கொண்டாடினார். இந்தியாவின் அரசியல் நிலைமை இப்படி ஆகிவிட்டதே என்று வருத்தப்பட்டார். அவர் மறைந்து விட்டார். அவருடைய நினைவுச் சின்னமாக, கருணாநிதி நீ கட்டுகிற மண்டபம் அல்ல பெரிது அவருடைய பெயரிடுகிற சாலை அல்ல பெரிது—நீ வாங்குகிற வீடு அல்ல பெரிது நான் செய்கிறேன் பார் நினைவுச் சின்னம் அவருடைய கட்சியின் பெருந் தலைவர்கள் எல்லாம் விடுதலை செய்கிறேன் என்று இந்திரா காந்தி அம்மையார் விடுதலை செய்திருந்தால் அது காமராச ருக்குக் கட்டும் பெரிய நினைவுச் சின்னமாக இருக்கும். அம்மையார் பக்கத்தில் இதுமாதிரி யோசனை சொல்ல யாரும் இல்லாமல் போய்விட்டார்களே என்ற கவலையை மாத்திரம் தெரிவித்து கழகத்தின் சார்பில் சொல்லப்பட்ட இந்த யோசனைகளை இந்திராகாந்தி அம்மையார் ஏற்று காமராசருக்கு நினைவுச் சின்னமாக தேசத் தலைவர்களையெல் லாம் விடுதலை செய்து பத்திரிகைகளுடைய நியாயமான உரிமைகளைக் காப்பாற்றி இந்தியா கட்டுப்பாட்டோடு— ஒழுக்கத்தோடு—ஒற்றுமையோடு நடைபோட செய்ய வேண்டும் செய்யவேண்டும் என்று இந்த மாநாட்டின் மூலம் கேட்டு விடைபெறுகிறேன்.

(அறந்தாங்கி மாநாட்டு உரை, 12-10-75)

வாளும் கேடயமும்

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே!

அருமை நண்பர் மாரிமுத்து அவர்களால் கொண்டு வரப்பட்டு—கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைவர் கே. டி. கே. தங்கமணி அவர்களால் வழிமொழியப் பெற்று—இந்த அவையின் விவாதத்திற்கு உட்பட்ட கண்டனத் தீர்மானம் குறித்து இருபதுக்கு மேற்பட்ட உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

மாரிமுத்து அவர்கள் மெத்த பெருந்தன்மையோடு—அவர்கள் கூறிய கருத்துக்கள் நம்மால் ஏற்றுக் கொள்ளப் படக் கூடியவைகளா அல்லவா என்ற நிலைமை இருந்த போதிலும்—தன்னுடைய உரையை இங்கே நிகழ்த்தினார்!

கே. டி. கே. தங்கமணி அவர்களும் மிக்க நிதானமாக இந்தக் கண்டனத் தீர்மானத்தில் தன்னுடைய கருத்துக்களை எடுத்து வைத்து—மாநில அரசின் மீது அவர் சாட்ட வேண்டிய குற்றங்கள் என்றாலும், அல்லது மத்திய அரசின் போக்கில் அவருக்குப் பிடிக்காத அம்சங்கள் இருந்தாலும், அவைகளையும் மிக்க நிதானமாக எடுத்து விளக்கி யிருக்கிறார்கள்!

கண்டனத் தீர்மானம் கொண்டுவர வேண்டுமென்று அதற்கான மரபு கடைபிடிக்கப்பட்டு—இது போன்ற தீர்மானங்கள் வருவதற்கு எத்தனை உறுப்பினர்கள் எழுந்து நின்றார்கள் என்ற எண்ணிக்கையின் அடிப்படைக்குத் தாங்கள் உதவியதாகக் கூறி—ஆனால், கண்டனத் தீர்மானத் திற்கு மாறுபட்ட கருத்துக்களை நிறுவன காங்கிரசுக்

கட்சியின் தலைவர் பொன்னப்ப நாடார் அவர்களும், நடுநிலையோடு தாங்கள் இந்தத் தீர்மானத்திலே இருக்கப் போவதாகச் சொல்லி—மிக உருக்கமான ஆனல் உண்மைகள் கோடிட்டுக் காட்டப்பட்ட வகையில் தங்களுடைய உரையை நிகழ்த்தியிருக்கிறார்கள்.

அ தி.மு.க. கட்சியின் துணைத் தலைவர் அருமை நண்பர் எட்மண்ட் அவர்கள் ஒரு நல்ல வழக்கறிஞராக இருந்து—ட்ட நுணுக்கங்களை மாத்திரம் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்திக்கொண்டு—இந்தக் கண்டனத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசியிருக்கிறார்.

ஆளுங் கட்சியின் தோழமைக் கட்சிகளாக இருக்கின்ற பார்வர்ட் பிளாக்—முஸ்லிம் லீக்—தமிழ்நாடு கம்யூனிஸ்டுக் கட்சி—தமிழரசுக் கழகம் ஆகியவைகளின் சார்பில் பேசிய தலைவர்களும்—உறுப்பினர்களும், இந்தக் கண்டனத் தீர்மானம் எந்த வகையில் தேவையற்றது என்பதற்கான நல்ல பல விளக்கங்களையெல்லாம் எடுத்துக் கூறியிருக் கிறார்கள்.

கண்டனத் தீர்மானத்தின் வாசகமே, 'அவசரக்காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட பிறகு—அதன் தொடர்பாக இந்திய நாட்டின் தலைமையமைச்சர் இந்திராகாந்தி அவர் களால் அறிவிக்கப்பெற்ற இருபது அம்சத் திட்டத்தைத் தமிழகத்திலே தி.மு கழக அரசு நடைமுறைப்படுத்தவில்லை' என்கின்ற குற்றத்தை அடிப்படையாக வைத்துத்தான் கண்டனத் தீர்மானம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

முதலில் இருபது அம்சத் திட்டங்கள் எவையெவை என்பதை நாம் சிந்தித்து ஒரு முடிவிற்கு வருவதற்கு முன்பு—அவைகளை இந்த ஆட்சி ஏற்கெனவே நிறைவேற்றத் தொடங்கியுள்ளதா அல்லவா என்பதற்கான விவரங்களை ஆராய்வதற்கு முன்பு—இதற்கு முன்னோடியாகச் சில கருத்துக்களை இங்கே எடுத்துக் கூற விரும்புகிறேன்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இந்தியத் துணைக் கண்டத்திலே மத்திய அரசின் சார்பிலே அறிவிக்கப்பட்டு—

ஏறத்தாழ இருபத்தைந்தாயிரம் கோடி ரூபாயில் அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவித்து—நான்காவது திட்ட காலம் முடிந்த பிறகு ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான வரைவு ஏடுகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு—இந்தியத் தலைநகரில் எல்லா மாநில முதலமைச்சர்களும் கலந்துகொள்கின்ற தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டம் நடைபெற்று—ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திலே எவ்வளவு தொகை ஒதுக்குவது என்றும் அறிவிக்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மொத்தத் தொகையாக இருபத்தைந்தாயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப் பட்டது. அந்த நேரத்தில் தமிழகத்தை மாத்திரம் கணக்கிலே எடுத்துக்கொண்டு பார்த்தால் — ஒவ்வோர் ஆண்டும் தரப்பட்ட மத்திய அரசின் உதவி என்ற வகையில் எடுத்துக்கொண்டு பார்த்தால்—ஐந்தாண்டுக் காலத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நம்முடைய மாநிலத்திற்கு தரப்பட்டிருக்கின்ற தொகை இருநூறு கோடி ரூபாயாகும்.

இந்த இருநூறு கோடி ரூபாயில் 70 சதவிகிதத்தை நாம் கடனாகத் திருப்பித் தரவேண்டும். அதைத் திருப்பித் தருவது எப்படியென்றால், அடுத்த ஆண்டு நாற்பது கோடியோ—ஐம்பது கோடியோ தரும்போது நாம் திருப்பத் தரவேண்டிய கடனைக் கழித்துக் கொண்டுதான் மீதத்தைத் தருவார்கள்; அந்த வகையில் நாம் அந்தக் கடனைத் திருப்பித் தந்தாக வேண்டும்.

இப்படி நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில்—ஐந்தாண்டுக் காலத்தில் 70 சதவிகிதம் கடனாகவும், 30 சதவிகிதம் மானியமாகவும் தந்த தொகை சற்றொப்ப இருநூறு கோடி ரூபாயாகும்!

இரண்டாண்டுக் காலமாகியும்.....

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம், 'மிகப் பெரிய பிரம்மாண்டமான திட்டம்' என்றெல்லாம் வர்ணிக்கப்

பட்டு—ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்று அறிவிக்கப் பட்ட போது — நாமெல்லாம் மகிழ்ச்சியடைந்தோம்; ஏனென்றால், 'இரண்டு மடங்குக்கு மேலாக ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யத் தொடங்குகிறது. ஆகவே, மாநிலங்களின் தேவைகள் முழுமையாக நிறைவு செய்யப்பட இயலும்' என்றெல்லாம் நினைத்தோம்!

இந்தத் திட்டம், தேசிய வளர்ச்சிக் குழுக் கூட்டத்தில் இரண்டு நாட்கள் விவாதிக்கப்பட்டது; இப்படி விவாதித்து இரண்டாண்டுக் காலமாகிறது; இந்த இரண்டாண்டுக் காலத்திற்குப் பிறகு, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கதி என்ன என்று தெரியவில்லை!

காட்சி மறைந்ததற்குக் காரணம்?

ஐந்தாண்டுத் திட்டம்—ஒவ்வோர் ஆண்டுத் திட்டம் என்கின்ற வகையில்தான்—நிதியை, ஒவ்வொரு மாநிலத் திற்கும் ஒதுக்குகின்ற அளவிற்குச் சுருங்கிப் போய் இருக்கிறது!

இந்த ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்ற இலக்கை நாம் அடைய முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒவ்வோர் ஆண்டுத் திட்டத்திற்கும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் எவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டதோ அந்த அளவுத் தொகைதான் இந்த ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் ஒவ்வோர் ஆண்டிற்கும் நம்முடைய மாநிலத்திற்கு ஒதுக்கப்படுகிறது!

எடுத்துக்காட்டாக, 1974—75-ஆம் ஆண்டிற்கு நாற்பத் தொரு கோடி ரூபாயும், 1975—76-ஆம் ஆண்டிற்கு நாற்பத் தொரு கோடி ரூபாயும், மீதியிருக்கின்ற மூன்றாண்டுகளுக்கும் இதே நிலையிலும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுமானால், ஐந்து ஆண்டிற்கும் மொத்தம் இருநூறு கோடி ரூபாய்தான் கிடைக்கும்!

ஆக, நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் 25 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்தது; அது, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாயாக— இரட்டிப்பாக ஆக்கப்பட்டது; 'பிரம்மாண்டமான திட்டம்' என்று பெரிய தலைப்பில் வெளியிடப்பட்ட அந்தத் திட்டத்திற்கு நாம் ஏறத்தாழ நானூறிலிருந்து ஐந்நூறு கோடி ரூபாய் வரை நிதி உதவியாகப் பெற வேண்டிய கொள்கைக்கு மாறுக, இருநூறு கோடி ரூபாய்தான் பெறவிருக்கிறோம்!

ஆக, ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தைப் போலவேதான் இருக்கிறது; இவர்கள் அறிவித்தது நடைபெறவில்லை!

அப்படியானால், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கதி என்ன—அது என்னவாயிற்று? அந்தக் காட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும்போதே திரை விழுகிறது; நாடகங்களிலே 'ரோடு சீன்' வருவதைப் போலத் திரை விழுகிறது— 'இருபது அம்சத் திட்டம்' என்று அறிவிக்கப்படுகிறது!

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காட்சி மறைந்து, 'இருபது அம்சத்திட்டம்' என்கின்ற புதிய காட்சி வருகிறது!

அறிவித்த திட்டங்களின் நிலை

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பலனை ஒவ்வொரு மாநிலமும் பெற்று—அதாவது, 'மிகுந்த நிதியைப் பெற்றுத் தங்களுடைய திட்டங்களை நிறைவேற்றலாம்—மாநில வளர்ச்சியைப் பெருக்கலாம்' என்று எண்ணிக்கொண்டிருந்த நேரத்தில், 'அது என்னவாயிற்று' என்ற கேள்விக்கு எந்த விதமான பதிலும் இல்லாமல்—இரண்டாண்டுக் காலத்திற்கு முன்பு விவாதித்த ஒரு பெரிய திட்டத்தை எங்கேயோ ஒரு மூலையில் போட்டுவிட்டு—இப்போது, 'இருபது அம்சத் திட்டம்' என்கின்ற ஒன்றை அறிவித்திருக்கிறார்கள்!

நண்பர் சுப்பு அவர்கள் பேசும்போதுகூட, 'அரசியல் சட்டத்தில் முகப்புக் குறிக்கோளில் எவை எவை இருக்

கின்றனவோ அவைகள்தான் இப்போது இருபது அம்சமாக உருவெடுத்திருக்கின்றன' என்று குறிப்பிட்டார்கள்.

1967 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற காங்கிரசுக் கமிட்டியில். 'பத்து அம்சத் திட்டம்' என்கின்ற ஒரு திட்டத்தைப் பிரகடனப் படுத்தினர்கள்; அவைகள் என்னென்ன?—

1. பாங்கிகளைத் தேசியமயமாக ஆக்குதல்;
2. இன்ஷ்யூரன்சைத் தேசியமயமாக ஆக்குதல்;
3. மன்னர் மானியத்தை ஒழித்தல்;
4. கிராமத் திட்டம் — நிலச் சீர்திருத்தம்;
5. நகர்ப்புற சொத்துக்கு உச்சவரம்பு;
6. மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல்;
7. ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு விதித்தல்;
8. கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல்;
9. உணவு வாணிபத்தை அரசே மேற்கொள்ளுதல்;
10. ஏற்றுமதி — இறக்குமதியில், பொருள்வாரியாக முன்னேற்றம் காணுதல்;

என்ற வகையில் பத்து அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டது; இவைகளில், எவை எவை நிறைவேறின—எவை எவை நிறைவேறத் தொடங்கி இடையிலே முறிந்துபோயின—என்பதையெல்லாம் நாம் மறந்துவிடக்கூடாது!

'பாங்குகள் தேசியமயமாக்கப்படும்' என்று அறிவித்தார்கள்; பதினான்கு வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன; அதற்குமேல் எடுத்தடி வைக்கவில்லை!

இன்ஷ்யூரன்சு தேசியமயமாக ஆக்கப்பட்டது; மன்னர் மானியம் ஒழிக்கப்பட்டது; கிராமத் திட்டம்—நிலச் சீர் திருத்தம் என்பது இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்ற இருபது அம்சத் திட்டத்தில் ஒன்று; நகர்ப்புறச் சொத்துக்கு

உச்சவரம்பு—இதுவும் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்ற திட்டத்தில் ஒன்று; மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்தல்—இது என்னென்ன என்று குடுப்பிட்டுத் தெளிவாகச் சொல்லாமல் பொதுவாகச் சொல்லப்பட்ட ஒன்று; அடுத்து ஏகபோக உரிமைக்குக் கட்டுப்பாடு செய்தல் என்பது; என்ன காரணத்தாலோ, இந்த இருபது அம்சத் திட்டத்தில் அது இடம் பெறவில்லை!

கூட்டுறவுத் துறையை விரிவுபடுத்துதல் என்பது அப் போது அறிவிக்கப்பட்டபோதும் சரி—அதற்கு முன்பும் சரி —தமிழகத்தில் கூட்டுறவுத் துறை விரிவுபடுத்தப்பட்டு — மேலும் மேலும் அது விரிவுபடுத்தப்பட்டிருப்பதை யாரும் மறுப்பதற்கில்லை!

ஆனால் இப்போது அவர்கள், இந்த இருபது அம்சத் திட்டத்தில் கூட்டுறவுத் துறையை விட்டுவிட்டு, அதற்குப் பதிலாக ஒரு புதிய அம்சத்தைச் சேர்த்திருக்கிறார்கள்!

பத்து அம்சத் திட்டத்தில் ஒன்பதாவது, 'உணவு வாணி பத்தை அரசே மேற்கொள்ளுதல்' என்பதாகும்; அதன்படி கோதுமை வியாபாரத்தை அரசு மேற்கொண்டது. கொஞ்ச நாட்களுக்கெல்லாம், 'அது சரிப்பட்டு வரவில்லை' என்று கைவிட்டுவிட்டார்கள்!

அதற்கு அடுத்தது, 'ஏற்றுமதி—இறக்குமதியில் பொருள் வாரியாக முன்னேற்றம் காணுதல்' என்பதாகும்; அதுவும் முழுமையாகச் செயல்படுத்தப்பட்டதாகத் தெரியவில்லை!

ஆதரவு நல்கினோம் - ஆத்திரப்பட்டனர்

இந்தப் பத்து அம்சத் திட்டத்திற்குப் பிறகு, இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கிறது; 'இந்த இருபது அம்சத் திட்டத்தை நாங்கள் ஏற்று நடத்தவில்லை அல்லது எதிர்க்கிறோம்' என்றெல்லாம் தவறாகக் குற்றச்சாட்டுகளைச் சுமத்துகின்ற நேரத்தில், 'பத்து அம்சத் திட்டத்திலே கழகம் தன்னுடைய ஆதரவை அளித்திருக்கிறது' என்பதற்கு ஏராள மான சான்றுகளை நாங்கள் காட்டமுடியும்!

ஹண்டே :—''ஐந்தாண்டுத் திட்டம் வேறு—இருபது அம்சத் திட்டம் வேறு; இரண்டிற்கும் வேறுபாடு உள்ளது என்று நான் நினைக்கிறேன்.''

அனந்தநாயகி :—''உண்ண உணவும்—உடுக்க உடையும்—இருக்க இடமும் அத்தியாவசியத் தேவைகளாகும்; அதைத்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள்; இன்னும் எப்படித் தெளிவாகச் சொல்லமுடியும்?''

முதலமைச்சர் :—''பொதுவாகச் சொல்லப்பட்டிருக்கிறது; 'வேக்'காக இருக்கிறது! அதைப் புரிந்து கொள்ள வேண்டும்; அப்படியென்றால், இப்போது ஒவ்வொன்றிற்கும் தனியாகச் சொல்லவேண்டிய அவசியம் என்ன வந்தது? 'இருபது அம்சத் திட்டம்' என்று கொஞ்சம் விரிவாக்கிச் சொல்லியிருக்கிறார்கள்; நாங்கள், பத்து அம்சத் திட்டத்தைக்கூட எதிர்க்கவில்லை; பத்து அம்சத் திட்டம் அறிவிக்கப்பட்டபோது நாங்கள் அதனை ஆதரித்தோம்.

பாங்குகளைத் தேசியமயமாக்கியபோது—எந்த மாநிலத்திலும் செய்யாத அளவிற்கு—தலைமையமைச்சரைத் தமிழகத்திற்கு அழைத்து, பதினொரு பொருள்களைப் பரிசாக அவருக்கு வழங்கினேம்!

இப்போது அங்கே இருக்கின்ற அனந்தநாயகி அம்மையார் போன்றவர்கள்—வேறு கட்சியில் இருந்து அதைப் பார்த்து ஆத்திரப்பட்டனர்!

ஹண்டே அவர்களின் கேள்வியைப் பொறுத்தவரையில், 'ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்குத் திரை போட்டு விட்டு, இருபது அம்சத் திட்டம் என்பதற்கு வந்திருக்கிறோம்' என்றுதான் சொல்ல விரும்புகிறேன்.

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஐம்பத்து மூவாயிரம் கோடி ரூபாய் என்னவாயிற்று? இந்தத் தொகையையே மாநிலங்களுக்குக் கொடுக்க முடியாத அளவில், 'இருபது அம்சத் திட்டம்' என்று சொல்லி—இதற்கு

ஆகின்ற செலவை மாநிலங்களுக்கு எப்படித் தரப் போகிறீர்கள்? இந்தக் கேள்வியின் அடிப்படையில்தான் இதைத் தெரிவித்தேன்.

தமிழக அரசு கவனம் செலுத்தவில்லையா?

இருபது அம்சத் திட்டங்கள் எவை எவை? ஐந்தாறு திட்டங்களை மட்டுமே இங்கே பேசிய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் கோடிட்டுக்காட்டினார்கள்.

முதல் அம்சமாக—

''இன்றியமையாப் பண்டங்களின் உற்பத்தியை ஊக்குவிக்கவும், கொள்முதலை விரைவுபடுத்தவும், வழங்கு பணியைக் சீரமைக்கவும், அரசு பல தொடர் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்''

என்று தலைமையமைச்சர், வானொலியில் அறிவித்தார்கள்; அரசு இதிலே கவனம் செலுத்தியதா—இல்லையா?

இந்த ஆண்டு ஜூன் திங்கள் தொடங்கி நிலவி வருகின்ற வாய்ப்பான பருவமழையின் நிலைமைகளைஒட்டி வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கத் தீவிர நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது; அதற்கு எடுத்துக்காட்டாகச் சொல்ல வேண்டுமானால், தலைமையமைச்சர் குறிப்பிட்டிருக்கிறார்களே—அந்த உற்பத்தி முனையிலேகூட—பொதுவாக ஆண்டு ஒன்றுக்கு 9,500 டன் விதை நெல்தான் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது; நடப்பு வேளாண்மைப் பருவத்தில் 18,000 டன் விதை நெல் கொள்முதல் செய்யப்படும்; ஆகவே, அந்தத் திட்டத்திற்கு அனுசரணையான காரியங்கள் தான் இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கின்றனவேயன்றி, எதிர்ப்பான காரியங்கள் ஏதும் இங்கே நடைபெறவில்லை என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

புதிய நெல் வகைகளான 'ஏ.டி.டி. 31'—'பூசா 33' ஆகியவைகள் அறிமுகப்படுத்தப்பட்டு 'ஏ.டி.டி. 31' பயிரிடப்படும் பரப்பு ஓர் இலட்சத்து முப்பதாயிரம் ஏக்கர்

என்கின்ற அளவிலும் 'பூசா 33' பயிரிடப்படும் பரப்பு ஐம்பத்தாறுயிரம் ஏக்கர் என்கின்ற அளவிலும் பயிரிடப்படுகிறது.

வேளாண்மைஉற்பத்திக்கு உரம் மிகவும் முக்கியமானது; பொதுவாக ஓர் ஆண்டுக்கு வழங்கப்படும் உரத்தின் அளவு 20,520 டன்தான்; இந்த ஆண்டு ஆகஸ்டு மாதம் வரையில் மாத்திரம் வழங்கப்பட்டிருக்கின்ற இரசாயன உரத்தின் அளவு 25,123 டன்; மேலும் சம்பா பயிர்களுக்கெல்லாம் உரம் வழங்கவிருக்கிறோம்; ஆகவே, உரத் தட்டுப்பாடும் இல்லை—உற்பத்தி முனையிலும் நாம் தீவிரமாகவே இருக்கிறோம்.

விளைச்சல் பெருக ஆவன செய்யவில்லையா?

அதைப் போலவே, பூச்சிகளால் ஏற்படுகின்ற தொல்லையைக் கட்டுப்படுத்தவும்...அதை அறவே நீக்குவதற்கும் தெளிப்பான்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அந்த முனையிலும் அலுவலாளர்கள் அயராது பணியாற்றி வருகிறார்கள்; பயிர்களைப் பாதுகாக்கும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறோம்!

வறட்சி நேரத்தில்...விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையில், 'டீசல் எஞ்சின்கள் வைத்துக்கொள்பவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்' என்று அறிவித்து—அப்படி வழங்கியதின் மூலம் இதுவரையில் 12,200 பேர் பயன் பெற்றிருக்கிறார்கள்; ஏற்கெனவே அறிவித்தபடி, பதினேந்தாயிரம் பேர்களுக்கு இந்தப் பயன் கிடைக்கத்தக்க வகையில் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் ரூபாய் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம்; வறட்சியால் பாதிக்கப்பட்ட உழவர்களுக்கு இந்த மானிய உதவி எவ்வளவு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதை விவசாயப் பெருங்குடி மக்கள் அறிவார்கள்!

'உற்பத்தி முனையில் தீவிரம் காட்டப்பட வேண்டும்' என்று தலைமையமைச்சர் அறிவித்ததால், இவைகளை எல்லாம் விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சோள விதைகள் மாத்திரம் இந்த ஆண்டு கோடைப் பருவத்தில், கோவை—திருநெல்வேலி—மதுரை—சேலத்தில் ஒரு பகுதி—ஆகிய மாவட்டங்களில் 500 டன் வீரிய ஒட்டுச் சோள விதைகளும், மக்காச் சோள விதைகளும் வழங்கப் பட்டிருக்கின்றன.

1974-75-இல், அரிசி உற்பத்தி 41.66 இலட்சம் டன்னாக இருந்தது; இந்த ஆண்டும்—சென்ற ஆண்டைப்போல் இயற்கையின் கொடுமை இல்லாமல் இருக்குமானால்—1975—76-இல் அரிசி உற்பத்தி அறுபத்தோர் இலட்சம் டன் ஆக இருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

1974-75-இல், சோளம், கம்பு, மக்காச் சோளம் ஆகிய வற்றின் உற்பத்தி ஏழு இலட்சத்து எழுபத்தி நான்காயிரம் டன் என இருந்ததற்கு மாறாக, 1975—76-இல் எதிர்பார்க்கப் படும் உற்பத்தியின் அளவு பதினேழு இலட்சம் டன்னாகும். 1974—75-இல் பருத்தி உற்பத்தி இரண்டு இலட்சத்து இருபதாயிரம் பேல்கள்; 1975—76-இல், அது, நான்கு இலட்சம் டன்கள் என்ற அளவிற்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்!

கரும்பு சாகுபடி—சங்கடத்திற்கு ஆளாகிறோம்!

கரும்பைப் பற்றித் தங்கமணி அவர்கள்கூட சொன்னார்கள்; மத்திய அரசிடமிருந்து வந்துள்ள கடிதத்தில், 'லெவி சர்க்கரைக்கான விலையை உயர்த்த இயலாது' என்று சொல்லப்பட்டிருக்கிறது; அப்படிச் சொல்லியிருப்பது, அகில இந்திய அளவிலா என்றால், இல்லை; வடபுலத்தில் இருக்கின்ற மாநிலங்களுக்கு உயர்த்தித் தரப்படும்; ஆனால், நம்முடைய கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது; இதனை அவர்கள் திட்டவட்டமாக அறிவித்திருக்கிறார்கள்!

இதன் காரணமாகக் கரும்புச் சாகுபடி செய்கின்ற விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள் என்பதையும்—அதன் காரணமாகக் கரும்புச் சாகுபடி குறையும் என்பதையும்—தவிர்க்க முடியாத சில சிரமங்களுக்கு நாம் ஆளாக நேரிடும்

என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துக்காட்டாமல் இருக்க முடியாது.....

கே. டி. கே. தங்கமணி:— ''சர்க்கரை விலை சம்பந்தமாக, 'லெவி சர்க்கரை' என்றும், 'லெவிக்கு அப்பாற்பட்ட சர்க்கரை' என்றும் இருப்பது சரியல்ல என்பது எங்களுடைய நிலை; 'லெவி' சர்க்கரைக்கு விலை நிச்சயிக்கும் நேரத்தில், தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம் ஆகிய மாநிலங்களுக்கு அதிகமாகக் குறைக்கப்பட்டிருக்கிறது; பொதுவாக, ஒரே விலை இருக்க வேண்டும் என்ற நிலையை அரசு இங்கே எடுக்குமானால், அதை ஆதரிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.''

முதலமைச்சர்:— ''நான் இதை மகிழ்ச்சியோடு வரவேற்கிறேன்; இதுபற்றி நான் முதலில் சொல்லும்போது, தங்கமணி அவர்கள் நிதானமாக—நியாங்களை உணர்ந்து பேசினார்கள்' என்று சொன்னேன்...

பி. சீனிவாசன்:— ''மத்திய அரசு அந்தக் கோரிக்கையை நிராகரிக்க ஏதாவது காரணங்கள் இருக்கிறதா? என்ன காரணம் சொல்கிறார்கள்?''

முதலமைச்சர்:— ''இப்போதுதான் காரணங்களே எதற்கும் கேட்கக்கூடாதே!''

தலைவர் அவர்களே! கடுமையான வறட்சி நேரத்தில் கூட, தமிழகத்தில் உள்ள மொத்தம் 98 இலட்சம் குடும்பங்களில் 52 இலட்சம் குடும்பங்களுக்கு நாம் போதிய அளவு தர முடியாவிட்டாலும், ஓரளவு அரிசியை வழங்க முயற்சிகளை மேற்கொண்டோம்; அதற்கு நாம் எடுத்த நடவடிக்கையாகத் தமிழ்நாடு உணவுப் பொருள் வழங்கும் கார்ப்பரேஷன் சார்பிலும்—கூட்டுறவுச் சங்கங்கள் சார்பிலும் உள்ளாட்சி மன்றங்கள் சார்பிலும் நடத்தும் சில்லறை விற்பனைக் கடைகள் மூலம்—9,926 நிலையங்களின் மூலம் 52 இலட்சம் குடும்பங்களுக்கு நாம் அரிசி வழங்கும் ஏற்பாட்டைச் செய்து முடித்தோம்!

நகர்ப் பகுதியில் ஐநூறு ரூபாய்க்குமேல் வருமானம் உள்ளவர்களுக்கு மாதம் ஒன்றுக்குப் பத்து கிலோ அரிசி—சென்னை, கோவை ஆகிய இடங்களில் வழங்கப்பட்டு வந்தது; அதை இப்போது இருபது கிலோவாக உயர்த்தியிருக்கிறோம்; அதோடு மாத்திரமில்லாமல், திருச்சி—சேலம் ஆகிய நகரங்களுக்கும் இந்தத் திட்டத்தை முதல் கட்டமாக நாம் நிறைவேற்றியிருக்கிறோம்!

தலைமையமைச்சர் அறிவித்த முதல் அம்சத்திற்கு நான் அளித்த விளக்கம் இது!

நிலமற்றவர்களுக்கு நில விநியோகம்

இரண்டாவது அம்சமாக—

> ''நமது மக்களில் மிகப் பெரும்பாலோர் கிராமப் பகுதிகளில் வாழ்கின்றனர்; நில உச்ச வரம்புச் சட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்தி—சிலரிடம் உபரியாக இருக்கும் நிலங்களை எடுத்து நில மற்றவர்களுக்குப் பிரித்துக் கொடுக்க வேண்டும்; நில உடைமை ஆவணங்களைத் தயாரித்து முடிப்பதில் உள்ளூர் மக்களின் உதவி நமக்குத் தேவையாகும்'' என்பதாகும்.

தலைமையமைச்சரின் இந்த இரண்டாவது அம்சத்தின் படி, உபரி நிலத்தை நாம் எவ்வளவு எடுத்து வழங்கியிருக்கிறோம் என்பதைப் பார்க்க வேண்டும்.

''நூறு புதிய சாதனைகள்'' என்று ஒரு புத்தகம் போட்டிருக்கிறார்கள்; அதில் இந்த விவரம் தவறாக இருக்கிறது; தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் கூட, 'பத்து இலட்சம் ஏக்கர் நிலம் விநியோகிக்கப்பட்டிருக்கிறது' என்று சொல்லியிருக்கிறார்கள்; அப்படிப் பத்து இலட்சம் ஏக்கர் விநியோகிக்கவில்லை; அது இயலாததும்கூட!

'' அவசர நிலை பிரகடனத்திற்குப் பிறகு தமிழ் நாட்டில் பத்து இலட்சம் ஏக்கர் நிலத்தை விநியோகித்திருக்கிறார்கள்''

என்று சொல்லப்பட்டிருக்கிறது; இது என்ன—'மாயா பஜாரா?'

அவசர நிலை பிரகடனத்திற்குப் பிறகு எல்லா மாநிலங்களும், நில மறு விநியோகத் திட்டத்தைத் தீவிரப்படுத்தியுள்ளன; கேரளத்தில் ஓர் இலட்சத்து முப்பதாயிரம் ஹெக்டர் கொடுக்கப்பட்டது; இதுவும் சரியாக இருக்க முடியாது; கேரள அரசைக் கேட்டால், இல்லை' என்றுதான் சொல்வார்கள்.....

பி. சீனிவாசன்:— '''சைபர்' தவருக அச்சிடப்பட்டிருக்கும்.''

முதலமைச்சர்::— ''ஒன்று என்று போட்டு பக்கத்திலே சைபர்களைப் போட்டிருந்தால், ஒரு சைபர் அதிகமாக ஆகியிருக்கலாம் என்று நினைக்கலாம்; ஆனால் இதிலே, பத்து என்று எண்ணால் எழுதி—அதற்குப் பக்கத்திலே இலட்சம் என்று எழுத்தால் எழுதியிருக்கிறது.''

அனந்தநாயகி: ''இந்தத் தகவலைத் தவருகத் தமிழக அரசினர்தான் கொடுத்திருக்கிறார்கள்.''

முதலமைச்சர்:— ''அப்படித் தவருக நாங்கள் கொடுத்திருந்தால், 'பத்து இலட்சம் ஏக்கர்' என்று நாங்களேகூட ஜம்பம் அடித்துக் கொண்டிருக்கலாம்.''

ஆகவே, 'நூறு புதிய சாதனைகள்' என்ற புத்தகம் சில தவருன தகவல்களைத் தருகின்ற காரணத்தால், இதை நான் மேற்கோளாக எடுத்துக் காட்ட விரும்பவில்லை.

1967-க்கு முன்பு 6—4—60-இல் உச்ச வரம்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது; அந்தச் சட்டம் வந்த பிறகு, ஏழாண்டுக் காலத்தில் உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது—24,194 ஏக்கர்; இதிலே அரசு கைப்பற்றியது—15,330 ஏக்கர்; மற்றவர்களுக்கு ஒப்படை செய்தது எதுவுமே இல்லை; உபரி நிலம் யாருக்கும் வழங்கப்படாத காரணத்தால் பயனடைந்தவர்கள் யாரும் இல்லை!

தமிழ்நாட்டிற்குக் கிடைத்த நற்சான்று

1967-க்குப் பிறகு உபரி நிலமாக அறிவிக்கப்பட்டது 1,08,068 ஏக்கர்; அதிலே அரசு கைப்பற்றியது 88,146 ஏக்கர்' நிலமற்றவர்களுக்கு ஒப்படை செய்தது 62,682 ஏக்கர்; பயனடைந்த உழவர் பெருமக்கள் 38,504 பேர்; இதுதான், '15 ஸ்டாண்டர்டு ஏக்கர்' என்ற உச்சவரம்புச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் காரணமாக ஏற்பட்ட பயன்!

அந்தச் சட்டத்தை 15—2—70-இல் கொண்டுவந்தோம்; அந்தச் சட்டத்திற்குப் பிறகு நாம் எடுத்த வேகமான நடவடிக்கைளின் காரணமாக 62,682 ஏக்கர், நிலமற்றவர்களுக்கு ஒப்படை செய்யப்பட்டிருக்கிறது.

அகில இந்திய ஆளும் காங்கிரசுக் கமிட்டி கூட ஒரு நல்ல மதிப்புரையை— 'இந்தியாவிலேயே நில உச்சவரம்பில்—நிலச் சீர்திருத்தத்தில் தமிழ்நாடுதான் இன்றைக்கு முன்னணியில் நிற்கிறது' என்ற நற்சான்றை அளித்திருக்கிறது!

பழத் தோட்டங்களுக்கு விதிவிலக்கு

கே. டி. கே. தங்கமணி அவர்கள், 'இதிலே பழத் தோட்டங்களுக்கு இருக்கின்ற விதிவிலக்கை நீங்கள் இன்னும் எடுக்கவில்லையே' என்று கேட்டார்.

எல்லாப் பழத் தோட்டங்களின் விஸ்தீரணமும் 18,169 ஏக்கர்தான்; பழத் தோட்டங்களை உச்சவரம்பின் கீழ்க் கொண்டுவந்தால், அதனுடைய உற்பத்தி கெடும்—வெளி மாநிலங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதியாவதும் கூடக் கெடக்கூடும் என்பதற்காகத்தான்—விஸ்தீரணமும் குறைவாக இருப்பதால் விட்டுவிட்டோம்!

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்லாம்; மைசூரில் ஆயிரம் ஏக்கரில் 'லிஞ்சேலே' என்ற செடி வளர்க்கப்படுகிறது; அந்த இடம் தேவிகாராணி என்கிற பழைய சினிமா

நட்சத்திரத்திற்குச் சொந்தமானதாகும்; அங்கு வாசனைப் பொருள் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதற்காக விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

ஆயிரம் ஏக்கரில்தான் அந்த வாசனைப் பொருள் உற்பத்தியானாலும், அவைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடியும் என்பதற்காக விதிவிலக்கு எப்படிக் கர்னாடகத்தில் அளிக்கப்பட்டிருக்கிறதோ—அதைப்போலத்தான், பழத் தோட்டங்களுக்கு இங்கே விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது; அதன்றி, வேறு ஏதும் அல்ல!

நாம் எத்தனை விதிவிலக்குகளை ரத்து செய்திருக்கிறோம்? கரும்பாலை நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது—அதை ரத்து செய்துவிட்டோம்! அதைப்போலவே, மேய்ச்சல் நிலத்திற்கு விதிவிலக்கு இருந்தது — அவைகளையும் ரத்து செய்து விட்டோம்!

அறக் கட்டளைகளுக்கு வரம்பு நிர்ணயம்

பொது அறக் கட்டளைகளுக்கு ஒரு வரம்பு வைத்து விட்டோம்; இந்த வரம்பு, கேரளத்தில்—ஆந்திரத்தில் கிடையாது; பொது அறக் கட்டளைகள் அங்கே எவ்வளவு வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்; ஆனால் அதிலே வருகின்ற வருமானம், அறக் கட்டளைக்கே செலவழிக்கப்பட வேண்டும் — இது அங்கே!

இங்கே நாம், 'பொது அறக் கட்டளைகள் இவ்வளவுதான் வைத்துக்கொள்ள வேண்டும்; அதிலே வருகின்ற வருமானம் அதற்கே செலவாக வேண்டும்' என்று சட்டம் செய்திருக்கிறோம்; அதுவும், 1—3—72-இல் என்னென்ன அறக் கட்டளைகள் இருந்தனவோ, அவைகளுக்குத்தான் அது பொருந்தும்.

அதற்குப் பிறகு, 'புதிதாக அறக் கட்டளைகள் தோன்றி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது' என்று சட்டம் போட்டிருக்கிறோம்!

இந்தப் பொது அறக் கட்டளைகளில்—கல்லூரி என்ருல் நாற்பது ஸ்டாண்டர்டு ஏக்கர்; உயர்நிலைப் பள்ளி என்ருல் 20 ஸ்டாண்டர்டு ஏக்கர்; ஆரம்பப் பள்ளி என்ருல் 10 ஸ்டாண்டர்டு ஏக்கர்; மாணவர் விடுதி என்ருல் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர்; தொழிற் கல்விக்கூடங்கள் என்ருல் 25 ஸ்டாண்டர்டு ஏக்கர்; விவசாயப் பள்ளிகளுக்கு 25 ஸ்டாண்டர்டு ஏக்கர்; மற்ற அறக் கட்டளைகளுக்கு ஐந்து ஸ்டாண்டர்டு ஏக்கர் என்றும், அதற்குமேல் வைத்துக் கொள்ளக் கூடாது என்றும் வரம்பு நிர்ணயித்திருக்கிறோம்.

குத்தகை உரிமைப் பதிவேட்டுச் சட்டம்

அடுத்து, குத்தகைதாரர்—சாகுபடிதாரர்; 'இதற்கெல்லாம் ஆவணங்கள் வேண்டும் — பதிவு முறை வேண்டும்' என்று தலைமையமைச்சர் அறிவித்திருக்கிறார்.

நாங்கள் அதையும் செய்திருக்கிறோம்; அறிவித்த பிறகு அல்ல—1969-லேயே தமிழ்நாடு வேளாண்மை நிலக் குத்தகை உரிமைகள் பதிவேட்டுச் சட்டத்தை நாம் நிறைவேற்றியிருக்கிறோம்.

இதுவரையில் பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் எண்ணிக்கை 3,99,350 என்று கணக்கெடுத்திருக்கிறோம்; அவர்களின் அனுபோகத்தில் உள்ள நிலம் 6,03,897 ஏக்கர் என்றும் கணக்கை இதுவரை முடித்திருக்கிறோம்.

பட்டா விவரக் குறிப்பேடுகள்

அஃதன்னியில், நில உடைமையாளர் வைத்திருக்கின்ற நிலத்திற்கான கணக்கு விவரங்களோத் தெரிந்துகொள்வதற்கான கணக்கு விவரங்களோத் தெரிந்து கொள்வதற்காக—நிலச் சீர்திருத்தங்களுக்கு மேலும் பயன்படும் என்ற வகையில், 'பட்டா விவரக் குறிப்பேடு என்ற ஒன்றை ஒவ்வொரு விவசாயியும் வைத்துக்கொள்ள வேண்டும்' என்று 1972-இல் ஒரு திட்டம் கொண்டுவந்தோம்! இதுவரை கொடுக்கப்பட்ட அப்படிப்பட்ட பட்டா விவரக் குறிப்பேடு

களின் எண்ணிக்கை ஒரு கோடியே நான்கு இலட்சமாகும்; இதற்கான செலவு ஒரு கோடி ரூபாயாகும்.

தரிசு நிலங்களை ஒப்படை செய்தல்

'தரிசு நிலங்களை ஒப்படை செய்ய வேண்டும்' என்பது தலைமையமைச்சரின் இருபது அம்சத் திட்டங்களிலே ஒன்றாகும்.

நாடு சுதந்தரம் பெற்ற 1947-லிருந்து 1967 வரை தமிழகத்தில் ஒப்படை செய்யப்பட்ட நிலம் 2,88,000 ஏக்கர்; பயனடைந்தவர்கள் 1,15,000 பேர்.

1967-க்குப் பிறகு இந்த எட்டாண்டுக் காலத்தில் நாம் ஒப்படை செய்த நிலம் 7,19,000 ஏக்கர்; பயனடைந்தவர்கள் 3,69,000 பேர்!

உச்சவரம்பில் புனைமி முறை

இந்த உச்சவரம்பில் பிழைமி எல்லாம் நடந்து விடுவதாக மாரிமுத்து சொன்னார்; ஒன்றிரண்டு நடந்தது; இன்னும் சில, அந்தக் காலத்திலேயே நடந்துவிட்டது; ஒரு முக்கியமான அமைச்சரின் சொந்தக்காரரேகூட—நான் பெயரை எல்லாம் சொல்ல விரும்பவில்லை—அதாவது, 6—4—60 இல், 282 சாதாரண ஏக்கர்—அதாவது 141 ஸ்டாண்டர்டு ஏக்கர் இருந்தது; ஆனால் 2—10—62-க்குள் இந்த 141 ஸ்டாண்டர்டு ஏக்கரில் 135 ஸ்டாண்டர்டு ஏக்கரை, அந்த 'அமைச்சருக்குச் சொந்தக்காரர்' விற்றுவிட்டார்; உச்சவரம்புச் சட்டத்திலிருந்து தப்பித்துக் கொண்டார்!

இந்த இரண்டாண்டுக் காலத்திற்குள் 6—4—60-இலிருந்து 2—10—62-க்குள் யாரும் இந்தச் சட்டத்தை ஏமாற்றி அவர்களுக்குரிய நிலத்தை விற்கக் கூடாது—என்று இருந்தும் கூட, 'பணம் வருகிறதே அப்பா' என்ற காரணத்தினால்—'உச்சவரம்பு வந்துவிடுமே அப்பா' என்ற அச்சத்தினால்—அவர், 135 ஸ்டாண்டர்டு ஏக்கரை விற்று விட்டார்; அதற்கு அவர்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும்; 1967-க்குள் நட

வடிக்கை எடுத்திருக்க வேண்டும்; 1967 வரையில் அவர்மீது நடவடிக்கை எடுக்கவில்லை; 1967-க்குப் பிறகு—அண்ணா அவர்கள் தலைமையில் கழக ஆட்சி வந்த பிறகுதான்—அந்த தவறுக்கு நடவடிக்கை இந்த அரசின் சார்பில் எடுக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, மிகச் சாதாரணமானவர்களால் கூட அந்த பிழைமி முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை; அமைச்சரவையில் மிக முக்கியமான ஒருவரின் சொந்தக்காரரால்.....

அனந்தநாயகி:— ''அவர்கள் யார் என்று சொல்வதுதானே? செய்தது தவறு: அமைச்சரின் சொந்தக்காரர் என்றால் யார் என்று சொல்வதுதானே?''

முதலமைச்சர்:— ''நண்பர் வரதப்பன். அம்மையார் அவர்களுக்கு அதைச் சொல்ல வேண்டுமென்று விருப்பம்!''

அனந்தநாயகி:— ''நான் சொல்ல விரும்புவதை எல்லாம் சொல்வீர்களா என்ன? எப்படியோ என்னை வம்பில் இழுத்து விடுவதற்காக இதை ஏன் சொல்ல வேண்டும்?''

கிராமப் பகுதிகளில் வீட்டுமனை வழங்குதல்

மூன்றாவது அம்சமாக—

''கிராமப் பகுதிகளில் வீட்டு மனைகள் வழங்கும் திட்டம் வெகுவாக விரிவாக்கப்படும்; நிலமற்றவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கச் சட்டங்கள் கொண்டு வரப்படும்'' என்பதாகும்.

அண்மையில் மத்திய அரசு தயாரித்திருக்கின்ற ஓர் ஆய்வின்படி, குடியானவர்களுக்கு வீட்டு மனைகள் வழங்கும் திட்டம், பீகார்—குசராத்—ஜம்மு, காஷ்மீர்—ஒரிசா—தமிழ் நாடு ஆகிய மாநிலங்களில் மாத்திரமே நடைபெற்று வருகிறது; அதிலும், தமிழ்நாட்டில் மாத்திரமே குடியானவர்களுக்கும்—உழவுத் தொழிலாளர்களுக்கும் வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்படுகின்றன; மற்ற மாநிலங்களில்,

இந்த மனைகளைப் பெறுவதற்கு அதன் விலையை உழவர்கள் செலுத்தியாக வேண்டும்.

1971-ஆம் ஆண்டில், தமிழ்நாடு குடியிருப்பு அனுபோக தாரர்கள் சட்டத்தைச் செய்தோம்; 1975-இல் அல்ல—இருபது அம்சத் திட்டம் வானொலியில் அறிவிக்கப்பட்ட பிறகு அல்ல—1971-லேயே செய்தோம்!

இந்தச் சட்டத்தின் கீழ் குடியிருப்பு மனை பெற்றவர்கள் 1,75,000 பேர்கள்; இவர்களில் தாழ்த்தப்பட்ட பெருங்குடி மக்கள் 1,02,404 பேர்கள்; பிற்படுத்தப்பட்டவர்கள் 40,550 பேர்கள்; இதர வகுப்பினர் 32,123 பேர்கள்; இதற்காக அரசுக்கு ஆன செலவு கிட்டதட்ட 21 இலட்சம் ரூபாயாகும்!

அரசுக்குச் சொந்தமான நிலத்திலிருந்து வீட்டு மனை ஒப்படை செய்யும் திட்டத்தின் கீழ்—1967-க்கு முன்பு இருபதாண்டுக் காலத்தில்—அப்போதிருந்த ஆட்சியில்—வீட்டு மனை ஒப்படை செய்தது—பட்டா கொடுத்தது 63,770 பேர்களுக்காகும். இந்த எட்டாண்டுக் காலத்தில் பட்டா கொடுத்திருப்பது 5,03,697 பேர்களுக்காகும்!

அரிசன மக்களுக்கு மட்டும் நிலத்தை ஆர்ஜிதம் செய்து கொடுத்த வகையில் இதுவரையில் 2,36,000 அரிசன குடும்பங்கள் பயன் பெற்றிருக்கின்றன; இதற்கான செலவு நான்கு கோடியே இருபத்தைந்து இலட்சமாகும்!

கழக அரசு கட்டித் தந்த குடியிருப்புகள்

இதைத் தவிர, தலைமையமைச்சர் குறிப்பிடாத அம்சமாக 30,000 அரிசனங்களுக்கு டிசம்பர் இறுதிக்குள் நல்ல கெட்டியான வீடுகள்—ஒரு வீடு நான்காயிரம் ரூபாய் பெறுமானமுள்ள அளவிற்குக் கட்டித் தர திட்டமிட்டு, அது முடிவடையவிருக்கிறது; இதற்கான செலவு பதின் மூன்றரை கோடி ரூபாயாகும்.

அதைப் போலவே, மீனவர்களுக்கு ஐந்தாயிரம் வீடுகள் முதற்கட்டமாகக் கட்டித் தர இரண்டு கோடி ரூபாய் ஒதுக்

கப்பட்டு—அந்த வேலைகளும் வேகமாக நடைபெற்று வருகிறது; இது, தலைமையமைச்சரின் இருபது அம்சத் திட்டங்களிலேயே இல்லாத ஒன்றாகும்.

குடிசை மாற்று வாரியத்தின் சார்பில்—இது 1975-க்குப் பிறகு அல்ல—அவசரச் சட்டத்திற்குப் பிறகு அல்ல—அவர்கள் அறிவித்ததற்குப் பிறகு அல்ல—1970-71-லேயே தொடங்கப்பட்டு, வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் 3,220 குடியிருப்புகள்—குடிசைமாற்று வாரியத்தின் சார்பில் 17,019 குடியிருப்புகள்—இவைகள் முடிவுற்று, கட்டிக்கொண்டிருக்கின்ற குடியிருப்புகளின் எண்ணிக்கை 3,312; ஆக, பதினேழு கோடி ரூபாய் செலவில் ஏறத்தாழ இருபதாயிரம் வீடுகள் குடிசை வாசிகளுக்காகக் கட்டித் தரப்பட்டிருக்கின்றன; இதுவும் இந்திரா காந்தி அவர்களுடைய இருபது அம்சத் திட்டங்களில் இல்லாத ஒன்றாகும்.

இதை நிறைவேற்றியதற்காக வேண்டுமானால்—இவைகளைத் தொடங்கியதற்காக வேண்டுமானால், 'இல்லாததை எல்லாம் நீ எப்படி நிறைவேற்றலாம் என்று நீங்கள் கோபித்துக் கொள்ளலாமே தவிர' வேறு எதுவுமில்லை!

கடன் நிவாரணச் சட்டம்

தான்காவது அம்சமாக—

> ''கிராம மக்களின் கடன் சுமையைப் படிப்படியாகக் குறைக்க—அவர்களிடமிருந்து கடனைத் திரும்பப் பெறுவதற்காக நீதிமன்றத்தை நாடாமல் இருக்க—வழக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்குச் செல்லுபடியாகாமல் இருக்க செய்யவும், கூட்டுறவுச் சங்கங்கள்—வங்கிகள்—அரசுக் கடன்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கு அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்'' என்பதாகும்.

கிராமப்புற மக்களின் கடன் சுமையைப் போக்குவது மாத்திரமில்லாமல், நகர்ப்புற மக்களின் கடன் சுமையைப்

போக்குவதற்கும் 1972-ஆம் ஆண்டில் கடன் நிவாரணச் சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தோம்.

1975-ஆம் ஆண்டில், கடன் பட்டோர் (தற்காலிக நிவாரண) அவசரச் சட்டத்தைக் கொண்டுவந்தோம்.

அண்மையில் ஏற்பட்ட வறட்சியை ஒட்டி, இந்த அவசரச் சட்டம் 1976 ஜனவரியில் அறிவிக்கப்பட்டது.

இந்தச் சட்டத்தின்கீழ் வழக்குத் தொடர்ந்தோ—ஏனைய சட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டோ கடனை வசூலிப்பது ஓராண்டுக் காலத்திற்குக் கூடாது என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கூட்டுறவுச் சங்கம், அரசு ஆகியவைகளின் கடன்களைக் கூட—இதிலே அவைகள் வராது என்றாலும்கூட—அதனுடைய வசூலை ஓராண்டுக் காலத்திற்கு தள்ளிவைக்க இந்த அரசின் சார்பில் கேட்டுக்கொள்ளப்பட்டு, அந்த வசதியும் கிராமப்புற மக்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டதை உறுப்பினர்கள் மறந்துவிடக்கூடாது!

1975-ம் ஆண்டு ஜூலையில் அறிவிக்கப்பட்ட திட்டத்தின்படி, உழவர்கள் அல்லாத ஏனைய கடன்பட்டவர்களும், கடன் சுமையிலிருந்து நிவாரணம் பெறலாம் என்ற நிலையில், '1976 ஜனவரி பதினைந்தாம் தேதி வரையில் வட்டி எதுவும் வசூலிக்கக்கூடாது' என்று இந்தச் சட்டம் 'துயர் தணிப்பு' அளிக்கிறது!

அறவே ரத்து செய்ய இயலுமா?

சிலர் இதனை, 'அறவே ரத்து செய்ய வேண்டும்' என்றெல்லாம் குறிப்பிட்டார்கள்; நண்பர் வி. கிருஷ்ணமூர்த்தி இந்த மசோதா வந்த நேரத்தில் குறிப்பிட்டதை, நாம் அவ்வளவு சாதாரணமாகப் புறக்கணித்துவிட முடியாது!

கடனை அறவே ரத்து செய்வது என்ற அவ்வளவு முற்போக்கான நிலைமைக்கு நாம் செல்வோமேயானால், பிறகு, கடன் கொடுப்பவர்களே இருக்க மாட்டார்கள்!

கடன் கொடுப்பவர்கள் இல்லாத நேரத்தில், கடன் கொடுக்கின்ற வசதிகளைக் கிராமப் புற மக்களுக்கு உற்பத்தியின் அடிப்படையில் இல்லாமல்—அவர்களுடைய விவசாயப் பொருள்களையும், விவசாய நிலங்களையும் காட்டிப் பெறுகின்ற கடனே அல்லாமல், அவர்களுடைய திடீர்த் தேவைகளுக்குக் கடன் தருகின்ற வங்கிகள், கூட்டுறவு இயக்கங்கள் ஆகியவை போன்ற வசதிகள் பெருகிய பிறகுதான் அதைப் பற்றி நாம் யோசிக்க முடியும்!

''எல்லாக் கடனையும் ரத்து செய்ய வேண்டும்'' என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி அவர்களேகூடச் சொல்லியிருப்பதாகத் தெரியவில்லை; 'அவர்களுடைய சுமை ஒழிக்கப்பட வேண்டும்' என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார்கள்; 'அதற்கேற்ப நிவராணம் அளிக்கப்பட வேண்டும்' என்று சொல்லியிருக்கிறார்கள்; அதையும் நாம், படிப்படியாகத் தொடர்ந்து இரண்டு மூன்று ஆண்டுக்காலமாகச் செய்து வருகிறோம்.

ஆகவே, 'இதை முன்பே செய்தோம்' என்ற குற்றத்தைத் தவிர, 'அறவே செய்யவில்லை—செய்ய மறுக்கிறோம்' என்ற குற்றத்தை யாரும் நம்மீது சாட்டிட இயலாது!

உழவுத் தொழிலாளருக்குக் கூலி நிர்ணயம்

ஐந்தாவது அம்சமாக—

''உழவுத் தொழிலாளர்களுக்குத் தற்போதுள்ள குறைந்த ஊதிய விகிதச் சட்டத்தை மறு ஆய்வு செய்தல்; குறைந்த அளவு ஊதியம் தரப்படும் இடங்களில் எல்லாம் இந்த ஊதியத்தை உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்'' என்பதாகும்.

1969-ஆம் ஆண்டில், தஞ்சை மாவட்டத்தில் திரு. கார்த்திகேயன் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது; அக் குழுவால் இந்தக் கூலி நிர்ணயம்—குறைந்தபட்சக் கூலி எவ்வளவு இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டு—அதை நடைமுறைப்படுத்தினோம்.

தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள்—தொழிற் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்—அரசுத் தரப்பினர் ஆகியோரின் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி, ஒரு சுமுகமான முடிவினை எடுத்திருக்கிறோம்.

இப்போது மீண்டும் இந்த அவசரச் சட்டத்திற்குப் பிறகு—அம்மையார் அவர்கள் அறிவித்திருக்கின்ற இருபது அம்சத் திட்டத்திற்குப் பிறகு—மீண்டும் ஒரு குழுவை இன்றைக்கும் நாம் அமைத்து, அந்தக் குழு, நண்பர் சீனிவாசன் அவர்கள் தலைமையில் தன்னுடைய ஆய்வை நடத்தி வருகிறது; அக் குழு, பல்வேறு மாவட்டங்களிலும் இந்த ஆய்வை நடத்தும்.

இதற்கிடையே, 'ஆண்—பெண் ஆகிய இரு சாராருடைய சம்பளமும் சமமாக இருக்க வேண்டும்' என்கின்ற அறிவிப்பையும் மத்திய அரசின் சார்பில் செய்திருக்கிறார்கள்.

அதையும் அடிப்படையாக வைத்து, 'வேலை செய்கின்றவர்கள் ஆண்—பெண்' என்றுகூட இல்லாமல், 'இந்த வேலைக்கு இந்தக் கூலி—அதை ஆண் செய்தாலும் சரி—பெண் செய்தாலும் சரி' என்று நிர்ணயிக்கின்ற அளவிற்கு அந்த குழு தன்னுடைய ஆய்வை நடத்தி விரைவில் ஒரு முடிவினைத் தரும்; அது, அரசின் சார்பில் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பாசன வசதிகளைப் பெருக்கிடுவோம்!

ஆறாவது அம்சமாக—

''உழவுத் தொழிலையும், தொழில் உற்பத்தியையும் பெருக்க நீரும், மின்சாரமும் இன்றியமையாதன; குறைந்தது 50 இலட்சம் ஹெக்டர் நிலத்தையேனும் விரைவில் சாகுபடிக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்'' என்பதாகும்.

ஐம்பது இலட்சம் ஹெக்டர் என்றால், ஒன்றேகால் கோடி ஏக்கர்; இந்தியாவில் ஒன்றேகால் கோடி ஏக்கர் புதிய

பாசன வசதிகளைப் பெற இந்திரா காந்தி அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்னந்திருப்பது பாராட்டக்கூடிய அம்சமாகும்; ஏனென்றால், இந்தியா வேளாண்மைத் தொழிலைப் பெரிதும் நம்பியிருக்கின்ற ஒரு பெரும் பூபாக மாகும்.

இப்படிப்பட்ட இடத்தில், மற்ற தொழிலுக்கு மேலாக வேளாண்மைத் தொழிலுக்கு முதலிடம் தர வேண்டும்; இருபத்தெட்டாண்டுக் காலச் சுதந்திரத்திற்குப் பிறகாவது உணர்ந்து, 'பாசன வசதிகளைப் பெருக்க வேண்டும்' என்ற தொரு நல்ல முடிவை இருபது அம்சத்தின் மூலமாக அறிவித்த இந்திரா காந்தி அம்மையார் அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு விவரத்தை மட்டும் சொல்ல விரும்புகிறேன். 1947-ஆம் ஆண்டு வரை—பாண்டியர்கள், சேரர்கள், சோழர்கள், பல்லவர்கள் என்றெல்லாம் பல மன்னர்கள் ஆண்டு—வெள்ளையர்கள் ஆண்டு முடித்த 1947 வரை—தமிழ்நாட்டில் பாசன வசதி பெற்ற நிலம் சுமார் நாற்பத்து நான்கு இலட்சம் ஏக்கராகும்; அந்தப் பழம்பெரும் மன்னர்களுக்குப் பிறகு—பறங்கியர்களுக்குப் பிறகு—பெரியவர் பக்தவத்சலம் ஆண்டு முடித்த 1967 வரையில்—இருபதாண்டுக் காலத்தில்—மேலும் எட்டு இலட்சம் ஏக்கர் பாசன வசதி பெற்றது.

பக்தவத்சலம் காலத்திற்குப் பிறகு இந்த எட்டாண்டுக் கால எங்கள் ஆட்சியில், மேலும் பதினைந்து இலட்சம் ஏக்கர் பாசன வசதியைப் பெற்றிருக்கிறது!

அது மாத்திரமல்ல; 1967-க்குப் பின்பு புதிய நீர்ப் பாசனத் திட்டத்திற்காக இந்த அரசின் சார்பில் செலவழிக்கப்பட்ட தொகை ரூ. 148 கோடி; செயல் வடிவம் பெற்று வருகின்ற திட்டங்களின் மதிப்பு ரூ. 49 கோடி; இன்னும் மத்திய அரசின் ஒப்புதலுக்காகத் தவம் கிடக்கின்ற திட்டங்களின் மதிப்பு ரூ. 62 கோடி; ஆகவே, 1967-க்குப் பிறகு தம்முடைய உணவு உற்பத்தியின் இலக்கைக் கணக்கிட்டுப் பார்த்தாலே, இந்தப் பாசன வசதியை நாம் எந்த

அளவிற்குப் பெருக்கியிருக்கிறோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

நில நீர்—தமிழகத்திற்குக் கிடைத்த உதவி?

ஏழாவது அம்சமாக

''நில நீர்—பாசன வசதியைப் பெருக்குதல்—வறட்சியால் தாக்குண்ட பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல்—நில நீர் பற்றி மேற்கொண்டு ஆய்வு செய்தல்'' என்பதாகும்.

இவைகளும் மிக முக்கியமான திட்டங்கள்தாம்; இதனை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்கிறோம்.

இந்தியா முழுவதும் எடுத்திருக்கின்ற கணக்கின்படி, நில நீர் வளம் உள்ள பரப்பு 21 கோடியே 36 இலட்சம் ஏக்கர்; அதில் தமிழ்நாட்டில் நில நீர் வளம் உள்ள பரப்பு ஒரு கோடியே பதினைந்து இலட்சம் ஏக்கர்; இது, இந்தியாவின் மொத்தப் பரப்பில் ஐந்தே ஐந்து சதவிகிதம் தான்.

ஆனால், இந்தியா முழுவதிலும் உள்ள மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 24.35 இலட்சம்; தமிழ்நாட்டில் மின் இணைப்புப் பெற்ற பாசனக் கிணறுகள் 7.15 இலட்சம்; இது, இந்தியாவில் உள்ள மொத்தத்தில் முப்பது சதவிகிதம்.

இந்தியாவில் நில நீர் கிடைக்கின்ற மொத்தப் பரப்பில் நாம் ஐந்து சதவிகிதம்; ஆனால் நில நீரைப் பயன்படுத்துகின்ற பம்பு செட்டுகளில் இந்தியாவின் மொத்தக் கணக்கில் நாம் 30 சதவிகிதம்.

அது மாத்திரமல்ல; தலைமையமைச்சர் அறிவித்திருப்பதைப்போல், 'வாட்டர் அட்லாஸ்' தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாகத் தயாரிக்கப்பட்டிருக்கிறது!

தமிழ்நாட்டில் நில நீர் ஆய்வுக்காக இதுவரை செலவழிக்கப்பட்டிருக்கின்ற தொகை ரூ. 7.5 கோடி; இந்தப் பணிக்கெல்லாம் மத்திய அரசின் சார்பில் எந்த விதமான உதவியும் கிடைக்கவில்லை.

குடிநீர்—தமிழ்நாட்டின் அரிய சாதனை

குடி நீர் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்; குடி நீருக்காக மாத்திரம் 1967-க்குப் பிறகு—பாதுகாக்கப்பட்ட குடி நீர் வழங்க ஊராட்சி மன்றங்களின் மூலம் செலவழிக்கப்பட்ட தொகை பதினான்கு கோடியே பதினைந்து இலட்சம் ரூபாய்; தோண்டப்பட்ட கிணறுகள் முப்பத்து மூவாயிரம்; கட்டப்பட்ட தொட்டிகள் நாலாயிரத்து நானூறு.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் சார்பில்—இந்தியாவில் இப்படிப்பட்ட அமைப்பு எங்குமில்லை—தமிழ்நாட்டில் தான் இப்படியோர் அமைப்பை உருவாக்கி—1971-லேயே உருவாக்கி, தலைமையமைச்சரின் வாழ்நெறி அறிவிப்பிற்குப் பிறகு அல்ல—அவசரச் சட்டம் வந்த பிறகு அல்ல—அதற்கு முன்பே உருவாக்கி, அதன் சார்பில், 1971-க்குப் பின் நிறைவேற்றிய திட்டங்கள் 7,736; இதற்காக ஆன செலவு ஏறத்தாழ பன்னிரண்டு கோடி ரூபாய்.

வறட்சித் துயர் தணிப்புப் பணிகளுக்காக மாத்திரம்—குடி நீர் வழங்கும் திட்டத்தின் கீழ் வராத—செலவழித்த தொகை மூன்று கோடியே ஐம்பது இலட்சம்; திட்டத்தின் வாயிலாக 1975—76-ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்டது ஏழு கோடியே பத்து இலட்சம்; ஆக இந்தப் பணிகளும், இருபது அம்சத் திட்டம் அறிவிக்கப்படுவதற்கு முன்பே தொடர்ந்து நம்முடைய தமிழக அரசால் நிறைவேற்றப்பட்டு வருகின்ற திட்டங்களாகும்!

மின் உற்பத்தித் திட்டம் - தமிழகத்திற்குத் தரும் நிதியுதவியின் இலட்சணம்!

எட்டாவது அம்சமாக—

"2,600 மெகாவட் மின் உற்பத்திச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு—மின் உற்பத்தித் திட்டங்களைச் செயல்படுத்தப் போதுமான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்; நீண்ட காலத் தேவைகளை நிறைவு செய்ய மத்திய அரசுத் துறையில் பெரிய அளவில் அனல் மின் நிலையங்கள் நிறுவத் திட்ட மிடப்படும்; மாநில மின்சார வாரியம் சீரமைக்கப் படும்."

இது, தலைமையமைச்சர் அறிவித்த திட்டங்களில் மிக முக்கியமானதாகும்.

தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் மிகப் பெரும் பிரச்சினையாக உள்ள அம்சம் இது; 2,000 மெகாவாட் உற்பத்தி செய்கிறார்கள் என்றால், ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

இந்த நிதி ஆண்டில் —1975—76-இல், இந்தியா முழுமைக்கும் மின் உற்பத்திக்காக மத்திய அரசு ஒதுக்கி யிருக்கின்ற தொகை ரூ. 250 கோடி; தூத்துக்குடி மின் நிலையத்தின் மொத்த மதிப்பீடு ரூ. 129 கோடி; 1974—75-இல் ஐந்து கோடி ரூபாய் அளவிற்குச் செலவிட்டிருக் கிறோம்; 1975-76 இல், ரூ. 18·67 கோடி செலவாகும் என்று மதிப்பீடு செய்திருக்கிறோம்; மாநில நிதியிலிருந்து அதற்கு ரூ. 10 கோடி போட்டுவிட்டோம்; மீதி ரூ. 8·67 கோடியை மத்திய அரசிடம் கேட்டிருக்கிறோம்.

இந்தத் திட்டம் முழுமையாக ஆக வேண்டுமேயானால், 1975—76-இல் ரூ. 18·67 கோடியும், 1976—77-இல் ரூ. 53 கோடியும், 1977—78-இல் ரூ. 30½ கோடியும், 1978—79-இல் ரூ. 17½ கோடியும், 1979—80-இல் ரூ. 4½ கோடியும்

செலவழித்தால்தான் இயலும்; இந்தத் திட்டம் 1979—80-இல் முடிவடையும்.

இந்தியா முழுமைக்கும் ரூ. 250 கோடி என்று பெருந் தொகையை அறிவித்திருக்கிறீர்களே — இதிலிருந்து, பல முறை நாம் கேட்ட பிறகு ஒரு கோடி ரூபாய்தான் — 20 அம்சத் திட்ட அறிவிப்பிற்குப் பிறகு — ஒதுக்கியிருக் கிறீர்கள்!

இதைத்தான் நண்பர் சுப்பு பேசும்போது, 'ஏட்டளவில் வெகு அழகாக எழுதிக் காட்டிவிடுகிறீர்கள்—நிறைவேற்றப் பணம் எங்கே?' என்று கேட்டார்.

இருபத்தோராவது அம்சம் ஒன்று வேண்டாமா? இருபது அம்சத் திட்டத்தைச் சொல்லிவிட்டு, 21-ஆவது அம்சமாக இவ்வளவு கோடி ரூபாய் இன்னின்னவைகளுக்குச் செல வழிக்க ஒதுக்கியிருக்கிறோம்' என்று சொல்லியிருக்க வேண்டாமா?

இந்தியா முழுமைக்கும் ரூ. 250 கோடி; அதில், தமிழ் நாட்டில் மின் உற்பத்தியைப் பெருக்க ஒரே ஒரு கோடி ரூபாய்தான்!

நெய்வேலி எத்தனை ஆண்டுக்காலமாகத் 'தவம்' கிடக்கிறது? பக்தவத்சலம், காமராசர் ஆகியோர் ஆண்ட காலத்திலேயே தொடங்கப்பட்டது—இரண்டாவது சுரங்கம் வெட்டப்பட வேண்டும்' என்ற கோரிக்கை எழுப்பப்பட்டது; அப்போது தொடங்கியிருந்தாலே இப்போதுதான் முடிந் திருக்கும்; அப்படி ஏழெட்டாண்டுகள் ஆகும்; ஆனால், இன்னும் தொடங்கவே இல்லை; நாளைக்குத் தொடங்கினால் கூட இன்னும் ஏழெட்டு ஆண்டுக்காலம் ஆகும்!

இதற்கிடையில், 'ஆந்திரத்திலுள்ள 'இராம குண்டா'த் திட்டத்தை ஏற்றுக்கொள்ளலாமா' என்கின்ற பயங்கரப் பிரச்னை எழுந்தது; இந்தச் செய்தி பற்றிக் கேள்விப்பட்டதும் நான் பிரதமருக்கு எழுதியிருக்கிறேன் — 'நீங்கள், நெய் வேலியைக் கைவிட்டுவிட்டு, ஆந்திரத்தில் 'இராம குண்டா'த்

திட்டத்தை எடுத்துக் கொள்வீர்களேயானால், தமிழ்நாட்டில் மின், உற்பத்தியில் பெரிய இடைவெளி விழநேரிடும்; ஆகவே' 'இராமகுண்டா'த் திட்டத்தை கைவிட்டுவிட்டு நெய்வேலித் திட்டத்தை. ஏற்றுக் கொள்ளுங்கள்; இரண்டாவது சுரங்கத்தை வெட்டுங்கள்'' என்று!

கைத்தறிக்குச் சில ரகங்கள்—எத்தனை ஆண்டுகளுக்குப் பின் இந்தப் பிரச்னை?

ஒன்பதாவதாக—

''கைத்தறியாளர்களுக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டும்'' என்பதாகும்.

இது, கைத்தறியாளர் பிரச்சினை; இதுபற்றி ஏற்கனவே இந்த மாமன்றத்தில் பல நேரங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது.

1974-ஆம் ஆண்டில் நூல் விலையேற்றம் ஏற்பட்டபோது, பன்னிரண்டு நூற்பாலைகளிலிருந்து கிடைத்த உற்பத்தியைக் கொண்டு நெசவாளர்களுக்குப் பதினறரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள நூலை 'கோ-ஆப்டெக்ஸ்'—தமிழ்நாடு கைத்தறி நூல் கழகம்—ஆகிய நிறுவனங்களின் மூலம் தமிழக அரசு வழங்கி, தன்னால் முடிந்த அளவில் கைத்தறியாளர்களுக்கு நன்மையைச் செய்திருக்கிறது!

'கைத்தறிக்குச் சில ரகங்கள் ஒதுக்கப்பட வேண்டும்' என்று தலைமையமைச்சர் இப்போது அறிவித்திருக்கிறார்; இது. 'புதிய திட்டமா?' என்றால் இல்லை! இதுபற்றிய அறிவிப்பில்கூடத் தலைமையமைச்சர் மிகுந்த பெருந்தன்மையோடு இப்படிச் சொல்லியிருக்கிறார்:—

''Some of them are new; others were set forth earlier but require to pursued with greater vigour and determination''

''இவற்றில் சில புதியவை; மற்றவை முன்பே எடுத்துக் கூறப்பட்டவை; ஆனால் மிகுந்த உறுதியோடும் வலிவோடும் அமுலாக்கப்பட வேண்டியவை''

என்று கூறியிருப்பதுடன், இது, 'முனைப்பாக நடைபெற வேண்டும்' என்பதற்காக அறிவித்திருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்; இதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் எனக்கு இல்லை!

இராஜாஜி அவர்கள் இந்த மாமன்றத்தில் பொறுப்பேற்றிருந்த அந்தக் காலத்திலேயே, 'கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டும்; கரை போட்ட வேட்டி, சேலைகள் எல்லாம் கைத்தறிக்கே ஒதுக்கப்பட வேண்டும்'' என்று தீர்மானம் நிலைவேற்றப்பட்டது.

இராஜாஜிக்கு நினைவாலயம் எல்லாம் எழுப்பப்பட்ட பின்—அவருடைய மறைவுக்குப் பிறகு இரண்டு நினைவு நாள் கூடக் கொண்டாடப்பட்டபின்—இப்பொழுது, 'கைத்தறிக்கு ரிசர்வேஷன் வேண்டும்—அதற்கு என்று சில ரகங்களை ஒதுக்க வேண்டும்' என்று தலைமையமைச்சர் அறிவித்திருக்கிறார்!

இதே சட்டமன்றத்தில், 1974 இல் ஒருமனதாக, 'கைத்தறிக்குச் சில ரகங்களை ஒதுக்க வேண்டும்' என்ற தீர்மானம் நம் அனைவராலும் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டது; இப்போதாவது அதனை அவர்கள் செய்ய முன்வந்திருக்கிறார்களே?

'ஸ்டாண்டர்டு க்ளாத்' மலிவுத் துணி பற்றிக்கூட என்னிடம் ஹக்சர் அவர்கள் கேட்டார்கள்; அதைப் போலவே, அந்தத் துறையின் அமைச்சர் சட்டோபாத்தியாயா அவர்களும் என்னிடம் பேசும்போது இதைப் பற்றிக் கேட்டார்— 'ஸ்டாண்டர்டு க்ளாத் மில் துணிகளுக்கு ஒதுக்குவதைப் பற்றி என்ன நினைக்கிறாய்' என்று!

'ஸ்டாண்டர்டு க்ளாத்தை மில் துணிகளுக்கு நீங்கள் ஒதுக்குவீர்களேயானால், கைத்தறி, கதர் இரண்டும் அழிந்து

விடும்' என்று—இந்த அறிவிப்பெல்லாம் வருவதற்கு முன்பு—அவசரநிலைப் பிரகடனத்திற்கு முன்பு — அவர்களிடம் விவாதிக்கும்போது—திட்டவட்டமாக நம்முடைய அரசின் சார்பில் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

அதைச் செய்ய வேண்டிய பெரும் பொறுப்பு மத்திய அரசுக்குத்தான் இருக்கிறதே அல்லாமல், மாநில அரசுக்கு எதுவுமில்லை!

நகர்ப்புறச் சொத்துக்கு உச்சவரம்பு-நடைமுறைப்படுத்தினால் குழப்பமேற்படாதா?

பத்தாவது அம்சமாக—

"நகர்ப்புற உச்சவரம்பு; நகர்ப்புறங்களில் அமைந்துள்ள நிலத்தைச்சமூக உடைமையாக்கவும், நகர்ப்புற அனுபோக உரிமைக்கு உச்சவரம்பு விதிக்கவும் சட்டம் கொண்டுவரப்படும்" என்பதாகும்.

நகர்ப்புறச் சொத்து உச்சவரம்பை வெளியிட்ட அந்தக் காலத்திலேயே நாம் அதை வரவேற்றிருக்கிறோம். மத்தியப் பிரதேசத்தின் முதலமைச்சர் என்று கருதுகிறேன்—திரு. சேத்தி அவர்கள், 'நகர்ப்புற உச்சவரம்பை என்னுடைய மாநிலத்திலே கொண்டு வரப் போகிறேன்—கொண்டு வந்து விட்டேன்' என்றெல்லாம் அறிவித்தார்!

என்னை அது பற்றி டெல்லியிலும், சென்னையிலும் நிருபர்கள் கேட்டபோது, 'இது கவர்ச்சிகரமான கோஷம்; நடைமுறைக்கு எப்படி வரும் என்று தெரியாது' என்று சொன்னேன்.

இந்த உச்சவரம்பில் என்னென்ன பிரச்சினைகள் வரும்? 'நகரில் உள்ள காலி மனைகளின் கையிருப்பைக் கட்டுப்படுத்தி வைப்பதா?' இந்தக் கேள்விக்கு நாம் பதில் காண வேண்டும்!

"கட்டப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையைப் பொறுத்து உச்சவரம்பு விதிப்பதா? அல்லது வீடுகளோ, அத்தகைய காலி மனைகளோ இருக்கக்கூடிய இடத்தின் சொத்து மதிப்பை வைத்து அதன் அளவைக் கட்டுப்படுத்துவதா?" என்கின்ற பிரச்சினைகள் எழுகின்ற நேரத்தில், இந்த உச்ச வரம்புச் சட்டத்தை எப்படி அமுல்படுத்துவது என்ற குழப்பம் ஏற்படும்.

அதனால்தான், இன்னும் மத்திய அரசின் சார்பில் எந்த முடிவையும் அவர்கள் எடுக்காமல் இருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

ஆனால், அப்படி ஒரு முடிவை அவர்கள் எடுக்கின்ற நேரத்தில், அவர்களுக்கு அனுசரணையாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தான்—இந்த அரசின் சார்பில்—நகர்புறச் சொத்து வரியை ஒரு மசோதாவாக—அவசரச் சட்டமாகக் கொண்டு வந்திருக்கிறோம்; சட்டமன்ற உறுப்பினர்கள் தந்த கருத்துக்களை எல்லாம் கவனத்தில் வைத்து உருவாக்கியிருக்கிறோம்.

அதன்படி, யார் யாருக்கு எவ்வளவு சொத்து என்ற அந்த அளவெல்லாம் தெரிந்துவிடுமானால், பிறகு மத்திய அரசு அந்த உச்சவரம்பைக் கொண்டுவருவதற்கு ஏற்ப நாம் இப்போதே அவர்களுக்கு வழிமுறைகளைத் தேடித் தருகிறோம்; இது எந்த மாநிலத்திலும் செய்யப்படவில்லை; இந்தப் பத்தாவது அம்சத்தை மற்ற மாநிலங்களிலே இல்லாமல் நம்முடைய மாநிலத்தில்தான்—அவர்கள் நிறைவேற்றுவதற்கேற்ப—அடிப்படையை அமைத்துக் கொடுக்கிறோம்; அது விரைவில் சட்டமன்றத்தில் வரவிருக்கிறது!

அனந்தநாயகி:—"நகர்ப்புறச் சொத்து வரம்பிற்கு மத்திய அரசு சட்டம் கொண்டு வரும்வரை நீங்கள் காத்திருக்க வேண்டியதில்லை; மற்ற மாநிலங்களில் செய்திருப்பதைப் போல நீங்களே செய்யலாமே?"

முதலமைச்சர்:—''எந்தெந்த மாநிலத்தில் செய்திருக்கிறார்கள்—எப்படிச் செய்கிறார்கள் என்பதைச் சொன்னால் புரிந்து கொள்ளலாம்; ஒன்றும் சொல்லாமல் கேட்டு விட்டு உட்கார்ந்து ஆடிக் கொண்டிருந்தால் எப்படி?''

அனந்தநாயகி:—''மத்தியப் பிரதேசத்தில் சேத்தி கொண்டு வந்திருக்கிறார் என்று நீங்களே சொன்னீர்களே?''

முதலமைச்சர்:—''அவர் சொன்னார்; சொன்னதே தவிர, செய்தாரா என்று தெரியவில்லையே! சொல்கிறார்கள்—செய்வதில்லையே!''

ஹண்டே:—மத்தியப் பிரதேசத்தில் நகரங்களே கிடையாது; நாக்பூர் மட்டும்தான் இருக்கிறது.''

முதலமைச்சர்:—''நகரங்களே இல்லாவிட்டால் சுலபமாகச் சொல்லலாம்.''

நமது ஒப்புதலை அன்றே அளித்தோம்!

பதினோராவது அம்சமாக—

''நகரச் சொத்தைக் குறைத்து மதிப்பீடு செய்தலைத் தடுக்க—சொத்துக் கணக்குகளை மதிப்பீடு செய்ய—'ஸ்பெஷல் ஸ்குவாட்'; வருமான வரி ஏய்ப்போருக்குக் கடும் தண்டனை'' என்பதாகும்.

நம்முடைய சட்ட மன்றத்தில் 1973-ஆம் ஆண்டிலேயே ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம்; கே. டி. கே. தங்கமணி அவர்கள்தான், 'இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவீர்களா?' என்று கேட்டார்; 'நிறைவேற்றினால், நீங்கள் ஆதரிப்பீர்களா' என்று கேட்டேன்; மார்தட்டி, 'நிச்சயமாக ஆதரிப்பேன்' என்று சொன்னார்; 'கே. டி. கே. தங்கமணி ஆதரித்துவிட்டதால், மத்திய அரசு நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ளும்' என்ற நம்பிக்கையுடன்,

''நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார முறை கேடுகள்—வீலைவாசி உயர்வு—வாழ்க்கைச் செலவு உயர்வு—ஆகியவற்றிற்குக் கறுப்புப் பணத்தின் புழக்கமே முக்கியக் காரணம் என்பதை இந்தச் சட்டப் பேரவை எடுத்துக் காட்டுகிறது; கறுப்புப் பணத்தைக் கண்டு பிடித்து வெளிக் கொணர வாஞ்சு குழு தெரிவித்த பரிந்துரைகளில் கண்டுள்ள படி, மத்திய அரசுக்குள்ள அதிகாரங்கள் மாநில அரசுக்கும் மாநில அரசுக்கு மட்டுமல்ல—மாநில அரசுக்கும் என்று இரண்டு அரசுகளுக்கும் இருக் கட்டும் என்று—மாநில அரசுக்கும் வழங்கப்பட வேண்டுமென்று இந்த மன்றம் வலியுறுத்துகிறது.''

என்ற தீர்மானத்தை நாம் 1973-ஆம் ஆண்டிலேயே நிறை வேற்றி—இந்தப் பதினேழாவது அம்சத்திற்கு அப்போதே அச்சாரமாக நம்முடைய ஒப்புதலை அளித்திருக்கிறோம்; ஆகவே, இதிலும் பிரச்சினை இல்லை!

தொழிலாளருக்கு நிர்வாகத்தில் பங்கு

பன்னிரண்டாவது அம்சமாக—

''தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பங்கும், மூலதனத்தில் ஆதாயமும் வழங்கும் திட்டம்'' என்ப தாகும்.

இந்தத் திட்டத்தை 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தி லிருந்தே நாம் நடைமுறைப்படுத்த வலியுறுத்தி வருகிறோம்; இதற்கான ஒப்புதல், 1973-ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசிடமிருந்து கிடைக்கவில்லை; கிடைத்ததெல்லாம், 'இது, பாராட்டப்பட வேண்டிய ஒரு நடவடிக்கை' என்ற ஒரு கடிதம்தான்; ஆனால், 1973-லிருந்து 1975 வரையில் எந்த விதமான ஒப்புதலும் கிடைக்காத நிலையில், இதை இப்போது தலைமையமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

கதாசிரியராக இருந்த அனுபவத்தில் ஒன்று சொல் வேன்; கதைகளை எழுதி யாரிடமாவது கொடுத்தால், அந்தக் கதாசிரியர், 'அதை யார் கொடுத்தார்கள்' என்று சொல்லா மல், தங்கள் பெயரில் வெளியிடுவதுண்டு.

அதைப்போல, தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பும், இலாபத்தில் பங்கும் வழங்குகின்ற இந்தத் திட்டத்தை நாம் 1973-ஆம் ஆண்டு மார்ச் மாதம் அறிவித்து, மத்திய அரசிடம் இதற்கான ஒப்புதலைக் கேட்டோம்.

கே.டி.கே. தங்கமணி அவர்கள்கூட, 'தொழிலாளர்கள் முதலீடு செய்வது கூடாது' என்று சொன்னார்.

முதலீடு செய்தால், தொழிலாளர்கள் நட்டத்தில் பொறுப்பு ஏற்க வேண்டிய அவசியமில்லை; இலாபத்தில் அவர்களுக்குப் பங்கு உண்டு.

இதிலே ஒரே ஒரு சிக்கல் என்னவென்றால், வருமானவரி கொடுத்த பிறகு 'டிவிடென்ட்' பிரிக்கப்படக் கூடாது என்பதுதான்; 'டிவிடென்ட்' பிரித்த பிறகு வருமான வரி கொடுக்க வேண்டும்; அப்போதுதான் தொழிலாளர்களுக்கு அதிகமாகத் தொகை கிடைக்கும்; 'இதற்குத் தக்க வகையில் உங்களுடைய கம்பெனி 'ஆக்ட்'டைத் திருத்திக் கொடுங்கள்' என்று மத்திய அரசைக் கேட்டோம்!

1973-ஆம் ஆண்டு மார்ச் மாதத்திலேயே நாம் இதை நிறைவேற்றத் தொடங்கியிருக்கிறோம்; ஆகவே, 'நிறை வேற்றத் தொடங்கி விட்டோம்' என்பது ஒரு குற்றமாகாது!

ஏழை மாணவர்களுக்கு இல்லங்கள்

பதின்மூன்றாவது அம்சமாக—

''ஏழை மாணவர்கள் படிக்கும் இல்லங்கள்— அவர்கள் தங்கும் விடுதிகள் ஆகியவற்றுக்கு இன்றி யமையாப் பொருள்கள் கட்டுப்பாட்டு விலையில் வழங்கப்படும்'' என்பதாகும்.

தமிழ்நாட்டில் அரிசனங்கள் மற்றும் பழங்குடி வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்காக உள்ள இல்லங்கள் 570; அதிலே படிக்கும் மாணவர்கள் 35,782 பேர்; பின்தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கான இல்லங்கள் 231; அதிலே பயிலும் மாணவர்கள் 16, 332 பேர்.

இந்த இல்லங்களில் அவர்களுக்கு வேண்டிய இன்றியமை யாப்பொருள்கள் தமிழ்நாடு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம் கட்டுப்பாட்டு விலையில்தான் வழங்கப்பட்டு வருகிறது; தொடர்ந்து பல ஆண்டுக்காலமாக இதனை நாம் செய்து வருகிறோம்; ஆகவே, இது ஒன்றும் நாம் நிறைவேற்ற மறுப்பதல்ல!.

நியாய விலையில் பாட நூல்கள்

பதினான்காவது அம்சமாக—

> ''பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு நியாய விலை யில் பாட நூல்கள், எழுது பொருள்கள் வழங்குதல்; விலைகளைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்தப் படுதல்; புத்தக வங்கிகள் அமைத்தல்'' என்பதாகும்.

கே. டி. கே. தங்கமணி அவர்கள்கூட, இந்தப் புத்தக வங்கிகள் அமைக்கப்பட்டு—புத்தகங்கள் வெளியிடுவது நாட்டுடைமையாக்கப்பட்டிருப்பதை மனந்திறந்து பாராட்டி னார்; அப்படிப் பாராட்டிவிட்டு, 'விலைகள் அதிகமாக இருக்கின்றன—அது குறைக்கப்பட வேண்டும்' என்று சொன்னார்; நான் அதற்கு விளக்கம் தர விரும்புகிறேன்.

இந்த இருபது அம்சம் அறிவிக்கப்படுவதற்கு முன்பு தமிழ்நாடு அரசு, 'மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களைத் தனியார் துறையில் அல்லாமல் அரசுத் துறையிலேயே ஒரு நூல் வெளியீட்டகம் அமைத்து—அதன் மூலமாகப் பாடப் புத்தகங்களை வழங்க வேண்டும்' என்ற முறையை அமைத் திருக்கிறதா இல்லையா என்பதைத் தயவு செய்து மாற்றுக் கட்சியில் உள்ளவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அது ஏற்கெனவே அமைக்கப்பட்ட ஒன்று; ஆகவேதான், 'அதை நிறைவேற்றி முடித்துவிட்டோம்' என்று கூடத் தைரியமாகச் சொன்னேம்!

'விலை குறைக்கப்பட வேண்டாமா?' என்று கே. டி. கே. தங்கமணி கேட்டார்; கல்வி அமைச்சர் நாவலர் அவர்கள், கல்வி மானியத்தின்மீது பேசும்போது அது பற்றி நிறைய விளக்கங்களே எல்லாம் தந்திருக்கிறார்.

மத்திய அரசு விலைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் கீழ் நடைபெற்றிருக்கின்ற குறைபாட்டினைத் தலைமையமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மலிவு விலையில் அச்சுத் தாள்களைப் பெற்றுப் பாட நூல்களை வெளியிடும் தனியார் நிறுவனங்கள் 'அடக்க விலையைப்போல் மூன்று மடங்கு அதிகமான விலைக்கு விற்பதற்கு அனுமதி வேண்டும்' என்று கோரினர்; அதற்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்கிறது; இதை மனதில் வைத்துக்கொண்டு, நாம் இந்தப் பிரச்சினையில் கவனத்தைச் செலுத்த வேண்டும்.

ஆண்டுதோறும் பதினெட்டு இலட்சம் மாணவர்களுக்கு மூன்றாவது வகுப்பு வரை படிப்பவர்களுக்குப் பாடப் புத்தகங்களை இலவசமாக வழங்குகிறோம்; இதற்காக இதுவரையில் ஆகியிருக்கின்ற மொத்தச் செலவு ரூ. 86 இலட்சமாகும்.

'விலை அதிகம்' என்று சொன்னார்கள்; என்னுடைய கையில் இருக்கின்ற 'ரிசார்ட்சன் லிவிங்ஸ்டன்—சம் டாஸ்க் பார் எஜூகேஷன்' என்கின்ற இந்தப் புத்தகத்தின் பக்கங்கள் 88; விலை ரூ. 5; இது, தனியார் வெளியிட்டுள்ள புத்தகமாகும்!

அடுத்து, இந்தப் புத்தகம் 'அறிவியல்'—நம்முடைய தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் தயாரித்தது; இது, 386 பக்கங்கள் கொண்டது; இதனுடைய விலை ரூ. 4·80,

88 பக்கங்கள் கொண்ட தனியார் புத்தகம் ரூ. 5.00; 386 பக்கங்கள் கொண்ட நம்முடைய புத்தகம் ரூ. 4·80.

அடுத்து, மூன்றாவது வகுப்புப் புத்தகம்—'புவியியல்'; 'மாணிக்கம் கம்பெனி' என்ற தனியார் நிறுவனம் வெளியிட்டது; இதிலே எந்தவிதமான வண்ணப் படங்களும் கிடையாது; இரண்டு கலர்தான் வெளியிலும் இருக்கிறது; பக்கங்கள் 44; விலை ரூ. 1-50; இதற்கு அரசாங்கம், அடக்க விலையில் அச்சிடும் தாள் கொடுக்கிறது!

இதே மூன்றாவது வகுப்புப் புத்தகத்தைத் தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனம் 64 பக்கங்கள் கொண்டதாக வெளியிட்டிருக்கிறது; அதனுடைய விலை ஒரு ரூபாய்; எவ்வளவு அழகான படங்கள்—வண்ணப்படங்கள்; (நான் இவைகளை விற்பதற்காகச் சொல்லவில்லை; தங்கமணி அவர்களுக்கு விளக்கம் தரக் கூறுகின்றேன்).

இந்தியாவில்கூட பல மாநிலங்களில் நூல்களை வெளியிடுவது தேசியமயமாக ஆக்கப்பட்டிருக்கிறது; புள்ளி விவரத்தைப் பார்த்தால் தெரியும்; இராஜஸ்தானில் ஒரு பக்கத்திற்கு 1.08 காசு என்றும்—குஜராத்தில் 2 காசு என்றும்—இமாசலப் பிரதேசத்தில் நான்கு காசு என்றும் விலையாகிறது; தமிழ் நாட்டில் ஒரு காசுதான் ஆகிறது!

இந்தியாவில் தமிழ்நாடு புத்தகங்கள்தான் மிகக் குறைவான விலைக்குத் தரப்படுகின்றன என்ற விளக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதோ ஒரு புத்தகம்; மார்ட்டின் லூதர் கிங்—வாழ்க்கை விடைகள்; ஒரு ரூபாய் இதன் விலை!

'நியூ செகண்டரி ஸ்கூல் ஜாகரபி' என்ற புத்தகம்—420 பக்கங்கள் கொண்டது; விலை ரூ. 13; இது, தனியார் வெளியீடு!

இது, அரசாங்க வெளியீடு; பெயர், 'அறிவியல்'—பக்கங்கள் 402; விலை ரூ. 3.80.

ஆக, இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் இவைகளை எல்லாம் அறிவிப்பதற்கு முன்பே நம்முடைய மாநிலத்தில் இத்தகைய பணிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.

படித்த இளைஞர்கட்குப் பயிற்சித் திட்டம்

பதினைந்தாவது அம்சமாக—

''படித்த இளைஞர்களுக்குத் தொழிற் பயிற்சித் திட்டத்தின்கீழ்ப் பயிற்சி தருதல்'' என்பதாகும்.

அமைச்சர் இராசாராம் அவர்கள், '107 சதவிகிதத்தைத் தாண்டிவிட்டோம்' என்று அறிக்கை கொடுத்திருந்தார்; எனக்கேகூட ஆச்சரியமாக இருந்தது; புள்ளி விவரங்களை எடுத்துப் பார்த்தால், தனியார் துறையில் 4,264 இடங்களும்—மாநில அரசுத் துறையில் 2,123 இடங்களும்—ஆக மொத்தம் 6,387 இடங்களும் பயிற்சியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றன; அதாவது, 107.45 சதவிகிதம் நாம் வரையறுத்த இலக்கையும் மிஞ்சி, படித்த இளைஞர்களுக்குப் பயிற்சித் திட்டம் அளிக்கப்பட்டிருக்கிறது.

''இதையெல்லாம் விளம்பரப்படுத்த வேண்டாமா?'' என்று அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்டார்கள். மைசூர் மாநிலத்தில் விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறது—'இருபது அம்சத் திட்டம்' என்று பிரதமருடைய படத்தையும், முதலமைச்சருடைய படத்தையுப் போட்டு விளம்பரப் படுத்தியிருக்கிறார்கள்; இங்கே போட்டால்தான் பாவம்! அவர்கள் எல்லாம் போடலாம்—இங்கே போட்டால் டெல்லிக்குத் தூதே போகும்!

ஆனால், மைசூரில் இதுபற்றி அவர்கள் தெரிவிக்கும் போது,

> ''A specially designed training programme for about 1000 locally recruited persons during this year in selected growth centres in the State''

என்று போடப்பட்டிருக்கிறது; அதாவது, அங்கே ஆயிரம் தான்—விளம்பரப்படுத்தப்பட்ட இடத்தில் ஆயிரம்தான்; இங்கேயோ—6,387 ஆகும்; ஆனால் நாங்கள், இருபது

அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை என்று கண்டனத் தீர்மானம் கொண்டு வருகிறீர்கள்.

விளம்பரப்படுத்தவில்லை' என்று சொல்கிறீர்கள்—(விளம்பரத்தைக் காட்டி)—இதைவிடவா பெரிய விளம்பரம் செய்ய வேண்டும்? எவ்வளவு பெரிய விளம்பரம்? இந்த விளம்பரத்தில், நாங்கள் என்ன—பிரதமரை விட்டு விட்டோமா? இதில், ஆரம்பத்திலேயே, 'பிரதமரின் பொருளாதாரத் திட்டங்களைப் பின்பற்றி' என்றுதான் தொடங்கியிருக்கிறோம்; முடிக்கும்போதும், இந்த விளம்பரத்தில், 'பிரதமர் அறிவித்த எஞ்சிய திட்டங்களை நிறைவேற்றத் தமிழக அரசு பீடுநடை போடுகிறது' என்றுதான் முடித்திருக்கிறோம்!

ஆக, இந்த இரண்டு பக்க விளம்பரத்திலும், நாம் என்னனென்ன காரியங்களைச் செய்திருக்கிறோம் என்பதை அறிவித்திருக்கிறோம்.

தேவராஜ் அர்சுக்கு இருக்கிற உரிமை, தமிழ்நாட்டு முதலமைச்சருக்கு இருக்கக் கூடாதா? அவர், 'என்னென்ன காரியங்களைச் செய்தோம்—செய்யப்போகிறோம்' என்பதையெல்லாம் அறிவித்திருக்கிறார்; அதைத்தான் நானும் அறிவித்திருக்கிறேன்; அவரும் பிரதமரின் பெயரைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்—படமும் போட்டிருக்கிறார்!

நாம் படம் போடவில்லை; காரணம், ஒரு முறை போட்டோம்; அதாவது, ஆறு கோடி ரூபாய் யுத்த நிதியாக—இந்தியாவில் எந்த மாநிலமும் கொடுக்காத அளவிற்குக் கொடுத்த நேரத்தில், 'யுத்த நிதி கொடுங்கள்' என்று கேட்கிற ஒரு விளம்பரத்தில், பிரதமருடைய படத்தையும்—முதலமைச்சருடைய படத்தையும் போட்டு வெளியிட்டதற்குப் பெரியதொரு மறுப்பு, தலைமையமைச்சரின் அலுவலகத்திலிருந்து தெரிவிக்கப்பட்டது; ஆகவேதான் படம் போட்டால் மறுப்பு தெரிவிப்பார்களோ' என்பதற்காகப் படம் போடவில்லையே தவிர, விளம்பரத்தை வெளியிட்டிருக்கிறோம்.

அடிமை முறை ஒழிப்பு

பதினாறாவது அம்சமாக—

''அடிமைத் தொழிலாளர் முறை ஒழிக்கப்பட வேண்டும்'' என்பதாகும்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், 'அந்த முறை இல்லை' என்று நாம் வாதிக்கிறோம்! ஓரிரு இடங்களில் இருப்பதாகச் சொல்லப்பட்டாலும், அதற்கு இன்றைக்கு மத்திய அரசுஅவசரச் சட்டம் கொண்டு வந்து விட்டது; எங்கேயாவது ஒன்றிரண்டு தலைகாட்டினாலும், நிச்சயமாக அது ஒழிக்கப்படும்; அதில் நமக்கு எந்தவிதமான. மறுப்பும் இல்லை!

சொத்துக்களைப் பறிமுதல் செய்யும் சட்டம்

பதினேழாவது அம்சமாக—

''கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்வதற்குத் தனிச் சட்டம் கொண்டு வரப்படும்'' என்பதாகும்.

இது, மத்திய அரசு கொண்டுவர வேண்டியதாகும்; ஆகவே கண்டனத் தீர்மானம் அங்கே வர வேண்டும்; இங்கே கொண்டு வருவது பொருத்தமல்ல!

தவறுகச் செயல்படுவோர்மீது நடவடிக்கை

பதினெட்டாவது அம்சமாக—

''தொழிலில் முதலீடு செய்வதற்கான இப்போதுள்ள முறைகளைத் தளர்த்தி, இறக்குமதி லைசென்சைத் தவறுகப் பயன்படுத்துபவர்கள் மீது நடவடிக்கை எடுத்தல்'' என்பதாகும்.

இதிலே கம்யூனிஸ்டுக் கட்சிக்குச் சில கருத்து வேறுபாடுகள் உண்டு என்பது எனக்குத் தெரியும்! இருந்தாலும் கூட, இது, 'மத்திய அரசு எடுக்க வேண்டிய முயற்சி

என்பதை இந்த மாமன்றம் நன்கு உணரும்; ஆகவே, இதிலும் தமிழ்நாடு அரசுக்கு எந்தவிதமான பொறுப்பும் இல்லை!

தேசிய அனுமதிச் சீட்டு அளிக்கும் திட்டம்

பத்தொன்பதாவது அம்சமாக—

''சாலைப் போக்குவரத்துக்கான தேசிய அனுமதிச் சீட்டு அளிக்கும் திட்டம்'' என்பதாகும்.

இதுபற்றித் தமிழ்நாடு அரசு 'மாநிலத்தின் உரிமைகள் பறிபோகாமல் பார்த்துக் கொள்ளுங்கள்; இதை ஆதரிக்கிறோம்' என்று ஏற்கனவே தெரிவித்திருக்கிறது; இப்போது, ஏதோ, '5700 லாரிகளுக்குப் பெர்மிட்' என்று மொத்தமாக அறிவித்திருக்கிறார்கள். அதில், தமிழ் நாட்டிற்கு 200 என்று சொல்லியிருக்கிறார்கள்; இதுவகையில் தமிழக அரசுக்கு எதுவும் உறுதியாக திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை; அது பற்றி அந்தத் துறை அமைச்சர்களெல்லாம் கலந்து பேசி முடிவெடுப்பார்களோ என்னவோ—தெரியவில்லை; இதுவும் மத்திய அரசு செய்து முடிக்க வேண்டிய ஒரு காரியம்!

தனி நபர் வருமானத்தின்மீது வரி விதிப்பு

இருபதாவது அம்சமாக—

''தனி நபரின் வருமானத்தின் மீது விதிக்கப்படுகின்ற வருமான வரியின் வரம்பை ஆண்டு ஒன்றுக்கு ஆறுயிரத்திலிருந்து எட்டாயிரமாக உயர்த்தப்படும்'' என்பதாகும்.

இதிலும் நமக்கு எந்தவிதமான சம்பந்தமும் இல்லை; மத்திய அரசின் விவகாரமாகும் இது!

ஆக, 'இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றவில்லை' என்று கண்டனத் தீர்மானம் கொண்டுவந்தீர்களே—அதில் நான்கைந்தையாவது குறைத்துவிட்டு, பதினைந்து அம்சத்தை நிறைவேற்றவில்லை' என்றல்லவா கொண்டு வந்திருக்க வேண்டும்?

மத்திய அரசின் பொறுப்பு என்னென்ன—மாநில அரசின் பொறுப்பு என்னென்ன—என்பதைக்கூடப் புரிந்து கொள்ளாமல், மொத்தமாக, 'இருபது அம்சத்தையும் நாங்கள் நிறைவேற்றவில்லை' என்று நீங்கள் கண்டனத் தீர்மானம் கொண்டு வந்தது பொருத்தமல்ல; என்னிடம் காட்டியிருந்தால், உங்கள் தீர்மானத்தைத் திருத்திக்கூடக் கொடுத்திருப்பேன்; அதை நீங்கள் செய்யவில்லை.....

சத்தியவாணிமுத்து :— ''இருபது அம்சத்தையும் செய்து விட்டதாகக் சொல்கிறார்; அடிமைத் தொழிலாளர் முறை பற்றி ஒன்றும் சொல்லவில்லையே?''

முதலமைச்சர் :— ''அதைப் பற்றிச் சொல்லும்போது அம்மையார் சபையில் இல்லை.''

ஜோதி அம்மையார் :—''அடிமைத் தொழிலாளர்முறை யினை ஒழிக்கவேண்டும் என்று சொன்னதற்காகக் கருநாடக மாநிலத்தில் இருந்த அமைச்சர் ஒருவரே ஒழிக்கப்பட்டு விட்டார்!''

அனந்தநாயகி :—''அதற்கு என்ன ஆதாரம்?''

ஜோதி அம்மையார் :— ''ஆதாரமற்ற முறையில் நான் எப்போதும் பேசமாட்டேன்; பொறுப்பு அதிகமாக இருக்கிறது என்பதை எப்போதும் நான் உணர்ந்தவள்.''

தங்கமணி :—''பிரதமரின் அறிவிப்பிற்குப் பிறகு இதற்காகப் பல மாநிலங்களில் அவசரச் சட்டம் கொண்டு வந்திருக் கிறார்களே — அப்படி ஏன் தமிழகத்தில் கொண்டு வரப்படவில்லை?''

அமைச்சர் இராசாராம் :—''அப்படிப்பட்ட அடிமைத் தொழி லாளர்கள் இங்கே இருக்கிறார்களா இல்லையா என்பதை அரசு ஆய்ந்தது; எந்த இடத்திலும் தமிழகத்தில் இல்லாததாலும், நீலகிரியில் இருப்பார்கள் என்று அங்கேயும் மாவட்ட ஆட்சித் தலைவரைத் தொடர்பு கொண்டதில், அந்த இடத்திலும் அப்படிப்பட்ட நிலைமை கிடையாது என்பது தெரிந்ததால் அதற்கான

சட்டம் கொண்டு வருவதற்கான சூழ்நிலை ஏற்பட வில்லை.''

சத்தியவாணிமுத்து :—''நான் அமைச்சராக இருந்தபோது, சேலம், கோவை மாவட்டங்களில் அப்படிப்பட்ட முறை இருப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் எனக்குத் தெரிவித்தார்கள்.''

மு. சின்னசாமி :—''கோவை மாவட்டத்தில் அப்படிப்பட்ட முறையே கிடையாது.''

அமைச்சர் இராசாராம் :—''சேலம், கோவையில் எனக்குத் தெரியாத கிராமங்களே கிடையாது; அப்படிப்பட்ட விண்ணப்பம் எதுவும் அரசிடம் வரவில்லை.''

ஹண்டே :— ''முன்னாள் அமைச்சரும் — இப்போதைய அமைச்சரும் இரண்டுவிதமான அபிப்பிராயங்களைச் சொல்வதால், அதுபற்றிப் பூர்வாங்கமாக ஒரு விசாரணை வைத்து விடலாமே?''

முதலமைச்சர் :—''இது முடிந்துபோன பிரச்னை; இந்த முறை இருந்தாலும்கூட, அதை ஒரேயடியாக அழித்து ஒழித்திடும் வகையில் இன்றைக்கு இந்திய அரசு ஓர் அவசரச் சட்டம் கொண்டுவந்து விட்டதால் இப்போது பிரச்னை அடிபட்டுப் போகிறது; நாம் அதனைப் பெரிதுபடுத்த வேண்டிய அவசியமில்லை.''

'புரட்சிகரமான திட்டம்' என்பதற்கு ஆதாரம் ஏதேனும் இருக்கிறதா?

நான் முதலில், 'பத்து அம்சத் திட்டம்தான் இப்போது இருபது அம்சத் திட்டமாகப் பெருக்கெடுத்திருக்கின்றன' என்று எடுத்துச் சொன்னேன்; அதைப்பற்றி 'மெயின் ஸ்ட்ரீம்' என்ற பத்திரிகை — நம்முடைய கே. டி. கே. தங்கமணி அவர்களுக்குத் தெரிந்த பத்திரிகை—இதனுடைய ஆசிரியர் நிக்கல் சக்ரவர்த்தி அவர்கள்—இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் உறுப்பினர் என்றுகூடத் தகவல்—சரியாக

இருக்கும் என்றும் கருதுகிறேன்—இல்லையென்றால், இந்நேரம் தங்கமணி மறுத்திருப்பார்—அந்தப் பத்திரிகையின் 13-ஆவது ஆண்டு மலருக்கு நம்முடைய குடியரசுத் தலைவரும் வாழ்த்து வழங்கியிருக்கிறார்; மத்திய அரசின் அமைச்சர்கள் பலரும் கட்டுரை தீட்டியிருக்கிறார்கள்; அந்த மலரின் தலையங்கத்தில்—அதன் ஆசிரியரான வலது கம்யூனிஸ்டு உறுப்பினர் நிக்கல் சக்ரவர்த்தி எழுதுகையில், இந்தத் திட்டங்களைப் பற்றிச் சொல்கிறார்—

"On the programmatic plan, there is noticeable advance From mere passing of party-level resolutions promising reforms (and in this respect, too, one can of course claim progress from the Ten Points of 1967 to Twenty Points of 1975), there is all round exhortation by public leaders at different tiers of relevance, calling upon the flocks under their command to take up the implementation of the declared programme. From resolutions to exhortations marks a perceptable advance in commitment."

"நடைமுறையில் பார்த்தால், நல்ல முன்னேற்றம் என்று சொல்லலாம். கட்சி மட்டத்தில் சீர்திருத்தங்கள் பற்றித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதிலிருந்து அரசியல் தலைவர்கள் அனைவருமே திட்டங்கள் நிறைவேற்றுவதைப் பற்றிப் பேசுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது; 1967-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட பத்து அம்சத் திட்டம், 1975-இல் இருபது அம்சத் திட்டமாக மாறி இருப்பதே ஒரு வளர்ச்சிதான்; வெறும் தீர்மானங்களிலிருந்து மக்களை ஊக்குவிக்கக்கூடிய அளவிற்குப் பேசுகின்ற நிலைக்கு வந்தது ஒரு முன்னேற்றம்தான்; தீர்மானங்களை வலியுறுத்திக் கூறிக் கொண்டிருப்பதால் புதியது தோன்றிவிட்டாலும், அது, மக்களைத்

தயார்படுத்துகிறது; தீர்மானங்களை நிறைவேற்றுபவர்கள் தப்பி ஓட முடியாது என்ற நிலைமை ஏற்பட்டு, நாட்டின் நிலைமையைப் பற்றியும்—நாட்டின் பொருளாதார நிலைமையைச் சீர்செய்வது பற்றியும் இது ஒரு நம்பிக்கையைத் தான் ஊட்டுகிறது.''

இந்த அளவிற்குக் கேலி புரிகின்ற இதனுடைய ஆசிரியர், இருபது அம்சத் திட்டத்தைப் பற்றி இன்னோர் இடத்தில் குறிப்பிடும்போது,

''Sri Subramaniam's plan for setting up rural banks, with the World Bank funds but without taxing the rural rich, deserves serious note of every patriotic Congressman. Those who think that the popularisation of the Twenty Point programme is by itself a guarantee for socio economic advancement to forget that the first party to welcome it within a couple of hours of its announcement as pragmatically realistic was the Federation of Indian Chambers of Commerce and Industry, then already fortified by the Prime Minister's official assurance against further nationalisation.''

''கிராமப்புறச் செல்வர்களுக்கு வரி போடாமல் உலக வங்கியின் நிதியைப் பயன்படுத்திக் கிராம வங்கிகளை அமைக்கும் திரு. சுப்பிரமணியத்தின் திட்டம் உண்மையான தேசபக்தியுள்ள காங்கிரசுக் காரர்களின் கவனத்தைக் கவர வேண்டும்; (சுப்பிரமணியம் யார் என்று தெரியவில்லை); 'இருபது அம்சத் திட்டமே சமூகப் பொருளாதார வளர்ச்சியை இறுதியாக்கும்' என்பவர்கள், ஒன்றை உணர வேண்டும் — 'தேசியமயம் இனி இல்லை' என்ற தலைமையமைச்சரின் உறுதிமொழியை வலி வற்ற இந்திய வர்த்தகத் தொழிற் பேரவைதான்,

இந்த இருபது அம்சத் திட்டத்தை வெளியிட்ட இரண்டு மணி நேரத்திற்குள் வரவேற்றது என்பதை உணர வேண்டும்.''

இவ்வாறு நிக்கல் சக்ரவர்த்தி அந்தப் பத்திரிகையிலே குறிப்பிட்டிருக்கிறார்; இது ஒன்றே; இந்த இருபது அம்சத் திட்டத்திற்கு எப்படிப்பட்ட வரவேற்பு சாதாரண மக்களின் சார்பாக அளிக்கப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இருபது அம்சத் திட்டத்தைக் கையில் கொடுத்து விட்டு— இவைகளை நிறைவேற்ற எந்தவிதமான நிதி ஆதாரங்களையும் பெருக்குகின்ற வழிவகைகளைச் சொல்லாமல் அல்லது சொல்வதற்கு முன்வராமல்—மணலி அவர்கள் சொன்னதைப்போல்—நாடாளுமன்றத்தில் இதற்கு ஒரு பாராட்டு தெரிவித்தார்களே அல்லாமல்—'இந்த இருபது அம்சத் திட்டத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்கவேண்டும்' என்று தீர்மானம் நிறைவேற்றினார்களா?

அல்லது எல்லா முதலமைச்சர்களையும் அழைத்து, தேசிய வளர்ச்சிக் குழுவைக் கூட்டி, எந்தெந்த மாநிலத்தில் நிறைவேற்றப் போகிறீர்கள்—எப்படி நிறைவேற்றப் போகிறீர்கள்? இதுவரை செய்யபட்டவை எவை—செய்யப்பட வேண்டியவை எவை?' என்றோ, 'அதற்கு நிதியுதவி எவ்வளவு தேவை' என்றோ கேட்டார்களா?

அது மாத்திரமல்ல; வாஞ்ஞலி பேச்சைத்தான், 'இருபது அம்சத் திட்டம்' என்று நாம் எடுத்து வைத்துக் கொண்டு, 'ஆகா—எவ்வளவு புரட்சிகரமான திட்டம்' என்றெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம்; நான் கேட்கிறேன்— இப்போது படித்துக் காட்டிய திட்டத்தில் எது புரட்சி?

வாஞ்ஞலிப் பேச்சில் அம்மையார் அவர்கள், 'இனிமேல் தொழில்கள் தேசியமயமாக ஆக்கப்படமாட்டது' என்று குறிப்பிட்டார்கள்; அதை ஏன் 21-ஆவது அம்சமாகச் சேர்த்துக் கொள்ளவில்லை?

சிலவற்றை மாத்திரம் தேர்ந்தெடுத்து, 'இருபது அம்சம்' என்று சொல்கிறோம்; இது எப்படிப் புரட்சிகரமான திட்டமாகும்?

கண்டிப்பதில் அர்த்தம் ஏதேனும் உண்டா?

இருபது அம்சத்தில் பதினொன்று அல்லது பதினைந்து திட்டங்களை நிறைவேற்றத் தொடங்கி விட்டு—ஒன்றிரண்டை நிறைவேற்றி முடித்துவிட்டு இருபது அம்சத்திலே இல்லாத திட்டமாக—கடந்த நான்கைந்து ஆண்டுக்காலமாக — கிராமங்கள் தோறும் நம்முடைய அதிகாரிகள் சென்று மக்களுடைய குறைகளைக் கேட்டு மனு நீதித் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கின்ற அரசைப் பார்த்து — 'அரசாங்க ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம்' என்பது எந்த மாநிலத்திலும் ஆரம்பிப்பதற்கு முன்பு ஆரம்பிக்கப் பட்டு—இத் திட்டத்தின்படி ஒன்றரை ஆண்டுக் காலத்தில் 2,200 அரசு ஊழியர் குடும்பங்களுக்கும் பத்தாயிரம் ரூபாய் வீதம் வழங்கி—இருபது அம்சத் திற்கும் மேலாக செய்திருக்கின்ற இந்த அரசைப் பார்த்து—சமூக நலத் திட்டங்களின் மூலம் 'கண்ணொளி, ஊனமுற்றோர் புதுவாழ்வு, விதவை கள் தல்வாழ்வு, அனுதைச் சிறுவர்களுக்கு இல்லங் கள்' என்று இவ்வளவையும் செய்து முடித்திருக் கின்ற இந்த அரசைப் பார்த்து—காந்தி வழியில் நாங்கள் நடக்கிறோம் என்பதற்கு அடையாளமாகக் காங்கிரசுக்காரர்களும் செய்யாத காரியத்தை— தமிழகத்தில் மதுவிலக்கை இடையில் ஒத்தி வைத் தாலும்—மீண்டும் நடைமுறைப்படுத்தி, பரிசுச் சீட்டை அறவே ஒழித்து, குதிரைப் பந்தயத்தை நிறுத்தி—இப்படி இருபது அம்சங்களுக்கும் மேலாகப் பல அம்சங்களை நிறைவேற்றி வருகின்ற இந்த

அரசைப் பார்த்து—கண்டனம் செய்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது?

குடிநீர் வாரியம்—வேறு எந்த மாநிலத்திலே இருக்கிறது? குடிசை மாற்று வாரியம் இருக்கிறதா? அரிசன வீட்டு வசதி வாரியம் இருக்கிறதா?

''வாஞ்ஞலியில் அறிவித்ததை எல்லாம் 'திட்டம்' என்று—அதைத் தேர்ந்தெடுத்து—அவைகளை மாத்திரம், 'திட்டங்கள்' என்று வைத்துக்கொண்டு, 'அவைகளை எல்லாம் நிறைவேற்றவில்லை—ஆகவே கண்டிக்கிறோம்' என்று சொன்னால் என்ன அர்த்தம்?

அவசரக் காலத்திற்குப் பிறகுதான், இந்தக் காரியங்களை எல்லாம் நிறைவேற்ற நாங்கள் முன்வந்திருக்கிறோமா? அதற்கு முன்பே இவைகளை நிறைவேற்றவில்லையா? கடந்த ஆறேழு ஆண்டுக்காலமாக நிறைவேற்றவில்லையா? ஏன்?—காங்கிரசு ஆட்சிக் காலத்தில் கூடச் சில காரியங்களை அவர்கள் நிறைவேற்ற முன்வரவில்லையா? இப்போது அவர்கள் சொன்ன பிறகுதான் இதற்கு உயிரே வந்ததா?—இதை யெல்லாம் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கண்டனத் தீர்மானத்தை முன்மொழிந்த — வழி மொழிந்த உறுப்பினர்கள் பலரும், அவசர நிலை பற்றி இங்கே கருத்துக்களைத் தெரிவித்த காரணத்தால், நானும் சில விளக்கங்களைச் சொல்ல வேண்டிய நிலைமைக்கு ஆளாகியிருக்கிறேன்—அவைகளை நான் சொல்லித்தீர வேண்டியவனாகவுமிருக்கிறேன்.

அவசர நிலை பற்றிக் கண்டனத் தீர்மானத்திலே குறிப்பிடப்படாவிட்டாலும், அதை ஒரு காலக் கட்டமாக மாத்திரம் இங்கே குறிப்பிட்டார்கள்; அதாவது, 'அவசர நிலைமைக்குப் பிறகு அறிவிக்கப்பட்ட இருபது அம்சத் திட்டம்' என்று—அந்தக் காலக் கட்டமாக மாத்திரம் அதைக் குறிப்பிட்டார்கள்.

மாறுன கருத்துக்களைக் கூறுவது தவறு?

ஆனல், அவசர நிலைக்கு மாறுன கருத்துக்களைக் கூறுவது ஒன்றும் தவருனது அல்ல; இதற் தப் பல முன் உதாரணங்கள் முன்பே இருந்திருக்கின்றன; அந்நிய நாட்டுப் படையெடுப் பையொட்டி அறிமுகப்படுத்தப்பட்ட அவசரகாலச் சட்டத் தையே எதிர்த்தவர்கள் எல்லாம் உண்டு—எதிர்த்துத் தீர்மானம் கொடுத்தவர்களும் உண்டு!

1964-ஆம் ஆண்டில், நாடாளுமன்ற மாநிலங்கள் அவை யில், என்னுடைய மதிப்பு மிகுந்த முதுபெரும் நண்பர்— கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர்களிலே ஒருவர்—திரு. பூபேஷ் குப்தா அவர்கள், அன்றைய நெருக்கடி நிலையை ரத்து செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானத்தையே கொண்டு வந்தார்.

கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பிலே கொண்டுவரப்பட்ட தீர்மானத்திலே அவர் முகப்பிலே சொன்னர்:—

''இந்தியாவின் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கண் காணிப்பதற்கும்—தேசத்தின் பொருளாதார நடவடிக்கை யைப் பாதுகாப்பு அடிப்படையில் வளர்ப்பதற்கும்— நெருக்கடி நிலை தேவை இல்லை'' என்று!

இன்றைக்கு நாமும், 'இந்தப் பொருளாதாரத் திட்டங் களுக்கெல்லாம் நெருக்கடி நிலை தேவை இல்லை' என்று மட்டுமே சொல்கிறோம்.

பூபேஷ் குப்தா, 'அவசர நிலை தேவையில்லை—ரத்து செய்ய வேண்டும்' என்பதற்குத் தீர்மானமே கொண்டு வந்து பேசினர்; அவர் பேச்சை அப்படியே குறிப்பிட விரும்பு கிறேன்:—

> ''They use the Emergency here in order to build up bureaucracy, to build themselves up and to give security to the Congress regime, security to the Congress administration—a bad administration.

That is what I say. There is there. Therefore, they want to create an artificial political atmosphere under the Emergency in order to divert the peoples attention from the real day-today issues. Emergency powers are needed to shield corruption, inefficiency and nepotism in the administration and cover up the bankruptcy in their whole policy and execution. That is clear. The Emergency powers are needed to intimidate the working people and suppress the democratic movements."

"அரசு நிர்வாக அதிகாரத்தை அதிகரிக்கவும் தங்களையும்—காங்கிரசு ஆட்சியையும் பாதுகாக்கவும், மோசமான காங்கிரசு நிர்வாகத்தைப் பாதுகாக்கவும்தான் அவசரக் காலத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர்; இதைத்தான் நான் கூறுகிறேன்; இது தான் நிலைமை; அன்றுடப் பிரச்சினைகளிலிருந்து மக்களின் கவனத்தைத் திருப்ப—ஒரு செயற்கையான அரசியல் சூழ்நிலையை உருவாக்க—அவசரக் காலத்தைப் பயன்படுத்த அவர்கள் விரும்புகின்றனர்; ஊழல்—திறமையின்மை — நிர்வாகத்தில் பரிவு காட்டுதல் மற்றும் தங்களுடைய மொத்தக் கொள்கையிலும் அதனை நிறைவேற்றுவதிலும்—ஏற்பட்ட நொடிவு ஆகியவற்றை மூடி மறைக்கவும்—அவசர நிலை அதிகாரம் தேவைப்படுகிறது; இது தெளிவாகத் தெரிகிறது; உழைக்கும் மக்களை அச்சுறுத்தவும், சனநாயக இயக்கங்களை நசுக்கவும் அவசர நிலைமை அதிகாரம் தேவைப்படுகிறது."

"Actually Emergency means more powers for bureaucracy; Emergency means more powers for the Ministers; Emergency means more powers to issue threats to the democratic rights and liberties of the people; Emergency means a sword in the hands

of the Ruling Party to brandish over the heads of the opposition parties and Emergency means that when the Elections take place he can go and tell the people that if they voted against you, then the Defence of India Rules used as has been done in the parts of the country. That is called Emergency."

''உண்மையில், அவசர நிலைமை என்பதன் பொருள்—அரசாங்க நிர்வாகத்திற்கு அதிக அதிகாரங்கள்—அமைச்சர்களுக்கு அதிக அதிகாரங்கள்—சனநாயக உரிமைகளை அச்சுறுத்துவது!

''அவசர நிலை என்பது—எதிர்க்கட்சித் தலைவர்களின் தலைகள் மீது தொங்க விடப்படக்கூடிய வாள்

''தேர்தல் காலத்தில் எதிர்த்து வாக்களித்தால், நாட்டில் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படும் என்று மக்களிடம் சொல்ல வாய்ப்பைத் தருவது—இதுதான் அவசர நிலைமை!''

தங்கமணி:—''பூபேஷ் குப்தா பேசியிருப்பது, 1962-ல் கொண்டுவரப்பட்ட நெருக்கடி நிலைபற்றி 1964-ல் பேசியதாகும்; அந்தத் தீர்மானத்தில், 'இனிமேல் நெருக்கடி நிலை தேவையில்லை' என்று சொல்கிறார்.''

முதலமைச்சர்:—''அவர் நெருக்கடி நிலைக்குத்தான் விளக்கம் கொடுத்திருக்கிறாரே தவிர, 'இரண்டு ஆண்டுகளுக்கு உள்ள நெருக்கடி நிலைக்கு என்று சொல்லவில்லை: பொதுவாக, நெருக்கடி நிலை என்பதற்குத்தான் விளக்கங்களை சொல்கிறார்; இந்த விளக்கம், எப்போதும் நெருக்கடி நிலை பிரகடனத்திற்குப் பொருந்தும்.''

அண்ணாவின் வழியையே பின்பற்றினோம்

அடுத்து, 'அண்ணா இருந்திருந்தால் இதை ஆதரித்திருப்பார்' என்று, என்னைப்போல—நாவலரைப் போல—பேராசிரியரைப் போல—மதியழகனைப் போல—மற்றவர்களைப் போல—சத்தியவாணிமுத்து அவர்கள் கூட இருந்திருக்கிறார்

கள்; நான் மறுக்கவில்லை—அண்ணுவுடனேயே இருந்தவர் களைப் போல் பேசினுர்கள்!

ஆனுல், நெருங்கியிருந்த சத்தியவாணிமுத்து அம்மை யார் பேசியதுதான் எனக்கு வேடிக்கையாக இருக்கிறது; 'அண்ணு இதை ஏற்கனவே ஆதரித்திருக்கிறுர்கள்' என்று கூடச் சொன்னுர்கள்!

நண்பர் சீனிவாசன் கூட, இதை, 'அண்ணு வழியில்தான் ஆதரிக்கிறேம்' என்று சொன்னுர்.

1966-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில்—நாடாளு மன்றத்தில்—இரண்டு அவைகளையும் துவங்கி வைத்துக் குடியரசுத் தலைவர் ஆற்றிய உரையின்மீது மாநிலங்களவை யில் நடைபெற்ற விவாதத்தின்போது, அண்ணு அவர்கள் பேசியதையும் இங்கே குறிப்பிட விழைகிறேன்:—

"I would request and demand of this Government to repeal this Emergency and this D I R. They have got enough powers with the laws that they have, to deal with any mischief, with any anti-social elements.

"Why are they apprehensive of their own people?

"Therefore I would demand of this Government that they should forthwith lift this Emergency and this D.I.R., and release those who are kept in jail. And unless and until they do that they would not have a claim to decency add democracy. To the public the first and foremost and the one question that they will have to answer will be "Why do you keep this Emergency and the D.I.R."

"நான் இந்திய அரசை உரிமையோடு கேட்டுக் கொள்வதெல்லாம், 'நெருக்கடி நிலையையும், இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தையும் உடனே

ரத்து செய்ய வேண்டும்' என்பதுதான்; ஏனெனில், அரசுக்கு ஏற்கனவே நடைமுறையில் உள்ள சட்டங்களின் கீழ், எந்தக் குறும்புத் தனத்தையும்—சமூக விரோதச் செயலையும் ஒடுக்குவதற்கு வழியிருக்கிறது; நீங்கள் ஏன் நம்முடைய நாட்டு மக்களைப் பார்த்தே :பயப்படுகிறீர்கள் என்று தெரியவில்லை; எனவேதான் உடனடியாக நெருக்கடி நிலையையும்—பாதுகாப்புச் சட்டத்தையும் ரத்து செய்ய வேண்டுமென்று நான் கோருகின்றேன்.

''அதுமட்டுமல்ல; சிறையில் வைத்திருக்கின்ற தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்; நீங்கள் இதைச் செய்தாலொழிய அல்லது செய்கின்றவரைக்கும் சனநாயகம் பற்றிப் பேசுவதற்கு உங்களுக்கு எந்தவிதமான தகுதியும் கிடையாது!

''நீங்கள் இப்போது மக்களுக்குத் தரவேண்டிய பதில் எல்லாம், 'ஏன் இந்த நெருக்கடி நிலையையும் அவசரச் சட்டத்தையும் நீடித்துக் கொண்டிருக்கிறீர்கள்' என்பதுதான்!''

அண்ணா வழியைப் பின்பற்றித்தான்—அன்றைக்கு நெருக்கடி நிலை பற்றி அவர் என்ன கருத்தைக் கொண்டிருந்தாரோ, அந்தக் கருத்தைப் பின்பற்றித்தான்—தி. மு. கழகச் செயற்குழு தீர்மானத்தை வடித்தெடுத்தது!

கம்யூனிஸ்டுக் கட்சி 1964-ல் ஒரு கருத்தையும், 1965-இல் ஒரு கருத்தையும் கொள்ளலாம்; ஆனால் தி. மு. கழகத்தை, அரசியல் பாரம்பரியம் மிக்க ஒரு கட்சியாகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் வளர்த்த காரணத்தினால், 'நமக்கு உறவானவர்களாக இருந்தாலும்—எதிர்க் கட்சியினராக இருந்தாலும்—நியாயங்களின் தன்மைகளைப் பார்த்து நம் முடைய கழகத்தின் கருத்துக்களைச் சொல்ல வேண்டும் என்ற அரசியல் இலக்கணத்தின் அடிப்படையிலேதான்—அண்ணா அவர்கள் அன்றைக்குச் சொன்ன அந்தக் கருத்தின்

அடிப்படையிலேதான்—திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு தன்னுடைய தீர்மானத்தை நிறைவேற்றியது!

போர் வீரனுக்குத்தானே தெரியும்?

ஹண்டே பேசும்போது, 'செயற்குழுவிலே ஒரு தீர்மானம்—கடற்கரையிலே ஒரு தீர்மானம்—நெல்லையிலே ஒரு தீர்மானம்—ஏன் இப்படி ஒன்றோடொன்று முரண்பாடு-ஏன் பின் வாங்கிப் போய்விட்டீர்கள்?' என்றெல்லாம் கேட்டார்.

அவர் கேட்டது எப்படியிருந்தது என்றால், இன்னும் வேகமாக அல்லவா நீங்கள் போய் இருக்கவேண்டும் என்று சொல்வது போல் இருந்தது; அவரெல்லாம் இங்கே இருந்திருந்தால் அப்படிப்பட்ட யோசனைகளைச் சொல்லி, 'இன்னும் வேகமாகச் செல்லுங்கள்' என்று கூறியிருப்பார்கள் போலும்! அந்த அளவிற்கு, மத்திய அரசு மீது அவர்களுக்கு ஆத்திரம் இருக்கிறது!

''நெருக்கடி நிலையைக் கொண்டு வந்து விட்டார்களே... அதை எதிர்க்க வேண்டுமே-முடியவில்லையே—அப்படிப்பட்ட தலைமையின் கீழ் அகப்பட்டுக் கொண்டோமே'' என்பதைப் போல வருந்துகிறார்கள்.....

ஹண்டே:— ''ஏற்கெனவே பலமுறை நான் கலைஞர் அவர்களுடைய கற்பனையைப் பாராட்டியிருக்கின்றேன்; அவருடைய கற்பனையைப் பாராட்டுவதற்கு இதன் மூலம் மீண்டும் ஒரு வாய்ப்பைத் தந்திருக்கிறாரே தவிர, அவர் சொன்னது முற்றிலும் மாறுன கருத்து என்பதை மாத்திரம் தெரிவித்துக் கொள்கிறேன்.''

பெ. சீனிவாசன்:— ''அண்ணா அவர்கள் ராஜ்ய சபையில் போய்ப் பேசியிருக்கிறார்கள்; நீங்கள் இந்த நெருக்கடி நிலை வந்த நேரத்தில், பொதுக் கூட்டத்திலும் நிருபர்களிடமும்கூட கண்டித்தீர்கள்; இந்த அவை மூலம் உடனடியாக ஏன் ஒரு தீர்மானத்தை நிறை வேற்றி அனுப்பி இருக்கக் கூடாது?''

முதலமைச்சர்:— ''போர் வீரனுக்குத் தெரியும்—'எந்தக் கையில் வாள் வைப்பது—எந்தக் கையில் கேடயம் வைப்பது' என்று!''

தி. மு. க. தீர்மானத்தின் மைய அம்சம்

தலைவரவர்களே! திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுத் தீர்மானம் என்ன என்பதை இங்கு சொல்ல விரும்புகிறேன்:—

1. அவசரகாலப் பிரகடனத்தினைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. நாட்டில் புகழ்மிக்க தியாகத் தலைவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.
3. பத்திரிகையாளர்களின் கைக்கட்டுகளை அவிழ்த்துவிட்டு — பத்திரிகைகளுக்குரிய நியாயமான உரிமைகளைத் தடையின்றி வழங்கவேண்டும்.

இதுதான் எங்கள் கட்சியின் எல்லாத் தீர்மானத்திலும் உள்ள மைய அம்சம்; இப்போது, 'அம்சம்' என்றுல்தான் எல்லோருக்கும் புரியும்!

''தமிழ்நாட்டு மக்கள், காந்தியடிகள் நெறியை மறவாமலும் சனநாயகச் சின்னமாம் அறிஞர் அண்ணு அவர்களின் பாதையிலிருந்து தவருமலும், தங்களுக்கே உரிய தனிப் பண்பாட்டுடன்—அமைதியான முறையில்—வன்முறை தவிர்த்த வழியில்—சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேராவண்ணம் நாட்டுக்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும் என்று இந்த செயற்குழு கேட்டுக் கொள்கிறது.''

இதுதான் முதல் தீர்மானம்.

காந்தியடிகள் வழி—அண்ணு அவர்களுடைய வழி—தமிழர்களுக்குரிய தனிப் பண்பாடு—அமைதியான முறை—சட்டம், ஒழுங்கிற்கு ஊறு நேரா வண்ணம் நாட்டிற்கு

வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்—இதில் எந்த இடத்திலும் நாங்கள், 'கிளர்ச்சி செய்யப் போகிறோம்' என்று சொல்ல வில்லை!

செயற்குழு தீர்மானம் போட்டதும், நிருபர்கள் என்னைச் சந்தித்தார்கள்; அப்போது அவர்கள், 'இப்படி ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறீர்களே—டெல்லியிலிருந்து வருகின்ற தாக்கீதுகளை நீங்கள் நிறைவேற்றுவீர்களா?' என்று கேட்டார்கள்!

''என்ன தாக்கீது'' என்று கேட்டபோது, ''சிலரைக் கைது செய்ய வேண்டும்—கள்ளக் கடத்தல்காரர், கடத்தல் காரர், சட்ட விரோதமான சங்கங்கள், அமைப்புகள் ஆகியவைகளின்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று தாக்கீதுகளை அனுப்பினால் நிறைவேற்றுவீர்களா?'' என்று கேட்டார்கள்.

அப்போது நான் சொன்னேன்—''செயற்குழு இந்தத் தீர்மானத்தைப் போட்டிருக்கிறதே அல்லாமல், 'இப்படிப் பட்ட தாக்கீதுகள் டெல்லியிலிருந்து வந்தால் அதை நிறை வேற்ற வேண்டாம்' என்று எனக்குச் சொல்லவில்லை'' என்று தான் சொன்னேன்; அதுவும் பத்திரிகையில் வந்திருக்கிறது!

அப்படி இந்த இரண்டு மூன்று மாத காலங்களில் டெல்லியினுடைய தாக்கீதுகள்—இந்த அவசரச் சட்டத்தின் காரணமாகப் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள், என்ற முறையில்—இந்த அரசின் சார்பில் கடத்தல் பேர்வழிகளைக் கைது செய்வதாக இருந்தாலும், 'போசா', 'மீசா' சட்டங்களைப் பயன்படுத்துவதாக இருந்தாலும், 'சில கட்சிகள் தடைபடுத்தப்பட வேண்டும்—அவைகளின் கிளைகள் இங்கே இருந்தால் தடைப்படுத்த வேண்டும்' என்று வந்தாலும், 'அந்தக் கட்சிகளைச் சேர்ந்தவர்களைக் கைது செய்ய வேண்டும்' என்று வந்தாலும், நாங்கள் எதையும் புறக் கணிக்காமல்—நிர்வாக மோதுதல் இல்லாமல் நடந்து வந்திருக்கிறோம்!

அந்த வகையில் இந்தத் தீர்மானத்தின் மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும்—சட்டம், ஒழுங்குக்கு ஊறு நேராவண்ணம் அமைதியான முறையிலும், காந்தீய நெறியிலும், அண்ணா வழியிலும் தீர்வு காண வேண்டும்' என்று குறிப்பிட்டிருக்கிறோம்; இதனுடைய தொடர்ச்சிதான் கடற்கரையில் நடைபெற்ற கூட்டத்திலும் நடைபெற்றது!

இயக்க வழியில் எடுத்த உறுதிமொழி

கடற்கரைக் கூட்டத்தில், எங்கள் நிலையிலிருந்து நாங்கள் கீழே இறங்கிவிட்டோமா? அங்கே எடுத்துக் கொள்ளப்பட்ட உறுதிமொழி என்ன? அத்தனைப் பேரும் எழுந்து நின்று—இலட்சக்கணக்கான மக்கள் எழுந்து நின்று எடுத்துக் கொண்ட உறுதிமொழி என்ன?

> 'எந்த நிலையிலும்—எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும் இந்தியாவின் மக்களாட்சி முறைக்குத் கேடு ஏற்படாமல் பாதுகாப்பதற்குத் தயங்க மாட்டோம் என்று உறுதி எடுத்துக் கொள்கிறோம்!
>
> ''தேசத் தலைவர்கள் விடுதலை--பத்திரிகைகளின் நியாயமான உரிமைகள்—இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியப் பிரதமர் அவர்களைத் தமிழ் நாட்டு மக்களின் இந்த மாபெரும் கூட்டம் கேட்டுக்கொள்கிறது!
>
> ''வாழ்க சனநாயகம்!''

என்ற உறுதி மொழியைத்தான் கடற்கரைக் கூட்டத்தில் நாங்கள் எடுத்துக்கொண்டோம்; அதிலே சொல்கிறோம்—'எந்த நிலையிலும்—எத்தகைய நெருக்கடி ஏற்பட்டாலும், இந்தியாவில் மக்களாட்சி முறைக்குக் கேடு ஏற்படாமல், பாதுகாப்பதற்குத் தயங்கமாட்டோம்' என்று!

அதைப் பாதுகாக்கத் தயங்காத நிலையில்தான் இந்தப் பேரவையில், கேள்வி—பதிலுக்கு இடம் தந்து—கவன ஈர்ப்புத் தீர்மானத்துக்கு இடமளித்து—ஒத்திவைப்புத்

தீர்மானங்களுக்கு அனுமதி அளித்து—கண்டனத் தீர்மானத்துக்கு இடமளித்து—நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு இடமளித்து—(ஹண்டே உரிய நேரத்தில் வராததால் நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு இடமளிக்காமல் போய் விட்டார்).....

ஹண்டே:—''அன்றையத்தினம் அதை, பத்து மணிக்குத் தான் எடுத்துக் கொள்வார்கள் என்று நினைத்தேன்; வருவதற்கு இரண்டு நிமிடம் தாமதமாகி விட்டது.''

அவைத் தலைவர்:—''கண்டனத் தீர்மானம் — நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் எல்லாம், கொண்டுவந்த முதல் நான்தான் எடுத்துக் கொள்வது வழக்கம்; அதனால், கொண்டுவந்த அன்றையத்தினமே எடுத்துக் கொள்ளப்பட்டது.''

முதலமைச்சர்:—''.....இங்கே எப்படிச் சட்டமன்றம் நடைபெற்றது என்பதை வெளியில் பாராட்டாவிட்டாலும், சனநாயகத்தில் நம்பிக்கை வாய்ந்த கே. டி. கே. தங்கமணி அவர்கள் மனதார இதனைப் பாராட்டுகிறார் என்பதை நான் அறியாமல் இல்லை; அந்த அளவிற்கு அவர்கள் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்; 'நாடாளுமன்றத்தைப் போலவேதான் சட்டமன்றமும் நடைபெறும்' என்று கருதியிருப் பார்கள்!

நாடாளுமன்றம் கூடிய அன்றையத்தினம், எல்லா உறுப்பினர்களுக்கும் ஒரு தாக்கீது வழங்கப்பட்டது:—

Office of the Chief Censor Government of India
Shastri Bhavan

அவர்களிடமிருந்து வழங்கப்பட்ட அறிவிப்பு இது;

''REVISED GUIDE LINES FOR THE COVERAGE OF PARLIAMENT PROCEEDINGS.''

என்ற தலைப்பின் கீழ் வெளியாகியிருக்கிறது:—

"The Statements of Ministers may be published either in full or in a condensed form but its contents should not infringe censorship.

"The speeches of Members of Parliament participating in a debate will not be published in any manner of form but their names and party affiliation may be mentioned when publishing names of Members who participated in debate the fact that they supported or opposed a motion can be mentioned."

இந்திய அரசின் தலைமைத் தணிக்கை அதிகாரி, சாஸ்திரி பவன்

அவர்களிடமிருந்து வழங்கப்பட்ட உத்தரவு இது:

"நாடாளுமன்ற நடவடிக்கைகளை வெளியிடுவது சம்பந்தமாகத் திருத்தியமைக்கப்பட்ட வழி நடத்தும் ஆணைகள்"

என்ற தலைப்பின்கீழ் வெளியாகியுள்ளது:—

"அமைச்சர்களின் அறிக்கைகள் முழு அளவிலோ அல்லது சுருக்கமாகவோ வெளியிடப்படலாம்; ஆனால், அதில் அடங்கியுள்ள விஷயம் தணிக்கைக்குப் புறம்பாக இருக்கக் கூடாது.

"விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் பேச்சு எந்த வடிவத்திலும் வெளியிடப்படமாட்டாது; ஆனால், விவாதத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் பெயரை வெளியிடும்போது, அவர்கள் பெயர்களையும்—அவர் சார்ந்த கட்சியையும்—அவர் ஒரு தீர்மானத்தை ஆதரித்தாரா என்பதையும் குறிப்பிடலாம்."

காங்கிரசு ஏட்டில் அவதூறுச் செய்தி

நம்முடைய கண்டனத் தீர்மானம் வெளிவந்த அன்று ஆளும் காங்கிரசுப் பத்திரிகையின் தலைப்பில், 'சட்டசபையில்

தமிழக அரசுமீது குற்றச்சாட்டு' என்று வெளிவந்தது; இதைப்போல, 'நாடாளுமன்றத்தில் மத்திய அரசுமீது குற்றச்சாட்டு' என்று தலைப்புப் போட்டு வெளிவந்திருக்க முடியும் என்று கருதுகிறீர்களா?.....

அனந்தநாயகி:—''நாடாமன்றத்தில் உள்ள எதிர்க்கட்சிக் காரர்கள், தமிழகத்தில் உள்ள எதிர்க் கட்சியினரைப் போன்றவர்கள் அல்லர்; இங்கே நாங்கள் மிகவும் கண்ணியமானவர்கள்; அதனால்தான்.....

முதலமைச்சர் :—''நாடாளு மன்றத்தில், கம்யூனிஸ்டுக் கட்சிகூட ஒரு எதிர்க் கட்சிதான்; இந்தியக் கம்யூ னிஸ்டுக் கட்சிக்காரர்களே அவ்வளவு கண்ணியமற்ற வர்கள் என்று அனந்தநாயகி அவர்கள் கூறுவதை என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.'

அனந்தநாயகி :—''கம்யூனிஸ்டுக் கட்சி எங்களுடைய தோழமைக் கட்சி.''

முதலமைச்சர் :—''இது, கம்யூனிஸ்டுக் கட்சிமீது இரண்டா வது தாக்குதல்—பரவாயில்லை!''

பின்வாங்கிட எங்களால் இயலாது!

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்ற தி.மு.க. மாநாட் டில், கழகத்தின் பொருளாளர் பேராசிரியர் முன்மொழிந்தது —பொதுச் செயலாளர் நாவலர் வழிமொழிந்த தீர்மானத் திலும்,

> ''இந்தியாவில் இன்றைக்கு ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலையை மாற்றியமைப்பதற்குத் தேவையான முயற்சிகளை மேற்கொண்டு, இந்திய நாட்டு முக்கியத் தலைவர்களையும்—முதலமைச்சர் களையும் கலந்து விவாதித்து—பிரதம அமைச்சரைச் சந்தித்து—நாட்டு மக்கள் அனைவரும் மகிழத்தக்க

ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி அவர்களை இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது''

என்று குறிப்பிட்டிருக்கிறது.

இந்தத் தீர்மானம், செயற்குழுத் தீர்மானத்திற்கு எப்படிப் புறம்பானதாகும்?

செயற்குழுத் தீர்மானத்தில் நாங்கள் கடைசியில் சொல்லியிருக்கிறோமே—'அண்ணாவின் பாதையில்—காந்திய நெறியில்—அமைதியான முறையில்—சட்டம், ஒழுங்கிற்கு ஊறு நேரிடாவண்ணம் நாட்டிற்கு வந்துள்ள நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டும்' என்று—செயற்குழுவில் போடப்பட்ட அத் தீர்மானம்தான் நெல்லை மாவட்ட மாநாட்டுத் தீர்மானம் வரையில் நீண்டிருக்கிறதே தவிர, அது ஒன்றும் பின்வாங்கிவிட்ட தீர்மானம் அல்ல!

எங்கள் தீர்மானத்தின் அடிப்படையில்...

ஒவ்வொரு மாநாட்டுத் தீர்மானத்திலும், 'தலைவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும்—அவசரச்சட்டம் திரும்பப் பெறப்படவேண்டும்—பத்திரிகைகளுக்கு நியாயமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும்' என்றுதான் சொல்லியிருக்கிறோம்!

அதையொட்டித்தான், தமிழ்நாட்டில் ஸ்தாபன காங்கிரசுக் கட்சி சார்பாகவும் 3—7—75 அன்று நெருக்கடி நிலையைக் கண்டித்தே ஒரு தீர்மானம் போட்டார்கள்—எங்களுடைய தீர்மானத்திலுள்ள—நான் சொன்னதைப் போன்ற வாசகங்கள்தான்; காங்கிரசுக் கட்சி தீர்மானம் வேகமாக—கண்டித்தேகூடப் போடப்பட்ட தீர்மானமாகும்!

அது மாத்திரமல்ல; இங்கு பேசிய சில நண்பர்கள், 'அதைப்பற்றிக் காமராஜர் கருத்தே சொல்லவில்லை' என்று சொன்னார்கள்!

'நவசக்தி' பத்திரிகையில், 'அவசர நிலைப் பிரகடனம்—தலைவர்கள் கைது—நாட்டிற்கு நல்லதல்ல — தலைவர் காமராஜர் எச்சரிக்கை' என்ற தலைப்பில்,

> சோளிங்கர், ஜூன் 27—''தேசம் முழுவதும் தலைவர்கள் கைது செய்யப் பட்டிருக்கிறார்கள்; அதைக் கேட்டதும் எனக்கு அதிர்ச்சியாக இருக்கிறது; ஏன் அவர்களைக் கைதுசெய்யவேண்டுமென்று தெரியவில்லை; அந்த நிலை நாட்டிற்கு நல்லதல்ல''

என்று பொதுக் கூட்டத்திலேயே காமராசர் பேசியதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது.

அடுத்த நாள் வெளிவந்த 'நவசக்தி' பத்திரிகையிலும், 'வெள்ளைக்காரன் ஆட்சியிலேகூட நடைபெறுத கொடுமை இப்போது நடைபெற்றிருக்கிறது' என்று காமராசர் பேசியதாகச் செய்தி வெளிவந்திருக்கிறது!

அடுத்து அவர், 'இனிமேல் நான் பேசுவதெல்லாம் பத்திரிகைகளிலே வரப்போவதில்லை; பேசித்தான் பயன் என்ன?' என்றும் கூறியிருக்கிறார்!

அந்த அளவிற்கு—மறைந்த தலைவர் காமராசர் அவர்கள் பேசிய பேச்சு 'நவசக்தி' பத்திரிகையில் அப்போது வந்திருக்கிறது; இது 28—6—75 'நவசக்தி' ஏடாகும் (பத்திரிகையைக் காட்டுதல்).

ஹண்டே அவர்கள், அவசரமாகப் பத்திரிகையின் தேதியைக் குறித்துக் கொள்கிறார்: எங்கோ—ஏதோ நான் இப்படிப் பொய்யாக 'முரசொலி'யில் ஒரு செய்தியைப் புதிதாக அச்சிட்டுக்கொண்டு வந்துவிட்டதைப் போல நினைத்துக்கொண்டு குறித்துக்கொள்கிறார்!

அவசர நிலை அறிவித்ததற்கான சில காரணங்களை நண்பர் மாரிமுத்து இங்கே சொன்னார்; 'இயற்கையின் கோளாறால் விலைவாசி ஏறியது—அதற்கு இந்திரா காந்தியா காரணம்?' என்று கேட்டார்.

அதே கேள்வியைத் தமிழ்நாட்டில் கேட்டிருக்கக் கூடாதா? 'விலைவாசி உயர்விற்கு தி.மு.க. அரசுதான் காரணம்' என்று இங்கே போராட்டம் நடைபெற்றபோது, மாரிமுத்துவைப் போன்ற அரசியல் நடுநிலையாளர்கள், போராட்டம் நடத்தியவர்களைச் சந்தித்து, 'விலைவாசி உயர்விற்குக் கருணாநிதியா காரணம்—இல்லையே' என்று கூறினார்களா என்ன? இல்லை!

தவறான முறையைக் கடைப்பிடித்தோமா?

பீகார் கிளர்ச்சிபற்றி அவர்களே குறிப்பிட்டு—அதற்கு அவர்களே விளக்கமும் சொன்னார்கள்.

பீகார் கிளர்ச்சியைப் பற்றிக் கருநாடகத்தில் என்னை நிருபர்கள் சந்தித்துக் கேட்டபோது சொன்னேன்:—

> ''ஐந்தாண்டுக் காலம் சனநாயகத்தில் பொறுத்திருக்க வேண்டும்; இடையில் அமளி செய்து ஆட்சியைக் கவிழ்த்துவிடுவதை நான் விரும்பவில்லை'' என்று!

இன்னும்கூடத் தெளிவாகச் சொன்னேன் —

> ''நாங்கள் ஆட்சியில் இருக்கின்ற காரணத்தால் அப்படிச் சொல்கிறோம் என்று கருதாதீர்கள்; நாங்கள் எதிர்க் கட்சியாகச் செயல்பட்ட அந்தக் காலத்திலும், இந்த முறை, நாங்கள் கடைபிடித்த முறையல்ல—எங்களுக்குப் பிடித்தமான முறையல்ல'' என்று!

விவேகமற்றுப் பேசுவதா முறை?

பீகார் கிளர்ச்சிக்கும்—கிட்டத்தட்ட 1972-ம் ஆண்டில் எங்களைவிட்டுச் சில நண்பர்கள் பிரிந்துபோன நேரத்தில் நடைபெற்ற தமிழ் நாட்டுக்கிளர்ச்சிக்கும் என்ன வித்தியாசம் என்று பெரியவர் மணலி அவர்கள் கேட்டார்கள்.

நண்பர் லத்தீப் பேசுகின்ற நேரத்தில்கூட அதுபற்றிக் குறிப்பிட்டார்கள்.

''சட்டமன்ற உறுப்பினர்களே இராஜினமா செய்யச் சொல்லலாமா?'' என்று மாரிமுத்து அவர்கள் கேட்டார்கள்.

இங்கே எங்கள் உறுப்பினர்களே, 'இராஜினமாச் செய்யுங்கள்' என்று கேட்டு ஊர்வலம் நடத்தினார்கள்; ஆனல், 'அமைதியாக நடத்தினேம்' என்று சொன்னார்கள்; நான் அந்த விவகாரத்தில் எல்லாம் வெகு விளக்கமாகச் செல்ல விரும்பவில்லே.

''ஜெயப்பிரகாஷ் அவர்களோ—மொரார்ஜி தேசாயோ —அசோக் மேத்தாவோ வேறு சிலரோ, தலேமையமைச்சரைப் பற்றி வேகமாகப் பேசிவிடுகிறார்கள்; ஆகவேதான், இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்க நேர்ந்தது'' என்று சொன்னார்கள்.

நான் நண்பர் மாரிமுத்து அவர்களுக்கு நினேவுபடுத்த விரும்புகின்றேன்; கோவையில் தேர்தல் நடைபெற்றபோது அண்ணு தி.மு.கழகத்திற்கும் — இந்திரா காங்கிரசுக்கும் உறவு ஏதும் இல்லே; அந்த நேரத்தில், கோவையில் அ.தி.மு.க கட்சியின் துணேப் பொதுச் செயலாளர்,

''சீட்டுக்காகப் பிரதமரா —
நாட்டுக்காகப் பிரதமரா?''

என்று கேட்டிருக்கிறார்; அவர்கள் ஏடான 'தென்னகத்'திலே இந்தச் செய்தி வெளிவந்திருக்கிறது.

''பிரிவினேயைத் தூண்டும் குற்றவாளி
இந்திரா காந்திதான்''

என்று 6—12—74-ல் கோவையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மனேகரன் பேசியிருக்கிறார்.

அடுத்து, புதுவைத் தேர்தலின்போது என்னுடைய அருமை நண்பர் எம். ஜி ஆர். அவர்கள், புதுவை தொகுதியோடு சேர்ந்த மாகியில் சென்று பேசுகையில்,

''1971-இல் இந்திரா காந்தி கொடுத்த வாக்குறுதிகள் காற்றில் பறக்க விடப்பட்டது ஏன்?''

என்று கேட்டு

''வாக்குறுதிகள் தொடர்ந்து காற்றிலே பறக்க விடப்பட்டு வருகின்றன; அது பத்து அம்சத் திட்டமாக இருந்தாலும்—அரசியல் சட்டத்திலே இடம் பெற்றிருக்கின்ற முகப்பு குறிக்கோள்களானாலும்—இவர்களுடைய இருபத்தெட்டாண்டுக்கால ஆட்சியிலே வாக்குறுதிகள் தொடர்ந்து பறக்கவிடப்பட்டு வருகின்றன''

என்று கூறி,

''பிரதமருக்குக் தக்க பாடம் கற்பிப்போம்''

என்று குறிப்பிட்டிருக்கிறார் (எந்த வகையில் என்று தெரியாது; கோபாலபுரத்திற்கு வந்ததைப் போலவோ என்னவோ—எனக்குத் தெரியாது).....

பி. சீனிவாசன் :—''தேர்தல் பாடம்?''

முதலமைச்சர் :—''தேர்தல் பாடமா?''

பி. சீனிவாசன் :—''முதலமைச்சர் தேடிப் பிடித்து—இந்த ஒரே ஒரு ஆதாரத்தை வைத்துக் கொண்டு, தேர்தல் நேரத்தில் பேசியதை.....

முதலமைச்சர்:— ''இது அமைதியான பேச்சா? சரி—இன்னொன்றைச் சொல்கிறேன்—

''இந்திராவைக் கைது செய்; அண்ணு தி. மு. க. எம். பி. மனோகரன் ஆவேசம்''

இதுவும் பத்திரிகையில் வந்ததுதான்.

இப்படி, 'இந்திராவைக் கைது செய்' என்றும், 'பிரதமர் ஒரு பிரிவினைவாதி' என்றும், 'பிரிவினையைத் தூண்டுகின்ற குற்றவாளி' என்றும் பேசிய ஒரு கட்சி இன்றையத்தினம், 'தேர்தல் உறவுகள் வரும்' என்ற நிலையிலே—அவசரச்

சட்டம் அல்லது இருபது அம்சத் திட்டங்களை வரவேற்று—தி. மு. கழகம் இந்தியாவின் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிப்பதைப் போலவும், இந்திரா காந்தியிடம் தனிப் பட்ட பகைமை கொண்டிருப்பதைப் போலவும் விமர்சிப்பது முறையல்ல!

கழக ஆட்சியைக் கவிழ்க்க நப்பாசை

நாங்கள் செயற்குழுவிலும் சரி—கடற்கரைக் கூட்டத்திலும் சரி—

> ''மிகப் பாரம்பரியமிக்க ஒரு தேசியப் பரம்பரையில் வந்தவர், இன்றையப் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்; அதை யாரும் மறுப்பதற்கில்லை; ஆனால் இருக்கின்ற சங்கடமெல்லாம், அவர் எந்தெந்தப் பெரியவர்களுடைய மடியிலே குழந்தையாகத் தவழ்ந்தாரோ — அப்படிப்பட்ட ஜெயப்பிரகாஷ் நாராயணன், மொரார்ஜி தேசாய் ஆகியவர்களைப் போன்ற தலைவர்கள் எல்லாம் இன்றைக்குச் சிறையில் அடைப்பட்டுக் கிடக்கிறார்கள்; அவர்களை விடுதலை செய்வதன் மூலம், நாட்டில் இன்றைக்குப் பெரிய புரட்சி எதுவும் தோன்றிடும் என்று யாரும் எதிர்ப்பார்க்கத் தேவையில்லை; அப்படிபபட்டவர்களை விடுதலை செய்வதும், பத்திரிகைகளின நியாயமான உரிமைகளை வழங்குவதும் எந்த வகையிலே தவறு ஆகும்?''

என்று குறிப்பிட்டுக் கேட்டோம்!

இப்படிக் கேட்பது தேச விரோதமாகாது: இதை, 'தேச விரோதம்' என்று வர்ணிப்பதும்' 'இதை வைத்துக் கொண்டு இந்த ஆட்சியைக் கவிழ்த்து விடலாம்' என்று எண்ணுவதும் நப்பாசையே தவிர, வேறல்ல!

காமராசருக்கு நாம் நினைவாலயம் எல்லாம் கட்டுகிறோம். எவ்வளவோ அழியாத சிறப்புக்களை எல்லாம் காமராசருக்குச் செய்தோம்; போலீஸ் மரியாதை—இராணுவ மரியாதை

என்றெல்லாம் செய்தோம்; இதையெல்லாம்விட, சிறந்த நினைவாலயமாகவாவது — காமராசருடைய தியாகத்தை மதிக்கிறோம் என்பதற்கு அடையாளமாகவாவது, அவருடைய சகாக்கள் சிறையில் இருக்கிறார்களே—அவர்களை எல்லாம் விடுதலை செய்ய வேண்டும்!

நாங்கள் கொலைக்காரர்களுக்காக வாதாடவில்லை; வன்னெஞ்சருக்காக வாதாடவில்லை; சதிகாரர்களுக்காக வாதாடவில்லை; 'இரத்தப் புரட்சியில்தான் ஒரு நாட்டின் சுதந்திரம் இருக்கிறது' என்று சொல்கின்ற வன்கணாளர்களுக்காக வாதாடவில்லை!

கண்ணியமற்ற பேச்சுக்கு இடமில்லை

தலைமையமைச்சரிடம் பேசிய நேரத்திலும் சரி—வேறு பல நேரங்களிலும் சரி—அந்த அம்மையார் விடுத்திருக்கின்ற அறிக்கைகளிலும் சரி—அவர்கள் கொண்டிருக்கிற உருக்கமான உணர்ச்சிகளை என்னால் உணர முடிந்தது; அதனை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்.

ஆனால், பிரதமர் கொலை செய்யப்படுவது என்பதோ—வன்முறைப் புரட்சி நாட்டில் ஏற்படும் என்பதோ—என்றைக்கும் அனுமதிக்கக்கூடிய காரியமல்ல! பிரதமர்மீது சுமத்தப்படுகின்ற கொலைப் பழிச் சொற்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகள் அல்ல!

யாராவது கொலை செய்யப்பட்டால், 'இந்திரா காந்தி செய்திருப்பார்கள்' என்றெல்லாம்கூடச் சிலர் பேசுகிறார்கள்; அப்படிப்பட்ட கண்ணியமற்ற பேச்சுக்களைத் தி. மு. கழகம் என்றைக்கும் கையாண்டது கிடையாது!

இந்திரா காந்தி அவர்களோடு தி. மு. கழகத்திற்கு உறவு இருந்த காலத்திலும் சரி—உறவு முறிந்துவிட்ட காலத்திலும் சரி—எங்களது பேச்சில் இம்மியளவு கண்ணியக் குறைவான தன்மையும் இந்திரா காந்தியைப் பற்றி இருந்தது கிடையாது! மத்தியில் இருக்கிற அரசோடு வீணாக மோதிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமும் கிடையாது!

நாங்கள் அவர்களோடு உறவாக இருந்த நேரத்திலே தான், மாநில சுயாட்சி கேட்டோம்; 'மாநிலங்களுக்கு அதிக அதிகாரங்கள் வேண்டும்' என்று கேட்டோம்!

உறவாக இருந்த நேரத்தில்தான், பஞ்சாப் மாநிலத்தின் முதலமைச்சரை அழைத்து, மாநில சுயாட்சி மாநாடு நடத்தினோம்.

1971 தேர்தல் பிரகடனத்தில் மாநில சுயாட்சியை எங்களுடைய குறிக்கோளில் ஒன்றாக வைத்தோம்!

இப்போது மாநில சுயாட்சியை எதிர்க்கின்ற அண்ணா தி. மு. க. வைச் சேர்ந்தவர்கள் எல்லாம்கூட, அந்தத் தேர்தல் பிரகடனத்தை வைத்துத்தான் தேர்தலில் நின்று வெற்றி பெற்றோம்!

இந்திரா காந்தியுடன் உறவாடிய நேரத்தில், எங்களுடைய கொள்கையை இம்மியளவும் விட்டுக் கொடுக்கவில்லை!

இந்தித் திணிப்பை நாங்கள் ஏற்றுக் கொள்வோம் என்று சொல்லவில்லை!

அண்ணா மறைந்த பிறகு திருச்சியில் நடைபெற்ற மாநாட்டில்—இந்திரா காந்தியோடு உறவு இருந்த நேரத்தில்—

அண்ணா வழியில் அயராது உழைப்போம்!

இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!

வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!

மாநிலத்தில் சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சி!

என்ற ஐந்து பெரும் முழக்கங்களை அனைவரும் சேர்ந்து—இன்று பிரிந்து போய் இருக்கின்ற நண்பர்கள் உட்பட அத்தனைப் பேரும் சேர்ந்து—எழுப்பினோம்!

எங்களுடைய கொள்கைகளே நாங்கள் என்றைக்கும் அடகு வைத்தது கிடையாது!

கொள்கைகளே — எண்ணங்களே — நிலைமைகளேத்தான் விமர்சிக்கிறோம்!

ஆகவே, இன்றைய இந்தக் கண்டனத் தீர்மானத்தை நானும் பயன்படுத்திக் கொண்டு, இந்திரா காந்தி அம்மையாரை இந்த சபையின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்—

''அவசர நிலை பிரகடனத்தை உடனடியாகத் திரும்பப் பெறும் முயற்சியில் ஈடுபட்டு—'தேசத் தலைவர்களே விடுதலை செய்யச் சில கட்டுப்பாடுகள் தேவை' என்று பிரதமர் சொல்கிறார்கள்; அதற்கு யாரும் எதிரிகள் அல்லர்; ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகியவைகள் எல்லாம் தேவைதான்; அதற்கு இந்த அரசு ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது—பத்திரிகையின் நியாயமான சுதந்தரங்களே எல்லாம் தருகின்ற வகையிலே விரைவில் ஒரு நல்ல முடிவை எடுக்கவேண்டும்'' என்று!

இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகு இந்தக் கண்டனத் தீர்மானம் தேவையில்லை; அதனைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

(சட்ட மன்றப் பேரவை உரை. 30-10-75)

தமிழ்க் குலம் காப்போம்

நேற்றும் இன்றும் மிகுந்த எழுச்சியோடு குமரி மாவட்டத்தினுடைய முன்னேற்றக் கழக மாநாடு இந்த மாவட்டத்தினுடைய கழக வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட தியாகிகளுடைய பெயரைப் பந்தலுக்கும் அரங்கத்துக்கும் சூட்டப்பட்டு அந்தத் தியாகிகளுடைய பெயரை நெஞ்சத்திலே ஏந்தி மிக எழுச்சியுடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிற மாட்சியினை நாம் அனைவரும் காண்கிறோம்.

குமரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட ஒரு பெருந்திரளான கூட்டம் இதுவரை கூடியதில்லையென்று இந்த மாவட்டத்துப் பெருங்குடி மக்கள் பேசிக் கொள்கிறார்கள் என்ற தகவல்கள் இன்று காலையிலிருந்து எங்களுக்கு வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற சுசீந்திரம் திருவிழாவும் மண்டைக் காட்டு கொடைவிழாவும் இரண்டும் ஒன்றுகச் சேர்ந்தால் எவ்வளவு பெரிய கூட்டம் வருமோ, அவ்வளவு பெரிய கூட்டம் இந்த மாநாட்டுக்கு வந்திருப்பதாக குமரி மாவட்ட பெருமக்கள் பேசிக் கொள்வதாக நண்பர்களெல்லாம் கூறினார்கள். அந்த விழாக்களுக்கு வருகிற மக்கள் இவ்விழாக்கோலம் கண்டு விழாப் பெருமையை ஒருவரோடு ஒருவர் பேசித் தீர்த்து விழா நிகழ்ச்சிகள் முடிவடைந்துள்ளன. ஆனால் இந்த மாநாட்டிலே கூடியிருக்கின்ற லட்சணக்கான அரும்பெருங்குடி மக்கள் பல்லாயிரக் கணக்கிலே குழுமியிருக்கின்ற தாய்மார்கள் ஆடவர் பெண்டிர் முதியோர் வாலிபர், இளைஞர் என்கிற வகையில் அத்தனை பேரும் ஏந்திச் செல்ல வேண்டிய பல நல்ல கருத்துக்களை இங்கு நம் மாநாட்டுத் தலைவர் அவர்களும், மாநாட்டுத்

திறப்பாளர் அவர்களும் தொடங்கி நம்முடைய மதிப்பு மிகுந்த பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் வரையில் இந்த மாநாட்டிலே இந்த நேரத்திற்குத் தேவையான பல இலட்சியங்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன.

நேற்றெல்லாம் நம்முடைய திறப்பாளருடைய உரை கோடை இடியாக இருந்தது. மாநாட்டுத் தலைவருடைய உரை விளக்க உரையாக, தெளிவுரையாக விவேக உரையாக அமைந்து இருக்கின்றது. மாநாட்டிலே பெரியாருடைய படத்தைத் திறந்து வைத்த நண்பர் மாரிசாமியுடைய உரையாக இருந்தாலும், பேரறிஞர் அண்ணு அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்த அன்புக்குரிய சந்தோஷம் அவர்களுடைய உரையானாலும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களுடைய படத்தைத் திறந்து வைத்த நண்பர் வலம்புரி ஜானுடைய உரையானாலும் அதிலே அந்தப் பெரியவர்கள் அந்த மேதைகள்—அந்த இலட்சிய மனிதர்கள் இந்தத் தமிழ்ச் சமுதாயத்திற்காக விட்டுச் சென்றிருக்கிற கொள்கைகள், எண்ணங்கள், லட்சியங்கள் இவைகளையெல்லாம் நாம் எப்படி நம்முடைய உள்ளங்களிலே ஏற்றித் தொடர்ந்து நடைபோடுவது என்பதற்கான விளக்கங்கள் இருக்கின்றன.

இன்று காலையிலே இருந்து முற்பகல் ஒரு மணி வரையிலே நம்முடைய பேராசிரியர் அவர்கள் பேசத் தொடங்குகின்ற வரையில் மீண்டும் இடி முழக்கங்கள் சூறாவளிக் காற்றின் பேரொலிகள். அதற்குப் பிறகு இன்று பிற்பகல் பேசிய பேராசிரியர் அவர்கள் தென்றல் நடையில் தமிழ் உணர்வினை இந்த மாநாட்டிலே கூடியிருக்கின்ற லட்சக் கணக்கான மக்களுக்கு மாத்திரமல்லாமல், கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்களுடைய செவிகளிலும் ஏறுகின்ற அளவுக்கு—அவர்களுடைய சிந்தைகளில் இடம் பெறுகின்ற அளவுக்கு நிகழ்த்தியிருக்கிறார்கள்.

எனக்கு முன்னால் பேசிய நம்முடைய கழகத்தினுடைய பொதுச் செயலாளர் நாவலர் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய லட்சியங்கள் ''மாநிலத்தில்

சுயாட்சி மத்தியிலே கூட்டாட்சி, இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்'' என்கின்ற இந்தக் கொள்கை இவைகளைப் பற்றியெல்லாம் மிக விரிவாக அவருக்கே உரிய வெண்கலக்குரலில் இந்த மாநாட்டிலே முழங்கியிருக்கிறார்கள். மாநாட்டினுடைய இறுதிக் கட்டமாக நான் உங்களிடத்திலே பேசுகின்ற நேரத்தில் இந்த மாநாட்டினுடைய பெருமைக்குக் காரண கர்த்தாக்களாக இருந்த நண்பர் நண்பர்களையெல்லாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாநாட்டினுடைய வசூல் என்ன, மிச்சம் என்ன, என்பதை வழக்கம்போல் அறிந்து கொள்ள நீங்களெல்லாம் ஆவலாக இருப்பீர்கள் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும். நம்முடைய கழக நண்பர்கள் அரும்பாடுபட்டு எடுத்துக் கொண்ட முயற்சியின் அடிப்படையிலும் பல்லாயிரக் கணக்கான நண்பர்கள் மாநாடு தொடங்குவதற்கு முன்பே கூட நன்கொடைச் சீட்டுக்களைப் பெற்று அந்தந்த ஒன்றியங்களில், கிளை அமைப்புகளில் நன்கொடைச் சீட்டுக்களை விற்ற வகையிலும் நேற்றும் இன்றும் மாநாட்டுப் பந்தலிலே நுழைவுக் கட்டணத்துக்கு உரிய தொகையை செலுத்தி இந்த மாநாட்டுப் பந்தலுக்கு மக்கள் வந்த வகையிலும் வசூலாகியிருக்கின்ற மொத்தத் தொகையை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்வேன். நான்கு லட்சத்து எட்டாயிரத்து எழுநூற்று பதினைந்து ரூபாயாகும். இதிலே நண்பர்கள் ரூ. 1,91,864-84 காசு. செலவு போக ரூ. 2,10,850 ரூபாயை மிச்சப் படுத்தியிருக்கிறார்கள். (கைதட்டல்) பொதுச் செயலாளரோடு இணைந்தும் பொருளாளரோடு சேர்ந்தும் தலைமைக் கழகத்தின் சார்பில் நண்பர்களையெல்லாம் நான் வாழ்த்துவதற்கும் பாராட்டுவதற்கும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த மாநாட்டின் தொடக்கத்திலேயே சிறப்புரை நடைபெற்ற நேரத்திலேயே இந்தப் பகுதியிலே உள்ள இளைஞர் காங்கிரசைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட

இளைஞர்கள்—வாலிப நண்பர்கள் மாநாட்டிலே திராவிட முன்னேற்றக் கழகத்திலே தங்களை ஒப்படைத்துக் கொண்ட காட்சியை நேற்றுக் காலையில் கண்டீர்கள். நகராட்சி மன்றத்தினுடைய உறுப்பினர் ஒருவர் இன்றையதினம் திராவிட முன்னேற்றக் கழகத்தில் வேறு கட்சியிலிருந்து விலகி வந்து இணைந்ததையும் நீங்கள் கண்டு மகிழ்ந்தீர்கள் பாராட்டினீர்கள்.

இந்தப் பகுதியிலே உள்ள விடுதலை போராட்ட தியாகிகள் 70க்கு மேற்பட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்களாக ஆனது மட்டுமல்ல; மிச்சமுள்ளவர்கள் அடுத்தமுறை நாங்கள் இங்கே வருகிற நேரத்திலே கழகத்திலே சேருவதாக வாக்கும் அளித்த அந்த நிகழ்ச்சியையும் நீங்கள் இங்கே கண்டீர்கள். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நண்பர் ஒருவரும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே உறுப்பினராக ஆன அந்தக் காட்சியையும் கண்டீர்கள். நாவலர் இங்கே எடுத்துக் காட்டியதைப் போல, இன்றைக்கு காங்கிரஸ் இயக்கத்திலே ஏற்பட்டிருக்கின்ற பிரச்சினையில் புதிய காங்கிரசுக்கும் பழைய காங்கிரசுக்கும் இடையில் இணைப்பு உண்டா, அல்லது இரண்டும் தனித்தனியாக இயங்குமா என்ற இந்தக் கேள்விகளுக்கு இடையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையின் சார்பில் நாம் திட்டவட்டமாக அறிவித்திருக்கின்றோம்.

நான் சென்னையில் நடைபெற்ற இன்னொரு கூட்டத்தில் தெளிவாகச் சொன்னேன். காங்கிரசிலேயிருந்து யாரையும் வாருங்கள் என்று நாங்கள் சொல்லவும் மாட்டோம். அவர்களாகவே வந்தால் வேண்டாம் என்று தள்ளவும் மாட்டோம், என்று நான் சொன்னேன். நேற்றும் இன்றும் வந்தவர்கள் எல்லாம் அவர்களாக வந்தவர்கள். நெருக்கடியின் காரணமாக எப்படியும் சேர்ந்துதான் தீர ஆக வேண்டுமென்று வலியுறுத்தலின் காரணமாக பிடித்து இழுத்துக் கொண்டுவந்து மேடையில் நிறுத்தப்பட்டவர்கள்

அல்ல. இளைஞர் காங்கிரஸ்காரர்கள் ஆனாலும் சரி, தியாகிகளானாலும் சரி, நகராட்சி மன்ற உறுப்பினர்களானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி அவர்களாகவே மனம் ஒப்பி, நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திலே எங்களை ஒப்படைத்துக் கொள்கிறோம், என்கிற அந்தச் சொல்லை எழுத்து மூலமாகத் தந்து நம்மோடு இணைந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வரவேற்கிறேன். இன்னும் வரவிருப்பவர்களையும் வரவேற்கத் தலைமைக் கழகத்தின் சார்பிலே நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிடுவது என்னுடைய கடமையாக நான் எண்ணுகிறேன்.

இந்த மாநாடு மிகச் சிறப்புடன் அமைவதற்கு காரணமாக இருந்த நண்பர்கள் வரவேற்புக்குழுத்தலைவர் திரவியம், இந்த மாநாட்டினுடைய செயலாளர்கள் மைக்கேல்ராஜ், ரசல்ராஜ், சங்கரலிங்கம், ஜி.எம். ஷா ஆகியோர் நம்முடைய பாராட்டு—வாழ்த்து—நாம் அளிக்கிற உற்காகம் இவைகளுக்கெல்லாம் உரியவர்களாவார்கள். குமரி மாவட்டத்திலே மாநாடு நடத்தவேண்டும் என்று நண்பர்கள் மைக்கேல் ராஜும், ரஸல் ராஜும் என்னிடத்திலே வந்து கேட்டபோது, 'சின்னஞ்சிறிய மாவட்டம் ஆயிற்றே, நாம் நடத்துகிற மாவட்ட மாநாடுகளெல்லாம் மிகப் பெரிய அளவில் நடைபெற்று. பெரும் வெற்றியைத் தேடித் தந்திருக்கின்றனவே, அண்மையில் டிசம்பர் திங்களில் 25, 26, 27, 28 ஆகிய நாட்களில் கோவையிலே நம்முடைய கழகத்தின் மாநில மாநாடு நடைபெற இருக்கிறதே, அதற்கு முன்னால் நடைபெறுகிற மாநாடு வெற்றிகரமாக அமையவேண்டாமா' என்கின்ற ஐயத்தை நானும், பொதுச் செயலாளரும் பொருளாளரும் தலைமைக் கழகத்தின் செயலாளர்களும் எடுத்துரைத்த நேரத்தில் 'அஞ்சற்க, நாங்கள் வெற்றியை ஈட்டித் தருகிறோம்' என்று மாவட்டச் செயலாளரும், மைக்கேல் ராஜ் போன்ற மாநாட்டினுடைய செயலாளர்களும் உறுதியளித்தார்கள். நாங்கள் நம்பத்

தானில்லே. ஆனால் இன்றைக்கு அவர்கள் எங்களே தோற் கடித்துக் காட்டிவிட்டார்கள் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக் கொள்கின்றேன். (கைதட்டல்)

துணைச் செயலாளர்களான செல்லத்துரை, துரைமணி, மகாராஜன், செல்லப்பா அவர்களையும் நிதிக்குழுத் தலைவர் நண்பர் ராஜகோபால், மற்றும் உறுப்பினர்களையும் தொண்டர்படைத்தலைவர் நண்பர் குமரேசன் அவர்களையும், தொண்டர் படைத் தலைவி சரோஜினி புதியவனையும் மற்றும் பல்வேறு குழுவினரையும் தலைமைக் கழகத்தின் சார்பிலே நான் மீண்டும் மீண்டும் பாராட்டுகின்றேன். தலைமைக் கழகத்தினுடைய செயலாளரும் இந்த மாவட்டத்துக்கு மிக நெருங்கியவருமான நண்பர் நீலநாராயணன் அவர்களும், கொள்கை பரப்புச் செயலாளர் நண்பர் சிட்டிபாபு அவர் களும் மகளிர் அணிச் செயலாளரும் இந்த மாவட்டத்திற்கு நெருங்கியவர்கள் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும். அம்மையார் அலமேலு அப்பாதுரையார் அவர்களும் தலைமைக் கழகத்தினுடைய மற்றொரு செயலாளர் நண்பர் வீராசாமி அவர்களும் இந்த மாநாடு எல்லா வகையிலும் சிறப்படைய மாவட்டக் கழக நிர்வாகிகளுடன் கலந்து தக்க யோசனைகளையெல்லாம் கூறி இவ்வளவு சிறப்புற இந்த மாநாட்டிற்கு வெற்றி தேடித் தந்ததற்காக அவர்களையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய பெருமைகளே இங்கே தலைவரை நேற்றைய தினம் முன்மொழிந்து பேசிய நண்பர் சங்கரலிங்கம் அவர்கள் வெகு விரிவாக எடுத்துச் சொன்னார்கள். இந்த மாவட்டம், அறிவு, ஆர்வம் கொண்ட மாவட்டமாகும். கல்வியில் சிறந்த மாவட்ட மாகும். நீங்கள் மாவட்டக் கழக நிர்வாகிகள். இந்த மாநாட்டை நடத்துகிறவர்கள் இவர்களுடைய பெயர்களே யெல்லாம் நீங்கள் பார்த்தால்கூட, நான் படிக்கிற நேரத்திலே அவர்களுடைய பெயர்களுக்குப் பின்னால்

இருக்கிற எம்.ஏ., பி.எல்., லேயோ, பி.ஏ., பி.எல்., லேயோ சொல்லவில்லே. காரணம் எனக்கு அப்படி ஒன்று இல்லாத காரணத்தினுல் அதைச் சொல்லாமலே விட்டுவிட்டேன்.

எம்.ஏ., பி.எல்., பி.ஏ., பி.எல்., பி எஸ்.ஸி., என் றெல்லாம் பட்டதாரிகள், வழக்கறிஞர்கள், சட்டக்கலே வல்லுநர்கள், அப்படிப்பட்ட நண்பர்கள் குமரி மாவட்டத் திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினேக் கட்டிக் காக்கின் றூர்கள். பல்வேறு அரசியல் கட்சிகள்—நான் அரசியல் கட்சி களேத்தான் குறிப்பிடுகிறேன்—குமரி மாவட்டத்தில் நல்ல அறிவாளிகள், படித்த மேதாவிகள் எல்லாம் திகழ்கிறூர்கள். ஆகவே இந்த மாவட்டம் கல்வியில் சிறந்த மாவட்டம் நல்ல அறிவினே வளர்க்கின்ற ஆர்வம் படைத்த மாவட்டம் ஆகும். கலேகளே வளர்க்கின்ற மாவட்டங்களிலும் இது தலேசிறந்த மாவட்டமாகத் திகழ்கிறது. அரசியல் விழிப்புணர்ச்சியிலும் இந்த மாவட்டம் தலேநிமிர்ந்து நிற்கிறது.

வழிவழியாக சுயமரியாதை உணர்வு கொண்டவர்கள், தன்மான உணர்ச்சி பெற்றவர்கள், இந்த மாவட்டத்திலே நீண்ட நெடுங்காலமாக உதயமாகி, சுயமரியாதை உணர்வை வளர்த்து வந்திருக்கின்றூர்கள், என்பதற்கு எத்தனேயோ மாடமாளிகைகள், அழகழகான வண்ணப் பலகைகள், எழில் மிகு கட்டிடங்கள், வேறு பல கட்சிகளுக்கு, இன்றைக்கு அமைக்கப்பட்டிருந்தாலும்கூட கடைத்தெருவிலே செல் கின்ற நேரத்தில் என்றைக்கோ பழைய காலத்திலே போடப் பட்ட 'சுயமரியாதை வாசிப்புச் சாலே' என்கின்ற அந்தப் பலகையைக் கண்டாலே, எவ்வளவு ஆண்டு காலத்திற்கு முன்னுலே கன்னியாகுமரி மாவட்டத்திலே சுயமரியாதை வித்து ஊன்றப்பட்டது என்பதை நாம் எல்லாம் புரிந்து கொள்ளமுடியும்.

நேற்று நாங்கள் காரிலே செல்கின்ற நேரத்திலே, நாவலரும் பேராசிரியரும் சொன்னுர்கள். 'நாங்கள் முதல் முதலாக கன்னியாகுமரிக்கு நாகர்கோவிலுக்கு கூட்டத்திற்கு வந்தபோது இதோ இருக்கிற சுயமரியாதை வாசிப்புச்

சாலையில்தான் தங்கினேம். அங்குதான் நாங்கள் படுத்திருந்தோம். ஒய்வு எடுத்துக்கொண்டிருந்தோம் என்றெல்லாம் சொன்னார்கள்.

ஆகவே தன்மான இயக்க உணர்வினை நீண்ட நெடு நாட்களாக வளர்த்து வருகின்ற மாவட்டம் கன்னியாகுமரி மாவட்டமாகும்.

இங்கேதான் நம்முடைய அன்புக்கும் மதிப்பிற்குமுரிய, திராவிட முன்னேற்றக் கழகத்தின்பாலும், பெரியாரின் பாலும், பேரறிஞர் அண்ணாவின்பாலும் அண்ணா அவர்களுடைய அருமைத் தம்பிகளாம் எங்களின்பாலும் நிறைந்த அன்பினைச் செலுத்தி, எந்த நேரத்திலும் எங்களுக்குத் துரோகம் இழைக்க எண்ணுத பெரும் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் இந்த ஊரிலேதான் பிறந்தார். இந்த மண்ணுக்குரியவர்தான் கலைவாணர் என்.எஸ்.கே. அவர்கள் ஆவார்கள்.

நீதிக் கட்சியினுடைய தலைவராய்—சுயமரியாதைச் சுடராய் திகழ்ந்த சிதம்பரபிள்ளை இந்த மண்ணுக்குச் சொந்தக்காரர். பொது உடமைக்கட்சியினுடைய புயலாக, தமிழகத்திலே மாத்திரம் அல்ல, இந்திய துணைக் கண்டத்திலேயே மாபெரும் தலைவராக விளங்கிய அருமைத்தோழர் ஜீவானந்தம் இந்த மண்ணுக்குரியவர்தான் விடுதலைக் கவி தேசிய விநாயகம் இந்த மண்ணிலே பிறந்தவர்தான். சதாவதானி செய்குதம்பி பாவலர் இந்த மண்ணிற்குரியவர் தான். திரிகூட சுந்தரனார் இந்த மண்ணிற்குரியவர். மார்ஷல் நேசமணி இந்த மண்ணிற்குரியவர். பன்மொழிப் புலவர் அப்பாதுரையார் இந்த மண்ணிலே பிறந்தவர்.

காலையிலே பேராசிரியர் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு தமிழக அரசின் தமிழ்த்தாய் வாழ்த்தாக இருக்கிற ''நீராரும் கடலுடுத்த'' என்று தொடங்கப் பெறுகின்ற அந்தப் பாடலை எழுதிய மனோன்மணி ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களுடைய தகப்பனார் பெருமாள்பிள்ளை பக்கத்திலே உள்ள வள்ளியூரிலே பிறந்தாலும், சுந்தரம்

பிள்ளை அவர்கள் ஏற்கனவே இந்த மாவட்டத்தோடு இணைந்திருந்த ஆலப்புழையில் பிறந்தவர். அவருடைய உற்றார் உறவினரெல்லாம் இன்றைக்கும் இந்த மாவட்டத்திலே நிரம்ப உண்டு. அப்படிப்பட்ட மாவட்டம் குமரி மாவட்டம். மானமறவர்களுடைய சீமை இந்தச் சீமை.

நேற்றைய தினம் பேசிய நண்பர்களெல்லாம் சொன்னார்கள். இன்று காலையிலே பேசிய ஆசைத்தம்பி அவர்களும் அறைகூவல் விடுத்தார்கள். இந்த மாவட்டத்தில் நடைபெறுகின்ற மாநாட்டில் முன்னேற்றக் கழகத்தினுடைய தலைமை எங்களுக்கு ஆணை பிறப்பிக்கவேண்டும் என்றெல்லாம் கேட்டார்கள். எங்களுக்கு என்ன கட்டளை இடுகிறீர்கள் என்றெல்லாம் வினவினார்கள். எங்களை அருமைத் தலைவர்களே என்று அழைத்தார்கள். அண்ணலே என்று கூப்பிட்டார்கள். உடன் பிறப்பே என்று உளமாரப் போற்றினார்கள். புகழ்ந்தார்கள். உங்களுக்கு மிக்காரு மில்லை, ஒப்பாரும் இல்லை என்றெல்லாம் தலைவர்களைப் புகழ வேண்டியது தங்கள் கடமையெனக் கொண்டு எங்களை எல்லாம் புகழ்ந்தார்கள். நான், நேற்றைய தினம் சுந்தரம் பிள்ளையின் மனோன்மணியத்தை திரும்ப ஒரு முறை புரட்சிப் பார்க்கிற நேரத்தில் மனோன்மணியும் சுந்தரம்பிள்ளை எங்களை யெல்லாம் எப்படி அழைத்திருக்கிறார் என்ற ஒரு பாடலைப் படித்து பரவசம் அடைந்தேன்.

சீவக பாண்டியன், தன்னுடைய அவையோரைக் கூட்டி வைத்துப் பேசுகிறான். அதை சுந்தரம்பிள்ளை பாடல்களிலே தருகிறார். கருணைநிதியே என்றும், அமைச்சர்களே என்றும், எங்களுக்கு ஆணையிடுங்கள் என்றும் யோசனை கூறுங்கள் என்றும் நீங்கள் கேட்டீர்களே — நீங்கள் அல்ல நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு, இந்தப் பகுதியிலே வாழ்ந்த சுந்தரம் பிள்ளை அன்றைக்கே பாடல் மூலம் எங்களையெல்லாம் அழைத்திருக்கிறார்.

''என்குலம் காக்க எனவருள் பழுத்துக்
கண்ணணம் கட்டிய கருணை நிதிகாள்!
மனத்திறத்து ஆய்ந்த மதி மந்திரிகாள்!

எனக்கென உயிர்வாழ் என்படை வீரர்காள்!
ஒருமொழி கூறிட அனுமதி தருமின்!
ஆடையின் சிறப்பெலாம் அணிவோர் சிறப்பே!
பாமையின் (பாஷையின்) சிறப்பெலாம் பயிலவோர்
சிறப்பே
எள்ளரும் மதிகுலச் சிறப்பெலாம் எமர்கான்
கள்ளமில் நும்முனோர் காப்பின் சிறப்பே!

என்று மனோன்மணியம் ஆசிரியர் சுந்தரம் பிள்ளை, நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்பு இங்கு தோன்றிய சுந்தரம்பிள்ளை, அவர் எழுதிய அரும்பெரும் காவியமாம் மனோன்பணீயத்தில் ''கருணைநிதிகாள்'' 'மதிமந்திரிகாள்' எனக்கென உயிர்வாழ்கின்ற என் படைவீரர்காள்' என்று அழைத்தது சுந்தரம்பிள்ளைக்கென உயிர் வாழ்கின்ற படை வீரர்காள் என்று அல்ல. ''என் குலம் காக்க எனவருள் பழுத்துக் கங்கணம் கட்டிய கருணைநிதிகாள்'' என்று அழைத்தது சுந்தரம்பிள்ளையினுடைய குலம் காக்க அல்ல—தமிழ்க் குலம் காக்க—தமிழ் மொழி காக்க வாருங்கள், வாருங்கள் என்று அன்றைக்கு மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை அழைத்த தாகத்தான் அந்தப் பாடலை நேற்று நான் படித்த நேரத்திலே உணர்ந்து கொண்டேன். இந்த மண்ணிலேதான் இந்த மண் தமிழ் தாயகத்தோடு இணைந்திட வேண்டுமென்பதற்காக வீரப்போராட்டம் நடைபெற்றது. அவைகளை நேற்றும் இன்றும் பேசிய நண்பர்கள் எல்லாம் ஆங்காங்கு சுட்டிக் காட்டினார்கள். 1945 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் உதயமாயிற்று. இன்றைக்கு முப்பது ஆண்டுகளுக்கு முன்பு கேரள காங்கிரசுக்கு விரோதமாக தமிழர்கள் எல்லாம் அணி திரண்டு 1945ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16ஆம் நாள் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரசை உருவாக்கினார்கள். நம்முடைய நண்பர், இந்த மாநாட்டின் செயலாளர்களில் ஒருவரான சங்கரலிங்கம் உட்பட உறுப்பினராக இருந்த திருவிதாங்கூர் காங்கிரஸ் கட்சிக்கு பெரு மதிப்பிற்குரிய பெரியவர் நத்தானியேல் அவர்கள் தலைமை தாங்கினார்கள். 1946 ஆம் ஆண்டு இந்த மாவட்டத்திலே

சமஸ்தான காங்கிரஸ் மாநாடு ஒன்றை கேரள காங்கிரஸ் கட்சி நடத்தியபோது திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு அறிக்கைவிட்டது. அந்த மாநாட்டிலே தமிழர்கள் யாரும் கலந்து கொள்ளக் கூடாது. தமிழர்கள் அந்த மாநாட்டை புறக்கணித்தே தீரவேண்டும். புறக்கணித்து போர்க் கொடி தூக்கி ஊர்வலம் நடத்தி பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் அந்த மாநாட்டு நேரத்தில் சிறைப்பட்ட வரலாறும் இந்த மான மறவர் பூமியான குமரி மாவட்டத்துக்குண்டு.

1948ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் கேரள ராஜ்ஜியத்திலே நடைபெற்ற பொதுத்தேர்தல். இந்தத் தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி போட்டியிட்டு 12 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்று மார்ஷல் நேசமணி தலைமையில் கேரள சட்டப் பேரவையில் 12 பேருக்கு நேசமணி அவர்கள் தலைமை தாங்கி, தமிழ்த் தாயகத்தோடு கன்னியாகுமரி மாவட்டம் இணைய வேண்டுமென்ற போர்க்குரலை கொடுத்துக்கொண்டேயிருந்தார். அந்தப் போர்க்குரல் கேட்பதற்கு முன்பு 12 பேர் வெற்றி பெறுகிற நேரத்தில் தேர்தல் பிரச்சார நேரத்தில் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும் மறைந்த மாபெரும் தலைவர்களில் ஒருவரான பெரியவர் காமராசரும் கூட அன்றைய தினம் அந்த இயக்கத்திற்கு எதிர்ப்பாக இருந்து எதிர்ப் பிரசாரம் நடத்தினர்கள். தேர்தல் பிரசாரத்தில் நடைபெற்ற பல அராஜகங்களில் ஒன்றாக பல மாங்காடு என்ற பகுதியில் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் தேவசகாயம், செல்லையா என்ற இரண்டு இளைஞர்கள் துப்பாக்கிக்குப் பலியானார்கள். அதற்குப் பிறகும் 1952ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சி 16 சட்டமன்ற உறுப்பினர்களைப் பெற்றது. அதற்குப் பிறகு தொடர்ந்து 1954ஆம் ஆண்டு இணைப்புக்கான இறுதிப் போராட்டம் நடைபெற்றது. (இன்றைக்கு இணைப்புக்கான வேறு போராட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது காங்கிரசுக்குள்ளேயே.) ஆனால்

அன்றைக்கு தாய்த் தமிழகத்தோடு இணைய தமிழர்கள் ஒன்றுக இணைய தமிழ்மொழி பத்தால் ஒன்றுகச் சேர, நடைபெற்ற இறுதி இணைப்புப்போராட்டத்தில் பலபேர் சிறை புகுந்தார்கள். குளித்தலை, மார்த்தாண்டம் ஆகிய இரண்டு இடங்களில் நடைபெற்ற பயங்கரமான துப்பாக்கிப் பிரயோகத்தில் 11 பேர் உயிர் பலிகொள்ளப்பட்டது. இன்றைக்கு நடைபெற்ற போராட்டத்தில் பெரியார், பேரறிஞர் அண்ணு ஜீவானந்தம், தமிழரசுக் கழகத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆகியவர்களுடைய ஆதரவு இந்த மாவட்டத்தினுடைய தமிழ்மக்களுக்கு வழங்கப் பட்டது. அதுமாத்திரமல்ல தி. மு. கவைப் பொறுத்த வரையில் நீதிமன்றங்களுக்கு முன்னல் நடைபெற்ற மறிய லில் 10 திராவிட முன்னேற்றக் கழகத்தினர் கைது செய்யப் பட்டார்கள். அதற்குப் பிறகு நண்பர்களே, 1956ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தாய் தமிழகத்தோடு குமரி மாவட் டம் இணைந்தது இன்றைக்கு பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பு தாய்த் தமிழகத்தோடு குமரி மாவட்டம் நவம்பர் திங்களில் இணைந்தது. நாம் நவம்பர்த் திங்களிலேதான் இந்த மாவட்டத்தினுடைய 3-வது மாநாட்டை நடத்திக் கொண் டிருக்கிறோம்.

அதுமாத்திரமல், 19 ஆண்டுகளுக்குப் பிறகு தாய் தமிழகத்தோடு இணையவேண்டுமென்று போராடி உயிர் நீத்த உத்தமர்களுடைய குடும்பங்களையும் அல்லது தங்களுடைய உடலிலே குண்டேந்திய வீரர்களுடைய குடும்பங்களையும் அல்லது சிறைப் பறவைகளாகத் தத்தளித்த தியாகிகளுடைய குடும்பங்களையும் இந்த 19 ஆண்டுக் காலத் தில் நடைபெற்ற காங்கிரஸ் அரசு கவனிக்கவில்லை திராவிட முன்னேற்றக் கழக அரசுதான் கடந்த ஆண்டு அந்தத் தியாகி களுக்காக வீரப்பட்டயங்களை வழங்கி, இறந்து போன குடும்பங்களுக்கு இரண்டாயிரம், மூவாயிரம் ரூபாய் அளவுக்கு என்று சற்றொப்ப நிதித் தொகையை வழங்கி பல பேருக்கு வீரமானியங்களை மாதந்தோறும் ரூ.75 என்ற

அளவுக்கு வழங்கி, அந்தத் தியாகிகளையெல்லாம் கௌரவித்த தியாகிகளின் குடும்பங்களைக் காப்பாற்றிவிட்டுத்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது மூன்றாவது மாவட்ட மாநாட்டை குமரி மாவட்டத்தில் நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த மாநாட்டில் பேசிய அருமை நண்பர், மாநாட்டுத் திறப்பாளர் ராமனுதன் அவர்கள் ஒரு குறைபாட்டை சொன்னார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைமை அல்லது திராவிடக் கழக இயக்கத் தலைமை மூன்று அரிய வாய்ப்புக்களை நழுவ விட்டு விட்டது. நல்ல சமயமடா நீ நழுவ விடுவாயோ என்ற பாடலுக்கொப்ப இருந்த சமயங்கள் எல்லாம் இந்த இயக்கத்தினுடைய தலைவர்களால் நழுவ விடப்பட்டன என்ற கருத்தை சொன்னார். இன்று பேசிய நண்பர் ராஜாராம் கூட அதைப்பற்றி சுட்டிக்காட்டினார். நண்பர் ராமனுதன் அவர்கள் எடுத்துச் சொன்ன அந்த மூன்று வாய்ப்புக்கள் என்னென்ன?

1942ஆம் ஆண்டு பிரிட்டிஷ் தூதுக்குழு வந்த நேரத்தில் அவர்களைச் சந்தித்த பெரியார் திராவிட நாடு கொள்கையை வலியுறுத்தவில்லை—அது ஒரு வாய்ப்பு. அதை நழுவவிட்டு விட்டோம். இதை நண்பர் இராமனுதன் நேற்று எடுத்துக் காட்டிய ஒரு கருத்து. பிறகு, 1962ல் திராவிடநாடு கொள்கையை பேரறிஞர் அண்ணா அவர்கள் குழுவைக் கூட்டி நாம் கைவிட்டு விட்டோம், என்று அறிவித்தது.—இது இரண்டாவது வாய்ப்பு. மூன்றாவது, 1969ல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் நாம் திரு. கிரியை ஆதரித்தது.

இந்த மூன்று வாய்ப்புகளிலும் நாம் ஏனோ ஒரு பெரிய சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டோம் எனறே குறிப்பிட்டார். வாய்ப்புகளை நழுவவிட்டுவிட்டோம் என்பது எப்போது தெரிகிறது? விளைவுகளுக்குப் பிறகுதான் அவைகளை நாம் கண்டு பிடிக்க முடியும், விளைவுகளுக்கு முன்பே இவைகளால் இவை இவை நேரும் என்பதை ஆலோ

சித்துத்தான் ஜனநாயக ரீதியில் இயங்குகிற இயக்கம் முடிவுகளே மேற்கொள்ளும். அந்த வகையில்தான் பெரியார் அவர்கள் ஸ்மித்தை சந்தித்த நேரத்தில், திராவிட நாட்டை அதிகமாக வலியுறுத்தியிருப்பாரேயானால் அல்லது பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்தவேண்டுமென்று மிகப் பிடிவாதமாக இல்லாமல் இருந்திருப்பாரேயானால்— அதற்குரிய காரணம் வெள்ளைக்காரன் இந்தியாவுக்கு விடுதலை வழங்க— நீங்கள் துண்டு துண்டாகப் போய் விடுவீர்கள் உங்களிடத்தில் ஒற்றுமை இல்லை, பிரிவினை எண்ணம் இருக்கிறது. அந்தப் பக்கத்தில் பாக்கிஸ்தான் இன்னொரு பக்கத்தில் திராவிட ஸ்தான் என்ற இந்தக் காரணங்களைக் காட்டி எங்கே இந்தியாவுக்கு விடுதலை வழங்காமல் அவன் சமாளித்து விடுவானே அல்லது சால்சாப்புச் சொல்வானே என்ற அந்த கருத்தும் இருந்த காரணத்தால்தான் முதலில் இந்திய நாட்டுக்கு விடுதலை; பிறகு நமது கருத்தை எடுத்துரைப்போம் என்ற வகையில் அந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளவில்லையே தவிர நாம் முதன் முதலில் வைத்த கோரிக்கையே இந்திய நாட்டின் விடுதலை. அதை யாரும் மறப்பதற்கில்லை. விடுதலை பெற்ற பிறகு 62 ஆம் ஆண்டு திராவிட நாடு கொள்கையை கைவிட வேண்டுமென்ற அந்த வாய்ப்பை நழுவவிடலாமா என்று கேட்டால் அதற்கு நான் சொல்கிற விளக்கம் 62-லே திராவிட நாடு கொள்கையைக் கைவிட வேண்டிய காரணம் சீன ஆக்கிரமிப்பு பாகிஸ்தான் எதிர்ப்பு இப்படிப்பட்ட வெளிநாட்டுக்காரர்களின் சீற்றம், வெளி நாட்டுப் பகை, வெளிநாட்டு ஆக்கிரமிப்பு இவைகளிலிருந்து இந்தியாவை பாதுகாக்க நாம் பிரிவினை கொள்கையைக் கைவிட்டாக வேண்டும். பிரிவினைக் கொள்கையை கைவிட்டு விடுகிறோம். ஆனால் பிரிவினை கேட்பதற்கான காரணங்கள் அப்படியே இருக்கின்றன என்று சொல்லி பிரிவினைக் கொள்கையை கைவிட்டோம். 67ல் ஜனாதிபதி தேர்தலில் நாம் எந்த அவசரத்தின் அடிப்படையிலும் முடிவுகளை எடுக்கவில்லை. முற்போக்கான சில கொள்கைகளை நிறை வேற்ற நமது பிரதமர் இந்திராகாந்தியார் தயாராக இருக்

கிறார். ராஜமானிய ஒழிப்பு, வங்கிகளை தேசியமயமாக்குவது என்ற இரண்டு பெரும் காரியங்கள் அறிவிக்கப்பட்ட நேரத்தில் நாம் உள்ளபடியே இதைத் தொடர்ந்து நூற்றுக் கணக்கான முற்போக்குக் காரியங்கள் இந்தியாவில் நடக்கும், ஆகவே இந்திரா காந்தியினுடைய கரத்தை வலுப்படுத்த வேண்டும் என்று, அதுவும் இந்தியாவினுடைய சமதர்ம சமுதாயத்தினை உருவாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு செய்யப்பட்ட காரியமே தவிர வேறல்ல. ஆக இந்த மூன்று வாய்ப்புகளை நாம் பயன்படுத்திக் கொள்ளவில்லை என்று சொல்வது தவறு.

இந்த மூன்று வாய்ப்புகளை நான் சிந்தித்துப் பார்த்தேன். ஒவ்வொன்றிலும் இந்தியாவின் பாதுகாப்பு, இந்தியாவின் விடுதலை, இந்தியாவினுடைய சமதர்ம தத்துவம் அடங்கியிருந்த காரணத்தினாலேதான் நாம் அந்த நேரங்களில் முரண்டுபிடிக்கவில்லையே தவிர நாம் இந்தக் காரியங்களில் அடியோடு கோழைத்தனமாக விலகிவிடவேண்டும் என்ற அடிப்படையில் இப்படிப்பட்ட காரியங்கள் செய்யவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தியாவின் ஒருமைப்பாட்டில் நமக்கு இருக்கிற நம்பிக்கை, அக்கறை இவைகளின் காரணமாகத்தான் நாவலர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். மத்தியிலே கூட்டாட்சியும் மாநிலத்திலே சுயாட்சியும், வேண்டுமென்று கேட்பதே இந்தியாவின் ஒற்றுமைக்காகத்தான் என்று பேரறிஞர் அண்ணா சொன்னார், முதலமைச்சராக இருந்த போதே சொன்னார், இன்றைக்கு அண்ணாவின் பெயரை வைத்துக்கொண்டிருப்பவர்கள் சிலபேர் அண்ணா சொன்னாரா என்றெல்லாம் கேட்பார்கள். கேட்டார்கள். அவர்களுக்கு சட்டசபையில் நாம் பதில் சொன்னோம். 1968ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டில் முதலமைச்சராக பொறுப்பேற்றிருந்த நேரத்தில் சொன்னார். மத்தியில் கூட்டாட்சி அமைந்து, மாநிலங்களில் சுயாட்சி அமையாமல் நீங்கள் இந்த அரசியல் சட்டத்தை, திருத்துவதற்கு இசையாமல் மாநில

சுயாட்சிக்கு மறுத்தால் மத்தியில் கூட்டாட்சி தத்துவத்துக்கு நீங்கள் உயிர் கொடுக்காமல் இருந்தால் இந்தியா பலகீனப் படும், இந்தியாவினுடைய பாதுகாப்பு ஊனப்படும் என்று பேரறிஞர் அண்ணா எச்சரித்தார்.

ஆனால் இன்றைக்கு நிலைமை என்ன? மாநில சுயாட்சி கேட்பதற்கு நமக்கு உரிமை இருக்கிறதா? அந்த உரிமை என்ன ஆகும்? படிப்படியாக அந்த உரிமை பறிக்கப்படுமா என்ற சூழ்நிலை இங்கே இருக்கிறது. மாநில சுயாட்சி பற்றி நாவலர் அவர்கள் அளித்த பெரு விளக்கங்கள் எல்லாம் நாளையதினம் பத்திரிகையில் வருமா? நிருபர்கள் எல்லாம் நாவலர் பேசின நேரத்தில் அவசர அவசரமாக குறிப்பு எடுத்துக் கொண்டார்கள். அவர் தந்த புள்ளி விவரங்கள் எல்லாம் அயராமல் எழுதினார்கள். ஆனால், நான் அந்த நிருபர்களுக்காக பரிதாபப்படுகிறேன். அவர்கள் எழுதி அனுப்புகின்ற மாநில சுயாட்சி பற்றிய நாவலருடைய எந்தப் பேச்சும் எந்தச் சொல்லும் நாளைய தினம் பத்திரிகைகளில் வர இயலாது. ஆக, மாநில சுயாட்சி கேட்பது தவறு, மாநில சுயாட்சி கேட்பது பெரிய குற்றம் என்று சொல்லாமல் மறைமுகமாக இன்றைக்குத் தணிக்கை அதிகாரிகளை வைத்துக்கொண்டு மாநில சுயாட்சியை—அந்தச் சொல்லை—பத்திரிகைகளில் போடாதீர்கள் என்று தடுக்கிறார்கள். இதனுடைய அடுத்த கட்டம் மாநில சுயாட்சி கேட்பதே தவறு, சட்ட விரோதம் என்று கூறுவார்களேயானால் நண்பர் ராமனுதனைப் போன்றோருக்குச் சொல்லுவேன். திராவிட நாட்டுப் பிரிவினையைக் கைவிடக் காரணம் இருந்தது. ஆனால் மாநில சுயாட்சிக் கொள்கையை கைவிட எந்தக் காரணமும் கிடையாது என்பதை நான் மத்திய சர்க்காருக்கு எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (பலத்த கைதட்டல்) ஒன்றை நம் நண்பர்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். நேற்றும் இன்றும் பேசிய நண்பர்கள் சிலர் இன்றைக்கு இந்திய அரசியல் வானத்திலே மண்டிக் கிடக்கிற இருளைப் பற்றி கொள்கை விளக்கங்களைச் சொல்லு

கின்ற நேரத்தில் கொஞ்சம் வேகமாக இந்திரா காந்தி அவர்களைத் தாக்கி பேசியதை நாங்கள் கேட்டோம். நீங்களும் கேட்டீர்கள். அந்த நண்பர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், அவர்கள் சொற்பொழிவாளர்களாக இருந்தாலும், அல்லது கலை நிகழ்ச்சிகள் நடத்துபவர்களாக இருந்தாலும் சரி, எழுத்தாளர்களாக இருந்தாலும், நமது கழகத் தோழர்களுக்குச் சொல்லிக் கொள்வேன், கொள்கைகளை இலட்சியங்களை எவ்வளவு கடுமையாக வேண்டுமானாலும் விமர்சிக்கலாம்; ஆனால் இந்தியப் பிரதமரைப் போன்ற ஒருவரை அல்லது வேறு கட்சியின் தலைவர்களை நாம் விமர்சிக்கிற நேரத்தில் அண்ணா கற்றுத்தந்த நம்முடை பேச்சுத் தரம் நம்முடைய எழுத்துத் தரம் கிஞ்சிற்றும் ஊனமடையாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று நம்முடைய கழகத் தோழர்கள் கொஞ்சம் ஆவேசமாகப் பேசியவர்கள்— கொஞ்சம் வாய் தவறிப் பேசியவர்கள் அவர்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி திராவிட முன்னேற்ற கழகத்திற்கு தனிப்பட்ட முறையில் எந்த விதமான பகையும் கிடையாது. இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற மாச்சரியங்கள் எல்லாம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற வேறுபாடுகளெல்லாம் இந்தியாவின் இயல்பான சூழ்நிலைக்கு மாறுக இன்றைக்கு நாட்டிலே ஏற்பட்டிருக்கிறது. அது மாற்றப்பட்டு மீண்டும் இயல்பான சூழ்நிலை வரவேண்டும் என்று கேட்கிறோம். ஜெயப்பிரகாஷ் விடுதலை பெற்றிருக்கிறார். நாவலர் குறிப்பிட்டதைப் போல அவர் விடுதலை பெற்றபிறகுதான் சிறையிலிருந்தார் என்று பல பேருக்குத் தெரிகிறது. மொரார்ஜி தேசாய் சிறையிலிருக்கிறார். அசோக் மேத்தா சிறைச்சாலையிலிருக்கிறார். இந்த நாட்டினுடைய விடுதலைக்காகப் போராடிய மாவீரர்கள் பழம்பெரும் தலைவர்கள், இவர்களெல்லாம் இன்றைக்கு சிறைக்கொத்தடிமைகளை அடைபட்டிருக்கிறார்கள். பாரதியார் பாடிய பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

கண்ணினும் இனிய சுதந்திரம் போனபின் கைகட்டிப் பிழைப்பாரோ. மண்ணின் இன்பங்களை விரும்பி சுதந்திரத்தின் மாண்பினை இழப்பாரோ. கண் இழந்துவிட்டு சித்திரம் வாங்கினுல் கைகொட்டிச் சிரியாரோ''

உரிமைக்காக சுதந்திரத்திற்காக அந்தப் புரட்சிப் புலவன் பாரதி அன்றைக்கு எழுப்பிய அந்த எழுச்சி கீதம் இன்றைக்கும் பாடப்படவேண்டிய கீதமாக இருக்கிறதே, இருக்கலாமா? அந்த நிலை இன்றைக்கு இந்தியாவில் உருவாகலாமா? ''ஓராயிரம் வருஷம் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணியே போற்றுவோமோ மேலோர்கள் வெஞ் சிறையில் வீழ்ந்து கிடப்பதும் நூலோர்கள் செக்கடியில் நோவதும் காண்கிலையோ இந்த சுதந்திரம் பறிபோகலாமா. இதைத்தான் யாரையும் தூண்டி விடுவதற்காக அல்ல. எந்த கொந்தளிப்பையும் ஏற்படுத்துவதற்காக அல்ல. எந்தக் கிளர்ச்சியையும் உடனடியாக தொடங்குவதற்காக அல்ல. இதை நிதானமாக நெஞ்சத்திலே ஏற்று சிந்தித்து இன்றைக்கு நாடாளக்கூடிய தலைமையமைச்சர் இந்திராகாந்தி அவர்கள் செயல்படவேண்டும். தங்களுடைய முடிவுகளை மாற்றிக் கொள்ளவேண்டும் நிலைமைகளை கவனிக்கவேண்டும் என்றுதான் சென்னையில் நாம் நிறைவேற்றிய செயற்குழுத் தீர்மானமானுலும் கடற்கரையில் லட்சோப லட்சம் மக்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழியானுலும் நெல்லையில் நாம் வடித்தெடுத்த தீர்மானமானுலும் சேலத்தில் நாம் தந்த விளக்கமானுலும், அறந்தாங்கியில், வேறுபல இடங்களில், இன்றைக்கு இங்கே பேசுகிற பேச்சுக்களானுலும் இந்த மைய இழைக் கருத்துக்களைத்தான் மத்தியிலிருக்கிற இந்திராகாந்தி அம்மையார் அவர்களுக்கு விளக்கிக் கொண்டு இருக்கின்றன. உங்களுக்குத் தெரியும். இந்திராகாந்தி அம்மையார் சொல்கிறார்கள், இந்த அவசர நிலை இன்றைக்கு நாம் எடுத்திருக்கும் நடவடிக்கை கட்டுப்பாட்டுக்காக, ஒழுங்குக்காக. பிள்ளைகளை ஒழுங்காக பள்ளிக்கூடத்திற்குப் போகவேண்டுமென்பதற்காக. தொழிலாளர்கள் ஒழுங்காக வேலை செய்

வதற்காக, உரிமை மட்டும் கேட்டால் போதாது கடமையைச் செய்யவேண்டும் என்பதற்காக என்று இந்திரா காந்தி அம்மையார் சொல்கிறார்.

தாய்மார்களே, நண்பர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் ஒரு செய்தியைப் படித்திருப்பீர்கள். பதைபதைக்கும் செய்தி சென்னை நகரில் ஒரு தாய் தன்னுடைய 4 வயது குழந்தையை பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப அந்தப் பையனைக் குளிப்பாட்டி, ஆடை எல்லாம் அணிவித்து, பள்ளிக்கூடம் செல்வதற்காக அவனுடைய காலிலே பூட்சுகளை மாட்டினார்கள். பூட்ஸ் மாட்டிய நேரத்தில் பையன் வீரிட்டு அழுதான். தாய், பையன் பள்ளிக்கூடத்திற்குச் செல்லத்தான் அடம் பிடிக்கிறான் என்று கருதிக்கொண்டு பூட்சை மேலும் இறுக்கி மாட்டி விட்டு பள்ளிக்கு அனுப்பினார்கள். பள்ளிக்கூடத்திற்குச் சென்றும் அந்த நாலு வயது இளம் தளிர் அந்தப் பிஞ்சுக் குழந்தை அழுகையை நிறுத்தவில்லை. பள்ளிக்கூடத்திற்கு வந்ததற்காகத்தான் அழுகிறான் என்று ஆசிரியர் ஒரு மூலையில் உட்கார வைத்து அதட்டினார். அழுகை தொடர்ந்தது, நிற்கவில்லை. ஆசிரியர் வேறு வேலையைக் கவனித்தார். பையனுடைய உடலெல்லாம் நீலம் பாய்ந்தது. மயங்கி விழுந்தான். விழுந்த பையனைத் தூக்கிக் கொண்டு டாக்டரிடம் ஓடினார்கள். டாக்டர் எவ்வளவோ முயற்சித்தார். பையன் இறந்து விட்டான். நீலம் பாய்ந்ததற்கு என்ன காரணம் என்று உடைகளையெல்லாம் கழற்றிப் பார்த்தார்கள்—எதுவும் தெரியவில்லை. பூட்சைக் கழட்டிப் பார்த்தால்—ஒரு ராஜா தேள். அந்தப் பூட்சுக்குள்ளே இருந்து அந்தப் பையனைக் கொட்டியிருக்கிறது. கொட்டிய நேரத்திலேயே வீரிட்டு அழுதான், தாய் கவனிக்கவில்லை, உயிர் பிரிந்தது, தாய் கவனிக்காத காரணத்தால் உயிர் பிரிந்தது. தாயைப் போல இருக்கிற இந்திரா காந்தி அம்மையார் அவர்களே, நீங்கள் கட்டுப்பாடு வேண்டும் ஒழுங்கு வேண்டும் என்பதற்காக ஏதோ நெருக்கடி என்கிற பூட்சை மாட்டுகிற நேரத்தில்

அதற்குள்ளேயே இந்திய கம்யூனிஸ்ட்டுகள் என்கிற ராஜா தேள் இருந்து இந்தியாவின் சுதந்திரத்தை ஜனநாயக உரிமையை பறிப்பதற்குச் செய்கிற சூழ்ச்சியை கவனிக்காமல் இருக்கிறீர்களே. உங்களுக்கு பிள்ளை இல்லை பாசம் இல்லை என்று சொல்லமாட்டேன். அவசரத்தில் பிள்ளை ஏன் அழுகிறான் என்று நீங்கள் கவனிக்க மறந்துவிடுகிறீர்கள். ஜெயப்பிரகாஷின் கண்ணீருக்குக் காரணம் என்ன? மொரார்ஜி தேசாயின் வேதனைக்குக் காரணம் என்ன? அசோக்மேத்தாவின். அழுகைக்குக் காரணம் என்ன? காமராஜர் வடித்த கண்ணீர் வெள்ளத்திற்குக் காரணம் என்ன? இன்றைக்கு இந்தியா பெரும் சமுதாயம் அழுது கொண்டிருக்கிறதே அதற்கு என்ன காரணம்? ராஜா தேள் கொட்டிவிட்டதம்மா. ராஜா தேள் கொட்டிவிட்டதம்மா. அந்தத் தேள் பையனுடைய உயிரைப் பறித்தது. இந்தத் தேள் இந்தியாவிலிருக்கிற ஏறத்தாழ 55 கோடி மக்களுடைய உரிமையைப் பறித்துக் கொண்டிருக்கிறது. இதைத்தான் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் உணர்ந்திட வேண்டும். இப்படித்தான் எங்களுடைய கருத்துக்களை அம்மையார் அவர்களுக்கு எடுத்துச் சொல்கிறோமேயல்லாமல் தனிப்பட்ட முறையில் தகாத வார்த்தை பேசி தரக்குறைவான வாசகங்கள் எழுதி நாங்கள் அவர்களைத் தாக்கிட முற்படவில்லை.

இங்கே பேசிய தாய்க்குலத்து, மகளிர் பிரதிநிதிகள் எல்லாம் இந்தியாவில் எங்கே ஜனநாயகம் இருக்கிறது என்று சொன்னார்கள். நாங்கள் சொன்னால் நீங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தினர், உங்கள் ஆட்சியைப் பற்றி நீங்கள் சொல்வீர்கள், பெருமைப் படுத்திக் கொள்வீர்கள், இது என்ன பெரிய காரியம் என்று சொல்லத் தோன்றும் சில பேருக்கு. ஆனால் கடந்த 2 கிழமைகளுக்கு முன்பு காமன்வெல்த் பாராளுமன்ற குழுவினர் இந்தியாவுக்கு வந்தார்கள். டெல்லியில் ஒரு பெரிய கருத்தரங்கத்தில் கலந்து கொண்டார்கள். அந்தக் கருத்தரங்கத்தில் இந்திய ஜனாதிபதி உரையாற்றினார். இந்தியாவினுடைய பிரதமர் இந்திரா காந்தி

அம்மையார் உரையாற்றினர்கள். ஜனநாயகத்தைப் பற்றி விளக்கமாகப் பேசினர்கள். அதையெல்லாம் காமன்வெல்த் பாராளுமன்றக் குழுவினர் கேட்டார்கள். அதற்குப் பிறகு அந்தப் பாராளுமன்றக் குழுவினர் பாரதம் எங்கும் பல்வேறு பகுதிகளுக்கு, பல இடங்களைக் காண, கேட்க புரிந்துகொள்ள அனுப்பப்பட்டார்கள். அப்படி அனுப்பப்பட்ட குழு ஒன்று, தென் பகுதிக்கு வந்தது. அந்தக் குழு வடபுல மாநிலங்கள் சிலவற்றைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ஆந்திராவில் ஐதராபாத், கர்நாடகத்தில் பெங்களூரையும் கண்டுவிட்டு, நம்முடைய தமிழகத்திற்கு வந்தது. நம்முடைய பேரவைத் தலைவர் புலவர் அவர்களும், நம்முடைய பேரவை முன்னவர் நாவலர் அவர்களும், முதலமைச்சர் என்ற முறையில் நானும் அவர்களையெல்லாம் வரவேற்று உபசரித்து மகிழ்ந்தோம். அவர்கள் செல்கிற நேரத்தில், தாங்கள் தமிழ்நாட்டைப் பற்றி புரிந்து கொண்டவைகளை, குறிப்பாக எழுதி வைத்தார்கள். அதிலே ஒருவர், யுனைடெட் கிங்டெம், லண்டன் மாநகரத்தில் இருக்கிற பாராளுமன்ற உறுப்பினர் லியோ ஆப்ஸி. அவர் என்ன எழுதுகிறார்?

''உங்களுடைய உபசரிப்பும் வரவேற்பும் வர்ணிக்க முடியாதவை. எதிர்க்கட்சி ஆளுகிற மாநிலத்தில் சிறுபான்மையோருக்குத் தரப்படுகிற ஜனநாயக உரிமையை நாங்கள் பாராட்டுகிறோம். அவசரக் காலம் விரைவில் முடிந்து தமிழ்நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிற உரிமையை சுதந்திரத்தை, இந்தியா முழுவதும் அனுபவிக்கும் நாள் வருமாக.'' எழுதியது, நாவலர் அல்ல. பேராசிரியர் அல்ல. மாநாட்டுத் தலைவர் செழியன் அல்ல. நான் அல்ல. யார்? இங்கிலாந்து நாட்டுக்காரர். லண்டன் பாராளுமன்றத்திலே இருக்கிற ஒருவர். அவர் எழுதுகிறார், இன்றைக்கு தமிழ்நாடு தான் உண்மையான ஜனநாயகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறது. அது இந்திய பூபாகம் பூராவும் பரவவேண்டும் என்று கோடிட்டுக் காட்டுகிறார். நாவலர் பேசும்போது சொன்னார்கள். நாங்கள் நடத்திய

பாசிஸ எதிர்ப்பு மாநாட்டுக்கு கேரள முன்னாள் முதலமைச்சர் ஈ. எம். எஸ் நம்பூதிரிபாட் அவர்கள் வந்தார்கள். உரையாற்றினார்கள். உரையாற்றும்போது, நான் அவசரக் கால சட்டம் வந்த பிறகு இரண்டு முறை பேசியிருக்கிறேன். முதல் முறை சென்னையில் பேசினேன். இப்போது இரண்டாவது முறையும் சென்னையில் பேசுகிறேன் என்று. கேரளத்திலே பேச உரிமையில்லை. அது மாத்திரமில்லை. நான், ''தமிழகத்திலே சென்னை சட்டப் பேரவையிலே கேள்விக்கு இடம் உண்டாம். மந்திரிகள் பதில் சொல்கிறார்களாம், கண்டனத் தீர்மானங்களுக்கு இடம் உண்டாம், மந்திரிகள் பதில் அளிக்கிறார்களாம் நம்பிக்கையில்லா தீர்மானத்தையும் அங்கே வரவேற்கிறார்களாம், கவன ஈர்ப்புத் தீர்மானத்தையும் மந்திரிகள் வரவேற்கிறார்களாம். பதில் அளிக்கிறார்களாம். பத்திரிகைகளில் எதிர்க்கட்சிக் காரர்கள் பேசுவது வருகிறதாம். இங்கே கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சட்டப் பேரவைத் தலைவர் கே. டி. கே. தங்கமணி இந்த அரசைப் பற்றி மிகக் கடுமையாக எதிர்த்துப் பேசினாராம். அதையெல்லாம் அனுபவித்தீர்களாம். அதுவும் பத்திரிகைகளில் வந்ததாம்.'' என்று சொல்லி விட்டு நகைச் சுவையோடும் அதே சமயத்தில் வேதனையோடும் ஈ.எம் எஸ். சொன்னார். தமிழக சட்டமன்றத்தில் இருக்கிற என்னுடைய பழைய கம்யூனிஸ்ட் தோழர் கே. டி. கே. தங்கமணி அவர்களே, இவ்வளவு சுதந்திரத்தையும் தமிழ் நாட்டில் அனுபவிக்கிற நீங்கள் கொஞ்சம் எனக்கு கேரள சட்டசபையில் சிபாரிசு செய்து அச்சுதமேனனை இந்த உரிமைகளையெல்லாம் வாங்கிக் கொடுங்கள், என்று கேட்டாரா? இல்லையா? யார், ஈ. எம் எஸ். என்றால் யாரோ ஏனோ தானோ அல்ல. கேரளாவின் முதலமைச்சராக இருந்தவர். இன்றைக்கும் கம்யூனிஸ்ட் கட்சியின் பெரிய தலைவர்களில் ஒருவர். அவர், தமிழ் நாட்டிலிருக்கிற கே. டி. கே. தங்கமணியிடம் சிபாரிசுக் கடிதம் வாங்க வருகிறார். எதற்கு? கேரள சட்டசபையில் தான் எதிர்த்துப் பேச, கேரள அரசாங்கத்தைப் பற்றி விமரிசிக்க தனக்குச் சுதந்திரம் வேண்டும் என்று. அச்சுத

மேனனுக்கு சிபாரிசு கடிதம் கொடுங்கள்! இன்றைக்கு இந்தியாவில் சுதந்திரம் எப்படியிருக்கிறது? தமிழ்நாட்டைத் தவிர. அடுத்துச் சொன்னால் குஜராத்தை தவிர இன்று இந்தியாவில் மூச்சு விட வேறு எந்த மாநிலத்தில் இடமிருக்கிறது? தயவு செய்து எண்ணிப் பார்க்கவேண்டும். அதைத் தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகம் நாட்டு மக்களுக்கு எடுத்து வைக்கிறதே அல்லாமல் வேறல்ல. அவசரச் சட்டத்திற்கு—நெருக்கடி நிலைக்கு என்ன காரணம் கூறப்படுகிறது? பெரும்பான்மையான மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசை கவிழ்க்கலாமா? கிளர்ச்சியின் மூலம் கவிழ்க்கலாமா? போராட்டங்கள் மூலம் கவிழ்க்கலாமா? 5 ஆண்டுக் காலத்திற்கு அதற்கு அவகாசம் தரவேண்டாமா? வாக்களித்த மக்களுக்கு அந்த அரசு மீது திருப்தி இல்லாவிட்டால் அடுத்த தேர்தலில் அந்த அரசை கீழே இறக்க உரிமை படைத்திருக்கிறார்கள், அதற்கிடையில் கிளர்ச்சிகளை அனுமதிக்கலாமா? இந்திரா காந்தி அம்மையார் கேட்கிறார்கள். வரவேற்கத்தக்க கேள்வி.

நான் பெங்களூரில் கடந்த ஆண்டு ஒரு கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றபோது அங்குள்ள பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். பீகாரில், ஜெயப்பிரகாஷ் நடத்துகிறாரே, கிளர்ச்சி, அரசை எதிர்த்து, அதை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கிறதா என்று கேட்டார்கள். ஜெயப்பிரகாஷ் நாராயண் இந்தியா முழுவதும் ஊழல் ஒழியவேண்டும் என்று ஒரு இயக்கத்தை நடத்துகிறார், அதை நான் ஆதரிக்கிறேன். ஆனால் ஒரு ஆட்சி ஒரு தேர்தல் வரையில் காத்திருக்காமல் இடையிலே கவிழ்க்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சியை—அதை ஜே.பி. நடத்தினாலும் சரி, தி.மு.க. ஆதரிக்காது. ஒருவேளை தமிழகத்தில் நாங்கள் ஆளும் கட்சியாக இருக்கிற காரணத்தால் ஆதரிக்கவில்லையென்று கருதாதீர்கள். பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்த அந்தக் காலத்திலேயே நாங்கள் ஆட்சியை மாற்ற இப்படிப்பட்ட கிளர்ச்சி முறைகளை நாடியது கிடையாது. வேட்டு முறையா, ஓட்டு

முறையா என்ற கேள்வியை எழுப்பி, ஓட்டு முறைதான் சரிச்சிறந்தது என்ற முடிவுக்கு வந்தவர்கள் நாங்கள். அது மாத்திரமல்ல, நாடாளுமன்ற கட்சித் தலைவர் செழியனும், மாரிசாமியும் ஜெயப்பிரகாஷ் அமைத்த கமிட்டியில் இருந்துகொண்டே சொன்னார்கள், ஒரு மாநில அரசைக் கவிழ்க்கச் சொல்லி மத்திய அரசை நிர்ப்பந்திப்பது மாநில சுயாட்சித் தன்மைக்கே கேடானது. அப்படிப்பட்ட அதிகாரத்தை மத்திய அரசு தரக்கூடாது என்று வாதாடி யிருக்கிறார்கள். ஆகவே, ஜெயப்பிரகாஷ் பீகாரில் நடத்திய அரசு கவிழ்ப்பு நிகழ்ச்சியை திராவிட முன்னேற்றக் கழகம் ஆதரிக்கவில்லை. ஆனால் நான் கேட்கிறேன், பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களே நீங்கள் ஒரு காலத்தில் காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்தீர்கள். 1958 என்று கருதுகிறேன். எங்கள் அண்ணன் தலைமையில் நானும், பேராசிரியரும், ப.உ.ச.வும் சட்டமன்றத்தில் வீற்றிருக்கிறோம் 15 பேராக. அந்த நேரத்தில் அண்ணா பேசும்பொழுது சொல்லுகிறார். தி.மு.க. ஒரு காலத்தில் ஆட்சிக்கு வரும் என்று. அப்போது அங்கே இருந்த காங்கிரஸ் பெண் உறுப்பினர் ஒருவர், அதெல்லாம் நடக்காது. அத்தைக்கு மீசைமுளைத்தால் அல்லவா சித்தப்பா என்று பெண் உறுப்பினர் கேட்கிறார். உடனே அண்ணா சொல்கிறார்: அத்தைக்கு மீசை முளைத்திருக்கிறதம்மா அண்டையிலே கேரளத்தில். அங்கே கேரளத்திலே கம்யூனிஸ்ட் கட்சியினருடைய ஆட்சி நடக்கிறது ஆகவே எதிர்க் கட்சி ஆளவே முடியாது என்று கருதாதீர்கள், என்று அண்ணா சொல்கிறார். அப்படிச் சொன்ன மகிழ்ச்சி அடங்க வில்லை. நான்கு நாட்களுக்கு எல்லாம் கேரளத்திலே மன்னத் பத்மநாபன் தலைமையில் பெரிய கிளர்ச்சி நடந்தது. அந்தப் பெரிய கிளர்ச்சிக்கு தமிழ்நாட்டிலிருந்து அன்றைக்கு நடன சகோதரிகள் லலிதா பத்மினி தலைமை தாங்குகிறார்கள். மன்னத் பத்மநாபன் அந்தக் கிளர்ச்சியைத் தொடங்குகிறார். அந்தக் கிளர்ச்சியின் காரணமாக அங்கே இருக்கிற கேரள அரசு தலைமைச் செயலகம் தாக்கப்படுகிறது. கொடி

இறக்கப்படுகிறது. நிலைமையை அறிய இந்திரா காந்தி அம்மையார் அனுப்பப்படுகிறார். எங்கே? கேரளாவிற்கு. இந்திரா காந்தி வந்து கேரள நிலைமையை பரிசீலிக்கிறார். நிலைமையை பரிசீலித்துவிட்டு டில்லிக்குப் போகிறார். அங்கே போய் சிபாரிசு செய்கிறார். 'கேரளத்திலே மக்கள் இயக்கம் வலுப்பெற்று இருக்கிறது. மக்கள் இந்த ஆட்சியை மாற்ற எண்ணுகிறார்கள். இவர்கள் ஓட்டைப் பெற்று பெரும் பான்மையாக வந்திருந்தாலும்கூட இந்த ஆட்சி கவிழ்க்கப் படவேண்டிய ஒன்றுதான்'', என்ற பரிந்துரையை சிபாரிசை இந்திரா காந்தி அம்மையார் மேலிடத்துக்குத் தந்து அந்த அடிப்படையில் ஈ.எம்.எஸ். ஆட்சி 1958ஆம் ஆண்டு கவிழ்க்கப்படுகிறது.

நான் கேட்கிறேன்? கேரளத்திற்கு ஒரு நியாயமா? பீகாருக்கு ஒரு நியாயமா? சரி. கேரளத்து நியாயம் சரி என்றால் பீகார் நியாயம் சரி. ஆனால் நாங்கள் சொல்வது பீகாரில் நடந்தது தவறு. கேரளத்தில் நடந்தது தவறு. ஆனால் பீகாரில் எதிர்த்தவர்கள் கேரளத்தில் தூண்டி விடலாமா? அரசியல் சிந்தனையாளர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். அரசியல் அறிவு படைத்தவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். மன்னத் பத்மநாபன் அங்கே நடத்தினார் கிளர்ச்சி. ஒரு ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதற்குப் பிறகு தேர்தல். அந்தத் தேர்தலில் ஈ.எம் எஸ்.-ம் மற்றவர்களும் சிறைச்சாலையிலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். தேர்ந் தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியினர் சிறைச்சாலையில் இருக்கிறார்கள். என்ன நடக்கிறது தெரியுமா? சிறைச் சாலையிலிருக்கிற யாரும் சட்டசபைக்கு அனுமதிக்கப்பட வில்லை. எம்.எல்.ஏக்களாக தேர்ந்தெடுக்கப் பட்டவர்கள் தாங்கள் எம்.எல்.ஏக்கள் ஆனதற்கு பதவி பிரமாணம்கூட எடுக்காததற்கு முன்பு மறுபடியும் சட்டசபை கலைக்கப் படுகிறது. இது ஜனநாயகவாதிகள் இன்றைக்கு ஜனநாய கத்தைப்பற்றிப் பேச என்ன தகுதி, திறமை, வக்கு, வழி, வகை இருக்கிறது என்று நான் கேட்கிறேன். இதற்குப்

பெயரா ஜனநாயகம்? சேரளத்திலே இரண்டுமுறை ஆட்சியைக் கவிழ்த்தீர்கள், மக்களின் பெரும்பான்மை தீர்ப்புக்கு எதிராக. ஆனல் பீகாரில் இப்படி நடக்கலாமா என்று கேட்கிறீர்கள். 72லே என்ன நடத்தினீர்கள். 1972ஆம் ஆண்டு கருணநிதி கீழே இறங்கு, நெடுஞ்செழியன், அன்பழகன் மற்ற அத்தனே பேரும் கீழேஇறங்குங்கள் என்று. —இன்றைக்கு பிரதமர் சொல்லுகிறார்களே சிறுபான்மையினர் பெரும்பான்மையாக இருந்து ஒரு ஆளும் கட்சியையே பார்த்து கீழே இறங்குங்கள் என்று சொல்லி, அதைக் கேட்க, பஸ்களைக் கொளுத்தி அமைச்சர்களுடைய கூட்டங்களிலே கலவரம் செய்து, எம்.எல்.ஏக்களின் கார்களுக்கு தீயிட்டுக் கொளுத்தி, எம்.எல்.ஏக்களின் இல்லங்களுக்கு வன்முறை ஊர்வலங்களை நடத்தி அந்த வீடுகளில், தாக்குதல் செயல்களைப் புரிந்து 72ஆம் ஆண்டில் நடத்தப்பட்டதே கிளர்ச்சி, அப்போது ஏன் வரவில்லை இந்த அவசரச் சட்டம்? அதை இந்தியா முழுமைக்குஇல்லாவிட்டாலும் தமிழகத்திற்காவது மட்டும் அந்த அவசரச் சட்டத்தை கொண்டுவந்திருக்கக் கூடாதா? ஒரு பீகாருக்காக இந்தியா முழுமைக்கும் அவசரச் சட்டம். ஒரு தமிழகத்திலே ஏற்பட்ட நிலைக்கு அதைப்பற்றி அன்றைக்கு யாரும் ஏன் சிந்திக்க மறுத்தார்கள்? ஏன் அதைப்பற்றி கேள்வியே கேட்கவில்லை. இன்னும் சொல்லப்போனல், இந்திரா காங்கிரஸ் ஏற்றுக் கொண்ட ஒரு கொள்கையை தமிழக அரசு இங்கே நிறைவேற்றியது. ஆனல், இங்கே இருக்கிற இந்திரா காங்கிரஸ் காரர்கள் அந்தக் கொள்கையை ஏற்றுக் கொள்ளாமல், கிளர்ச்சி நடத்தினர்கள். அதைப்பற்றி வேடிக்கையாக நண்பர் ராஜ் சொல்லுகிறார், யார்? கே எம். ராஜ் அண்மையில் கேரளாவில் மாணவர்கள் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டிருக்கிறார். அக்டோபர் 12ந் தேதி கேரள மாணவர் சங்கத்தில் "அவசரகாலச் சட்டமும் மாணவர்களும்" என்ற தலைப்பில் கே.எம். ராஜ் பேசுகிற பேச்சு.

''இந்தியாவில் ஆளுங்கட்சியிலிருந்து எனக்குத் தெரிந்த உதாரணம் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ராஜ் யார் தெரியுமா? விவசாயத் துறையைப்பற்றி ஆராய ஒரு குழு போடப்பட்டது. அந்தக்குழுவிற்கு இந்திரா காந்தியால் தலைவராக நியமிக்கப்பட்டவர் பேராசிரியர் ராஜ். அவர் சொல்கிறார். 72ஆம் ஆண்டு விவசாய சொத்தின்மீதும் வருமானத்தின்மீதும் போடக்கூடிய வரிகளைப் பற்றிய ஆலோசனைக் கமிட்டிக்கு நான் தலைவராக இருக்க ஒப்புக் கொண்டேன். ஏனென்றால் அந்தத் துறையில் பயனுள்ள நடவடிக்கை எடுக்க பிரதமர் மிகவும் ஆவலாக இருக்கிறார் என்று என்னிடம் சொல்லப்பட்டது அதே ஆண்டில் நவம்பர் அல்லது டிசம்பரில் தேசிய வளர்ச்சிக்குழு கூட இருப்பதால் 6 மாதத்திற்குள் அந்தக் கமிட்டி அறிக்கைத் தர வேண்டுமென்று எதிர்பார்க்கப்பட்டது. உண்மையில் அப்படியே செய்யப்பட்டது. இதை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வருவதற்கு காரணம் என்னவென்றால்— ராஜ் சொல்லுகிறார்: எந்த விதமான வரிமுறை நாட்டுக்கு ஏற்றதாக இருக்கும் என்று அந்தக் கமிட்டியில் பரிசீலனை செய்து கொண்டு வந்தோம். அந்த நேரத்தில் தமிழ்நாட்டு இந்திரா காங்கிரஸ் கமிட்டி தேசிய அளவில் உள்ள தலைமையின் பகிரங்கமான ஆதரவோடு தமிழக அரசு இதற்கு முன்பு அறிமுகப்படுத்திய விவசாய வருமான வரியை எதிர்த்து போராட்டத்தைத் தொடங்கியது. அந்த விவசாய வருமான வரியை போடப்பட வேண்டும் என்று கமிட்டி எதற்காகப் போடப்பட்டதோ அந்த விவசாய வருமான வரியை ஏற்கெனவே இங்கே நாம் போட்டிருந்தோம். இப்போது 20 அம்சத் திட்டத்தில் வந்திருக்கிறதே அதைப் போலவே விவசாய வருமான வரி பெரும் பணக்காரர்களுக்கு, பணப் பயிர்களுக்கு போடப்பட்ட வரியை நிறைவேற்றி இருந்தோம். அதை மாநில அரசை தமிழக அரசை

எதிர்க்க இந்தக் கொடுமை படைத்த இந்திரா காங்கிரஸ் தமிழ் நாட்டிலுள்ள இந்திரா காங்கிரஸ் போராட்டத்தைத் தொடங்கியது. இதில் உண்மை என்ன என்றால் தமிழ் நாட்டில் அறிமுகப்படுத்தப் பட்டிருந்த வரி அமைப்பு அதற்குப் பிறகு இந்தக் குழு சிபாரிசு செய்த நடையைப் போலவே இருந்தது.

நீண்டகால பலாபலன்களைக் கருத்தில் கொள்ளாமல் அரசியல் காரணத்தை மட்டுமே கருத்திற் கொண்டு அந்தப் போராட்டம் தமிழகத்திலே தொடங்கியது. அதன் பிறகு அந்த வரிவிதிப்பை மாற்றும் கட்டாயத்திற்கு மாநில அரசு ஆளானது. அதன் விளைவாக அதற்குப் பிறகு எங்கள் குழு கொடுத்த அறிக்கை காங்கிரசுக்கு முடியாத காரியமாகி விட்டது; இதிலே குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால் தேசிய வளர்ச்சிக் குழு, இந்தக் கமிட்டி கொடுத்த அறிக்கையை அக்கறையோடு விவாதிக்கவேயில்லை. ஏதாவது சந்தேகங்கள் அதிலே இருந்தால் அதை விளக்குவதற்கு எங்கள் கமிட்டி உறுப்பினர்கள் யாரும் அழைக்கப்படவேயில்லை. எங்கள் கமிட்டியின் அறிக்கைக்கு ஒரு மௌமான சவ அடக்கம் எல்லா அறிக்கைகளின் மூலமே தரப்பட்டது.

இது, கமிட்டியின் தலைவர்—ஆளுங்காங்கிரஸ் கட்சிக்கு விரும்பிய ஒரு கொள்கையை செயல்படுத்துவதற்கு முன்பே, தமிழக அரசு செயல்படுத்த—அதை எதிர்க்க இங்கே இருக்கிற ஆளுங் காங்கிரஸ் போர்க் கொடி தூக்கி—அந்தப் போர்க்கொடிக்கு ஆதரவாக மத்தியப் பேரரசு துணையாக இருந்தது என்பதை வேதனையோடு அந்த கமிட்டியினுடைய தலைவர் ராஜ் அவர்கள் விளக்குகிறார்கள். நான் இவைகளையெல்லாம் சொல்வதற்குக் காரணம், தமிழகத்திலே—நாவலர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல—முதலமைச்சரைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம், மற்ற

அமைச்சர்களைப் பற்றி என்ன வேண்டுமானாலும் பேசலாம், எவ்வளவு அவதூறு வேண்டுமானாலும் பேசலாம், ஆனால் முன்னேற்றக் கழகத்தில் உள்ளவர்கள் அல்லது வேறு கட்சியில் உள்ளவர்கள் அல்லது இடது கம்யூனிஸ்டுகள் அல்லது பழைய காங்கிரஸ்காரர்கள் அல்லது காமராசருடைய கொள்கையை தங்களுடைய உள்ளத்திலே பதிய வைத்துக் கொண்டிருப்பவர்கள், அவசரசட்டத்தைப் பற்றி காமராசர் என்ன கருதிக் கொண்டிருந்தார் என்பதை இன்னமும் மறக்காமல் இருப்பவர்கள்—அவர்கள் எல்லாம் இன்றைக்கு மத்திய அரசைப் பற்றி, ஒரு வார்த்தை சொன்னால் அது இன்றைக்குப் பத்திரிகைகளிலே வரக்கூடாது. இந்திரா காந்தி அம்மையாரைப் பற்றி மாத்திரமல்ல, சுப்பிரமணியத்தைப் பற்றிக் கூட எதுவும் செல்ல கூடாதாம்.

நண்பர்களே, பாசிஸ எதிர்ப்பு மாநாடு இந்திரா காங்கிரஸ் கட்சியின் சார்பிலும், நடிகர் கட்சியின் சார்பிலும், கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் 15, 16 தேதிகளில் சென்னையில் ஒரு சின்னஞ்சிறிய கல்யாண மண்டபத்திலே நடந்தது. அந்த மாநாட்டிலே பேசிய சுப்பிரமணியம் சொன்னார், நாங்கள் போடுவதைப் போல, இன்னொரு பாசிஸ எதிர்ப்பு மாநாடு திராவிட முன்னேற்றக் கழகத்தார் கூட்டுகிறார்களாம். அவர்களுக்கு பாசிஸ எதிர்ப்பு மாநாடு போட என்ன யோக்கியதை இருக்கிறது? இது எப்படியிருக்கிறது என்றால், ''திருடியவன் யாரையோ பார்த்து திருடன் திருடன் என்று கத்திக் கொண்டே போனதைப் போல இருக்கிறது'' என்று சுப்பிரமணியம் பேசினார். அது எல்லாப் பத்திரிகைகளிலும் வருகிறது. சென்னையில் இருக்கிற தணிக்கை அதிகாரி அவற்றை மேள தாளத்தோடு அனுமதி அளிக்கிறார், பத்திரிகையில் வெளியிட. அவை கொரட்டை எழுத்திலே வெளிவருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் திருடர்கள். இந்த திருடர்கள் திருடிவிட்டு, யாரையோ பார்த்து திருடன் திருடன் என்கிறார்கள். இது தி.மு.க.வை எதிர்த்து எழுதுகிற எல்லா பத்திரிகைகளிலும் கொட்டை எழுத்துக்களில் வருகிறது. மறுநாள், அதற்கு நாவலர் பதில் சொல்கிறார்—அது நடந்தது 18ந் தேதி. 19ந் தேதி நான் பதில் சொல்கிறேன்—என்ன சொன்னேம்? திருடன் திருடிவிட்டு யாரையோ திருடன் திருடன் என்கிறான் என்று சுப்பிரமணியம் சொல்வதற்காக யாரும் கோபித்துக் கொள்ள வேண்டாம். அது அவரைப்பற்றி ஒரு தன்னிலை விளக்கம் கொடுத்திருக்கிறார், அவ்வளவுதான், என்று சொன்னேன். ஆனால் இது முரசொலியிலோ, தினத்தந்தியிலோ, கழகக் குரலிலோ அல்லது சமூகச் சார்புடைய ஏடுகளிலோ வெளிவர முடிந்ததா என்றால் இல்லை. குற்றம் செய்தவர்கள் தங்களை குற்றவாளிகள் என்பதற்குப் பதிலாக மற்றவர்களை குற்றவாளிகள் என்று சொல்கிறார்கள். அப்படித்தான் சுப்பிரமணியம் பேசியிருக்கிறார் என்று சொன்னேன். ஆனால், சென்சாரிலே என்ன அனுமதித்திருக்கிறார்கள் தெரியுமா? ''அப்படித்தான் பேசியிருக்கிறார்'' என்பதை மாத்திரம் அனுமதித்திருக்கிறார்கள். இடையில் உள்ள சுப்பிரமணியம் என்ற பெயரை அவர்களே எடுத்து விட்டார்கள். ஒருவேளை டெல்லியிலிருந்து அவரை விரைவில் எடுத்துவிடுவார்களோ, தெரியாது—அவர்களே இன்று எடுத்துவிட்டார்கள். அந்த அளவுக்கு அவர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம், மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்டு, பெரும்பான்மை பலம் பெற்ற ஒரு அரசை இழி மொழியால் அவதூறுக் கணைகளால் எழுதுவதும் பேசுவதும் கூடாது, இது அவசரச்சட்டம். ஆனால் தமிழ்நாட்டில் நாங்கள் இது தடுக்கப்படவேண்டுமென்று சொல்லவில்லை. ஆனால் எங்களைத் தாக்குவது தணிக்கை அதிகாரியால் இன்றைய தினம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால் நாங்கள்

அதற்குப் பதில் சொல்கிற விளக்கங்கள் இன்றைக்கு பத்திரிகைகளில் இடம் பெறுவது கிடையாது. கழகச் சார்புடைய ஏடுகள் அத்தனையும் மடக்கப்படுகின்றன.

ஆனால் இந்திரா காந்தி ஆஸ்திரேலிய நிருபர்களிடத்தில் பேசுகிற நேரத்தில் சொல்கிறார், அந்த ஆஸ்திரேலிய நிருபர் கேட்கிறார், அம்மையார் அவர்களே, உங்களுடைய இந்திய நாட்டில் பத்திரிகைகளுக்கு முன் தணிக்கை (பிரி சென்ஸார்) இருப்பதாகச் சொல்லப்படுகிறதே, அதுதான் ஜனநாயகமா? என்று நிருபர் கேட்கிறார். அம்மையார் சொல்கிறார்கள் பிரி சென்ஸார்சிப்பா, இந்தியாவிலேயா? எங்கேயிருக்கிறது? இல்லவே இல்லை.—இந்திரா காந்தி சொல்லி இது இந்துப் பத்திரிகையில் வந்திருக்கிறது. அந்தச் செய்தி வந்த மறுநாள் நான் இந்திரா காந்தி அம்மையாருக்கு ஒரு கடிதமே எழுதினேன். நீங்கள் ஆஸ்திரேலிய நிருபருக்கு பேட்டி கொடுத்தபோது பத்திரிகைகளுக்குத் தணிக்கை முறை இந்தியாவிலே கிடையாது என்று சொல்லியிருக்கிறீர்கள் என்று பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது, என்று அந்த பத்திரிகை குறிப்பையும் எடுத்து வைத்து அம்மையாருக்கு எழுதி நீங்கள் சொன்னது உண்மையானால் இங்கே எங்களுடைய பத்திரிகைகள் எல்லாம் எங்களுடைய கொள்கைகளைக்கூட சொல்ல முடியாமல் இந்தி எதிர்ப்பை எடுத்துச் சொல்ல முடியாமல், மாநில சுயாட்சி விளக்கத்தைச் சொல்ல முடியாமல் எங்கள் பத்திரிகைகள் எல்லாம் தவிக்கின்றன, திண்டாடுகின்றன. ஆகவே, கழகத்தின் கொள்கையையே சொல்ல முடியாமல் அவதிக்கு ஆளாகியிருக்கிறோம். நீங்கள் ஆஸ்திரேலிய நிருபருக்கு பேட்டி அளிக்கும்போது இங்கே தணிக்கை முறையே கிடையாது என்று சொல்லியிருக்கிறீர்கள். இதில் எது உண்மை எது பொய். அது உண்மையென்றால் உடனடியாக இங்கே இருக்கிற தணிக்கை அதிகாரிக்கு அறிவுரை கூறி அந்த தணிக்கை முறையை வாபஸ்

பெறுங்கள் என்று நான் மெத்தப் பணிவன்போடு இந்திரா காந்தி அம்மையாருக்குக் கடிதம் எழுதினேன். எல்லாவற்றிற்கும் உடனடியாக பதில் எழுதக்கூடிய இந்திரா காந்தி அம்மையார், கடந்த இரண்டு மூன்று மாதகாலமாக இந்த அவசரநிலை சம்பந்தப்பட்ட கடிதம் எதற்கும் பதில் எழுதுவதே கிடையாது. அப்படி பதில் எழுதப்படாத கடிதங்களில் ஒன்றுதான் இந்தக் கடிதமும் இன்றைக்கு ஆகிவிட்டிருக்கிறது.

பாசிசத்தை எதிர்க்கிறோம், என்று மாநாடு போடுகிறார்கள் ஊருக்கு ஊர். இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தில், இந்திய அளவில், ''அகில இந்திய பாசிச எதிர்ப்பு மாநாடு'' போடுகிறார்கள். அகில இந்திய பாசிச எதிர்ப்பு மாநாடு—அந்தச் சொற்றொடரைப் பார்த்தாலே உண்மை புரிகிறது. அகில இந்திய பாசிச ''எதிர்ப்பு மாநாடு''—இதை நடத்துகிறார்கள். பாசிசம் என்றால் என்ன? அதற்கு நாங்கள் விளக்கம் அளித்தோம் சென்னையில் நடைபெற்றக் கூட்டத்தில். பாசிசத்தைப் பற்றி சொல்கிற நேரத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டேன். பண்டிதர் ஜவஹர்லால் நேரு தன்னுடைய மகளுக்கு எழுதிய கடிதம்—அவர் விடுதலைப் போராட்டத்தில் சிறைபட்டு டேராடூன் சிறைச்சாலையிலிருந்து 200 க்கு மேற்பட்ட கடிதங்களை இந்திரா காந்திக்கு எழுதுகிறார். ''அன்புள்ள இந்திரா பிரியதரிசினி'' என்றுதான் தன்னுடைய மகளை அன்பாக, செல்லமாக, கடிதங்களை எழுதுபவர் ஒரு கடிதத்தில் குறிப்பிடுகிறார் ''முசோலினியின் பாசிசக் கொள்கை என்ன? திட்டம் என்ன? நோக்கம் என்ன?—பெரிய இயக்கங்கள் பெரும்பாலும் ஒரு தெளிவான தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கும் அந்தத் தத்துவம் சில குறிப்பிட்ட கொள்கைகளையும், நோக்கங்களையும், திட்டங்களையும் பற்றிக் கொண்டு வளரும். தத்துவமோ, கொள்கையோ,

இலட்சியமோ இல்லாத அது தனித்தன்மையே பாசிசத்திற்கு உண்டு. முசோலினி, என்னுடைய திட்டம் மிகவும் எளிதானது நாங்கள் இத்தாலியை ஆள விரும்புகிறோம், என்று கூறினான். இதுதான் பாசிசம். எந்தத் தத்துவமும் கிடையாது, எந்த இலட்சியமும் கிடையாது, எந்தக் கொள்கையும் கிடையாது. என்னப்பா உன் கொள்கை? என்றால் எங்கள் திட்டம் மிகச் சுலபமானது; நாங்கள் இந்த நாட்டை ஆள விரும்புகிறோம்'' — இதுதான் பாசிசம். இதை நான் சொல்லவில்லை. நேரு சொல்லுகிறார்.

இங்கே சிலபேர் இன்றைக்கு எங்களுடைய இலட்சியங்களை பிறகு கேளுங்கள் எங்களுடைய சட்ட திட்டங்களைப் பற்றி பிறகு பார்த்துக் கொள்ளலாம், எங்கள் கட்சிக்கு அமைப்பு முறை இருக்கிறதா என்று இப்போது கேட்காதீர்கள், எங்களுடைய கட்சியின் பொதுச் செயலாளர் பதவி தேர்ந்தெடுக்கப்பட்டதா? நியமிக்கப்பட்டதா? அதையெல்லாம் கேட்காதீர்கள். அதையெல்லாம் பார்க்காதீர்கள். எங்களுடைய தலையாயத் திட்டம் நாங்கள் தமிழகத்தை ஆளவிரும்புகிறோம். இது பாசிசம் என்று சொல்கிறார் பண்டிதர் நேரு. அப்படியானால் இன்றைக்கு பாசிசவாதி தமிழ்நாட்டில் யார்? யார் அந்த மனிதர்? அவர் பாசிசவாதி என்பதற்கு நேருவே இன்னொரு உதாரணத்தைத் தருகிறார். மிக அருமையான உதாரணம். நேரு தருகிற உதாரணம் ''முதலாளிகளின் ஆதரவைப் பெற்றுக் கொண்டு முசோலினி அதே நேரத்தில் முதலாளித்துவத்திற்கு விரோதமான பல கோஷங்களை எழுப்பினான். ஆகவே, ஒன்றும் அறியாத ஏழைகளும் பாசிசத்தின்பால் ஈர்க்கப்பட்டார்கள். மேலும் அரசாங்கத்திற்கு விரோதமாக கிளர்ச்சி செய்கிற வித்தையையும் கம்யூனிஸ்டுகளிடமிருந்து பெற்றிருந்தான். இவ்வாறு பாசிசம் என்பது ஒரு விசித்திர கதம்பமாக விளங்கியது. முதலாளித்துவம், ஏழைகளுக்

காகப் பேசுகிற சோஷலிசம், அரசாங்கத்தை எதிர்த்து போராடுகிற கம்யூனிசம்—இது மூன்றும் சேர்ந்ததுதான் பாசிசம்.—நேரு சொல்கிறார்.

நம்முடைய நண்பர் என்னுடைய இனிய நண்பர், பழைய நண்பர், அமெரிக்காவிற்குப் போனார். அங்கே கேட்டார்கள். அண்ணுபிசம் என்றால் என்ன என்று அங்கே கேட்டார்கள் இவர் தெளிவாகச் சொன்னார்—கேப்டலிசம், சோஷலிசம், கம்யூனிசம் இது மூன்றும்தான் அண்ணுயிசம். நான் சென்னையில் பேசும்போது கேட்டேன், அடப்பாவி இது பாசிசம் அல்லவா, இதைப் போய் அண்ணுயிசம் என்று சொல்லியிருக்கிறாயே என்று சென்னையிலே கேட்டேன். மறுநாள் பத்திரிகையில் அறிக்கை கொடுத்தார். கருணாநிதி என்னைப் பாவி என்று சொல்கிறார். நான் அதை ஏற்றுக் கொள்கிறேன், பாவி என்றால் சாது என்று அர்த்தம். (சிரிப்பு) எனக்கே என் தமிழில் சந்தேகம் வந்து விட்டது. பாவி என்றால் சாது என்று அர்த்தம், நான் உடனேயே என்னைவிட தமிழ் அதிகம் படித்த நாவலரையும், பேராசிரியரையும் மற்றத் தமிழ்ப் பண்டிதர்களையும் கேட்டேன்! பாவி என்றால் சாது என்று ஒரு அர்த்தம் இருக்கிறதா என்று கேட்டேன். இரண்டு பேரையும் கேட்டேன். நாவலர் பேராசிரியரைப் பார்க்கிறார், பேராசிரியர் நாவலரைப் பார்க்கிறார், இரண்டு பேரும் சேர்ந்து செழியனைப் பார்க்கிறார்கள். நான் மூன்று பேரையும் பார்க்கிறேன். பாவி என்றால் சாதுவாம். இப்படிப்பட்ட தமிழ் தற்குறிகள் எல்லாம் (கைத்தட்டல்) இன்றைக்கு தமிழகத்தை ஆளப்போகிறோம், எங்களுக்குத்தான் ஆளுகிற தகுதி உண்டு என்று சொல்கின்ற ஒரு சூழ்நிலையை இன்றைக்கு தமிழகத்திலே ஏற்பட்டு இருக்கிற விந்தையை நாம் காண்கிறோம். இப்படிப்பட்ட கொடுமைகள் எல்லாம் தமிழகத்திற்கு ஏற்பட்டுவிடக்கூடாதே என்பதற்காகத்தான்

என்னுடைய அருமை நண்பர், ஆசைத்தம்பி, நம்முடைய பேராசிரியர் எல்லாம் இன்று காலையில் சுட்டிக்காட்டியதைப் போல், 1972ஆம் ஆண்டு சென்னை ராஜேஸ்வரி திருமண மண்டபத்தில் நடைபெற்ற தமிழ் விழா ஒன்றில் ''தமிழ் உணர்வு'' என்ற தலைப்பில் நான் பேசுகின்ற நேரத்தில் சொன்னேன், ஆண்டால் திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகத்தை ஆளவேண்டும், ஒரு வேளை மக்கள் ஒரு மாற்றத்தை விரும்பினால் பிறகு யார் வருவார்கள்! காமராஜரைப் போன்ற தமிழர்கள்தான் ஆளமுடியுமே தவிர வேறு யாருக்கும் தமிழகத்தை ஆளுகின்ற யோக்கிதை இருக்கிறது என்று கேட்டேன். அந்த நம்பிக்கையோடுதான் அக்டோபர் 2-ந்தேதி வரை இருந்தோம். ஆனால் அக்டோபர் 2-ந் தேதி நடைபெற்ற அந்தக் கொடுமையான சம்பவம் அந்த நம்பிக்கையை மாற்றிவிட்டது. இன்றைக்கு கர்ஞ்சிரஸ் கட்சிக்குள்ளே ஏற்பட்டிருக்கிற போட்டி, புகைச்சல், பொறுமை, அடிபிடி சண்டைகள் அந்த நம்பிக்கையை மேலும் நசுக்கிவிட்டது. ஆனால், இன்றைக்கு திராவிட சமுதாயத்திற்கு, தமிழ் சமுதாயத்திற்கு, அடித்தளத்து மக்களுக்கு, பின் தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இருக்கிற ஒரேஒரு நாதி, ஒரே ஒரு விடிவெள்ளி திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற அத்தகைய பொறுப்பை திராவிட முன்னேற்றக் கழகம் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

கேட்டார்கள் நண்பர்கள் எல்லாம், நண்பர் செழியன் அவர்கள் கேட்டார்கள், ராமனுதன் கேட்டார், நம்முடைய நாவலர் தன்னுடைய உரையில் எடுத்து சுட்டிக்காட்டிச் சொன்னார். மீண்டும் இந்தி வந்தால்? இந்தி எதிர்ப்பு என்பது சாதாரணமான விவகாரமல்ல. உலகத்திலேயே எந்த நாட்டிலும் இல்லாத அளவுக்கு, மொழிக்காக முப்பது ஆண்டு காலம் போராட்டத்தை நடத்திய வரலாறு திராவிட

முன்னேற்றக் கழகத்தினுடைய, திராவிட இயக்கத்தினுடைய வரலாறு. இன்றைக்கு உங்களுக்கு முன்னால் கழகத்தின் தலைவனாக, தமிழகத்தின் முதலமைச்சராக, உங்களுடைய அன்புக்குரியவனாக நிற்கின்ற இந்தக் கருணாநிதி, 1938ஆம் ஆண்டு, ஓடிவந்த இந்திப் பெண்ணே கேள்! நீ தேடிவந்த கோழைகள் கொண்ட நாடு இதுவல்லவே; வீரத்தமிழ் கொஞ்சும் நாட்டிலே, இந்திப் பெண்ணே, காலம் எல்லாம் சொற்கள் ஏற்ற வீட்டிலே'' என்று புலி, வில், கயல் என்கின்ற மூன்று சின்னங்களையும் பொறித்த தமிழ்க் கொடியை ஏந்தி, திருவாரூர் வீதிகளிலே மாணவர்களை அழைத்துக் கொண்டு ஊர்வலம் போன தொண்டன் தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்திலே உங்கள் முன்னால் தலைவன் என்ற பொறுப்பை ஏற்றுக் கொண்டு பேசுகின்றவன், (கைதட்டல்) அந்த நேரத்திலே, தமிழகத்தின் பட்டிதொட்டிகளெல்லாம் இந்தியை எதிர்த்து முரசொலித்தவர்தான் நம்முடைய நாவலர் அவர்கள், பேராசிரியர் அவர்கள். பெரியாருடைய தலைமையில் மறைமலை அடிகளாரும், பாரதியாரும், ஈழத்து அடிகளும் மற்றும் பல துறவிகளும் தமிழ் காக்கப் புறப்பட்ட நேரத்தில் அந்தப் பெரும் படைக்கு தளபதியாக வீற்றிருந்தோர்தான் நம்மையெல்லாம் ஆளாக்கிய பேரறிஞர் அண்ணா ஆவார்கள். ஆறு மாத காலம் சிறையிலே அடைக்கப் பட்டார்கள். காங்கிரஸ் இயக்கத்திலிருந்து தமிழை காப்பாற்றுகிற ஒரே நோக்கத்தோடு தாம் பாடுபட்ட காங்கிரஸ் இயக்கத்தை கை கழுவிவிட்டு அண்ணாவின் பெரும்படையிலே சேர்ந்து அன்றைக்கே இந்தியை எதிர்த்தவர்தான் மறைந்த மாபெரும் தலைவர்களில் ஒருவரான என். வி. என். அவர்கள். பெரியார் பெல்லாரி சிறைச் சாலையிலே அடைக்கப்பட்டார்.

கட்டாய இந்தியைக் கொண்டுவர காரணமாக இருந்த மூதறிஞர் ராஜாஜி அன்றைக்கு சென்னை மாகாணத்திற்கு பிரதமர். அப்போதெல்லாம் பிரதமர்தான், பிரிமியர். சென்னை மாகாணத்தின் பிரதமர், சர். எ. டி. பன்னீர்செல்வம் தமிழர்களின் சார்பாக வாதாடுகிறார். சட்டப் பேரவையில் ராஜாஜி அவர்களே, இந்தி வேண்டாம், அது தகாது, தமிழர்கள் கெட்டு விடுவார்கள். தமிழ்நாடு கெட்டுப் போய்விடும் என்று சொல்கிறார். ராஜாஜி மெதுவாக எழுந்து சொல்கிறார். இந்த நாட்டிலே இந்தியை எதிர்ப்பவர் யாரும் இல்லை. இரண்டே இரண்டு பேர்தான். ஒருவர், ஈ. வே. இராமசாமி நாயக்கர், இன்னொருவர் சோமசுந்தர பாரதியார். இராஜாஜி சொல்கிறார். உடனே பாராளுமன்ற நாகரீகம் தெரிந்த பன்னீர்செல்வம் சொல்கிறார். எதிர்ப்பவர்கள் என்று உங்கள் கணக்குப்படி இரண்டு பேர் என்றால், கொண்டு வந்தவர் நீங்கள் ஒருவர்தான். ஆகவே பெரும்பான்மை எதிர்ப்பு உண்டு. கைகழுவி விடுங்கள் இந்தத் திட்டத்தை,—சொல்கிறார். அதற்குப் பிறகு, இந்தி வருகிறது, பெரும் போர் மூளுகிறது. கட்டாய இந்தி பின்வாங்குகிறது. அதன் பின்னர், அவினாசிலிங்கம் செட்டியார் காலத்தில் மீண்டும் வருகிறது. தஞ்சை தரணியில் குடந்தை தெருக்களில் குருதி வெள்ளம் ஓடுகிறது. போர் தொடர்கிறது, ஆயிரக்கணக்கானவர்கள் பள்ளிக் கூடங்களில் மறியல் செய்கிறார்கள், சிறைச்சாலைக்குச் செல்கிறார்கள், தொடர்ந்து போர். 1965 வரையில் நீளுகிறது. மாணவர்கள் சுட்டுக் கொல்லப்படுகிறார்கள். தில்லையிலே, இராஜேந்திரன் என்ற மாணவத் தோழன் சுட்டுக் கொல்லப் படுகிறான், அந்த நேரத்திலே அண்ணா கூறுகிறார், இந்தி வருகிற இந்த நாள், அது குடியரசு நாளாக இருந்தாலும் தமிழ்ச் சமுதாயத்திற்கு துக்கநாள். ஆகவே, வீதியிலே

அல்ல, பொது இடங்களிலே அல்ல, உங்களுடைய வீடு களிலே, கழகத் தோழர்களே தமிழ்ச் சமுதாயத்தின், பெருங் குடி மக்களே, இந்தியை எதிர்ப்போரே உங்களுடைய வீடு களில் உங்களுக்குச் சொந்தமான இடங்களில் கறுப்புக் கொடியை ஏற்றுங்கள் என்று அண்ணு சொல்லுகிறார். அண்ணு வீட்டில் கறுப்புக் கொடி பறக்கிறது. என் வீட்டில் பறக்கிறது, நாவலர் வீட்டில், பேராசிரியர் வீட்டில், இலட்சிய நடிகர் ராஜேந்திரன் வீட்டில் கறுப்புக் கொடிகள் பறக்கின்றன. ஆனால் ஒரு வீட்டில் பறக்கவில்லை. அவர் பறந்துவிட்டவர் கோவாவிற்கு. இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தை அறைகூவலுக்கு அழைக்கின்ற அந்த நண்பர், அன்றைக்கு இந்தி எதிர்ப்பு நேரத்தில் இங்கே இல்லை. அது கிடக்கட்டும் சாதாரண பிரச்சினை. அந்த நேரத்திலேதான், கீழபழுவூரைச் சேர்ந்த சின்னசாமி திருச்சி ரயிலடியில் பக்தவத்சலத்தைச் சந்தித்து, ஐயா, இந்தி வேண்டாம் என்ற மகஜரை தருகிறார். யாராடா பைத்தியக்காரன் என்று சொல்லிப் போய்விடுகிறார்கள். அந்த வேதனை தாங்க முடியாத சின்னசாமி திருச்சி இரயிலடிக்கு வந்து பெட்ரோல் ஊற்றிக் கொண்டு கொளுத்திக் கொண்டு சாகிறான். தேக்குமர தேகம் தீ நாக்கு களால் அழிகிறது. தமிழ் வாழ்க! தமிழ் வாழ்க! என்று தணல் நாக்கும் அவன் தமிழ் நாக்கும் போட்டி போட்டு அங்கே அந்த எரிபடலம் முடிகிறது. சின்னசாமியைத் தொடர்கிறான், மாயூரம் மாணவன் சாரங்கபாணி. அவனைத் தொடர்கிறான் சீரப்பன். அவனைத் தொடர்கிறான் சண்முகம். என்று இப்படி எட்டுப்பேர் சாகிறார்கள். தீக்குளித்துச் சாகிறார்கள். வெளிநாட்டிலே மதவெறி காரணமாக சில புத்த குருமார்கள் தீக்குளித்து செத்தார்கள் என்று சரித்

திரம் படித்திருக்கிறோம். ஆனால், மொழிக்காக உடம்புக்கு நீ வைத்துக் கொண்டு செத்த சரித்திரம் தமிழனுக்கே உரிய சரித்திரமாகும். அந்த சரித்திரத்தைப் பெற்ற தமிழன், அந்த வரலாற்றுக்குரிய தமிழன், இன்றைக்கு இந்தி வந்தால் கைகட்டி வாய் புதைத்து ஆலவட்டம் சுழற்றுவான் என்ற வரலாறு கருதிக் கொண்டிருக்கிறது? மத்திய அரசு கருதிக் கொண்டிருக்கிறது?

ஆசைத்தம்பி சொன்னார், தேர்தல் வருமா வராதா என்று. அது வருமோ இல்லையோ. நம்முடைய கவலை எல்லாம் இந்தி வருமா என்பதைப் பற்றித்தான். இந்தி வந்தால் தமிழ் சமுதாயம் அதை எப்படி சந்திப்பது நம்முடைய பழைய போர் வரலாறு மறைந்துவிட்டில்லை நம்முடைய ஈட்டிகள், நம்முடைய வேல்கள், நம்முடைய போர்க் கருவிகள், நம்முடைய கேடயங்கள் அத்தனையும் அப்படியே பூஜைக்கு வைக்கப்படவில்லை. அவ்வை ஔ இடத்திலே சொல்வதைப்போல் எதிரிகளைக் குத்திக் குத்தி மழுங்கிப் போய் இருக்கின்றவைகள். ஏனென்றால், போர்க் களத்திலே பயன்பட்டவைகள், அவைகள் கூர்மையாக இல்லை, அவைகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கவில்லை. அவை வளைந்தும் நெளிந்தும் இருக்கலாம். ஆனால் போர் என்றால் மீண்டும் கூர் தீட்டப்பட்டு நம்முடைய போர் வாழ்க்கை மீண்டும் களம் செல்லும். அதைத்தான் நான் ஆணையிடு ஆணையிடு என்று தலைமைக் கழகத்தைப் பார்த்துக் கேட்டேன் நண்பர்களுக்குச் சொல்கிறேன், மீண்டும் இந்தி வந்தால் தலைமைக் கழகத்தின் சார்பில், பொதுச் செயலாளர் பொருளாளர் சார்பில், நம்முடைய கழகத்தின் செயற்குழு பொதுக்குழு சார்பில் சொல்கிறேன், இந்தி வந்தால் அதை

எப்படி எதிர்ப்பது என்பது பற்றி திட்டங்கள் தயாரிக்குமே தவிர, இந்தி வந்தால், எதிர்ப்பதா இல்லையா என்பதைப் பற்றி நம்மிடையே சந்தேகம் கிடையாது. அதுதான் நமது நிலை. எதிர்த்தே தீருவோம். அந்த நிலைமையைத்தான் இந்த மாநாட்டில் தமிழ் காக்கும், இந்த மாநாட்டில், தமிழ் காக்க உயிர் நீத்த பல உத்தமர்களைக் கொண்ட இந்த மாவட்ட மாநாட்டில், தியாகத்திற்குப் பெயர் பெற்ற இந்த மாநாட்டில் நான் உங்களிடத்தில் எடுத்துச் சொல்லி, இந்த மாநாட்டிலே கூடி இருக்கக்கூடிய கழகக் கண்மணிகள், கழகப் பேச்சாளர்கள் ஆகியவர்கள் பெற்ற கருத்துக்களை யெல்லாம் ஆங்காங்கு பரவிடச்செய்யும் முயற்சிகளில் ஈடுபட வேண்டும், ஈடுபடவேண்டும், ஈடுபடவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன்.

(நாகர்கோவில் மாநாட்டு உரை. 23-11-75